வங்கியியல் சட்டம்

சிறந்த நூலுக்கான தமிழக அரசின் பரிசை வென்றெடுத்த நூல்

Banking Law

Award Winning Book

Dr. சி.ஆர்.ஜெயராஜன்...

அண்மைக்கால
திருத்தச் சட்டங்களுடன்

5-ஆம் பதிப்பில்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

5-ஆம் பதிப்பில்.....

தமிழக அரசின் பரிசை வென்ற நூல்

பி.ஆர்.ஜெயராஜன்

வங்கியியல் சட்டம்

[பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்]

Banking Law

[With Solutions to Problems]

திருத்தச் சட்டங்களுடன்

V.ANGAMUTHU
LAW BOOKS SELLERS
DISTRIBUTOR & BINDERS
Its Investment to your Knowledge
H.O : Coimbatore -18.
Tel : +91 422 2211585, 2301136
Cell : 80125 56556 O 82209 72826
angamuthulawbookshop@gmail.com
Branch : Raagavi Complex,
Palladam Road, Tiruppur-641 605.
Ph : 0421-4342108 Cell : 90033 75105
Website : www.angamuthulawbooks.com
Visit us for your A to Z requirements of Law Books

இது ஒரு

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்

தயாரிப்பு

வங்கியியல் சட்டம்

[பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்]

Banking Law

[With Solutions to Problems]

சார்வதேச விருது பெற்ற சட்டத் தமிழ் அறிஞர்

P.R.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

வங்கியியல்

ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டம், 2017

வங்கிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம், 2012

ஆகிய சட்டங்களுடன்

மற்றும்

பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்

(With Solutions to Problems)

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசு பரிசு பெற்ற சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,

சேலம் 636007.

முன்னுரை

பேரன்பு கொண்ட நெஞ்சங்களே,

வணக்கம்.

இன்று அய்ந்தாம் பதிப்பை எட்டியிருக்கும் இப்புத்தகத்தின் முதற்பதிப்பை அன்று தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூலாகத் தேர்ந்தெடுத்து பரிசும் பாராட்டிதழும் வழங்கி சிறப்பு செய்ததை இந்நேரத்தில் நன்றியுடன் நினைத்துப்பார்க்கின்றேன். அதே போன்று எனது சட்டத்தமிழ் எழுத்துப்பணிக்கு தொடர்ந்து வரவேற்பும் ஆதரவும் அளித்து வரும் உங்கள் ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறேன்.

இன்று ஒருவரிடம் பணம் இருந்தாலும், வங்கிக்குச் செல்ல வேண்டும்; பணம் இல்லாவிட்டாலும் வங்கிக்குச் செல்ல வேண்டும். எவ்வாறு? பணம் இருந்தால், அதனை பாதுகாப்பாக வைப்பீடு செய்ய வங்கிக்குச் செல்ல வேண்டியுள்ளது. அது சேமிப்பு வங்கிக் கணக்கில் (Savings Bank Account) அல்லது நடப்பு வைப்பீட்டுக் கணக்கில் (Current Deposit Account) செய்யப்படும் வைப்பீடாக இருக்கலாம் அல்லது வங்கிகள் அறிவிக்கும் பல்வேறு திட்டங்களில் செய்யப்படும் நிலை வைப்பீடாகவும் (Fixed Deposit) இருக்கலாம். இவ்வாறு வைப்பீடு செய்ய நம்மிடம் பணம் இல்லை; ஆனால் பணத் தேவை உள்ளது. என்ன செய்வது? அப்போது நமது தேவைக்குத் தகுந்தவாறு கடன் பெறவும் வங்கிக்குச் செல்ல வேண்டியுள்ளது. தனியார்களை விட, குறைந்த வட்டி விகிதத்தில் வாடிக்கையாளர்களின் பல்வேறு கடன் தேவைகளுக்கு ஏற்ப வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன. அந்த அளவிற்கு வங்கிகள் இன்று முக்கியத்துவம் வாய்ந்தனவாக, நம்பிக்கைக் குரியனவாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறையுள்ளனவாக முன்னேற்றம் அடைந்துள்ளன என்று சொன்னால் அது மிகையன்று.

நம்மிடம் வைப்பீடாக பெறும் பணத்தை வங்கி என்ன செய்கிறது? கடன் கோரும் நபர்களுக்கு அளிக்கிறது. அதாவது இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது அறிவிக்கும் வட்டி விகிதத்தில் நம்மிடமிருந்து வைப்பீடுகளைப் பெற்று, அவ்வட்டி விகிதத்தை விடச் சற்று அதிகமான வட்டி விகிதத்தில், கடன் கோருபவர்களுக்கு வங்கிகள் கடனுதவியாக அளிக்கிறது. இந்த இரண்டு வட்டி விகிதத்திற்கும் இடையிலான வட்டித் தொகையை வங்கிகள் தங்கள் இலாபமாகப் பெறுகின்றன; இதுதான் **வங்கியியல் தொழிலின் அடிப்படை** (Basis of Banking Business).

நாம் இந்நூலில் பல்வேறு வகையான வங்கிகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளைக் குறித்தும், வங்கியர்-வாடிக்கையாளர் உறவு (The Rela

tionship between a Banker and Customer) எவ்வளவு நெருக்கமானது என்பது பற்றியும், வங்கியரின் கடமைகள், உரிமைகள் (Duties and Rights of a Banker) யாவை என்பது குறித்தும், செலுத்தும் வங்கியர் (Paying Banker) மற்றும் வசூலிக்கும் வங்கியர் (Collecting Banker) மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் மற்றும் அவற்றிற்கு சட்டம் அளிக்கும் பாதுகாப்பு என்ன என்பது குறித்தும், வங்கியர் வழங்கும் பல்வேறு சேவைகள் குறித்தும், அவற்றிற்குரிய சட்ட விளக்கத்துடன், அழகுத் தமிழில் நுணுக்கமாகக் காண உள்ளோம்.

அத்தோடு மட்டுமல்லாமல் ஒரு வங்கியர் தனது வாடிக்கையாளர் களுக்கு எவ்வாறெல்லாம் பொறுப்புடையவர் ஆகிறார், எப்பொழுது அவர் வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்பதையும் காண உள்ளோம்.

மேலும் நாட்டின் மைய வங்கியாகத் திகழும் 'இந்திய சேம வங்கி' எனப்படும் **இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India)**, நமது நாட்டில் உள்ள மற்ற வங்கிகளின் மீது எத்தகைய கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது, அதன் உரிமைகள், கடமைகள், அதிகாரங்கள் யாவை என்பதையும் நாம் இந்நூலில் காண உள்ளோம். '**வங்கியியல் சட்டத்தில்**' ஓர் அங்கமான '**1881-ஆம் ஆண்டின் மாற்று முறையாவணங்கள் சட்டம்**' **(Negotiable Instruments Act)** எனும் நூல் தற்போது திருத்தச்சட்டத்தின்படி வெளிவந்துள்ளது. எனவே அந்நூலைத் தனியாக வாங்கிப் பயனடையவும்.

இன்று வங்கிச்சேவைகள் பல்வேறு நவீன வடிவங்களில் மக்களின் அன்றாட வாழ்வில் முக்கியத்துவம் பெற்றவையாக மாறிவிட்டன; அறிவியல் வளர்ச்சியின் விளைவாக உதித்த இணையதளம், தற்போது வங்கிகளின் இராஜபாட்டை ஆகிவிட்டது. இணையதள வங்கியியல் (Internet Banking) சேவை, இயங்கலை வங்கியியலாக (Online Banking) மாறி, அது தற்சமயம் முழுக்கமுழுக்க 'எண்ணிம வங்கியியலாக' (Digital Banking) உருவெடுத்து, ஒரு வங்கிக்கிளையின் அத்தனை சேவைகளும் வாடிக்கையாளரின் கைக் கடக்கமான செல்பேசியில் அடங்கிவிட்டன. வங்கியியல் சேவைகளை முறையாகப் பயன்படுத்திக் கொள்வோர்களுக்கு முன்னேற்றம் நிச்சயமாக உண்டு; வங்கிகள், மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு உற்ற தோழனாக உடன் வருகின்றன. எனவே ஒவ்வொருவரும் வங்கியியலைப் பற்றியும், அதன் சட்ட திட்டங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய கடப்பாடுடையவர் களாக உள்ளோம்.

வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

1. வங்கியியலின் தன்மை மற்றும் வளர்ச்சி [Nature and Development of Banking]

- அறிமுகம் 1
- வங்கி எனும் சொல் எங்கிருந்து பிறந்தது? 2
- வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு 2
- இங்கிலாந்து நாட்டில் வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு 4
- இந்திய நாட்டில் வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு 6
  - அமைப்பிலா பிரிவு 7
  - அமைக்கப்பட்ட பிரிவு 7
  - சுதேசி இயக்கமும் வங்கிகளும் 8
  - வங்கியியல் நெருக்கடி 8
  - இந்திய இம்பீரியல் வங்கி 8
  - சுதந்திரத்திற்கு பின் இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி 9
  - வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாடு 10
  - வங்கிகளின் தேசியமயமாக்கம் 10

2. வங்கிகளின் பல்வேறு வகைகள் மற்றும் அவை தொடர்பான சட்டங்கள் [Different Types of Banks and the Specific Laws relating to them] 11

- வணிக வங்கிகள் 12
  - அரசுத் துறையில் வணிக வங்கிகள் 12
  - தனியார் துறையில் வணிக வங்கிகள் 13
    - இந்திய வங்கிகள் 13
    - அயல்நாட்டு வங்கிகள் 13
  - உள்ளூர் வங்கிகள் 13
- கூட்டுறவு வங்கிகள் 14
  - கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் – வேறுபாடு 14
- வட்டார ஊரக வங்கிகள் 15
- மாநில வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகள் 16

– தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி 16
– இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி 17
  - அனைத்திந்திய தொழில் மேம்பாட்டு வங்கிகள் 17
  - மாநில அளவிலான தொழில் மேம்பாட்டு வங்கிகள் 18
– வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (வரை.) 20
– வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் (வரை.) 21
– தேசிய வீட்டு வசதி வங்கி 21
– இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி 21
– இந்திய ஏற்றுமதி கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் (வரை.) 22
– முதலீட்டு நிறுவனங்கள் 22
  - இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் 22
  - இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் 22
  - இந்திய யூனிட் டிரஸ்ட் 23
– வைப்பீட்டுக் காப்பீடு மற்றும் கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் 23
– தனிப்பட்ட நபர்கள் செய்யும் வங்கித் தொழில் 24
– அட்டவணை வங்கிகளும், அட்டவணை சாரா வங்கிகளும் 25
– மேலமை வங்கி நிறுவனங்கள் - வரைபடம் 27
– வங்கி நிறுவனங்கள் - வரைபடம் 28

3. இந்திய ரிசர்வ் வங்கி (அல்லது) இந்திய சேம வங்கி (அல்லது) மைய வங்கி [The Reserve Bank of India (or) The Central Bank] 29

– இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு 30
– இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் 31
– இந்திய ரிசர்வ் வங்கியின் கடமைகள் 38
– இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமைகள் 40
– வங்கி சாரா நிறுவனம் 43
– நிதி நிறுவனம் 44

4. வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 [The Banking Regulation Act, 1949] 45

– சட்டத்தின் கட்டமைப்பு 46

- எவ்வகையான தொழில்களில் வங்கிகள் ஈடுபடலாம்? 48
- எவ்வகையான தொழில்களில் வங்கிகள் ஈடுபடக் கூடாது? 51
- இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரங்கள் 52
- வங்கி நிறுவனத்தின் தொழிலை நிறுத்தி வைத்தல் 57
- வங்கி நிறுவனத்தைக் கலைத்தல் 58
- வங்கி நிறுவனங்களின் இணைப்பு 59

5. வங்கியரும் வாடிக்கையாளரும் [Banker and Customer] 60

- வங்கியர் - வரையறை 61
- வாடிக்கையாளர் - வரையறை 65
- வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு 71
  - பொது நிலை உறவு 71
  - சிறப்பு நிலை உறவு (அல்லது) சட்ட நிலை உறவு 77

6. வங்கியரின் சிறப்பு வகை வாடிக்கையாளர்கள் [Special Types of Banke's Customers] 78

- இளவர் 79
- பித்தர்கள் 80
- குடிகாரர்கள் 80
- கல்வியறிவற்றவர்கள் 80
- மணமான பெண் 81
- கூட்டுக் கணக்கு 81
- இந்து கூட்டுக் குடும்பம் 81
- கூட்டாண்மை நிறுமம் 82
- கூட்டுப் பங்கு நிறுவனம் 83
- நிறைவேற்றாளர்களும் நிருவாகிகளும் 84
- பொறுப்பாண்மையர்கள் 86
- தனிக்கழகங்கள், சங்கங்கள், அறப்பணி நிறுவனங்கள் 87

7. பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள் [Different Types of Accounts] 89

- சேமிப்பு வங்கிக் கணக்குகள் 90
- நடப்புக் கணக்குகள் 91

– நிலை வைப்பீட்டுக் கணக்குகள் 93
– தொடர் வைப்பீட்டுக் கணக்குகள் 96
– ஒரு புதிய கணக்கை துவக்கும் முன்பு வங்கியர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும், மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் 97
– ஏன் வாடிக்கையாளர் அறிமுகம் இன்றியமையாதது? 105
– செல்லேட்டின் விளக்கமும், அதிலுள்ள பதிவுகளின் சட்ட விளைவுகளும் 107
– நிலை வைப்பீட்டு இரசீது 121
– வங்கிக் கணக்கை முடித்தல் 124
– சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு மற்றும் நிலை வைப்பீட்டுக் கணக்கு - வேறுபாடுகள் 128

8. கடன் பெறுநராக வங்கியர் [Banker as Borrower] 130

– கடன் வாங்கும் வழிமுறைகள் 131
– மாற்றுச் சீட்டுத் தள்ளுபடி 132
– பல்வேறு வகையான வைப்பீடுகள் 132
– உரிய தேதிக்கு முன் பணம் கொடுத்தல் 134
– முதிர்வடைந்த நிலை வைப்பீடுகளுக்கு பணம் திரும்பக் கொடுத்தல் 135
– வைப்பீடுகளை பற்றுகை செய்ய நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் ஆணை (அல்லது) பொருள் பற்றுகை ஆணை 136
– வருமான வரித் துறையால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் 137

9. வங்கியரின் கடமைகள் [Duties of a Banker] 138

– காசோலைகளுக்கு பணம் வழங்கல் (மதிப்பளித்தல்) 139
– வாடிக்கையாளர் கணக்கின் இரகசியம் காத்தல் 140
  - காசோலையின் மதிப்பை வங்கியர் தவறாக மறுத்தலும் அதன் விளைவுகளும் 145

10. வங்கியரின் உரிமைகள் [Rights of a Banker] 149

– பொதுப் பற்றுரிமைக்கான உரிமை 150
– சரிக்கட்டிக் கொள்ளும் உரிமை (அல்லது)

கணக்குகளை ஒருங்கிணைக்கும் உரிமை 156
– பணத்தை ஒதுக்கீடு செய்யும் உரிமை (அல்லது) கிளேட்டன் வழக்கின் விதி 158
– வட்டி, சேவைக் கட்டணங்கள், இடைநிகழ்வுக் கட்டணங்கள் ஆகியவற்றை விதிக்க உரிமை 162
– கணக்கை முடிக்கும் உரிமை 162
– கால வரையறைச் சட்டத்தின் கீழ் வங்கியரின் உரிமை 162

11. வங்கியியல் முறையாவணங்கள் [Banking Instruments] 163
– வங்கித் தாள்கள் 164
– வங்கியரின் வரைவோலைகள் 164
– வைப்பீட்டு இரசீதுகள் 165
– நம்பிக்கைக் கடிதங்கள் 165
– பயணம் செய்வோர் காசோலைகள் 166
– ஈட்டுறுதிகள் 167
– அஞ்சல் ஆணைகள் 167
– பங்காதாயப் பற்றாணைகள் 168
– பிணையாவணங்கள் 168

12. செலுத்தும் வங்கியர் (அல்லது) பணம் வழங்கும் வங்கியர் [Paying Banker] 169
– செலுத்தும் வங்கியர் யார்? - விளக்கம் 170
– செலுத்தும் வங்கியரின் பொறுப்புகளும் கடமைகளும் 170
– செலுத்தும் வங்கியர் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் 171
– செலுத்தும் வங்கியர் காசோலைக்கு எப்போது மதிப்பு மறுக்கலாம்? 174
– செலுத்தும் வங்கியர் காசோலைக்கு எப்போது கட்டாயம் மதிப்பு மறுக்க வேண்டும்? 175
– செலுத்தும் வங்கியருக்குண்டான சட்டப்படியான பாதுகாப்பு 177
– முன்னிடப்பட்ட மாற்றுச் சீட்டுகளுக்கு செலுத்துபவராக வங்கியர் 177

13. வசூலிக்கும் வங்கியர் [Collecting Banker] 182

– வசூலிக்கும் வங்கியர் யார்? - விளக்கம் 183
– வசூலிக்கும் வங்கியரின் கடமைப் பொறுப்புகள் 183
– மதிப்புரிமை பெற்றவராக வசூலிக்கும் வங்கியர் 183
– முகவராக வசூலிக்கும் வங்கியர் 185
– பிற முக்கிய கடமைப் பொறுப்புகள் 186
– வசூலிக்கும் வங்கியரின் கையாடல் 187
– வசூலிக்கும் வங்கியரின் சட்டப்படியான பாதுகாப்பு 187
– வசூலிக்கும் வங்கியரின் கவனக்குறைவு 189

14. வங்கியரால் வழங்கப்படும் கடன்கள், முன்பணங்கள் மற்றும் வங்கியர் செய்யும் முதலீடுகள் தொடர்பான சட்டங்கள் [Laws relating to Loans, Advances and Insvestments by Banks] 191

– கடன் கொடுப்பதில் வங்கியர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (அல்லது) கடன் வழங்குவதின் பொதுக் கோட்பாடுகள் 192
– கடன் மற்றும் முன்பணங்களின் மூன்று படிவங்கள் 194
– மூவகைக் கடன் கணக்குகள் 196
– கடன் மற்றும் முன்பணங்களின் இரு பெரும் வகைகள் 197
– வங்கியர்களின் துணைச் சேவைகள் 198
– முகவாண்மைச் சேவைகள் 198
– பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் 199
– பாதுகாப்பு வைப்புச் சேவை 200
– பாதுகாப்பு வைப்பீடு 200
– பாதுகாப்பு வைப்பீட்டுப் பெட்டகம் 201
– வங்கி கொள்ளையடிக்கப்படும் நேர்வில் வங்கியரின் பொறுப்பு 202
– வங்கியரின் பகரப் பொறுப்பு 202
– கடன்களையும் முன்பணங்களையும் வங்கியர் வசூலித்தல் 203
– வங்கிக்கு கொடுபட வேண்டிய கடன் வசூல் 204

15. பிரச்சனைகளும் தீர்வுகளும் 205

குறுகிய விடைகள்

1.	வங்கிகளின் தேசியமயமாக்கம் [Nationalisation of Banks]	10, 12
2.	வணிக வங்கிகள் [Commercial Banks]	12
3.	வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்கள் [Business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949]	47
4.	வங்கி நிறுமங்களுக்கு உரிமம் அளிப்பது [Licensing of Banking Companies]	51
5.	வங்கி நிறுவனங்களின் தொழிலை நிறுத்தி வைத்தல் [Suspension of business of Banking Companies]	57
6.	வங்கி நிறுவனங்களின் கலைப்பு [Winding up of banking companies]	57
7.	வங்கியர் [Banker]	61
8.	வாடிக்கையாளர் [Customer]	61
9.	வங்கியருக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு முறைகள் [Banker and Customer relationship]	61
10.	வங்கி செல்லேடு மற்றும் குறிப்புகளின் விளைவுகள் [Pass book and the legal effects of its entries]	108
11.	செல்லேடு [Pass book]	108
12.	நிலை வைப்பீட்டு இரசீது [Fixed Deposit Receipt]	121
13.	வங்கிக் கணக்கை முடிப்பது [Closing of a bank account]	124
14.	வங்கியர் கடனாளி என்ற நிலையில் [Banker as Borrower]	130
15.	மாற்றுச் சீட்டுகளின் தள்ளுபடி [Discounting of Bills]	131
16.	பொருள் பற்றுகை ஆணை [Garnishee Order]	131
17.	ஒரு வங்கியரின் கடமைகள் [Duties of a Banker]	138
18.	வாடிக்கையாளரின் கணக்கு இரகசியத்தை வெளியிடல் [Disclosure of the secrecy of customer's account]	138
19.	வங்கியரின் தவறுதலான காசோலை மறுப்பு [Wrongful dishonour of cheque by banker]	145

20.	வங்கியரின் உரிமைகள் [Rights of Banker]	149
21.	பற்றுரிமை [Lien]	150
22.	வங்கியரின் பற்றுரிமை [Banker's Lien]	150
23.	கிளேட்டோன் வழக்கு விதி [Rule in Clayton's case]	150
24.	செலுத்திய பணத்தை ஈடுபடுத்தல் [Appropriation of Payments]	150
25.	டேவேனஸ் எதிர் நோபள் வழக்கின் விதி [Rule in Devaynes v. Noble]	150
26.	வங்கியியல் முறையாவணங்கள் [Banking Instruments]	163
27.	பயணிகள் காசோலைகள் [Traveller's Cheques]	163
28.	வங்கித் தாள்கள் [Bank notes]	163
29.	பணம் கொடுக்கும் வங்கியர் [Paying Banker]	169
30.	முன்னிடப்பட்ட மாற்றுச் சீட்டுகளுக்கு செலுத்துபவராக வங்கியர் [Banker as payer of Domiciled Bills]	180
31.	வசூலிக்கும் வங்கியர் [Collecting Banker]	182
32.	வசூலிக்கும் வங்கியரின் கையாடல் [Conversion by Collecting Banker]	187
33.	கடன் கணக்கின் வகைகள் [Types of Loan accounts]	196
34.	பாதுகாப்பு வைப்பீட்டு பெட்டகம் [Safety Deposit Lockers]	198
35.	கடன்களையும் முன்பணங்களையும் வங்கியர் வசூலித்தல் [Recovery of loans and advances by Bank]	203
35.	வங்கிக்கு கொடுபட வேண்டிய கடன் வசூல் [Recovery of debts due to banks]	204
36.	நிதி நிறுவனங்கள் சட்டம் [Financial Institutions Act, 1993]	204

சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்குகளின் பட்டியல்
[List of cases referred]

"B"

Bala Krishna Pramanik v. Bhowanipore Banking Corporation Ltd. 119
Bank of Commerce Ltd. v. Kunj Behari Kar 64

"C"

Canara Bank Ltd. v. I.V.Rajagopal 147
Canara Bank v. Canara Bank Coporation and Others 113
Central Bank of India v. Gopinathan Nair 68
Chatterton v. London and County Bank 113
Commissioner of Taxation v. English Scottish and Australian Bank 67

"D"

Davidson v. Barclay's Bank Ltd. 148
Deveynes v. Noble **[Clayton's case]** 111, 159

"F"

Foley v. Hill 61

"G"

Great Western Railway Company v. London and County Banking Co. 66

"H"

Holland v. Manchester and Liverpool District Banking Co. Ltd. 115

"I"

Indian Bank v. Catholic Syrian Bank 100

"K"

K.S.Ramachandran v. Registrar of Co-operative Societies, Madras 113
Keptigalla Rubber Estates Co. v. The National Bank of India 112

"L"

Lodbroke v. Tod 67

"M"

Marzetti v. Williams 145
Mathews v. William Brown & Co. 66

Mawji Shamji v. The National Bank of India 115
Morgan v. United States Mortgage and Trust Co. 112

"N"

New Bank of India v. Union of India 74

"O"

Oakley Bowden & Co. v. Indian Bank Ltd. 116, 117
Official Assignee of Madras v. Smith 123

"P"

Pearce v. Creswick 123

"R"

Robin v. Steward 146

"S"

Savory & Co. v. Lloyds Banks Ltd. 67
Sterling v. Barclay's Bank Ltd. 146
Subramanian v. Kadiresan 123
Sunderland v. Barclay's Bank 143

"T"

Tournier v. National Provincial and Union Bank of England 141

"V"

Vijay Kumar v. M/s. Jullundur Body Builders, Delhi and others 154

-o0o-

அர்ப்பணம்

எனதருமைத் தந்தையார் வழக்குரைஞர்
திருமிகு. **பி.ஆர்.ரங்காச்சாரி, B.Sc., B.L., D.P.P.A.,** அவர்களின்
நீங்கா நினைவிற்கு ... ...

1

வங்கியியலின் தன்மை மற்றும் வளர்ச்சி [Nature and Development of Banking]

அறிமுகம்:

ஒரு நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் 'வங்கியியல்' எனப்படும் 'வங்கித் தொழில்' முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் வாழ்வின் பல்வேறு அம்சங்களிலும் வங்கிகள் முக்கிய இடம் பெற்றுள்ளன. இன்றைய சமுதாயத்தில் வங்கிகள் நுழையாத இடமே இல்லை என்று கூறலாம்.

தற்கால கருத்தின்படி, **வங்கியியல்** என்பது கடன் கொடுத்தல், கடன் பெறுதல், தொகை செலுத்தல் ஆகிய பணிகளை ஆற்றுவதோடு மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகமாக்கும் கருவியாகவும் விளங்குகிறது; மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு உற்ற தோழனாக உடன் வருகிறது.

வேறு விதத்தில் கூறுவதென்றால், மக்கள் தங்கள் கடின உழைப்பால் ஈட்டிய பணத்தை வங்கிகள் தங்கள் சேமிப்பில் பாதுகாப்பாக வைத்துள்ளன; அவை நாட்டின் பொருளாதார, தொழில் மற்றும் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திற்கு கடனுதவி அளிப்பதன் மூலம் முதலீடு செய்கின்றன; இன்று மக்களின் அன்றாட தேவைகளுக்கு பல்வேறு சேவைகளை வங்கிகள் வழங்கி வருகின்றன. எனவே ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, தொழில், வேளாண்மை, வர்த்தக மற்றும் வியாபார வளர்ச்சிக்கு வங்கிகள் இன்றியமையாதது.

இதற்கு அந்நாட்டின் **'வங்கியியல் முறை' (Banking System)** ஒரு ஒழுங்கமைவுடன் செயற்பட வேண்டும். இந்த ஒழுங்கமைவை முறையாக இயற்றப்பட்ட சட்டங்கள்தாம் கொண்டு வர இயலும். எனவே இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றிலும், வங்கிகளையும், அவற்றின் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்த (Regulation) பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவைதான் **'வங்கியியல் சட்டங்கள்' (Banking Laws)** எனும் தலைப்பின் கீழ் பொதுவாக அழைக்கப்படுகின்றன.

அப்படிப்பட்ட சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட பல்வேறு வங்கிகளையும், அவற்றின் செயற்பாடுகளையும், அவை தனது வாடிக்கையாளர்களுடன் கொண்டுள்ள உறவுகளையும், அவற்றின் உரிமைகள் மற்றும் கடமைகளையும், அவை வழங்கும் பல்வேறு சேவைகளையும்தான் நாம் இந்நூலில் உரிய சட்ட விளக்கங்களுடன், பல்வேறு முக்கிய வழக்குகளின் பொருண்மைகள் மற்றும் தீர்ப்புகளுடன் விரிவாகக் காண உள்ளோம்.

ஆனால் அதற்கு முன் வங்கியியல் என்றால் என்ன, வங்கியியலின் வரலாறு யாது, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் வங்கியியல் எவ்வாறு தோன்றியது, வளர்ந்தது என்பது குறித்து அறிய வேண்டியது அவசியமாகும். வங்கியியலின் வளர்ச்சி குறித்து எழுத வேண்டுமென்றால், அதுவே ஒரு தனி நூலாகிவிடும். எனவே அவற்றை சுருக்கமாக நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

'வங்கி' எனும் சொல் எங்கிருந்து பிறந்தது? [The Origin of the word 'Bank'] :

'வங்கி' எனும் சொல் எங்கிருந்து பிறந்தது என்று கூறுவதில் பொருளாதார வல்லுநர்களிடையே இரண்டு மாறுபட்ட கருத்துகள் நிலவின.

அவர்களில் ஒருசாரார், **தமிழில் 'வங்கி' என்று குறிப்பிடப்படும் 'Bank'** எனும் சொல் ***'பேங்கோ' அல்லது 'பேங்கியூ' [Banco (or) Banque]*** எனும் இத்தாலிய சொல்லிலிருந்து பிறந்தது என்று கருத்துரைக்கின்றனர். 'பேங்கோ' என்றால் **'அமரும் பலகை' (Bench)** என்று பொருள். ஆதியில் இடைநிலைக் காலத்திய அய்ரோப்பிய (medieval European) வட்டித் தொழிலர் களும் (money lenders), நாணய மாற்றுக்காரர்களும் (செலாவணியர்கள்) (money-changers) மக்கள் கூடும் சந்தையில் ஒரு பலகை போட்டு அதன் மீது அதன் மீது அமர்ந்து அல்லது அதன் மீது தாங்கள் கொண்டு வந்திருக்கும் நாணயங்களை காட்சிக்கு வைத்து, மக்களிடையே வங்கித் தொழில் புரிந்தனர். வட்டிக்கு பணம் கொடுக்க முடியவில்லையென்றாலோ அல்லது நாணய மாற்றுச் செய்ய

செய்ய அவர்களிடம் நாணயம் இல்லையென்றாலோ, மக்கள் அவர்களது பலகைகளை உடைத்தனர். இதனால் அவர்கள் 'உடைந்தவர்கள்' எனப்பட்டனர். அதாவது 'பணம் கொடுக்க இயலாதவர்கள்' எனப்பட்டனர். இச்சொல்லே, பின்னாளில் தமிழில் **'நொடிந்தவர்கள்' எனும் சொல்லும், ஆங்கிலத்தில் 'Bankrupt'** எனும் சொல்லும் பிறக்க வழி வகுத்தன என்றும் கூறலாம்.

மற்றொரு சாரார் 'வங்கி' எனும் சொல் **'பேக்' (back)** எனும் சேர்மன் நாட்டு சொல்லிலிருந்து உதித்ததாகும் என்றும், இதன் பொருள் **'கூட்டு பங்கு நிதி' (Joint stock fund)** என்பதாகும் என்றும், இச்சொல்லே இத்தாலியின் ஒரு பெரும் பகுதியை சேர்மன் கைப்பற்றிய பிறகு, நாளடைவில் இத்தாலிய சொல்லில் 'பேங்கோ' என்றாகியது என்றும் கருத்துரைக்கின்றனர்.

மேற்கண்ட இரண்டு கருத்துரைகளில், இரண்டாவதாக கூறப்பட்ட கருத்துரையே மிகவும் பொருத்தமானதாக எண்ணத் தோன்றுகிறது. அதாவது 'வங்கி' என்பது ஒரு 'கூட்டுப் பங்கு நிதியம்' என்பதே சரியானது. எனவே, வங்கி என்பதைக் குறிக்கும் **'Bank'** எனும் ஆங்கிலச் சொல், **'பேங்கோ'** எனும் சொல்லிலிருந்து பிறந்ததே.

வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு [The Historical Development of Banking] :

வங்கியியலின் ஆரம்ப கால வரலாறு (Early history of Banking):

மனித நாகரிகம் எவ்வளவு தொன்மையானதோ, அவ்வாறே வங்கியியலும். வங்கியியல் முறைக்கு வித்திட்டது, பாபிலோனியர்கள் என்று கூறலாம். அவர்கள் **கி.மு. 2000 ஆண்டிலேயே** ஒரு வகை வங்கியியல் முறையை உருவாக்கியிருந்தார்கள். பாபிலோனியர்கள், தங்கள் கோவில்களை வங்கிகளாக பயன்படுத்தி வந்தனர். அக்கோவில்களில், பாபிலோனிய மக்கள், தங்களிடம் உபரியாக உள்ள பணத்தை வைப்பீடு செய்தனர். அதனை அக்கோவில்களின் மத குருமார்கள் பாதுகாத்து வந்தனர். மேலும் அவர்கள், தங்களிடம் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்படும் தங்கம் மற்றும் வெள்ளிக்கு ஈடாக அதிக வட்டியில் பணம் கடன் கொடுத்தனர்.

சுருங்கக் கூறின், அக்கோவில்களின் மதகுருமார்கள், பாபிலோனிய மக்களின் **'நிதியியல் முகவர்களாக' (Financial Agents)** செயல்பட்டனர். ஆனால் பின்னிட்டு பாபிலோனிய மக்கள், மதத்தின் மீது தங்கள் நம்பிக்கையை இழந்ததால், அதன் தொடர்ச்சியாக மதகுருமார்களின் மீதிருந்த நம்பிக்கையும் குறைந்தது. இதனால், மக்கள் மதகுருமார்களிடம் தங்கள் பணத்தை வைப்பீடு செய்யவில்லை. தங்கள் மற்றும் வெள்ளிக்கு எதிராக கடனும் பெறவில்லை.

அடுத்து தனியார் வங்கித் தொழிலுக்கு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தது, உரோமானியர்கள் எனலாம். உரோம் அரசு, தனியார் வங்கியியலுக் கென வகுத்த நுட்பமான ஒழுங்குமுறை விதிகளால் மக்கள் கவரப்பட்டனர்.

இதற்கிடையில் **தொன்மை நாகரிகம்** முடிவுக்கு வந்தது. நிருவாகம் பரவலாக்கப்பட்டது. அரசின் அதிகாரம் வலுவிழந்தது. இதன் விளைவாக, வாணிகத்தில் பாதுகாப்பின்மை ஏற்பட்டது. மேலும், 'வட்டி வசூலிப்பது இயற்கைக்குப் புறம்பானது; எனவே அறநெறிக்கு விரோதமானது' என்று அரிஸ்டாட்டில் கூறிய கருத்து வேதவாக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால் வங்கித் தொழில் சில நூற்றாண்டுகளுக்கு ஸ்தம்பித்தது என்றே கூற வேண்டும்.

எனினும் நாகரிகம் புத்துயிர் பெற்ற **12–ஆம் நூற்றாண்டின்** மத்தியில், பெருகி வந்த தேவையின் காரணமாக வெனிஸ், ஜெனோவா ஆகிய நகரங்களில் வங்கிகள் நிறுவப்பட்டன. அந்த வகையில் **'வெனிஸ் வங்கி' (Bank of Venice)** மிகத் தொன்மையானது என்று கூறலாம். ஆனால் இந்த வங்கிகள் நெடுங்காலம் வரை, இன்று நாம் அறிந்துள்ள வங்கிகள் போல் அமைந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை.

14–ஆம் நூற்றாண்டில் ஃபிளாரன்ஸ் நகரில் பணம் கொடுக்கல்–வாங்கல் செய்பவர்கள் (money dealers) இருந்து வந்தார்கள். இவர்கள் பண வைப்பீகளைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் பணம் கடன் கொடுப்பவர் களாகவும் இருந்தார்கள். இத்தகைய வங்கியாளர்கள், அய்ரோப்பா முழுவதும் வியாபித்து இருந்தார்கள். ஒரு சமயத்தில் ஃபிளாரன்ஸ் நகரில் 80 வங்கியாளர்கள் இருந்ததாக பெருமைபடக் கூறுவதுமுண்டு. ஆனால் அரசு வங்கி எதுவும் அங்கிருக்கவில்லை. இவ்வாறு வங்கியியலின் ஆரம்பகாலகட்ட வளர்ச்சி அமைகிறது. இதற்கு அடுத்த கட்ட வங்கியியல் வளர்ச்சி, இங்கிலாந்து நாட்டில் தொடங்குகிறது. அதனைப் பின்வருமாறு காண்போம்.

இங்கிலாந்து நாட்டில் வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு (The Historical Development of British Banking):

இன்று நாம் காணும் வங்கியியல் முறைக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது, இங்கிலாந்தில்தான். அங்கு முதலாம் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில், அமெரிக்காவில் இருந்து ஏராளமான தங்கம் இந்தியாவிற்கு வந்தது. அதே சமயத்தில் அயல்நாட்டு வாணிபமும் கணிசமான அளவில் பெருகியது. முன்பெல்லாம் ஒருவனைச் செல்வந்தனா என்று கணிக்க, அவனது பெயரில் உள்ள நிலத்தின் மதிப்புதான் கணக்கிடப்பட்டது; மாறாக பணத்தின் மதிப்பு கணக்கிடப்படவில்லை. அதாவது அப்பொழுது நிலம் மட்டுமே செல்வத்தின் வடிவமாக இருந்தது. ஆனால் இந்நிலை இங்கிலாந்தில் வங்கியல் வளரும்

பொழுது மாறிவிட்டது. நாட்டுப்புற சீமான்களும், நகர வணிகர்களும் தங்கள் மூலதனத்தின் ஒரு பகுதியை பணமாகச் சேர்த்து வைக்கலாயினர். 1649–ஆம் ஆண்டில் முதலாம் சார்லஸ் மன்னன், அரசு வங்கியியலை (Public Banking) தொடங்குவதற்காக பணம் திரட்ட வேண்டி, தனது நாணச் சாலையில் (Royal Mint) நகர வணிகர்கள் பாதுகாப்பாக வைத்திருக்க ஒப்படைத்திருந்த 130,000 பவுண்டு (£) மதிப்புடைய சொக்கத் தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்தான். மன்னனின் இந்த நடவடிக்கை காரணமாக, வணிகர்கள் தங்கள் காசாளர்களிடம் (cashiers) பெருந்தொகைகளை ஒப்படைக்கத் தொடங்கினர். ஆனால் இந்தக் காசாளர்களும், அத்தொகைகளை தங்கள் சொந்த நலனுக்காகக் கையாடல் செய்து, தங்களிடம் தொகை ஒப்படைத்த தங்கள் எசமானர்களை வஞ்சித்தனர். தங்கள் மன்னனைப் போலவே, தங்கள் பணியாளர்களும் (காசாளர்களும்) தங்களை வஞ்சிப்பதைக் கண்ட வணிகர்கள், தங்கள் பணத்தை பொற் கொல்லர்களிடம் (Goldsmiths) வைப்பீடு செய்தனர். அந்தக் காலத்தில் பொற் கொல்லர்கள், வலுவான பாதுகாப்பு பெட்டக அறைகளைக் (strong rooms) கொண்டிருந்தனர்; மேலும் அந்த அறைகளைக் காவற்காக்க காவலர்களையும் நியமித்திருந்தனர்.

தங்களிடம் வைப்பீடு செய்யப்பட்ட பணத்திற்குப் பதிலாக, பொற் கொல்லர்கள் தங்கள் கையொப்பமிட்ட இரசீதுகளை (Receipts) வழங்கினர். இவை **'பொற்கொல்லர் சீட்டுக்கள்'** (Goldsmiths' Notes) என அழைக்கப் பட்டன. இதில், 'வைப்பீட்டாளர் அல்லது கொணர்பவர் கேட்கும் போது பணம் திருப்பிக் கொடுக்கப்படும்' எனும் பொற்கொல்லரின் உறுதி மொழி (embodying an undertaking to return the money to the depositor or to bearer on demand) அமைந்திருக்கும்.

இதைத் தொடர்ந்து, பொற்கொல்லரின் சீட்டுக்கு, கொணர்பவரிடம் பணம் செலுத்த வேண்டிய தருணம் வந்தது. இதனால், ஒரு இரசீது (அதாவது பொற்கொல்லர் சீட்டு), ஒரு **'வங்கித் தாளாக' (Bank Note)** உருமாற்றம் பெற்றது. இச்சீட்டு கணிசமான அளவில் புழக்கத்திற்கு வந்ததையடுத்து, தங்கள் பாதுகாப்பில் பெருமளவு பணம் நீண்ட காலத்திற்கு வைத்து வரப்படுவதைப் பொற்கொல்லர்கள் கண்டனர். எனவே தங்கள் வாடிக்கையாளர்களின் பணத்தில் ஒரு பகுதியை வட்டிக்கு கடனாகக் கொடுத்து வாங்குவது பாதுகாப்பாகவும், இலாபகரமாகவும் இருக்கும் என பொற்கொல்லர்கள் கருதினார்கள். பணத்தை வட்டிக்கு கடன் கொடுக்க, பணம் வேண்டும். எனவே வணிகர்களை அதிக அளவில் தங்களிடம் பணத்தை வைப்பீடு செய்வதை ஈர்ப்பதற்காக, தங்களிடம் செய்யப்படும் வைப்பீட்டுப் பணத்திற்கு வட்டி கொடுக்க முன் வந்தனர். மேலும் வாடிக்கையாளர்களின் தங்கத்தைப் பாதுகாக்கும் தங்கள் சேவைக்குக் கட்டணம்

வசூலிப்பதற்குப் பதிலாக, பொற்கொல்லர்கள் வட்டி வழங்கினர். இது இங்கிலாந்து வங்கியியல் வளர்ச்சியில் ஒரு முக்கியமான செயல்பாடாக விளங்கியது. இதனால் பணம் கொடுக்கல்–வாங்கல் வணிகம் பெருமளவில் வளர்ந்தது.

ஆனால் 1672–ஆம் ஆண்டில் இங்கிலாந்து வங்கியியல் வளர்ச்சியில் ஒரு திடீர் பின்னடைவு ஏற்பட்டது. இதற்கு காரணம் இரண்டாம் சார்லஸ் மன்னனின் செயற்பாடுதான் என்றால் அது மிகையாகா. அவர் பொற்கொல்லர் களிடமிருந்து ஏராளமான தொகையைக் கடனாக வாங்கினான். தன் தந்தை முதலாம் சார்லஸ் மன்னனைப் போலவே, அவனும் தான் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டான். இதனால் தங்களிடம் வைப்பீடு செய்யப்பட்ட தொகைகளை வைப்பீட்டாளருக்கோ அல்லது தங்கள் இரசீதுகளை கொண்டு வருபவர்களுக்கோ அவர்கள் கோரிய நேரத்தில், பணத்தைத் திரும்பச் செலுத்த பொற்கொல்லர்களால் இயலவில்லை. இதனால் வணிகர்களும், மக்களும் பொற் கொல்லர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர்.

இங்கிலாந்து வங்கி (The Bank of England): ஃபிரான்சுடன் போர் நடத்தி வந்த இங்கிலாந்து மன்னன் மூன்றாம் வில்லியம், தனக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகவும், பொற்கொல்லர்கள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டதாலும், 1694–ஆம் ஆண்டில் **'இங்கிலாந்து வங்கி'** நிறுவப்பட்டது. இவ்வங்கி, நாட்டின் மைய வங்கியாக செயற்பட்டது. முதலாவது மைய வங்கி 1656–ஆம் ஆண்டில் சுவீடனில் நிறுவப்பட்டாலும், இங்கிலாந்து வங்கிதான் அனைத்து நாடுகளிலும் மைய வங்கிகள் நிறுவப்படுவதற்கு முன் மாதிரியாக அமைந்தது. இந்த வங்கியைப் பின்பற்றி, உலக நாடுகள் பலவற்றிலும் பின்பு, மைய வங்கிகள் நிறுவப்பட்டன.

இந்திய நாட்டில் வங்கியியலின் வளர்ச்சி குறித்த வரலாறு (The Historical Development of Indian Banking):

இங்கிலாந்தில் வங்கியியல் முறை தோன்றுவதற்கு வெகு காலம் முன்னரே, இந்தியாவில் புராண காலங்களிலேயே கடன்களும், அதிக வட்டியும் இருந்து வந்ததற்கு சான்றுகள் உள்ளன. இரு பெரும் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான், இலங்கை வேந்தன்' என்று கூறப்படுவதுண்டு. அதுபோல் பகடை ஆட்டத்தினால் ஏற்பட்ட கடன்கள் குறித்தும் குறிப்புகள் உண்டு. மனு தர்ம சாத்திரத்தில், வைப்பீடுகள், அடைமானங்கள் குறித்து ஒரு தனிப்பிரிவே உள்ளது. மேலும் அதில் கடன்கள், வட்டிவீதம் பற்றிய விதிமுறைகளும் காணப்படுகின்றன.

அடுத்ததாக, இந்திய வங்கியியல் வளர்ச்சியை இரண்டு தலைப்புகளின்

கீழ் வகைப்படுத்தலாம். அவை **(1) அமைப்பிலா பிரிவு (Unorganised sector) (2) அமைக்கப்பட்ட பிரிவு (Organised sector).**

(1) அமைப்பிலா பிரிவு: இச்சொல், நாட்டுப்புற **வங்கியியலைக் (Indigenous Banking)** குறிக்கிறது. நாட்டுப் புறங்களில் (கிராமங்கள், சிறு நகரங்கள்) வசிக்கும் மக்களின் பணம்–கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைக்கு, இப்படிப்பட்ட நாட்டுப்புற வங்கியர் உதவி புரிந்தனர். இவர்கள் **தனிப்பட்ட முறையில் வட்டித் தொழில் (Banking by private individuals)** புரிந்தனர்.

இந்தியாவில் நாட்டுப்புற வங்கியியலைப் பொறுத்தவரை குறிப்பிட்ட சில இனத்தைச் சார்ந்த மக்கள் பரம்பரை பரம்பரையாக பணம் கடன் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். வைசியர் எனப்படும் இனத்தினர், வங்கித் தொழில் புரிவதில் கெட்டிக்காரர்களாக விளங்கினர். அவர்கள் இன்றைய வங்கித் தொழில் எந்தெந்த பணிகளை மேற்கொண்டு வருகிறதோ, அப்பணிகளையெல்லாம் அப்பொழுதே புரிந்தனர். அதாவது மற்றவர்கள் செய்யும் தொகை வைப்பீடுகளை ஏற்றுக் கொண்டு வட்டி வழங்குதல், வட்டிக்கு கடன் கொடுத்தல், அரசுக்கு வங்கியராக செயற்படுதல் என்று பல வங்கிப் பணிகளை வைசியர்கள் செய்தனர். மேலும் மார்வாரிகள், சேட்டுகள், நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் ஆகியோரும் நாட்டுப்புற வங்கித் தொழிலில் பெரும் ஆதிக்கம் செலுத்தினர். இவ்வங்கியியல் முறை, இந்தியாவில் 19–ஆம் நூற்றாண்டு வரை, இந்திய வங்கியியல் வரலாற்றில் சிறப்பானதொரு இடம் பெற்றிருந்தது. இவர்கள் சட்டத்தால் முறையாக அமைக்கப் படாததால் அல்லது சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாததால், **அமைப்பிலா பிரிவினர் (Unorganised sector)** எனப்படுகின்றனர்.

(2) அமைக்கப்பட்ட பிரிவு: நாட்டுப்புற மக்களின் பணத் தேவைக்கு கை கொடுக்க நாட்டுப்புற வங்கியர்கள் பன்னெடுங் காலமாக உதவி வந்தனர். அது போல் நகர்ப்புற மக்களின் பணத் தேவைக்கு உதவவும், வைப்பீடுகளைப் பெறவும் வங்கிகள் தேவை என்பதன் முக்கியத்துவம், இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னரே உணரப்பட்டது. ஆங்கிலேயர்கள் முதற்கண் நிறுவனங்களையும் கழகங்களையும் (கூட்டுருக்களையும்) அமைக்க சில சட்டங்களை இயற்றினர். அவற்றின் கீழ் பல நிறுவனங்களும் கழகங்களும் (கூட்டுருக்களும்) (Corporations) தொடங்கப்பட்டன. அந்நிறுவனங்களில் பல வங்கித் தொழிலைப் புரியும் நிறுவனங்களாகவும் (Banking Companies), நிதிக் கழகங்களாகவும் (Financial Corporations) இருந்தன. இவ்வாறு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட வங்கி நிறுவனங்கள், **அமைக்கப்பட்ட பிரிவைச் (Organised sector)** சார்ந்தது எனும் பொதுப் பெயரால் வழங்கப்படலாயிற்று.

அந்த வகையில் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய பெரு

நகரங்களில் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய நிறுவனத்தால் **'மாநில வங்கிகள்' (Presidency Banks)** முறைப்படி நிறுவப்பட்டன. இவ்வங்கிகள் கிழக்கிந்திய நிறுவனத்தின் வங்கிகளாக இயங்கின. வணிக நோக்கத்தில் **இந்துஸ்தான் வங்கி (Bank of Hindustan)** எனும் வங்கி முதன்முதலில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்டது. இதன் பின்னிட்டு வங்கித் தொழிலில் முடக்கம் ஏற்பட்டது. இது 1865–ஆம் ஆண்டு வரை நீடித்தது. 1865–ஆம் ஆண்டு முதல் 1870–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தொடங்கப்பட்ட ஒரே வங்கி **அலகாபாத் வங்கியாகும் (Allahabad Bank Ltd.)**. இதன் பின்னிட்டு இந்தியாவில் வெள்ளியின் தங்க மதிப்பு வீழ்ச்சியடைந்தது (Fall in the gold price of silver). வெள்ளியின் மதிப்பில் ஏற்பட்ட ஒவ்வொரு வீழ்ச்சியும், தங்கத்தின் பண மதிப்பைக் குறைத்தது. இதனால் பணச் சந்தையில் (Money Market) பெரும் நெருக்கடி ஏற்பட்டது. 1893–ஆம் ஆண்டு வரை இந்நிலை சீராகவில்லை. வெள்ளியின் மதிப்பு மிகவும் குறைந்ததால், வெள்ளியிலான நாணயங்களை உற்பத்தி செய்யும் இந்திய நாணயச் சாலை மூடப்பட்டது. பின்னிட்டு 1895–ஆம் ஆண்டில் லாகூரை தலைமையிடமாகக் கொண்டு **பஞ்சாப் நேஷனல் வங்கி (Punjab National Bank Ltd.)** தொடங்கப்பட்டது.

சுதேசி இயக்கமும் வங்கிகளும் (The Swadeshi Movement and the Banks): இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசி இயக்கம் ஆரம்பித்த 1906–ஆம் ஆண்டு முதல் 1913–ஆண்டு வரையிலான காலகட்டத்தில், இந்தியர்கள் பலரும் பல புதிய தனியார் வங்கி நிறுவனங்களை நிறுவினர். அவை பேங்க் ஆஃப் இந்தியா (Bank of India Ltd.), சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, (Central Bank of India Ltd.), இந்தியன் பேங்க் (Indian Bank Ltd.), பேங்க் ஆஃப் பரோடா (Bank of Baroda Ltd.) ஆகியவையாகும். ஆனால் இந்தியர்கள் வங்கிகளைத் தொடங்கிய மகிழ்ச்சி, சில காலம் கூட நீடிக்கவில்லை.

வங்கியியல் நெருக்கடி (Banking Crisis): 1913–ஆம் ஆண்டு முதல் 1917–ஆம் ஆண்டு வரை இந்திய வங்கி நிறுவனங்கள் பெரும் நெருக்கடியை சந்தித்தன. சிறியதும் பெரியதுமான சுமார் 87 வங்கிகள் இந்த காலகட்டத்தில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு மூலதன பற்றாக்குறை, வங்கியின் நீடித்த வாழ்விற்கு ஒரு முறையான வங்கித் தத்துவம் பின்பற்றப்படாமை, வங்கி நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கென தனிச் சட்டங்கள் இன்மை, மக்களுக்கு வங்கிகள் மீது நம்பிக்கையின்மை ஆகியன வங்கிகளின் வீழ்ச்சிக்கு காரணங்களாக அமைந்தன.

இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India): மேற்கண்ட வீழ்ச்சிக்குப் பின்னர், சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய நகரங்களில் இருந்த மாநில வங்கிகள், ஒன்றாக இணைக்கப்பட்டு, 1921–ஆம் ஆண்டில் இந்திய இம்பீரியல் வங்கி உருவாக்கப்பட்டது(Amalgamation of the Presidency

Banks into the Imperial Bank of India). இவ்வங்கி அரசின் வங்கியாகச் செயற்பட்டது.

பின்னிட்டு 1939–ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப் போர் நடந்த பொழுது, வங்கிகளின் வளர்ச்சி ஒரே சீராக இல்லை. இக்காலத்தில் வங்கிகள் துரிதமாக வளர்ச்சியடைந்தன. தொழிலதிபர்கள் பல வங்கிகளை நிறுவினர். ஆனால் அவ்வங்கிகளின் வளர்ச்சி, திட்டமிட்ட வகையில் இல்லை. வங்கிக் கிளைகள் பெரும்பாலும் பெரும் நகரங்களிலேயே அமைக்கப்பட்டன. 1937–ஆம் ஆண்டு முதல் 1948–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பல வங்கிகள் வீழ்ச்சியடைந்தன. இவ்வாறு சுமார் 620 வங்கிகள் தோல்வியடைந்தன.

1935–ஆம் ஆண்டில் **இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India)** தொடங்கப்பட்டது. இது இந்தியாவின் **மைய வங்கியாக (Central Bank)** செயற்பட்டது. இவ்வாறு இந்திய ரிசர்வ் வங்கி செயற்பட்ட போதிலும், முன் கூறியவாறு பல்வேறு காரணங்களால் வங்கிகள் வீழ்ச்சியடைந்தன. வலுவான வங்கியியல் அமைப்பு இந்தியாவில் உருவாகவில்லை. மேலும் அக்கால கட்டங்களில், இந்திய நாடு ஆங்கிலேயர்களின் பிடியில் இருந்ததையும் வங்கிகளின் வளர்ச்சியின்மை மற்றும் வீழ்ச்சிக்கு ஒரு முக்கியக் காரணமாகக் குறிப்பிடலாம்.

சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி (The Development of Banking in India afer Independence): 1949–ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் தேதியில், **இந்திய ரிசர்வ் வங்கி, தேசியமயமாக்கப்பட்டது (Nationalisation of the Reserve Bank of India).** வணிக வங்கிகளை (Commercial Banks) பயனுள்ள வகையில் செயற்படுத்தச் செய்யவும், அவற்றின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கி தேசியமய மாக்கப்பட்டது.

1949–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் (The Banking Regulation Act, 1949) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம், இந்திய ரிசர்வ் வங்கிக்கு மற்ற வங்கிகளை மேற்பார்வை செய்யவும், அவற்றின் நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும் அதிக அதிகாரங்களை வழங்கியது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கம், வலுவான வகையில் வங்கியியல் முறையை வளர்ச்சி அடையச் செய்வதாகும்.

1955–ஆம் ஆண்டில் இந்திய இம்பீரியல் வங்கி, பெயர் மாற்றப்பட்டு **பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India)** என அழைக்கப்படலாயிற்று. நாட்டிற்கு சிறந்த வங்கி வசதியை அளிக்கவும், வேளாண்மை, சிறு தொழில், கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்கு கடன் வசதி அளிக்கவும் உதவும் வகையில் இம்பீரியல் வங்கி தேசியமாக்கப்பட்டு, தற்பொழுது நாம் காணும் பாரத ஸ்டேட்

வங்கியாக உள்ளது. இது தற்பொழுது தற்போது ஏழு துணை வங்கிகளையும் கொண்டிருக்கிறது. இவை மக்களின் சேமிப்பைத் திரட்டுதல், முன்னுரிமைத் துறைகளுக்குக் கடன் வழங்குதல், நலிவடைந்த பிரிவினர்களுக்கு நிதியுதவி செய்தல் போன்ற பல சேவைகளைச் செய்து வருகிறது. இது அரசு வங்கியாதலால், அரசின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் இங்கு பராமரிக்கப்படுகின்றன.

வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாடு (Social Control over Banks): 1968–ஆம் ஆண்டில் வங்கிகளின் மீது சமூகக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது. வங்கிக் கடன்களை பரவலாக அளிக்கச் செய்வதற்கும்,பெரும் தொழிலதிபர்களும், வியாபாரிகளும் வங்கிகளை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதை தடுப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு உதவவும், வேளாண்மை, சிறு தொழில், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் கிடைக்கச் செய்வதற்கும் வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாடு முயன்றது.

வங்கிகளின் தேசியமயமாக்கம் (Nationalisation of Banks): வங்கிகளின் மீதான அரசின் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டம் தோல்வியடைந்த காரணத்தால், வணிக வங்கிகள் (Commercial Banks) சில தேசியமயமாக்கப் பட்டன. 1969–ஆம் ஆண்டு சூலை மாதம் 19–ஆம் தேதியில் ரூ.50 கோடிக்கு மேல் வைப்பீடுகள் (Deposits) கொண்ட 14 பெரிய வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. 1980–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் தேதியில் மேலும் 6 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன. தற்போது பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதனைச் சார்ந்த வங்கிகளைச் சேர்த்து மொத்தம் 27 வங்கிகள் அரசின் வசம் அல்லது பொதுத் துறையின் வசம் உள்ளன. இவ்வங்கிகள் நாட்டின் மொத்த வைப்பீட்டில், ஏறத்தாழ 92% வைப்பீடுகளைக் கொண்டிருக்கின்றன.

முடிவுரை:

இன்று வங்கியியலின் வளர்ச்சி முடிவில்லாதது. எனினும் இந்த அத்தியாயத்திற்கு தற்காலிமாக ஒரு முடிவுரை தேவை. தொழில், வேளாண்மை, வணிகம் ஆகியவற்றிற்கு குறுகிய காலக் கடன்களை வழங்கும் மேற்கண்ட வங்கிகளைத் தவிர, இன்று தொழிற்துறை, வேளாண்துறை, நுகர் பொருள் துறை மற்றும் அயல்நாட்டு வணிகம் ஆகியவற்றின் தனித் தேவைகளுக்கு சேவை செய்யும் பொருட்டு பல சிறப்பு வங்கிகள் நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் தேசியமயமாக்கப்பட்ட மற்றும் பொதுத்துறை வங்கிகளை விட, ஐசிஐசிஐ, எச்.டி.எப்.சி. ஆகிய வங்கிகளின் மிகப் பரவலான, துரிதமான சேவை வியக்கத்தக்கது. அந்த வகையில் நாம் அடுத்து வங்கிகளின் பல்வேறு வகைகளைக் காண உள்ளோம்.

-oOo-

2

வங்கிகளின் பல்வேறு வகைகள் மற்றும் அவை தொடர்பான சட்டங்கள் [Different Types of Banks and the Specific Laws relating to them]

முன்னுரை:

இந்தியாவில் வங்கித் தொழில், வணிக வங்கியியல், கூட்டுறவு வங்கியியல், வேளாண் கடனுதவி, தொழிற் கடனுதவி, வீட்டுவசதிக்கான கடனுதவி, பங்குகளில் முதலீடு, அயல்நாட்டு வணிகம் என்று பல துறைகளிலும், பல புதிய நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது. ஒருபுறம் கிராமப்புற நிதியுதவியிலிருந்து மறுபுறம் சர்வதேச வங்கியியல் வரையில் வங்கித் தொழில் இன்று நீண்டுள்ளது. வங்கித் தொழில் இன்று கணினிமயமாக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றவாறு இன்று **'இணையதள வங்கியியல்' (Internet Banking)** எனும் புதிய சேவையும் மக்களுக்கு கிடைக்கிறது. இன்று இந்திய நாடு பல வகையான வங்கிகளை தன்னகத்தே கொண்டு, சர்வதேச வங்கியியலுடன் போட்டி போடுகிறது; பல வீழ்ச்சிகளுக்குப் பின்னர் படிப்படியாகவும், அதே சமயத்தில் வேகமாகவும் முன்னேறி வருகிறது. அதுபோல **'வங்கியற்ற ஊரில் தங்கி வாழல் தகாது'** எனுமளவிற்கு வங்கிகளின் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட்டுள்ளது. அதற்கொப்ப இன்று இந்தியாவில் எங்கும் வங்கியின் கிளைகள் உள்ளன. இந்த

வங்கிகள் அனைத்தும், அவை செயற்படும் விதத்தைப் பொறுத்தும், அவற்றின் நோக்கங்களைப் பொறுத்தும், பல வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகைகளைத்தாம் நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம். தொடர்வோமா?

வணிக வங்கிகள் [Commercial Banks]:

வணிகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயன் நல்கும் வங்கிகள், வணிக வங்கிகள் எனப்படுகின்றன. இந்தியாவில் அரசுத் துறையிலும் (Public sector), தனியார் துறையிலும் (Private sector) பல வணிக வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக, நாடு முழுவதும் பல கிளைகளைக் கொண்டும், மொத்த வங்கியியல் நடவடிக்கையில் முக்கியப் பங்கையும் கொண்டு செயல்பட்டு வருகின்றன. வணிக வங்கிகள் ஆரம்பத்தில் தனியார்களின் மூலதனப் பங்குகளைக் கொண்டு கூட்டுரு அமைப்புகளாக (நிறுவனங்களாக) (Corporate Bodies) தொடங்கப்பட்டன. ஆனால் பின்னிட்டு, அரசின் உடைமை மற்றும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு, விரிவாக்கப்பட்டன. 1960–ஆம் ஆண்டு வரை வணிக வங்கிகள், நன்கு நிர்மாணிக்கப்பட்ட தொழிலமைப்பு, வணிகம், தொழிற்துறை ஆகியவற்றில் வங்கித் தொழில் செய்து வந்தன. ஆனால் அதற்குப் பிறகு, வேளாண்மை, சிறு தொழில் ஆகியவற்றிற்கும் நிதியுதவி செய்ய ஆரம்பித்தன. சிறு தொகைகளைக் கூட கடனாகக் கொடுத்தன.

அரசுத் துறையில் வணிக வங்கிகள் (Commercial Banks in Public Sector): அரசுத் துறை வணிக வங்கிகள் இன்றைய நிலையை எட்டுவதற்கு முன்று கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது என்றுரைக்கலாம். அவை, முதற்கண், 1921–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்திய இம்பீரியல் வங்கி, 1955–ஆம் ஆண்டில் **பாரத ஸ்டேட் வங்கியாக (State Bank of India)** பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதன் 7[1] துணை வங்கிகள் (Subsidiary Banks) அமைக்கப்பட்டன. இரண்டாவதாக, 1969–ஆம் ஆண்டு சூலை மாதம் 19–ஆம் தேதியில் 14[2] முக்கியமான வணிக **வங்கிகள் தேசியமயமாக்கப்**

1. 1. State Bank of Bikanir and Jaipur, 2. State Bank of Hydrabad, 3. StateBank of Indore, 4. State Bank of of Mysore, 5. State Bank of Patiyala, 6. State Bank of Sowrashtra and 7. State Bank of Thiruvancore.

2. 1. The Central Bank of India Ltd.,2. The Bank of India Ltd., 3. The Punjab National Bank Ltd., 4. The Bank of Baroda Ltd., 5. The United Commercial Bank Ltd., 6. Canara Bank Ltd., 7. United Bank of India Ltd., 8. Dena Bank Ltd., 9. Syndicate Bank Ltd., 10. The Union of Bank of India Ltd., 11. Allahabad Bank Ltd., 12. The Indian Bank Ltd., 13. The Bank of Maharashtra Ltd., and 14.The Indian Overseas Bank Ltd.

பட்டன (Nationalisation of Banks). இறுதியாக 1980–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் தேதியில் மேலும் 6[1] வணிக வங்கிகள் தேசிமயமாக்கப்பட்டன. அவற்றில் நியூ பேங்க் ஆஃப் இந்தியா (New Bank of India) எனும் வங்கி பின்னிட்டு பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைந்துவிட்டது. எனவே இன்று இந்திய வணிக வங்கியியலில் அரசுத் துறையில் 27 வங்கிகள் செயற்பட்டு வருகின்றன.

தனியார் துறையில் வணிக வங்கிகள் (Commercial Banks in Private Sector): தனியார் துறையில் வணிக வங்கிகளைத் தொடங்க இந்தியாவில் சட்டப்படியான தடை ஏதும் இல்லை. எனினும், வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, தனியார் துறையில் புதிய வங்கிகள் ஏதும் இந்தியாவில் தொடங்கப் படவில்லை. **நிதித் துறையில் அமைக்கப்பட்ட நரசிம்மம் குழு (The Narasimham Committee on Financial Sector),** தனியார் துறையில் வணிக வங்கிகளை இந்தியாவில் தொடங்குதல் வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1993–ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி, இத்தகு புதிய வங்கிகளை தனியார் துறையில் தொடங்குவதற்குண்டான வழிகாட்டு நெறிகளை வகுத்துரைத்தது. இந்த வங்கிகளை பின்வரும் இரண்டு பெரும் வகைகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை,

(1) இந்திய வங்கிகள் (Indian Banks): தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லாத, இந்திய தொழிலதிபர்களின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள வணிக வங்கிகள், தனியார் துறை இந்திய வங்கிகள் எனப்படுகின்றன.

(2) அயல்நாட்டு வங்கிகள் (Foreign Banks): இந்தியாவிற்கு அப்பால் பதிவு செய்யப்பட்டு, ஆனால் இந்தியாவில் தனது வணிகத்திற்கென ஒரு இடத்தைக் கொண்டுள்ள வங்கிகள், தனியார் துறை அயல்நாட்டு வங்கிகள் எனப் படுகின்றன.

உள்ளூர் வங்கிகள் (Local Area Banks): 1996–ஆம் ஆண்டில் நமது இந்திய அரசு உள்ளூர் பகுதிகளில் புதிய வங்கிகள் தொடங்க அனுமதி அளிக்க முடிவு செய்தது. ஆனால் அவ்வங்கிகளின் நோக்கம் பின்வருமாறு இருத்தல் வேண்டும். அவை, (1) கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புற சேமிப்புகளை (rural and semi-urban savings) மேம்படுத்துவதற்குண்டான அமைப்புவழி இயங்குமுறைப் பின்னணியை (institutional mechanism) அவ்வங்கிகள் அளிக்க வேண்டும்; மற்றும் (2) வட்டாரப் பகுதியில் சாத்தியமுள்ள பொருளாதார செயற்பாடுகளுக்குண்டான கடனுதவியை அளித்தல் வேண்டும். இத்தகு வங்கிகள்

1. 1. Andra Bank Ltd., 2. Corporation Bank Ltd., 3. New Bank of India Ltd., 4. Oriental Bank of Commerce Ltd., 5. Punjab and Sind Bank Ltd., and 6. Vijaya Bank Ltd.,

தனியார் துறையில் பங்குகளால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களாக நிறுவப்பட்டு, தனிப்பட்ட நபர்களாலும், நிறுவனங்களாலும், பொறுப்பாண்மை அமைப்புகளாலும் மற்றும் சங்கங்களாலும் மேம்படுத்தப்படுகின்றன (established as public limited companies and promoted by individuals, companies, trusts and societies). இவ்வங்கிகளைத் தொடங்க, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (paid-up capital) குறைந்தபட்சம் 5 கோடி ரூபாயாகவும் மற்றும் மேம்பாட்டாளரின் பங்கு (promoter's contribution) குறைந்தபட்சம் 2 கோடி ரூபாயாகவும் இருத்தல் வேண்டும்.

கூட்டுறவு வங்கிகள் [The Co-opertive Banks]:

தங்களது பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, உறுப்பினர்கள் பலரைக் கொண்டு **கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்** (The Co-operative Societies Act) கீழ் அமைக்கப்பட்ட ஒரு தன்னார்வ சங்கமே, கூட்டுறவு வங்கியாகும். கூட்டுறவு வங்கிகள் மூன்றடுக்கு அமைப்பில் அமைந்துள்ளன. அதாவது அதன் மேலமை நிலையில் அல்லது மாநில அளவில் (Apex or State level) – **மாநில கூட்டுறவு வங்கிகளும்** (State Co-operative Banks-SCB), மாவட்ட அளவில் (District level) – **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும்** (District Central Co-operative Banks-DCB), கிராமப்புற அளவில் (Village level) **தொடக்கநிலை வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் (தொடக்கநிலை வேளாண் கடனுதவிச் சங்கங்கள்)** (Primary Agricultural Co-operative Banks or Primary Agricultural Credit Societies) அமைந்துள்ளன. இவ்வங்கிகள் குறுகிய மற்றும் நடுத்தர கால கடன்களை (short and medium term credit) வழங்குகின்றன. மேலும் தொடக்கநிலை வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், விவசாயிகளின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

இங்கு மற்றொரு கூட்டுறவு வங்கியின் பங்கும் மகத்தானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அது **நகர (அல்லது நகர்ப்புற) கூட்டுறவு வங்கி (The Urban Co-operative Bank)** ஆகும். நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்களிடம் சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதற்காகவும் இந்தியாவில் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் பல நிறுவப்பட்டுள்ளன. இதில் நகர்ப்புற மக்கள் பலரும் இன்று உறுப்பினர்களாக உள்ளனர். இவை நகைக் கடன், அடைமானக் கடன், வாகனக் கடன், வீட்டு வசதிக் கடன், நுகர்பொருள் கடன் என பலவகைகளிலும் நகர்ப்புற மக்களின் பணத் தேவைகளை எளிய முறையில் பூர்த்தி செய்கின்றன.

கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் – வேறுபாடு (Dis-

tinctions between Co-operative Banks and Commercial Banks): இத்தகு கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகளிலிருந்து பல வகையிலும் மாறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, (1) வணிக வங்கிகள் 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுப் பங்கு நிறுவனங்களாக (Joint Stock Companies) அல்லது பாராளுமன்றம் இயற்றிய தனிச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட பொதுக் கூட்டுருக்களாக (Public Corporations) உள்ளன. ஆனால் கூட்டுறவு வங்கிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் இயற்றியுள்ள கூட்டுறவு சங்கங்கள் சட்டங்களின் கீழ் அமைக்கப் பெற்றவையாக உள்ளன. (2) கூட்டுறவு வங்கிகள் மேற்கண்டவாறு மூன்றடுக்கு கட்டமைப்பில் அமைந்துள்ளன. ஆனால் வணிக வங்கிகள், தனி வங்கியாக (அலகு வங்கியாக) (Unit basis) உள்ளன. (3) மாநில கூட்டுறவு வங்கி மட்டுமே தனது மறுநிதியுதவி வசதிக்காக (re-finance facility) இந்திய ரிசர்வ் வங்கியை அணுக முடியும். ஆனால் அட்டவணை வங்கியாக (Scheduled Bank) உள்ள ஒவ்வொரு வணிக வங்கியும் தனது மறு நிதியுதவிக்காக இந்திய ரிசர்வ் வங்கியை அணுக உரிமை படைத்தது. (4) கூட்டுறவு வங்கிகள் ஒரு வரம்பிற்குட்பட்ட நிலப்பரப்பிற்குள்தான் தனது வங்கித் தொழிலை செய்ய இயலும். ஆனால் வணிக வங்கிகளின் எல்லை பரந்தது. இந்தியாவிற்குள் எங்கும் தனது வங்கித் தொழிலைப் புரியலாம். (5) கூட்டுறவு வங்கிகள், அடிப்படையில் கிராமப்புறத் தன்மை (rural oriented) வாய்ந்தது. அது முக்கியமாக வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய தேவைகளுக்காக கடனுதவி செய்கிறது. ஆனால் வணிக வங்கிகள், அடிப்படையில் நகர்ப்புறத் தன்மை (urban oriented) வாய்ந்தது. நகர்ப்புற வணிகம் மற்றும் தொழிற்துறையின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. (6) கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுச் சட்டங்களாலும், 1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் (The Banking Regulation Act, 1949) சில பிரிவுகளாலும் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் வணிக வங்கிகள், முழுக்க முழுக்க 1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தால் மட்டுமே ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

வட்டார ஊரக வங்கிகள் [Regional Rural Banks]:

இவ்வகை வங்கிகள் 1976–ஆம் ஆண்டின் **வட்டார ஊரக வங்கிகள் சட்டத்தின் (The Regional Rural Banks Act, 1976)** கீழ் நிறுவப்பட்டதாகும். இவ்வங்கிகளின் நோக்கம், கிராமப்புற (ஊரக) பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகும். அதற்காக சிறிய மற்றும் பெரிய விவசாயிகளுக்கும், வேளாண் நில உடைமையாளர்களுக்கும், ஊரக சிறு தொழிலதிபர்களுக்கும் கடனுதவிகளையும், பிற வசதிகளையும் செய்வதாகும்.

மாநில வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகள் [State Agricultural and Rural Development Banks]:

இவ்வகை வங்கிகள் முன்பு **நில வள வங்கிகள் (Land Development Banks)** என்றழைக்கப்பட்டன. இவ்வங்கிகள் வேளாண் விவசாய பெருமக்களுக்கு நீண்ட கால கடன்களை (long term credits) அளிக்கின்றன. இதன் மாவட்ட மற்றும் கிராமப்புற கிளைகள், விவசாயிகளுக்கு தேவைப்படும் கடனுதவிகளை அவர்களது அசையாச் சொத்துக்களின் (நிலங்களின்) அடைமானத்தின் பேரில் அளிக்கின்றன. முக்கியமாக வேளாண் நிலத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு அதாவது கிணறு வெட்டுதல், நீர் இறைப்பான் வாங்குதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல் மற்றும் செப்பனியிடுதல், நிலம் உழ டிராக்டர் வாங்குதல், நிலத்தை சமன் செய்தல் ஆகியவற்றிற்கு கடனுதவி செய்கின்றன.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி [National Bank for Agricultural and Rural Development - NABARD]:

இவ்வங்கி வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான **மேலமை வங்கியாகும் (Apex Bank)**. இவ்வங்கி இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண்மை கடன் துறை மற்றும் ஊரக திட்டமிடல் மற்றும் கடன் பிரிவை, வேளாண்மை மறுநிதியுதவி மற்றும் வளர்ச்சிக் கழகத்துடன் ஒன்றிணைத்து (merging the Agricultural Credit Department and Rural Planning and Credit Cell of the Reserve Bank of India and the entire undertaking of Agricultural Re-finance and Development Corporation), 1982–ஆம் ஆண்டு சூலை 12–ஆம் தேதியில் நிறுவப்பட்டதாகும். இவ்வங்கி பின்வரும் மூவகை பணிகளைச் செய்கிறது.

(1) கடனுதவிப் பணிகள் (The Credit functions): கிராமப்புறப் (ஊரகப்) பகுதிகளின் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக கடனுதவி செய்து வரும் வங்கி நிறுவனங்களுக்கு, இவ்வங்கி மறு நிதியுதவி அளிப்பதில் மேலமைந்ததாக (an apex re-financing agency) உள்ளது. மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், மாநில நில வள வங்கிகள் (குறுகிய கால கடன் தவிர), வணிக வங்கிகள் (நீண்ட கால கடன் மட்டும்), இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கிகரிக்கப்பட்ட வேறு வங்கி நிறுவனங்கள் ஆகியவை மேற்கண்ட வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெற உரிமை படைத்ததாகும். **(2) மேம்பாட்டுப் பணிகள் (The Development functions):** இவ்வங்கி, கிராமப்புறத்தில் (ஊரக) கடனுதவி அளிக்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கிறது.

வேளாண்மை மற்றும் கிராமப்புற பிரச்சனைகளை எப்படி அணுகுவது என்பதற்குண்டான ஆலோசனைகளை அவ்வங்கிகளுக்கு வழங்குகிறது. கிராமப்புற மேம்பாட்டு முயற்சித் திட்டங்களில் அரசாங்கத்திற்கும், இந்திய ரிசர்வ் வங்கிக்கும் உதவுகிறது. **(3) ஒழுங்குபடுத்தும் பணிகள் (The Regulatory functions):** இங்வங்கிக்கு, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளை (தொடக்க நிலை வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் தவிர) ஆய்வு செய்யும் அதிகாரத்தை 1949–ன் வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் அளித்துள்ளது. மேற்கண்ட வங்கிகளில் யாதொன்றும் தனது கிளைகளை எங்காவது ஆரம்பிக்கும் பொருட்டு இந்திய ரிசர்வ் வங்கியிடம் அனுமதி கோரினால், அதற்கு மேற்படி தேசிய வங்கி பரிந்துரைக்க வேண்டும். இதன் பேரில்தான் ரிசர்வ் வங்கி அனுமதியளிக்கும்.

இந்தியத் தொழில் மேம்பாட்டுவங்கி [Industrial Development Bank of India - IDBI]:

நீண்ட கால தொழிற் கடனுதவி (long term industrial finance) அளிக்கும் வங்கி நிறுவனங்களில், இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி ஒரு மேலமை வங்கி நிறுவனமாகும் (Apex banking institution). இவ்வங்கி 1964–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது முதலில் இந்திய ரிசர்வ் வங்கியின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள துணை வங்கியாக தொடங்கப்பட்டது. ஆனால் பின்னிட்டு, 1976–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ஆம் தேதியில் இவ்வங்கி ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, அதன் மொத்த பங்கு மூலதனமும் மத்திய அரசிற்கு மாற்றப்பட்டது. எனவே இங்வங்கியின் பணியும் பங்கும் மேலும் அதிகமாகியது. இவ்வங்கி, தனது கட்டுப்பாட்டின் கீழ் பல துணை வங்கிகளையும் (subsidiary banks) கொண்டுள்ளது.

இத்தகு தொழில் மேம்பாட்டு வங்கிகளை பின்வரும் இரண்டு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை,

(1) அனைத்திந்திய தொழில் மேம்பாட்டு வங்கிகள் (All India Industrial Development Banks): (a) இந்திய தொழில் நிதியுதவிக் கழகம் (Industrial Finance Corporation of India - **IFCI**); (b) இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (Industrial Credit & Investment Corporation of India - **ICICI**); (c) இந்திய தொழில் மறு–கட்டமைப்பு வங்கி (Industrial Re-Construction Bank of India - **IRBI**); (d) இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (Small Industries Development Bank of India - **SIDBI**) ஆகியன, நாடு முழுவதும் பரவலாக தங்கள் வங்கித் தொழிலைப் புரிகின்றன.

(2) மாநில அளவிலான தொழில் மேம்பாட்டு வங்கிகள் (State level Industrial Development Banks): (e) மாநில நிதியுதவிக் கழகங்கள் (State Financial Corporations - **SFCs**) மற்றும் (f) மாநில தொழில் மேம்பாட்டுக் கழகங்கள் (State Industrial Development Corporations - **SIDCs**). இவ்வங்கிகள் தாங்கள் நிறுவப்பட்டுள்ள மாநிலத்திற்குள் மட்டுமே தங்கள் வங்கிச் செயற்பாடுகளைச் செய்ய முடியும். இவ்வங்கிகளின் செயற்பாடு குறித்து சுருக்கமாக வருமாறு.

(a) இந்திய தொழில் நிதியுதவிக் கழகம் (Industrial Finance Corporation of India - IFCI): இவ்வங்கி இந்தியாவில் 1948–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, முதல் தொழில் மேம்பாட்டு வங்கியாகும். இது 1993–ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதியில் ஒரு வரம்புடைய பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. இந்திய தொழிற் துறைக்கு உதவி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும். இது பின்வரும் வழிகளில் தொழிற் துறையின் வளர்ச்சிக்கு பாடுபடுகிறது. அவை (1) இது இந்திய ரூபாய் மதிப்பிலும் அயல்நாட்டு பணத்தாள் மதிப்பிலும் (அந்நிய செலாவணி மதிப்பு) (both in rupees and foreign currencies) நீண்ட கால கடன்களை தொழிற்துறைக்கு வழங்குகிறது. (2) மற்ற நிறுவனங்கள் வெளியிட்ட சாதாரண மற்றும் முன்னுரிமைப் பங்கு முதல் பத்திரங்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் விற்பனைக்கு உத்தரவாதமளிக்கிறது. அதுபோல் அவற்றில் முதலீடும் செய்கிறது. (underwriting and subscribing to equity, preference and debenture issues). (3) அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அல்லது இந்தியாவில் வாங்கப்படும் இயந்திரத்திற்கு காலந்தாழ்ந்த முறையில் பணம் செலுத்த (deferred payments) தொழிலதிபர்களுக்கு பொறுப்புறுதி (guarantee) அளிக்கிறது. (4) அயல்நாட்டு நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து அந்நிய செலாவணியில் பெறப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

குறிப்பிடப்பட்ட தொழிற்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட பொது, தனியார் அல்லது கூட்டுத் துறை நிறுவனங்கள் எதுவும் மேற்படி வங்கியிடமிருந்து நிதியுதவி பெறலாம். இந்த வகையில் ஒரு கூட்டுறவு சங்கம் கூட இதனிடமிருந்து நிதியுதவி பெறலாம். இத்தகு நிதியுதவி புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், மாற்றியமைக்கவும், புதுப்பிக்கவும், நவீனமயப்படுத்தவும் கிடைக்கிறது. இக்கழகம் தனது மூலதனத்தை, பொது மக்களுக்கு தனது பிணையாவணங்களை (bonds) வெளியிடுவதன் மூலமாகவும், மத்திய அரசிடமிருந்து கடன் பெறுவதன் வாயிலாகவும், அயல்நாட்டு நிதியிலிருந்தும் திரட்டுகிறது.

(b) இந்திய தொழில் கடனுதவி மற்றும் முதலீட்டுக் கழகம் (Indus-

trial Credit & Investment Corporation of India - ICICI): 1955–ஆம் ஆண்டில் ஐசிஐசிஐ எனும் கழகம் ஒரு கூட்டுப் பங்கு நிறுவனமாக தனியார் துறையால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், உலக வங்கியின் நிதியை இந்திய தொழிற் துறைக்கு பெற்றுத் தருவது. அதுபோல் மூலதனச் சந்தையை இந்தியாவில் வளர்ச்சியுற வைப்பது. ஆரம்பத்தில், இதன் மூலதனம், தனியார் துறை நிறுவனங்கள், அமைப்புகள், தனிப்பட்ட நபர்களிடமிருந்து திரட்டப்பட்டது. ஆனால் பின்னிட்டு சில முக்கிய வணிக வங்கிகளும், சில முக்கிய கூட்டுருக்களான ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India - LIC), பொதுக் காப்பீட்டுக் கழகம் (General Insurance Corporation - GIC) ஆகியவையும் தேசியமயமாக்கப்பட்டதால், அவை தற்பொழுது இதன் பங்கு மூலதனத்தின் பெரும் பகுதியை வைத்துள்ளது. மேலும் 1991–ஆம் ஆண்டில் இதன் தனிப்பட்ட பங்குதாரர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்தது.

ஐசிஐசிஐ–யின் கடனுதவித் திட்டத்தில் முக்கிய அம்சம் யாதெனில், அந்நிய செலாவணியில் கடனுதவி அளித்தல் ஆகும். இதற்குண்டான வளத்தை உலக வங்கி, மேற்படி ஐசிஐசிஐ கழகத்திற்கு மிகப் பரந்த அளவில் அளித்துள்ளது. மேலும் 1973–ஆம் ஆண்டு முதல் ஐசிஐசிஐ கழகம் அந்நிய செலாவணி கடனுதவிகளைப் பெற சர்வதேச மூலதனச் சந்தையிலும் நுழைந்தது.

அதுபோல் இந்திய ரூபாய்க்கான வளத்தின் பெரும் பகுதியை, மூலதனச் சந்தையில் கடனீட்டுப் பத்திரங்களை (by way of debentures in the capital market) வெளியிடுவதன் மூலம் திரட்டுகிறது. மேலும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்தும், அரசிடமிருந்தும் ஐசிஐசிஐ தனக்குரிய நிதி ஆதாரத்தைக் கடனாகக் கோருகிறது.

(c) இந்திய தொழில் மறு–கட்டமைப்பு வங்கி (Industrial Re-construction Bank of India - IRBI): நவீனமயமாக்க வேண்டிய, மாற்றியமைக்க வேண்டிய மற்றும் இன்றைய தொழில்நுட்பத் தேவையுள்ள நலிவடைந்த மற்றும் நலிவற்ற தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு நிறுவப்பட்டதே மேற்படி "இந்திய தொழில் மறு–கட்டமைப்பு வங்கி" ஆகும். இது ஆரம்பத்தில் தொழிற்துறை நலிவடைந்து வரும் சூழ்நிலையில், அதனை மேம்படுத்துவதற்காக 1971–ஆம் ஆண்டில் "இந்திய தொழில் மறு–கட்டமைப்புக் கழகமாக (வரை)" (Industrial Re-construction Corporation of India Limited) நிறுவப்பட்டது. பின்னிட்டு 1984–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய தொழில் மறு–கட்டமைப்பு வங்கிச் சட்டத்தின் கீழ், மேற்படி "இந்திய தொழில் மறு–கட்டமைப்புக் கழகம்" 1985–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20–ஆம் தேதி முதலில் மேற்படி "இந்திய தொழில் மறு–கட்டமைப்பு வங்கி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(d) இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (Small Industries Development Bank of India - SIDBI): சிறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்க ஒரு வங்கி தேவை என்பது நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனால் மேற்படி வங்கி நிறுவப்பட்டது. இந்த வங்கி, நாம் ஏற்கனவே கண்ட இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் (IDBI) ஒரு துணை வங்கியாக (subsidiary bank) செயற்படுகிறது.

(e) மாநில நிதியுதவிக் கழகங்கள் (State Financial Corporations - SFCs): மாநிலங்களில் அமைந்துள்ள நடுத்தர மற்றும் சிறு தொழில்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, பல்வேறு மாநிலங்களில் 1951–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மாநில நிதியுதவிக் கழகங்கள் சட்டத்தின் (The State Financial Corporations Act, 1951) கீழ், மேற்படி மாநில நிதியுதவிக் கழகங்கள் அமைக்கப் பட்டன. இக்கழகங்களின் பங்கு மூலதனத்தில், இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) ஒரு கணிசமான பங்களிப்பை செய்துள்ளது.

(f) மாநில தொழில் மேம்பாட்டுக் கழகங்கள் (State Industrial Development Corporations - SIDCs): இந்தியாவின் பல்வேறு மாநில அரசுகளால் இக்கழகங்கள், நிறுவனங்களாக அமைக்கப்பட்டன. இவற்றின் மீது அந்தந்த மாநிலங்கள் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன. இவை தொழிற் துறையில் கடனுதவி வழங்குவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. அதற்கும் மேலாக, தொழிற்மயமாக்கலின் வேகத்தை தங்களுக்குரிய மாநிலங்களில் அதிகரிக்கச் செய்யும் ஒரு கருவியாகச் செயல்படுகின்றன. இதற்குரிய மறுநிதியுதவியை இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) வழங்குகிறது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (வரை.) [Housing and Urban Development Corporation Ltd.- HUDCO]:

இக்கழகம், ஒரு இந்திய அரசு கூட்டுருவாக (a Government of India Undertaking) 1970–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம், வீட்டுவசதிக்கு நிதியுதவியளித்தல் அல்லது வீட்டுவசதி செய்து தரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல், நகர்ப்புற மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல் ஆகியனவாகும். குறிப்பாக சமூகத்தில் குறைந்த வருவாய் பிரிவுடைய மக்களின் வீட்டுவசதிக்காக, பல்வேறு வீட்டுவசதி வாரியங்களும், மேம்பாட்டு அதிகார அமைப்புகளும், நகராட்சிக் கழகங்களும், கூட்டுறவுத் துறைகளும் வகுக்கும் திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறது. மேலும் இக்கழகமே, நிலத்தின் மதிப்பு, மேம்பாட்டு நிருவாகச் செலவு, கட்டுமான மேற்பார்வை கட்டணம் மற்றும் அளிக்கப்பட வேண்டிய நிதியுதவித் தொகை ஆகியவற்றைத் தீர்மானிக்கிறது.

இதனால், வீட்டுவசதி வேண்டும் மக்களின் கையை மிஞ்சாத அளவிற்கு வீட்டின் மதிப்பு அமைகிறது.

விட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் (வரை) [Housing Development Finance Corporation Ltd.- HDFC]:

இக்கழகம், 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1977–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ஆம் தேதியில் நிறுவப்பட்டதாகும். இது இந்தியாவில் வீட்டு வசதிக்கென, தனிப்பட்ட நபர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிக்கிறது. அது போல் தனிப்பட்ட நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் வைப்பீடுகளைப் பெறுகிறது. இதனிடம் தொகை வைப்பீடு செய்துள்ளவர்கள் மற்றும் இதன் பங்குகளை வாங்கியுள்ளவர்களுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

தேசிய விட்டு வசதி வங்கி [National Housing Bank- NHB]:

வீட்டு வசதிக்கான கடனுதவிகளை வழங்க ஒரு மேலமை வங்கி (Apex Bank) தேவை எனும் அடிப்படையில் 1987–ஆம் ஆண்டின் தேசிய வீட்டுவசதி வங்கிச் சட்டத்தின் (The National Housing Bank Act, 1987) கீழ், மேற்படி தேசிய வீட்டு வசதி வங்கி 1988–ஆம் ஆண்டு சூலை மாதம் 9–ஆம் தேதியில் நிறுவப்பட்டது. உள்ளூர் மற்றும் வட்டார அளவில் வீட்டு வசதி நிதியுதவி நிறுவனங்களைத் தொடங்குவதும், இந்த நிறுவனங்களுக்கு நிதி மற்றும் பிற உதவிகளை வழங்குவதும் இதன் முதன்மை நோக்கமாகும்.

இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி [Export Import Bank of India - EXIM Bank]:

இவ்வங்கி 1–1–1982–ஆம் தேதியில் நிறுவப்பட்டது. இந்தியாவில் அயல் நாட்டு வணிகத்தைப் பொறுத்தவரை நிதியுதவி அளிப்பதில் மேற்படி வங்கி ஒரு மேலமை வங்கியாகும் (Apex Bank). இது மூலதன மற்றும் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. மேலும் இத்தகு நிதியுதவி அளிக்கும் இந்தியாவில் உள்ள பிற நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் ஒரு தலைமை வங்கியாகச் செயல்படுகிறது. இவ்வங்கி, இந்தியாவிலிருந்தும், பிற நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் வாங்குதல், மத்திய அரசின் முன்னனுமதியுடன் அயல்நாடு எதனிடமிருந்தும், அல்லது அயல்நாடு எதிலுமுள்ள வங்கி அல்லது நிதி நிறுவனம் எதனிடமிருந்தும் வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் கடன் வாங்குதல் ஆகியவை மூலமாக தனக்குரிய நிதியாதாரங்களைப் பெருக்கிக் கொள்கிறது.

இந்திய ஏற்றுமதி கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் (வரை.) [Export Credit Guarantee Corporation of India Ltd.- ECGC]:

இக்கழகம், இந்திய அரசின் ஒரு கூட்டுரு ஆகும். இந்திய ஏற்றுமதியாளர்கள் உலக வர்த்தக சந்தையில் போட்டிபோட்டு வணிகம் செய்ய, அயல்நாட்டு வணிகர்களுக்கு சரக்குகளை கடன் கணக்கில் (on credit basis) ஏற்றுமதி செய்கின்றனர். இவ்வாறு ஏற்றுமதி செய்யும் பொழுது வணிகவியல்ரீதியாக அல்லது அரசியல்ரீதியாக ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்களை இக்கழகம் பாதுகாக்கிறது. ஏற்பட்ட இழப்பில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஏற்றுமதியாளர்களுக்கு ஈட்டளிக்கிறது. சுருங்கக் கூறின் இக்கழகம் இந்திய ஏற்றுமதியாளர்களின் காப்பீட்டு நிறுவனமாகச் செயல்படுகிறது எனலாம்.

முதலீட்டு நிறுவனங்கள் [The Investing Institutions]:

(1) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India - LIC): இக்கழகம், 1956–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து செயற்படத் தொடங்கியது. இது, இந்தியாவில் அதிக அளவில் பொதுத் துறையில் முதலீடு செய்யும் ஒரு நிறுவனமாகும். இதன் முதலீடுகள் காப்பீட்டுச் சட்டத்தின் 27–A- வது பிரிவால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இதனால் இதன் முதலீட்டு ஆதாரங்களில் பெருமளவு பகுதி, அரசுக் காப்புறுதிகளிலும் (government securities), மற்றொரு பகுதி அரசு மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிகளிலும் முதலீடு செய்யப்படுகிறது. இவ்வாறு செய்யப்பட்ட முதலீடுகள் சமுக நலத் துறைகளுக்கு கடனாக வழங்கப்படுகின்றன.

(2) இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் (General Insurance Corporation of India - GIC): நாட்டில் இருந்த பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, 1973–ஆம் ஆண்டில் இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் நிறுவப்பட்டது. இதற்கு நான்கு துணைக் கழகங்கள் உள்ளன. அவை, நேஷனல் காப்பீட்டு நிறுவனம், நியு இந்தியா அஸ்ஸுரன்ஸ் நிறுவனம், ஓரியண்டல் தீ மற்றும் பொதுக் காப்பீட்டு நிறுவனம் மற்றும் யூனெட்டட் இந்தியா காப்பீட்டு நிறுவனம். இவ்வய்ந்து காப்பீட்டு நிறுவனங்களும் அரசின் வழிகாட்டு நெறிகளின் படி இயங்குகின்றன. இவை பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, பல்வேறுவிதமான இடர்களிலிருந்து மக்களை பாதுகாக்கின்றன. இதற்காக காப்பீடு செய்து கொள்பவர்களிடமிருந்து முனைமம் (premium) வசூலிக்கின்றன. இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகத்தின் நிதிகள், மத்திய மற்றும் மாநில அரசுப் பிணையங்களிலும், வீட்டுவசதித் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு பொதுக் குழுவமைப்புகளுக்கு (public bodies) கடன் வழங்குவதிலும் முதலீடு செய்யப்படுகிறது.

(3) இந்திய யூனிட் டிரஸ்ட் (Unit Trust of India - UTI): இது ஒரு சட்டப்படியான அரசுத் துறை முதலீட்டு நிறுவனமாகும். இது 1963–ஆம் ஆண்டின் இந்திய யூனிட் டிரஸ்ட் சட்டத்தின் (Unit Trust of India Act, 1963) கீழ், 1964–ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். இது தனது பல்வேறு அலகுத் திட்டங்களின் (various unit schemes) கீழ், தனது அலகுகளை (Units) மக்களுக்கு விற்பனை செய்வதன் மூலம், சமுதாயத்தின் சேமிப்புகளைத் திரட்டி வருகிறது. இந்தச் சேமிப்புகள் பின்னர், மேற்கண்ட அலகுகளை வாங்கியவர்களின் நலனுக்காக, சிறந்த முறையில் இலாபமீட்டி வரும் நிறுவனங்களின் பங்குகளிலும், கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்படுகிறது. இத்தகு முதலீடு களிலிருந்து கிடைக்கும் ஆதாயம், இந்த டிரஸ்டிற்குண்டான செலவுகள் செய்யப்பட்ட பின், இதன் அலகுகளை வாங்கியவர்களுக்கு ஆண்டுதோறும் பங்காதாய ஈவுத் தொகையாக (divident) பகிர்ந்தளிக்கப்படுகிறது.

நாட்டின் நிதியியல் அமைப்பில், இந்திய யூனிட் டிரஸ்ட் வலுவான, நம்பிக்கையான முதலீட்டு நிறுவனமாக விளங்குகிறது. ஏனென்றால், இது வெளியிடும் அலகுகளை வாங்கி, இதில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களின் நிதி இங்கு பாதுகாப்பாக உள்ளது. சீரான பங்காதாய ஈவு கிடைக்கிறது. மேலும் இந்த டிரஸ்ட், தான் வெளியிட்ட அலகுகளை, தான் நிர்ணயிக்கும் விலையில் அவற்றை வாங்கியவர்களிடமிருந்து மீண்டும் தானே வாங்கிக் கொள்ள எப்பொழுதும் தயாராக உள்ளது (always ready to buy back units). இதனால் அறிவிக்கப்படும் பங்காதாய ஈவுத் தொகை, வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80L–ன் கீழ், சில வரம்புகளுக்குட்பட்டு விலக்கு பெற்றதாகும். எனவே தங்கள் பணத்தை எங்கு, எதில் முதலீடு செய்து, சீரான ஆதாயம் பெறுவது என்பது குறித்து அறிய இயலாத நடுத்தர வர்க்க மக்களுக்கு, இந்திய யூனிட் டிரஸ்ட் ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும்.

வைப்பீட்டுக் காப்பீடு மற்றும் கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் [Deposit Insurance and Credit Guarantee Corporation - DICGC]:

வங்கிகளில் மக்கள் தங்கள் பணத்தை வைப்பீடு செய்கின்றனர். குறிப்பிட்ட தவணைக்குப் பிறகு, அவற்றை வங்கிகள் வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்க முடியாத சூழ்நிலை ஏதும் ஏற்பட்டால், வைப்பீடு செய்த சிறு முதலீட்டாளர்களுக்கு காப்பீடு வழங்கும் பொருட்டு, 1961–ஆம் ஆண்டின் வைப்பீட்டுக் காப்பீட்டுக் கழகச் சட்டத்தின் (The Deposit Insurance Corporation Act, 1961) கீழ் 1962–ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் தேதியில் வைப்பீட்டுக் காப்பீட்டுக் கழகம் நிறுவப்பட்டது. அதுபோல்

கொடுக்கப்படும் கடன்களை, கடன் பெற்றவர்கள் திருப்பி அளிக்கவில்லை யானால், வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பிற்கு பொறுப்புறுதி அளிக்கும் பொருட்டு, இந்திய ரிசர்வ் வங்கியால், 1978–ஆம் ஆண்டு சூலை 15–ஆம் தேதியில் இந்திய கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் நிறுவப்பட்டது. பின்னிட்டு இவை இரண்டும் இணைக்கப் பட்டு, "வைப்பீட்டுக் காப்பீடு மற்றும் கடனுதவி பொறுப்புறுதிக் கழகம்" எனும் மறு பெயர் சூட்டப்பட்டது. இன்று வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள் ஆகிய அனைத்தும், தங்களிடம் செய்யப்படும் வைப்பீடுகளுக்கு மேற்கண்ட கழகத்தின் காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெற்றதாக உள்ளன. இதற்குண்டான முனைமத்தை (premium) அவ்வங்கிகளே தாங்கள் பெற்றுள்ள வைப்பீட்டின் மதிப்பிற்கேற்றவாறு மேற்கண்ட கழகத்திற்கு செலுத்துகின்றன. எனவே இந்த காப்பீடு வைப்பீட்டாளர்களுக்கு இலவசமாக கிடைக்கிறது. கடனுதவி பொறுப்புறுதியைப் பொறுத்தவரை, கடன் பெற்றவர்களே பொறுப்புறுதிக் கான கட்டணத்தை (guarantee fee) தாங்கள் கடன் பெற்றுள்ள வங்கிகளுக்கு செலுத்த வேண்டும். அக்கட்டணத்தை அவ்வங்கிகள், மேற்கண்ட கழகத்திற்கு செலுத்திவிடுகிறது.

தனிப்பட்ட நபர்கள் செய்யும் வங்கித் தொழில் [Banking by Individuals]:

நாம் இந்நூலின் ஆரம்பத்தில் பாபிலோனியர்களின் வங்கி முறையையும், இங்கிலாந்தில் பொற்கொல்லர்கள் செய்த வங்கி முறையையும் கண்டோம். இவையெல்லாம் தனிநபர்கள் செய்த வங்கித் தொழிலாக இருந்தன. மேலும் வைசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் இன்றும் நம் நாட்டில் பணம் கொடுக்கல்–வாங்கலைச் செய்து வருகின்றனர். அதுபோல் மார்வாரிகள், சேட்டுகள், நாட்டுக் கோட்டை செட்டியார்கள் ஆகியோரும் வங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு வங்கித் தொழில் புரிந்து வந்த கருமுத்து செட்டியார் எனப்படும் நாட்டுக் கோட்டை செட்டியார் ஒருவர் பின்னிட்டு ஆரம்பித்த வங்கிதான், "பாங்க் ஆஃப் மதுரா" (Bank of Madura Ltd.) ஆகும். இதன் வணிகம் முழுவதையும் தற்பொழுது, ஐசிஐசிஐ வங்கி (ICICI Bank) எடுத்துக் கொண்டு, "ஐசிஐசிஐ வங்கி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இன்று சிறப்பான முறையில் செயல் பட்டு வருகிறது. இன்றைய வங்கித் தொழிலின் முன்னோடி, அன்றைய தனிப்பட்ட நபர்கள் செய்து வந்த வங்கித் தொழில்தான் என்றாலும், காலப்போக்கில் நாம் முன்கண்டவாறு பல்வேறு வங்கிகள் நிறுவப்பட்ட பின்னர், தனிநபர்களின் வங்கித் தொழில் வீழ்ச்சியடைந்துவிட்டது என்றே கூற வேண்டும். மேலும் செய்யப்படும் வைப்பீடுகளுக்கு பாதுகாப்பின்மை, அதிக வட்டி, கடன் பெற அதிகச் சிரமங்கள் ஆகியவற்றையும் தனிநபர் வங்கித் தொழிலின் வீழ்ச்சிக்கு காரணமாகக் கூறலாம்.

மேலும் இன்றும் கூட தனிநபர்கள் வங்கித் தொழில் புரிவது தடுக்கப்பட வில்லையென்றாலும், அவர்கள் மக்களிடமிருந்து பெறும் வைப்பீடுகளைப் பொறுத்து, இந்திய ரிசர்வ் வங்கி சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. **1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கியின் பிரிவு 45–S**–ஆனது, தனிப்பட்ட நபராக (Individual) உள்ள அல்லது நிறுமமாக (Firm) உள்ள அல்லது தனிப்பட்ட நபர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பதிவு செய்யப் பெறாத சங்கமாக (Unincorporated Association) உள்ள எவரொருவரும் அல்லது யாதென்றும், பின்வரும் சூழல் நிலவும் போது வைப்பீடுகள் (deposits) எதையும் பெறக் கூடாது என்று தடை விதிக்கிறது.

அச்சூழல்கள், (1) அவரின் அல்லது அதன் வணிகம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மேற்படி சட்டத்தின் பிரிவு **45–I(c)**–யில் குறிப்பிடப் பட்டுள்ள நடவடிக்கைகளில் எதனையும் உள்ளடக்கியிருத்தல் கூடாது. (2) அவரின் அல்லது அதன் முதன்மை வணிகம், திட்டம் அல்லது ஏற்பாடு அல்லது பிற முறை எதன் கீழும் வைப்பீடுகளைப் பெறுவது அல்லது எந்த முறையிலும் கடன் வழங்குதலாக இருத்தல் கூடாது. மேற்கண்டதில் பிரிவு **45–I (c)** –ஆனது, ஒரு 'நிதி நிறுவனம்' (Financial Institution) என்ன நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதன் வணிகத்தைப் புரியலாம் என்பதற்குண்டான விளக்கத்தைப் பகர்கிறது. அதன்படி ஒரு நிதி நிறுவனம் என்பது, வங்கியியல் அல்லாத நிறுவனமாகும் (Non-banking institution). எனினும் ஒரு வங்கி புரியும் வங்கி நடவடிக்கைகளில் பெரும்பகுதியை இத்தகு நிறுவனங்களும் புரிகின்றன. ஆனால் இத்தகு வங்கி நடவடிக்கைகளில் எதையேனும் புரியும் ஒரு தனிநபர், நிறுமம் அல்லது சங்கம், மக்களிடமிருந்து வைப்பீடுகளைப் பெற முடியாது. இதனை பிரிவு **45–S(1)**–ஆனது தடை செய்கிறது.

இருப்பினும், ஒரு தனிநபர் தனது உறவினர்களிடமிருந்து கடனாகப் பணம் பெறுவதற்கு அல்லது ஒரு நிறுமம் தன்னுடைய பங்குதாரர்களின் உறவினர் அல்லது உறவினர்களிடமிருந்து கடனாகப் பணம் பெறுவதற்கு தடை ஏதும் இல்லை. இதற்கு மேற்படி பிரிவு **45–S** பொருந்தாது.

அட்டவணை வங்கிகளும், அட்டவணை சாரா வங்கிகளும் [Scheduled Banks and Non-Scheduled Banks]:

அட்டவணை வங்கி என்றவுடன், அது ஏதோ ஒரு வகையான வங்கி என்று கருதிவிடக் கூடாது. நாட்டில் இருக்கும் வங்கிகளில் எவையெவை இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைக்கு உட்பட்டு உள்ளன என்பதை **1934**–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் இரண்டாவது

அட்டவணையில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவை யாவும் அட்டவணை வங்கிகள் எனப்படுகின்றன. இந்த அட்டவணையில் இடம் பெறாத வங்கிகள், அட்டவணை சாரா வங்கிகள் எனப்படும். எடுத்துக்காட்டாக, இந்தியாவின் இரண்டாவது பெரிய வங்கி என்று தம்மைக் கூறிக் கொள்ளும், ஐசிஐசிஐ வங்கி மேற்கண்ட அட்டவணையில் இடம் பெறாத ஒரு அட்டவணை சாரா வங்கியாகும்.

மேற்படி சட்டத்தின் 42–வது பிரிவின்படி, அட்டவணை வங்கி ஒவ்வொன்றும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் நாள்தோறும் ஒரு இருப்புத் தொகையை வைத்து வர வேண்டும். இந்தத் தொகை, இந்தியாவில் இத்தகைய வங்கியின் மொத்தத் தேவை மற்றும் காலப் பொறுப்புகளில் (demand and time liabilities) மூன்று விழுக்காட்டிற்கும் (3%) குறையாமல் இருக்க வேண்டும். இந்தத் தொகையை ரிசர்வ் வங்கி அவ்வப்போது ஓர் அறிவிக்கை மூலம் அதிகரிக்கலாம். எனினும், மேற்கண்ட மூன்று விழுக்காடு அளவு, பதினைந்து விழுக்காட்டிற்கு (15%) மேல் செல்லக் கூடாது.

மேலும் இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்படாத வங்கி எதனையும், இந்திய ரிசர்வ் வங்கி இந்திய அரசிதழில் அறிவிக்கை செய்வதன் மூலம், அந்த அட்டவணையில் சேரும்படி ஆணையிடலாம். தற்பொழுது **317 வங்கிகள்** மேற்படி அட்டவணையில் இடம் பெற்று "அட்டவணை வங்கிகளாக" உள்ளன. இந்த வங்கிகள் யாவும், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு உரிமை படைத்தவை.

முடிவுரை:

சமூகம் மறுமலர்ச்சியடைய, அதன் பொருளாதாரம் உயர இன்று இந்தியாவில் எத்தனை வகையான வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன என்பதை நாம் இதுகாறும் சுருக்கமாகக் கண்டோம். நலிவடைந்தோர் உயரவும், நல்ல நிலையில் உள்ளவர் மேலும் வளம் பெறவும் வங்கிகள் பல்வேறு கடனுதவிகளை அளிக்கின்றன. சுருங்கக் கூறின், இன்று இந்தியாவில் வங்கித் தொழில், சமூகத்திற்கும், வேளாண் மற்றும் தொழிற்துறைக்கும் பல்வேறுபட்ட நிலைகளில் பல்வேறு நிதியுதவி மற்றும் சேவைகளை வழங்கி வருவதன் மூலம், ஒரு உன்னதமான நிலையை அடைந்துள்ளன என்றுதான் கூற வேண்டும்.

-o0o-


மேலமை வங்கி நிறுவனங்கள் [Apex Banking Institutions]
இந்திய ரிசர்வ் வங்கி [Reserve Bank of India - RBI] 1934
இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி [Industrial Development Bank of India - IDBI]
தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி [National Bank for Agriculture and Rural Development - NABARD]
தேசிய வீட்டுவசதி வங்கி [National Housing Bank - NHB]
இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி [Export Import Bank of India - EXIM Bank]


வங்கி நிறுவனங்கள்
வணிக வங்கிகள் [Commercial Banks]
அரசுத் துறை வணிக வங்கிகள்
ஸ்டேட் வங்கிகள் குழு
பாரத ஸ்டேட் வங்கி
துணை வங்கிகள்
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்
தனியார் துறை வணிக வங்கிகள்
இந்திய வங்கிகள்
அயல்நாட்டு வங்கிகள்
கூட்டுறவு வங்கிகள் [Cooperative Banks]
→ மாநில கூட்டுறவு வங்கிகள்
→ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்
→ தொடக்க நிலை வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்
→ நகர கூட்டுறவு வங்கி
வட்டார ஊரக வங்கிகள் [Regional Rural Banks]
வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகள்
→ மாநில வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகள் (முன்பு நிலவள வங்கி)
→ தொடக்கநிலை வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகள்
வீட்டு வசதி வங்கிகள் → வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் → வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம்
தொழில் மேம்பாட்டு வங்கிகள் [Industrial Development Banks]
அனைத்திந்திய அளவில் → IFCI, ICICI, IRBI, SIDBI
மாநில அளவில் → SFCs, SIDCs

3

இந்திய ரிசர்வ் வங்கி (அல்லது) இந்திய சேம வங்கி (அல்லது) மைய வங்கி [The Reserve Bank of India (or) The Central Bank]

ஒரு சிறு அறிமுகம்:

நம் இந்தியத் திருநாட்டின் மைய வங்கி (Central Bank), "இந்திய சேம வங்கி" என்றழைக்கப்படும் இந்திய ரிசர்வ் வங்கியாகும். 1934–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் (The Reserve Bank of India Act, 1934) கீழ், இந்திய ரிசர்வ் வங்கி 1935–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் நிறுவப்பட்டது. இது ஆரம்பத்தில் பங்குதாரர்களைக் கொண்ட ஒரு நிறுவனமாக தொடங்கப்பட்டது. அப்பொழுது இதன் செலுத்தப்பட்ட மூலதனம் (paid-up capital) ரூபாய் அய்ந்து கோடி மட்டுமே. இவ்வங்கி நிறுவப்பட்டவுடன், இது இந்திய அரசின் பணத்தாள் வெளியிடும் பணியை (currency note issuing authority) ஏற்றுக் கொண்டது. மேலும் அப்பொழுதிருந்த இம்பீரியல் வங்கியிடமிருந்து அதன் கடனுதவிக் கட்டுப்பாட்டையும் கைக் கொண்டது. நமது இந்திய நாடு சுதந்திரம் அடைந்தவுடன், 1948–ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி தேசியமயமாக்கப்பட்டது. பின்னிட்டு இதன் பங்கு மூலதனம் முழுவதையும், இந்திய அரசே வாங்கிக் கொண்டது. இனி சற்று விரிவாக....

இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு [Constitution] :

இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 8–வது பிரிவின்படி, மேற்படி வங்கியின் அலுவல்களை கண்காணித்து, அவற்றை நடாத்தும் அதிகாரம் **மத்திய இயக்குநர்கள் வாரியத்திடம் (Central Board of Directors)** அமைந்துள்ளது. இந்த வாரியம் பின்வருபவர்களை உள்ளடக்கியுள்ளது.

(1) மத்திய அரசு நியமிக்கும் ஒரு ஆளுநர் (Governors) மற்றும் நான்கிற்கும் மிகாத துணை ஆளுநர்கள் (Deputy Governors) **[பிரிவு 8(1)(a)]**.

(2) மத்திய அரசு நியமிக்கும் நான்கு இயக்குநர்கள் (Directors). இவர்களில் ஒவ்வொருவரும் நான்கு உள்ளூர் வாரியங்களைச் (Local Boards) சேர்ந்தவர்களாக இருப்பர் **[பிரிவு 8(1)(b)]**.

(3) மத்திய அரசு நியமிக்கும் 10 இயக்குநர்கள் **[பிரிவு 8(1)(c)]**.

(4) மத்திய அரசு நியமிக்கும் ஒரு அரசு அதிகாரி (Government Official) **[பிரிவு 8(1)(d)]**.

ஆளுநர்கள், துணை ஆளுநர்கள் ஆகியோர்களின் பதவிக் காலம் பொதுவாக அய்ந்து ஆண்டுகள் ஆகும். எனினும் இந்த பதவிக் காலத்தை, அவர்களின் நியமனத்தின் பொழுது, மத்திய அரசே நிர்ணயம் செய்யும். அவர்கள் மறு நியமனம் (re-appointment) பெறத் தகுதி படைத்தவர்கள். நடைமுறை வசதிக்காக, மேற்கண்ட **மத்திய இயக்குநர்கள் வாரியம்,** தனது பணிகளில் சிலவற்றை **மத்திய வாரியக் குழு (Committee of the Central Board)** எனும் ஒரு குழுவிடம் ஒப்படைத்துள்ளது.

வட்டார வாரியங்கள் தங்கள் தலைமையகங்களை மும்பை, கொல்கத்தா, புது தில்லி மற்றும் சென்னையில் கொண்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 9–வது பிரிவின்படி, இந்த உள்ளூர் வாரியம் மத்திய அரசு நியமிக்கும் அய்ந்து நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். இந்த வாரியங்களின் பணி, தங்களிடம் மத்திய இயக்குநர்கள் வாரியம் குறிப்பிட்டுக் கூறும் விஷயங்களில் தங்கள் ஆலோசனைகளை நல்குவதாகும்; அதுபோல், ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுவதாகும். இனி இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியப் பணிகளையும், அதிகாரங்களையும், உரிமைகளையும் நாம் பின்வருமாறு காண்போம்.

1. Enumerate the functions, duties and rights of the Reserve Bank of India (இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்கள், உரிமைகள் மற்றும் கடமைகளை விவரி.)

(அல்லது)

Discuss the duties and rights of the Reserve Bank of India (இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவரி.)

(அல்லது)

Discuss the role of Reserve Bank of India in the Banking business (இந்திய ரிசர்வ் வங்கியின் வங்கியியல் வியாபாரத்தில் முக்கியப் பங்கினை விவரி.)

(அல்லது)

Examine the role played by the Reserve Bank of India as the Central Bank of our country. (நம் நாட்டின் மைய வங்கியாக இந்திய ரிசர்வ் வங்கி ஆற்றும் பங்கினை ஆராய்க.)

(அல்லது)

"Reserve Bank of India is a bankers' bank" - Explain ("இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிகளின் வங்கி" – விளக்குக.)

(அல்லது)

Differentiate between a currency note and a bank note. (பணத் தாளுக்கும் வங்கித் தாளுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.)

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் [Functions of RBI]:

இந்திய ரிசர்வ் வங்கியின் முதன்மை நோக்கம் , அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்ப, பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றும் பொருட்டு, நாட்டின் நிதிமுறையை ஒழுங்குபடுத்துவதாகும். 1934--ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **முகப்புரையானது (Preamble)**, இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியப் பணிகளாக பின்வருவனவற்றைக் கூறுகிறது. அவை "வங்கித் தாள்கள் வெளியிடுகையை ஒழுங்குமுறைப்படுத்தல், இந்தியாவின் நிதியை நிலை பெற்றதாக ஆக்கும் பொருட்டு இருப்புகளை வைத்திருத்தல், பொதுவாக நாட்டின் நன்மைக்காக பணத்தாள் மற்றும் கடனுதவி முறையை கையாளுதல்"[1]. பணத்தாள் வெளியிடுகையின் மீதான கட்டுப்பாடு, நாட்டின் வங்கியியல் மற்றும் கடனுதவி முறைகள் ஆகியவை இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிமுறைச் செயல்பாட்டிற்குள் அடங்கியுள்ளது. இது தனது நிதிமுறைக் கொள்கையையும், கடனுதவியின் மீதான

1. "to regulate the issue of bank notes and keeping of the reserves with a view to securing monetary stability in India and generally to operate the currency and credit system of the country to its advanges. - **Preamble of the Reserve Bank of India Act, 1934.**

கட்டுப்பாட்டையும், வணிக வங்கிகளின் மூலமாக செயல்படுத்துகிறது. மேற் கண்டவற்றின் அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் தொகுத்து நாம் காணலாம்.

(1) பணத்தாள் வெளியீட்டு வங்கி (Reserve Bank as Note issuing Authority):

அனைத்து வகையான பணத்தாள்களையும் வெளியிடும் முழு உரிமையும் அதிகாரமும், இந்திய ரிசர்வ் வங்கிக்கு மட்டுமே உண்டு. நமது இந்திய அரசு ஒரு ரூபாய் தாள் மற்றும் நாணயங்களை மட்டுமே வெளியிடுகிறது. எனினும், இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **38–வது பிரிவின்படி,** இந்திய அரசு வெளியிடும் ஒரு ரூபாய் பணத்தாளையும், பிற இந்திய நாணயங்களையும், அது மேற்படி ரிசர்வ் வங்கியின் மூலமாகத்தான் புழக்கத்திற்கு வெளியிட வேண்டும். அதுபோல் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **22–வது பிரிவின்படி,** வங்கித் தாள்களை (Bank Notes) வெளியிடும் முழு உரிமையும், அதிகாரமும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு மட்டுமே உண்டு.

இங்கு பணத்தாள் (currency note) மற்றும் வங்கித்தாள் (bank note) ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டும்.

(1) பணத்தாள் என்பது ஒரு ரூபாய் தாள் என்று பொருளாகும். இது ஒரு ரூபாய் நாணயங்களாக அல்லது ஒரு ரூபாய் மதிப்புடைய பிற சில்லரை நாணயங் களாகவும் இருக்கலாம். இவை மத்திய அரசால் அச்சடிக்கப்பட்டு, ரிசர்வ் வங்கியிடம் கொடுக்கப்படுகிறது. பின், இவை ரிசர்வ் வங்கியால் வெளியிடப் படுகிறது. ஆனால் வங்கித் தாள்கள், ரு.2/–ம் அதற்கு மேற்பட்ட மதிப்பையும் உடைய தாள்களாகும்.

(2) அதுபோல் இந்திய அரசு அச்சடிக்கும் ஒரு ரூபாய் பணத்தாளில், இந்திய அரசு நிதித்துறையின், நிதிச் செயலாளர் (The Finance Secretary, Ministry of Finance, Government of India) கையொப்பமிட்டிருப்பார். ஆனால் ரூ.2/–ம் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய வங்கித் தாள்களில், ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கையொப்பமிட்டிருப்பார்.

(3) ஒரு ரூபாய் பணத்தாளில், (ஒரு ரூபாய் மதிப்பைச்) **"செலுத்த பொறுப்பேற்கிறேன்" (undertaking to pay)** எனும் சொற்கள் காணப்படும். ஆனால் வங்கித் தாளில், கொணர்பருக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்புடைய பணம் செலுத்துவதற்குண்டான **உறுதியுரை (promise)** காணப்படும்.

எடுத்துக்காட்டாக, ஒரு பத்து ரூபாய் தாளில், அடுத்த பக்கத்தில் வரும் உறுதியுரை காணப்படும்.

I promise to pay the bearer the sum of Ten Rupees.

Signature
Governor.

கொணர்பவருக்கு நான் பத்து ரூபாய்களைச் செலுத்த உறுதியளிக்கிறேன்.

கையொப்பம்
ஆளுநர்.

இந்திய ரிசர்வ் வங்கியில் பின்வரும் இரு துறைகள் உள்ளன. அவை (1) வெளியிடும் துறை (Issuing Department); (2) வங்கியியல் துறை (Banking Department). வெளியிடும் துறை, புதிய பணத்தாள்களை வெளியிடுகிறது. வங்கியியல் துறை என்பது, பணத்தாள்களை தன்னுடனேயே இருப்பு வைத்துள்ளது. வங்கித் தாள்களை வெளியிடுவதற்காக **"குறைந்தபட்ச இருப்பு முறை" (Minimum Reserve System)** எனும் ஒரு முறையை இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகிறது. இதன்படி இந்திய ரிசர்வ் வங்கி குறைந்தபட்சம் 200 கோடி ரூபாய்களுக்கு தன்னிடம் இருப்பு வைத்திருக்க வேண்டும். அதுவும் தங்கம் மற்றும் வெள்ளியின் வடிவிலும், அந்நிய செலாவணி இருப்பாகவும் இருக்க வேண்டும். இதிலும் 115 கோடி ரூபாய்க்கான இருப்பு, தங்கத்தின் வடிவில் இருக்க வேண்டும்.

மேலும் தான் வெளியிடும் பணத்தாள், வங்கித்தாள், நாணயங்கள் ஆகியவற்றை புழக்கத்திற்கு விடுவதற்காக இருப்பு வைத்துக் கொள்ள நாட்டின் முக்கிய நகரங்களில் இந்திய ரிசர்வ் வங்கி **"பணத்தாள் கருவூலங்களை" (currency chests)** திறந்து நிருவகித்து வருகிறது. இதன் மூலம் தனது புதிய மற்றும் மீண்டும் புழக்கத்திற்கு விடத்தக்க பணத்தாள்களையும், நாணயங்களையும் மக்களிடையே வெளியிடுகிறது. இக்கருவூலங்கள் இந்திய ரிசர்வ் வங்கியாலும், அதன் பொதுத்துறை துணை வங்கிகளாலும், அரசுக் கருவூலங்களாலும் நடத்தப்படுகின்றன.

(2) அரசின் வங்கியாளர் (Reserve Bank as Banker to the Government):

இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **20–வது பிரிவின்படி**, இந்தியாவில் இந்திய அரசின் தொழிலை, இந்திய ரிசர்வ் வங்கி நடத்த (transact) அதிகாரம் கொண்டதாகும். இவ்வங்கி மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் வங்கியராக செயல்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் தங்கள் பணம் முழுவதையும் மற்றும் மற்றவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகளையும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும்; குறிப்பாக மேற்கண்ட அரசுகள் தங்களிடம் உள்ள ரொக்க

இருப்புகளை, இவ்வங்கியிடம் வட்டியற்ற தொகையாக வைப்பீடு செய்ய வேண்டும், என்று இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவுகள் 21, 21–A ஆகியன குறிப்பிடு கிறது. மேலும் மத்திய அரசு தனது அரசுக் கடன் நிருவாகத்தை மற்றும் புதிய கடன்கள் ஏதும் வழங்குவதை இந்திய ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும். மூன்று மாதங்களுக்குள் திருப்பியளிக்க வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்க அதிகாரம் பெற்றது. மேலும், முக்கியத்துவம் வாய்ந்த பொருளதார மற்றும் நிதியியல் விஷயங்களில், இந்திய ரிசர்வ் வங்கி அரசுக்கு ஆலோசகராக செயல்படுகிறது.

(3) வங்கிகளின் வங்கி (Reserve Bank as Bankers' Bank):

வணிக வங்கிகள் (இந்திய மற்றும் வெளிநாட்டு வணிக வங்கிகள்), கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள் ஆகியவற்றிற்கு, இந்திய ரிசர்வ் வங்கி, ஒரு வங்கியாக செயல்படுகிறது. அதாவது வங்கிகளுக்கு வங்கியாக செயல்படுகிறது. ஒரு வங்கிக்கும், இந்திய ரிசர்வ் வங்கிக்கும் எப்பொழுது உறவு ஏற்படுகிறது என்றால், இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் அவ்வங்கியின் பெயர் சேர்க்கப்பட்டு, அது ஒரு 'அட்டவணை வங்கியாகும்' (Scheduled Bank) பொழுதுதான். இவ்வாறு அட்டவணை வங்கியாக உள்ள ஒவ்வொரு வங்கியும், இந்திய ரிசர்வ் வங்கியிடபிருந்து தங்களுக்குரிய மறுநிதியுதவி வசதியைக் கோர உரிமை படைத்தவை (entitled to avail the facility of refinance).

பல்வேறு அட்டவணை வங்கிகளில் பலரும் தங்களது வங்கிக் கணக்கை வைத்துள்ளனர். அவ்வங்கிகள் அவர்களுக்கு பல்வேறு சேவைகளையும், நிதியுதவிகளையும் வழங்குகின்றன. அதுபோல் அட்டவணை வங்கிகள் யாவும், தங்கள் கணக்குகளை இந்திய ரிசர்வ் வங்கியிடம் வைத்து பராமரித்து வருகின்றன. எனவே அட்டவணை வங்கிகள் தங்கள் தேவைகளின் பொழுது, தங்களுக்குரிய மறுநிதியுதவியை இந்திய ரிசர்வ் வங்கியிடம் கோர உரிமை படைத்தவை. இவ்வாறு ஒரு வங்கி, அட்டவணை வங்கியாகி மறுநிதியுதவி பெற, அவ்வங்கி மேற்படி இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு 42(6)–னால் விதிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவை,

(1) அவ்வங்கி தனக்குரிய ஒரு செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைக் (a paid-up capital) கொண்டிருக்க வேண்டும். அய்ந்து இலட்சம் ரூபாய்களுக்கு குறையாத ஒரு மொத்த மதிப்பை தனது இருப்பாகக் கொண்டிருக்க வேண்டும்.

(2) அவ்வங்கியின் நடவடிக்கைகள் அதன் வைப்பீட்டாளர்களின் நலனுக்கு பாதகம் விளைவிக்கும் வகையில் அமையாத ஒன்று என்று இந்திய ரிசர்வ் வங்கி மனநிறைவடைய வேண்டும்.

(3) அவ்வங்கி,–

(அ) ஒரு மாநில கூட்டுறவு வங்கியாக, அல்லது

(ஆ) 1956–ன் நிறுவனங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு ஒரு நிறுவனமாக, அல்லது

(இ) இதற்கென மத்திய அரசு தனது அறிவிக்கை வாயிலாக அறிவித்த ஒரு அமைப்பாக, அல்லது

(ஈ) இந்தியாவிற்கு அப்பால் அமலில் உள்ள சட்டம் எதன் கீழும் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகமாக அல்லது ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

அட்டவணை வங்கி ஒன்று மேற்கண்ட நிபந்தனைகளை தொடர்ந்து பூர்த்தி செய்து வரவில்லையானால், அல்லது கலைக்கப்பட்டால் அல்லது வங்கித் தொழில் புரிய இயலா நிலைக்கு வந்துவிட்டால், அதனை அட்டவணையிலிருந்து நீக்கிவிட இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரம் படைத்ததாகும்.

(4) கடன் கட்டுப்பாட்டாளர் (Reserve Bank as Controller of Credit):

இந்தியாவில் உள்ள வணிக வங்கிகள் உருவாக்கும் கடனின் அளவில் மாற்றம் செய்ய, இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரம் படைத்தது. மற்ற வணிக வங்கிகள் கொடுக்கும் கடனில், இந்திய ரிசர்வ் வங்கி ஏன் தலையிட வேண்டும் எனும் வினா எழுந்தால், அது நியாயமானதே. ஒன்று, வணிக வங்கிகளுக்கு நிதியுதவி தேவையெனில், அது ரிசர்வ் வங்கியிடம் கோருகிறது; எனவே அது கொடுக்கும் கடனில் கட்டுப்பாடு விதிக்க அதற்கு சகல உரிமை உள்ளது. மற்றொன்று, வணிக வங்கிகள் கடன் கோருபவர்களுக்கெல்லாம், கண்டபடியாகவும், அதிக அளவிலும் கடன் கொடுத்து, பண வீக்கத்தை (inflation) ஏற்படுத்திவிடும் அபாயம் உள்ளது. இதனால் நாட்டில் செயற்கையாக விலைவாசி உயரும். இதைத் தடுப்பதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி கடன் கட்டுப்பாட்டாளராகவும் பணி புரிகிறது.

இந்த வகையில், வணிக வங்கிகள் கொடுக்கும் கடனின் வட்டி வீதத்தை, நாட்டின் நிதி நிலைக்கேற்ப குறைக்கவும், கூட்டவும் இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரம் படைத்தது. மேலும் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, இந்திய ரிசர்வ் வங்கி, எந்த ஒரு குறிப்பிட்ட வங்கியையும் அல்லது வங்கியியல் நிறுவனத்தையும், ஒரு குறிப்பிட்ட நபர்களின் குழுமங்களுக்கு அல்லது சில வகைக் காப்புறுதிகளின் பேரில் கடன் வழங்க வேண்டாம் என்றும் ஆணையிடலாம். சில வகையான கடன்களை அளிக்க வேண்டாம் என்றும், சில வகைக் கடன்களை அளிப்பதற்கு

தனது அனுமதி பெற வேண்டும் என்றும் வணிக வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஏவுரைக்கலாம். மேலும் கடனாக அளிக்கப்படக் கூடிய தொகையின் உச்ச அளவை வரையறுத்துக் கூறலாம். வணிக வங்கிகள் அளிக்கும் கடன்களைப் பெறுவதற்கு, கடன் பெறுபவர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளை இந்திய ரிசர்வ் வங்கி வகுத்துரைக்கலாம். இவ்வாறு வணிக வங்கிகள் அளிக்கும் கடன்கள், இந்திய ரிசர்வ் வங்கியின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

(5) இறுதி நிலைக் கடன் ஈவோன் (Reserve Bank as Lender of Last Resort)):

வணிக வங்கிகளிலும், பணச் சந்தையிலும் நெருக்கடி நிலை ஏற்படும போது, பாதிக்கப்பட்ட வங்கிகளின் துயர் துடைக்க உடன் கை கொடுப்பது, இந்திய ரிசர்வ் வங்கியோகும். இவ்வங்கி வங்கிகளுக்கு கடன் கொடுக்கும் பணியைச் செய்கிறது. இதனால் வங்கிகள் நொடிந்து போகாமல் காப்பாற்றப்படுகிறது. எனவே இந்திய ரிசர்வ் வங்கியை அட்டவணை வங்கிகளின் 'இறுதி நிலைக் கடன் ஈவோன்' (Lender of Last Resort) என்று சிறப்பாக அழைப்பர்.

(6) அந்நிய செலாவணியின் பாதுகாவலன் (Reserve Bank as Custodian of Foreign Exchange):

அந்நிய செலாவணியைச் சேகரித்து, தேவையானவர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பது, இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். நாட்டு மக்களால் திரட்டப்படும் அந்நியச் செலாவணி முழுவதையும் சட்டப்படி இந்திய ரிசர்வ் வங்கியிடம் விற்க (மாற்ற) வேண்டும். இவ்வங்கி இறக்குமதியாளர்கள், அயல்நாடுகளுக்குச் செல்பவர்கள் ஆகியோர்களுக்கு அந்நியச் செலாவணியை கட்டுப்பாட்டுடன் பங்கிட்டு அளிக்கிறது. இதற்கென 'செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை' எனும் ஒரு பிரிவு இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ளது. மத்திய அரசு நிர்ணயிக்கும் அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தை, இந்திய ரிசர்வ் வங்கி நிலை பெறச் செய்கிறது.

(7) தீர்வக வங்கி (Reserve Bank as Bank of Clearance):

அனைத்து அட்டவணை வங்கிகளும், இந்திய ரிசர்வ் வங்கியில் ரொக்க இருப்புகள் வைத்துள்ளன. இதனால் ஒரு வங்கி பிற வங்கிகளுக்கு கொடுக்க வேண்டிய கடன்களை எளிதில் தீர்க்க முடிகிறது. இந்திய ரிசர்வ் வங்கி, நாடெங்கிலும் தீர்வகங்களை (clearing houses) அமைத்துள்ளது. இத்தீர்வகங்களில் வங்கிகளின் பிரதிநிதிகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்துக் கொண்டு, தாங்கள் பணம் கொடுக்க வேண்டிய, பணம் பெற வேண்டிய காசோலைகளை கணக்கெழுதிக் கொண்டு மாற்ற முடிகிறது. இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள

வணிக வங்கிகளின் பற்று–வரவு கணக்கில் உரிய மாற்றங்களை செய்வதன் மூலம் இவ்வாறு செய்ய முடிகிறது. எனவே வங்கிகள் தங்களுக்குள் கொடுபட வேண்டிய கடன்களை எளிதில் தீர்த்து வைக்கும் தீர்வகமாக, இந்திய ரிசர்வ் வங்கி உள்ளது.

(8') பிற பணிகள் (Other Functions):

நாட்டின் மைய வங்கி எனும் முறையில், இந்திய ரிசர்வ் வங்கி, ரூபாயின் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு மதிப்பைப் பராமரித்து வருவதற்காக, நாட்டின் விலைவாசியை நிலைப்படுத்துவதற்காக, பொருளாதாரத்தில் கடனையும், செலாவணியையும் கட்டுப்படுத்தும் எதிர்மறைப் பணியை பணியை மட்டும் செய்து வரவில்லை. நாம் முன் கண்டவாறு நமது இந்திய அரசு வகுத்துள்ள வழி காட்டு நெறிகளுக்கும், பொருளாதாரக் கொள்கைகளுக்கும் இணங்கியவாறு பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்துவதில் பல்வேறு நிதியியல் நிறுவனங்களை உருவாக்கும் முயற்சியிலும் இந்திய ரிசர்வ் வங்கி ஈடுபட்டு வருகிறது. இந்த வகையில் இந்திய ரிசர்வ் வங்கி இதுகாறும் பல்வேறு நிதியியல் நிறுவனங்களை நிறுவியுள்ளது. குறிப்பாக வேளாண் துறைக்கும், தொழிற் துறைக்கும் கடனுதவி வழங்குவதற்காக பல்வேறு நிதியுதவிக் கழகங்களை நிறுவுவதற்கு, இந்திய ரிசர்வ் வங்கி உதவி வருகிறது. மேலும் வணிக வங்கிகளின் உதவியுடன், ஊரகப் பகுதிகளில் வங்கியியல் வசதிகளை நீட்டிப்பதற்காக வட்டார ஊரக வங்கிகளைத் தோற்றுவித்து வருகிறது. அதுபோல் வணிக வங்கிகள் அயல்நாடுகளில் தங்கள் கிளைகளை நிறுவுவதற்கு, அதற்கு உதவுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வங்கியியலைப் பற்றிய ஆய்வுகளுக்கு, ஊக்கமளிக்கிறது. நாம் இதுகாறும் கண்ட இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை பின்வரும் வரைபடம் எளிதாக விளக்குகிறது.


இந்திய ரிசர்வ் வங்கி (அல்லது) மைய வங்கி [Reserve Bank of India - RBI]
(1) பணத்தாள் வெளியீட்டு வங்கி
(2) அரசின் வங்கியாளர்
(3) வங்கிகளின் வங்கி
(4) கடன் கட்டுப் பாட்டாளர்
(5) இறுதி நிலைக் கடன் ஈவோன்
(6) அந்நிய செலாவணியின் பாதுகாவலன்
(7) தீர்வக வங்கி
(8) பிற பணிகள்

இந்திய ரிசர்வ் வங்கியின் கடமைகள் [Duties of RBI]:

முகப்புரை விதிக்கும் கடமைகள்:

இந்திய ரிசர்வ் வங்கி சில நோக்கங்களுக்காக நம் நாட்டில், நிறுவப் பட்டது. அவை, **1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் முகப்புரையிலேயே (Preamble)** கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை அடைய இந்திய ரிசர்வ் வங்கி பாடுபட வேண்டும். எனவே அவையே இந்திய ரிசர்வ் வங்கியின் கடமைகள் என்று தயக்கமின்றிக் கூறலாம். அக்கடமைகள் வருமாறு.

(1) ரூ.2/–ம் அதற்கும் மேற்பட்ட மதிப்புடைய வங்கித் தாள்களின் வெளியிடுகையை இந்திய ரிசர்வ் வங்கி ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும். (to regulate the issue of Bank notes) அதுபோல் இந்திய அரசு வெளியிடும் ரூ.1/– மதிப்புடைய பணத்தாளையும், நாணயங்களையும் மக்கள் புழக்கத்திற்கு விட இந்திய ரிசர்வ் வங்கி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(2) இந்திய நாட்டின் நிதியை நிலை பெற்றதாக ஆக்கும் பொருட்டு, உரிய அளவு இருப்புகளை இந்திய ரிசர்வ் வங்கி வைத்திருக்க வேண்டும் (to keep reserves with a view to securing monetary stability in India).

(3) பொதுவாக நாட்டின் நன்மைக்கு உகந்த வகையில் பணத்தாள் மற்றும் கடன் முறையை இந்திய ரிசர்வ் வங்கி கையாள வேண்டும் (generally to operate the currency and credit system of the country to its advantage).

1934-ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் கூறும் கடமைகள்:

மேற்கண்ட முக்கியக் கடமைகள் மட்டுமல்லாது, 1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் சில சட்டப்பிரிவுகளும், இந்திய ரிசர்வ் வங்கிக்கான கடமைகளை வகுத்துரைத்துள்ளது. அவை வருமாறு.

(1) அரசின் தொழிலை, இந்திய ரிசர்வ் வங்கி நடத்த வேண்டும். மத்திய அரசின் கணக்கிற்காக பணம் பெற்றுக் கொள்ளவும், அக்கணக்கில் இருப்புள்ள வரையில் பணம் வழங்கவும் இந்திய ரிசர்வ் வங்கி கடமை கொண்டது. மேலும் மத்திய அரசின் பரிமாற்றங்கள், செலுத்தங்கள் மற்றும் அரசுக் கடனின் நிருவாக மேலாண்மை உள்ளிட்ட இதர வங்கிச் செயல்பாடுகளை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்ள வேண்டும் **(பிரிவு 20).**

(2) ரூபாய் நாணயங்கள் எதையும், மத்திய அரசு, இந்திய ரிசர்வ் வங்கி மூலமாகத் தவிர, வேறுவகையில் புழக்கத்திற்கு விடக்கூடாது என்று பொறுப்பேற்க

வேண்டும். அதுபோல், இந்திய ரிசர்வ் வங்கி அந்த ரூபாய் நாணயங்களை, புழக்கத்திற்கு விடும் நோக்கங்களுக்குத் தவிர வேறுவிதத்தில் முடிவுறுத்தல் கூடாது **(பிரிவு 38).**

(3) தேவையின் பேரில், இந்திய ரிசர்வ் வங்கி வங்கித் தாள்கள் (Bank notes) மற்றும் இந்திய அரசின் பணத்தாள்களுக்கு (Currency notes) மாற்றாக ரூபாய் நாணயங்களை வெளியிடுதல் வேண்டும். அதுபோல், தேவையின் பேரில் இந்திய ரிசர்வ் வங்கி ரூபாய் நாணயங்களுக்கு மாற்றாக, பணத்தாள்களையும் வங்கித்தாள்களையும் வெளியிடுதல் வேண்டும் **[பிரிவு 39(1)].**

(4) கிழிந்து போன (torn), உருகெட்ட (defaced) அல்லது அதிகப் படியாக அழுக்கான (excessively soiled) வங்கித் தாள்களை இந்திய ரிசர்வ் மீண்டும் புழக்கத்திற்கு விடக் கூடாது **(பிரிவு 27).**

(5) தேவை என்று கோரும் அதிகாரபூர்வ நபர் எவருக்கும், இந்திய ரிசர்வ் வங்கி அத்தகு செலாவணி மாற்று வீதத்தில் அந்நியச் செலாவணியை (foreign exchange) விற்க வேண்டும் அல்லது அவரிடமிருந்து வாங்க வேண்டும் **(பிரிவு 40).**

(6) அனைத்து அட்டவணை வங்கிகளின் மொத்த பொறுப்புடைமைகள் மற்றும் சொத்துக்களின் விபரத்தைக் காட்டும் ஒரு தொகுப்பு அறிக்கை ஒன்றை இந்திய ரிசர்வ் வங்கி இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வெளியிடுதல் வேண்டும் **(பிரிவு 43).**

(7) ஒரு வங்கி நிறுவனத்தின் கடன் தகவல் அடங்கிய விபர அறிக்கையை (statement relating to credit information) இந்திய ரிசர்வ் வங்கி கோரிப் பெறலாம். ஆனால் அதை இரகசியமாக வைத்திருக்க வேண்டும். அதை வெளிப் படுத்தக் கூடாது **(பிரிவு 45E).**

(8) இந்திய ரிசர்வ் வங்கி, தான் அவசியமென அல்லது அவ்வாறு செய்வது நடைமுறைக்குட்பட்டது எனக் கருதும் அத்தகு தொகைகளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஊரக கடனுதவி (நீண்ட கால செயல்பாடுகள்) நிதியத்திற்கும் [National Rural Credit (Long Term Operations) Fund] மற்றும் தேசிய ஊரக கடனுதவி (நிலையுடைமை) நிதியத்திற்கும் [National Rural Credit (Stabilisation) Fund] தனது பங்காக அளிக்க வேண்டும் **(பிரிவு 46A).**

(9) இந்திய தொழிற் நிதியுதவிக் கழகம் (Industrial Financial Corporation of India), மாநில நிதியுதவிக் கழகம் (State Financial Corporation) ஆகியவை வெளியிடும் பங்குமுதல், பங்குகள், பத்திரங்கள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்க மேம்பாட்டு வங்கிக்கு (Development Bank)

அல்லது மேம்பாட்டு வங்கியின் பிற தொழில்களுக்கு கடன்களாகவும் முன் பணமாகவும் அளிக்கத்தக்க வகையில், இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய தொழில் கடனுதவி (நீண்ட கால செயல்பாடுகள்) நிதியம் [National Industrial Credit (Long Term Operations) Fund] எனப்படக் கூடிய நிதியம் ஒன்றை நிறுவி, பராமரித்து வர வேண்டும். இதில் இந்திய ரிசர்வ் வங்கி முதற் தொகையாக பத்து கோடியை இட்டு வைக்க வேண்டும். பின்னிட்டு ஆண்டுதோறும் இந்திய ரிசர்வ் வங்கி பங்களித்தக்க அத்தகு தொகையை இட்டு வர வேண்டும் **(பிரிவு 46C)**.

(10) தேசிய வீட்டுவசதி வங்கியின் (National Housing Bank) தொழில் எதற்காகவும் கடன்கள் மற்றும் முன்பணம் அளிக்கத்தக்க வகையிலும் மற்றும் அது வெளியிடும் பத்திரங்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குவதற்காகவும், இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய வீட்டு வசதி கடனுதவி (நீண்ட காலச் செயற்பாடுகள்) நிதியம் [National Housing Credit (Long Term Operations) Fund] எனப்படக் கூடிய நிதியம் ஒன்றை நிறுவி, அதில் ஆண்டுதோறும் தான் பொருத்தமெனக் கருதும் ஒரு தொகையை இட்டு வர வேண்டும் **(பிரிவு 46D)**.

(11) இந்திய ரிசர்வ் வங்கி வாங்கத் தயாராக உள்ள அல்லது மீண்டும் தள்ளுபடி (re-discount) செய்து தரத்தக்க மாற்றுச் சீட்டுகளின் அல்லது இச்சட்டத்தின் கீழ் வாங்குவதற்கு தகுதி படைத்த பிற வணிகத் தாளிற்குண்டான (commercial paper) நிலையான வங்கி வீதத்தை (standard bank rate) அப்போதைக்கப்போது வெளியிட வேண்டும் **(பிரிவு 49)**.

(12) இந்திய ரிசர்வ் வங்கி தனது புதிய பணத்தாள் வெளியிடும் துறையின் (Issue Department) மற்றும் பணத்தாள்களை தன்னுடன் இருப்பு வைத்திருக்கும் வங்கியியல் துறையின் (Banking Department) வாராந்திர கணக்கு விபர அறிக்கையை (weekly return of account) தயாரித்து, அதை மத்திய அரசிற்கு அளித்தல் வேண்டும் **(பிரிவு 53)**.

இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமைகள் [Rights of RBI]:

(1) முதற்கண் இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வங்கித் தொழில்களைப் புரிய அதற்கு **1934–ன் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம்** அதிகாரமளித்துள்ளது. அவற்றை மேற்படி சட்டத்தின் **17–வது பிரிவு** பட்டியலிட்டுக் காட்டுகிறது. எனவே இந்திய ரிசர்வ் இப்பட்டியலில் உள்ள தொழில்களைப் புரிய உரிமை பெற்றதாகும்.

(2) **பிரிவு 21–ன்படி** இந்தியாவில் மத்திய அரசின் வங்கியராகச் செயல் பட இந்திய ரிசர்வ் வங்கி உரிமை படைத்தது.

(3) **பிரிவு 21A–ன்படி** இந்தியாவில் மாநில அரசுகளுடன் செய்து உடன்

படிக்கையின் பேரில், அவற்றின் வங்கியராகச் செயல்பட இந்திய ரிசர்வ் வங்கி உரிமை படைத்தது.

(4) பிரிவு 22–ன்படி இந்திய அரசு வெளியிடும் பணத்தாள் (Currency note) மற்றும் நாணயங்களை பொது மக்களின் புழக்கத்திற்கு விட இந்திய ரிசர்வ் வங்கி முழு உரிமை படைத்தது. அதுபோல் ரூ.2/–ம் அதற்கும் மேற்பட்ட மதிப்புள்ள வங்கித் தாள்களை (Bank notes) வெளியிட இந்திய ரிசர்வ் வங்கி முழு உரிமை படைத்தது.

(5) பிரிவு 29–ன்படி தன்னால் வெளியிடப்படும் வங்கித் தாள்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி 1899–ஆம் ஆண்டின் இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் முத்திரைக் கட்டணம் (stamp duty) எதுவும் செலுத்த வேண்டியதில்லை. இது இந்திய ரிசர்வ் வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குரிமையாகும்.

(6) பிரிவு 42–ன்படி அட்டவணை வங்கிகள் தங்கள் நிதியிருப்பை (cash reserves) இந்திய ரிசர்வ் வங்கியில் வைத்து வர வேண்டும்.

(7) பிரிவு 43A–ன்படி இந்திய ரிசர்வ் வங்கி அல்லது அதன் அலுவலர்கள் நல்லெண்ணத்தில் செய்யும் அல்லது செய்ய விழையும் எதற்கு எதிராகவும் உரிமையியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதையும் முறையே அவ்வங்கி மீது அல்லது அதன் அலுவலர்கள் மீது தொடருதல் கூடாது (Protection of action taken in good faith). இது இந்திய ரிசர்வ் வங்கிக்கும், அதன் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஒரு பாதுகாப்புரிமையாகும்.

(8) பிரிவு 45–ன்படி பொது நலன் அல்லது வங்கியில் வசதி அல்லது வங்கியியல் மேம்பாட்டை முன்னிட்டு, இந்திய ரிசர்வ் வங்கி இந்தியாவில் எந்த இடத்திலும், தேசிய வங்கியை அல்லது ஸ்டேட் வங்கியை அல்லது வங்கி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு புதிய வங்கியை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கியை தனது முகவராக (as agent) நியமிக்க உரிமை படைத்தது.

(9) பிரிவு 45B–யின்படி வங்கி நிறுவனங்களிடமிருந்து அதன் கடன் குறித்த தகவலை சேகரிக்க (to collect credit information) இந்திய ரிசர்வ் வங்கி உரிமை படைத்தது. அதுபோல் இம்மாதிரியான தகவலை வங்கி நிறுவனங்களுக்கு அளிக்கவும் அதிகாரம் படைத்தது.

(9) பிரிவு 45C–யின்படி வங்கி நிறுவனங்களின் கடன் தகவல் குறித்த விபர அறிக்கைகளை (statement relating to credit information) தம்மிடம் சமர்ப்பிக்கும்படி அவ்வங்கி நிறுவனங்களைக் கோர இந்திய ரிசர்வ் வங்கி உரிமை படைத்தது.

(10) **45H முதல் 45QB வரையிலான பிரிவுகளின்படி** வைப்பீடுகளைப் பெறும் வங்கி சாரா நிறுவனங்கள் (Non-Banking Institutions receiving deposits) மற்றும் நிதி நிறுவனங்களின் (Financial Institutions) செயற் பாடுகளை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கி உரிமை கொண்டுள்ளது.

(10) **பிரிவு 58G–யின்படி** சில நேர்வுகளில் வங்கியல்லாத நிறுவனங் களின் தவறுகைக்கு, இந்திய ரிசர்வ் வங்கி அபராதம் விதிக்க உரிமை படைத்தது.

மேற்கண்ட உரிமைகள் மட்டுமல்லாது, **1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் (The Banking Regulation Act, 1949)** கீழ் சில முக்கிய உரிமைகளையும் இந்திய ரிசர்வ் வங்கி பெற்றுள்ளது. அவை

(1) வங்கி நிறுவனங்களின் கடன்களைக் கட்டுப்படுத்தல்;

(2) வங்கி நிறுவனங்களுக்கு உரிமம் அளித்தல்;

(3) கிளைகள் திறக்க அனுமதித்தல்;

(4) வங்கி நிறுவனங்களிடமிருந்து தகவல் கோருதல்;

(5) அத்தகவலை வெளியிடுதல்;

(6) வங்கி நிறுவனங்களை ஆய்வு செய்தல்;

(7) வங்கி நிறுவனங்களுக்கு ஏவுரைகளைப் பிறப்பித்தல்;

(8) எச்சரிக்கை விடுத்தல் மற்றும் அறிவுரை வழங்குதல்;

(9) வங்கி நிறுவனங்களின் உயர்மட்ட மேலாண்மையின் மீது கட்டுப் பாடு கொண்டிருத்தல்.

மேற்கண்ட உரிமைகளின் விரிவாக்கத்தை அடுத்த அத்தியாயத்தில் **"இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரங்கள்"** எனும் தலைப்பின் கீழ்க் காண்க. (இங்கு அதிகாரங்களே, உரிமைகளாக உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்க.)

முடிவுரை:

மேற்கண்ட அதிகாரங்களையும், கடமைகளையும், உரிமைகளையும் காணும் பொழுது, இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் நிதி நிலைக் கட்டமைப்பிலும், வங்கி நிறுவனங்கள், வங்கி சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளின் மீது பரந்த அளவில் ஆதிக்கம் கொண்டிருப்பதும் கட்புலனாகக் கூடிய ஒன்று. எனவே இந்திய ரிசர்வ் வங்கி, நாட்டின் மைய வங்கியாக, வங்கியியல் தொழிலில் மிகவும் மகத்தான பங்கைக் கொண்டுள்ளது என்றே கூற வேண்டும்.

2. Explain the control exercised by the Reserve Bank of India over the Non-banking institutions. (வங்கியல்லா நிறுவனங்களின் மீது இந்திய ரிசர்வ் வங்கி செயல்படுத்தும் கட்டுப்பாட்டை விளக்குக.)

(அல்லது)

Non-banking institution - Write short notes. (வங்கி சாரா நிறுவனம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Financial Institution - Write short notes. (நிதி நிறுவனம் – சிறு குறிப்பு வரைக.)

வங்கி சாரா நிறுவனம் [Non-banking Institution]-விளக்கம்:

1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **பிரிவு 45–I(e)**-ன்படி, "வங்கி சாரா நிறுவனம்" என்பது ஒரு நிறுவனம், கழகம் அல்லது கூட்டுறவு சங்கம் என்று பொருளாகும்.

சற்று விளக்கமாகச் சொன்னால், 'வங்கி சாரா நிறுவனங்கள்' எனும் பதம், ஒரு வங்கிக்கு உண்டான பணிகளைச் செய்யக்கூடிய, ஆனால் வங்கியல்லாத அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்கியதாகும். இவை வணிக வங்கிகளைப் போலவே பல்வேறு நிதியுதவிச் சேவைகளை அளிக்கின்றன.வணிக வங்கிகளைப் போல், இதனுடைய மூலதன நிதியாதாரமும் வைப்பீடுகளே (Deposits) ஆகும். **எனினும் இவை வணிக வங்கிகளிலிருந்து பின்வரும் வகைகளில் வேறுபட்டவையாகும். அவை,–**

(1) நிதியுதவி (Financial Assistance): வணிக வங்கிகள் குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்ட கால நிதியுதவிகளை பெருந் தொகைகளில் வழங்குகின்றன. மேலும் அதிகப் பற்று (over draft), மாற்றுச் சீட்டுத் தள்ளுபடிகள் (discounting of bills of exchange) ஆகியவற்றின் மூலமும் நிதியுதவி வழங்குகின்றன. ஆனால் வங்கி சாரா நிறுவனங்கள் தவணைக் கொள்முதல் விற்பனை நிதியுதவி, வாகனக் கடன், நுகர்வோர் கடன், சீட்டு நிதியுதவி, வீட்டு வசதி நிதியுதவி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றன. இவையெல்லாம் குறைந்த தொகையுடன், குறுகிய காலத்தில் முடிவுறும் நிதியுதவியாக உள்ளன.

(2) வைப்பீட்டுக் காப்பீடு (Deposit Insurance): வணிக வங்கிகளில் செய்யப்படும் வைப்பீடுகளுக்கு, வைப்பீட்டுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதுகாப் பளிக்கப்படுகின்றன. ஆனால் வங்கி சாரா நிறுவனங்களில் செய்யப்படும் வைப்பீடுகளுக்கு, காப்பீட்டுப் பாதுகாப்பு ஏதும் அளிக்கப்படுவதில்லை.

(3) இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடு (Control by the Reserve Bank of India): வணிக வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் இயங்கி வருகின்றன. ஆனால் வங்கி சாரா நிறுவனங்கள் இத்தகு கட்டுப்பாட்டின் கீழ் இல்லை.

நிதி நிறுவனம் [Financial Institution]–விளக்கம்:

1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு **45–I(c)**-ன்படி, "நிதி நிறுவனம்" என்பது பின்வரும் செயற்பாடுகளை தனது தொழிலாகச் செய்யும் **வங்கி சாரா நிறுவனம்** எதுவும் என்று பொருளாகும். அவை,–

(1) கடன் அல்லது முன்பணம் அளித்தலின் மூலம் நிதியுதவி செய்தல்;

(2) அரசு அல்லது உள்ளூர் அதிகார அமைப்பால் வெளியிடப்படும் பங்குகள், பங்குமுதல், பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது காப்புறுதிகளை வாங்குதல்;

(3) தவணைக் கொள்முதல் விற்பனைத் திட்டத்தின் கீழ் சரக்குகள் எதையும் வாடகைதாரருக்கு வாடகைக்கு விடுதல் அல்லது அவரிடம் ஒப்படைத்தல்;

(4) காப்பீட்டுத் தொழிலின் எவ்வகையையாவது மேற்கொள்ளல்;

(5) சீட்டு நிதி நடத்துதல், நிருவகித்தல் அல்லது மேற்பார்வையிடல்;

(6) ஏதேனும் ஒரு திட்டத்தின் அல்லது ஏற்பாட்டின் கீழ் பெருந் கொகைகளில் பணம் திரட்டுதல்.

மேற்கண்ட வரையறையிலிருந்து நிதி நிறுவனத்தில், ஒரு வங்கி சாரா நிறுவனமும் அடங்கும் என்பது தெளிவு.

வங்கி சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் மீது ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடு [Control by RBI]:

1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் **அத்தியாயம் III-B**- யின்படி, (1) இத்தகு நிறுவனங்களின் தகவலைச் சேகரிக்கவும், (2) இவை விளம்பரங்கள் வெளியிடுவதை ஒழுங்குமுறைப்படுத்தவும், (3) இவற்றுக்குண்டான ஏவுரைகளைப் பிறப்பிக்கவும், (4) சில நேர்வுகளில் வைப்பீடுகள் ஏற்றுக் கொள்வதைத் தடை செய்யவும், (5) இவற்றை ஆய்வு செய்யவும், (6) சில நேர்வுகளில் இந்நிறுவனங்களைக் கலைப்பதற்கு விண்ணப்பிக்கவும், ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. தவறுகை புரியும் வங்கி சாரா நிறுவனங்களின் மீது ரிசர்வ் வங்கி அபராதம் விதிக்கலாம் **(பிரிவுகள் 45H முதல் 45QB வரை).**

4

வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 [The Banking Regulation Act, 1949]

ஒரு சிறு அறிமுகம்:

நாட்டின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டும், வங்கிகளில் பணத்தை வைப்பீடு செய்யும் வைப்பீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டும், 1949–ஆம் ஆண்டில் **"வங்கியியல் நிறுவனங்கள் சட்டம்" (The Banking Companies Act, 1949)** இயற்றப்பட்டது. வங்கியியல் நிறுவனங்கள் தொடர்பான சட்டத்தை தொகுக்கவும் திருத்தவும், இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1949–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16–ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. பின்னிட்டு திருத்தச் சட்டம் ஒன்றின் விளைவாக, இதன் பெயர் **"வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949" (The Banking Regulation Act, 1949)** என வழங்கப்படலாயிற்று. இது 1966–ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. இச்சட்டம் இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும். (எளிய மொழிநடைக்காக, இச்சட்டத்தின் பெயரை இனி நாம் "வங்கி ஒழுங்குமுறைச் சட்டம்" என்று அழைக்க இருக்கிறோம்.)

இச்சட்டம் 1983–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வங்கியியல் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் [Banking Laws (Amendment) Act, 1983], 1988–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட வங்கியியல், பொது நிதி நிறுவனங்கள் மற்றும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் [Bank-

ing, Public Financial Institutions and Negotiable Instrument Laws (Amendment) Act, 1988], 1994–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டத்தினாலும் [Banking Regulation (Amendment) Act, 1994] திருத்தப்பட்டது.

இச்சட்டத்தின் கட்டமைப்பு [Structure of the Act]:

இச்சட்டத்தில் மொத்தம் 56 சட்டப் பிரிவுகளும், அவற்றின் கீழ் பல உட்பிரிவுகளும், மூன்று அட்டவணைகளும் (schedules) உள்ளன. மேற்கண்ட சட்டப் பிரிவுகள், மொத்தம் பத்து பகுதிகளின் (Parts) கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

பகுதி I	–	முதனிலை (Preliminary) (பிரிவுகள் 1 முதல் 5–A)
பகுதி II	–	வங்கியியல் நிறுவனங்களின் தொழில் (அல்லது வர்த்தகம்) (Business of Banking Companies) (பிரிவுகள் 6 முதல் 36–A)
பகுதி II-A	–	மேலாண்மையின் மீதான கட்டுப்பாடு (Control over Mangement) (பிரிவுகள் 36–AA முதல் 36–AC)
பகுதி II-B	–	வங்கி நிறுவனங்கள் தொடர்பான சில செயல்பாடுகளின் மீதான தடை (Prohibition of certain activities in relation to Banking Companies) (பிரிவு 36–AD)
பகுதி II-C	–	சில நேர்வுகளில் வங்கி நிறுவனங்களின் பொறுப்பேற்புகளை கைக் கொள்ளல் (Acquisition of the Undertakings of Banking Companies in certain cases) (பிரிவுகள் 36–AE முதல் 36–AJ)
பகுதி III	–	வங்கி நிறுவனங்களின் தொழிலை நிறுத்தி வைத்தல் மற்றும் கலைத்தல் (Suspension of Business and Winding up of Banking Companies) (பிரிவுகள் 36–B முதல் 45)
பகுதி III-A	–	கலைப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிப்பதற்கான சிறப்பு வகைமுறைகள் (Special provisions for Speedy disposal of Winding up proceedings) (பிரிவுகள் 45–A முதல் 45–X)
பகுதி III-B	–	வங்கி நிறுவனங்களின் சில செயற்பாடுகள் தொடர்பான வகைமுறைகள் (Provisions relating to Certain Operations of Banking Companies) (பிரிவுகள் 45–Y முதல் 45–ZF)
பகுதி IV	–	பலவகைப்பட்டவை (Miscellaneous) (பிரிவுகள் 46 முதல் 55–A)
பகுதி V	–	கூட்டுறவு வங்கிகளுக்கு இச்சட்டத்தின் பொருந்தக் கூடிய தன்மை (Application of the Act to Co-operative Banks) (பிரிவு 56)

1. Define Banker and explain the business permitted and prohibited for a Banking Company (வங்கியர் என்ற சொல்லை வரையறுத்து, வங்கிகள் மேற்கொள்ளக் கூடிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்களை விளக்குக.)

(அல்லது)

Business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949 - Write short notes. (வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்கள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Discuss the business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949 (வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949–ன்படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்களைப் பற்றி விவாதிக்க.)

(அல்லது)

What is the range of Banking business which is allowed to Bankers under the Banking Regulation Act, 1949. (வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949–ன் கீழ் வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வங்கித் தொழிலின் எல்லை யாது?)

வங்கியர் (அல்லது) வங்கி நிறுவனம் - வரையறை:

1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **பிரிவு 5(b)**–ஆனது, **"வங்கியியல்" (Banking)** என்றால், கடன் கொடுத்தல் அல்லது முதலீடு செய்தல் நோக்கங்களுக்காக, கேட்பின் பேரில் அல்லது வேறு வகையில் திருப்பிக் கொடுக்கத் தக்கவாறு மற்றும் கசோலை, வரைவோலை, ஆணை அல்லது வேறுவகையில் திரும்பப் பெறத் தக்கவாறு, பொது மக்களிடமிருந்து பண வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல் என்று பொருள், என வரையறுக்கிறது.

அதுபோல், **பிரிவு 5(c)**–ஆனது, **"வங்கியியல் நிறுவனம்" (Banking Institution)** என்றால், இந்தியாவில் வங்கியல் தொழில் செய்யும் நிறுவனம் எதுவும் என்று பொருள், என வரையறுக்கிறது.

எனவே இந்த இரண்டு வரையறைகளையும் சேர்த்து, நாம் வங்கியருக்கு அல்லது வங்கி நிறுவனத்திற்கு பொருள் கூறலாம். அதன்படி "வங்கியர்" என்பவர், **பிரிவு 5(b)–யின்** கீழான வங்கியல் தொழிலைச் செய்யும் ஒரு நிறுவனம் ஆகும்.

முன்னுரை:

1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **6–வது பிரிவு** வங்கிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள தொழில்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. ஒரு வங்கி, வங்கித் தொழில் புரிய உரிமை படைத்தது. இது யாவரும் அறிந்ததே. எனினும் இதற்கும் கூடுதலாக, பின்வரும் முறையிலான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் வங்கிகள் ஈடுபடலாம் என்று **பிரிவு 6(1)** கூறுகிறது. அவை,

எவ்வகையான தொழில்களில் வங்கிகள் ஈடுபடலாம்?

முதன்மைத் தொழில்கள் (Main Business):

ஒரு வங்கி, தனது முதன்மைத் தொழில்களாக பின்வருவவற்றை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து **பிரிவு 6(1)(a)** கூறுகிறது. அவை,

(1) பணம் கடன் வழங்குதல், கடன் திரட்டுதல் அல்லது பணம் ஏற்றுக் கொள்ளுதல்;

(2) பிணையத்தின் பேரில் அல்லது பிணையமின்றிப் பணம் கடன் கொடுத்தல் அல்லது முன் பணம் வழங்குதல்;

(3) மாற்றுச் சீட்டுகள், உண்டியல்கள், கடனுறுதிச் சீட்டுகள், அடையாளச் சீட்டுகள் (coupons), வரைவோலைகள், கப்பற் சரக்கேற்றிச் சீட்டுகள் (bill of lading), இரயில் சரக்குச் சீட்டுகள் (railway receipts), பற்றாணைகள் (warrants), கடனீட்டுப் பத்திரங்கள் (debentures), சான்றிதழ்கள், பங்குச் சீட்டுகள் (scrips), பிற முறையாவணங்கள், காப்புறுதிகள் ஆகியவற்றை வரைதல், செய்தல், ஏற்றுக் கொள்ளுதல், தள்ளுபடியளித்தல், வாங்குதல், விற்றல், வசூலித்தல், சேகரித்தல் மற்றும் கையாளுதல்;

(4) நம்பிக்கைக் கடிதங்கள் (letters of credit), பயணிகள் காசோலைகள் (travellers' cheques) மற்றும் சுழல் தாள்களை (circular notes) வழங்குதல் மற்றும் வெளியிடுதல்;

(5) தங்கம், வெள்ளி (bullion) மற்றும் நறுமணப் பொருளை (specie) வாங்குதல், விற்றல் மற்றும் கையாளுதல்;

(6) அயல்நாட்டு வங்கித் தாள் உள்ளிட்ட அயல்நாட்டுச் செலாவணியை வாங்குதல் மற்றும் விற்றல்;

(7) பங்கு முதல், நிதி, பங்குகள், கடனுறுதிப் பத்திரங்கள்,

பிணையாவணங்கள், கடப்பாடுகள், காப்புறுதிகள் மற்றும் அனைத்து வகையான முதலீடுகளை தரகின் பேரில் பெறுதல், வைத்துக் கொள்ளுதல், வெளியிடுதல், அவற்றிற்கு ஈட்டுறுதியளித்தல் மற்றும் அவற்றைக் கையாளுதல்;

(8) வைத்திருப்பவர்களின் அல்லது மற்றவர்களின் சார்பாக பங்குப் பத்திரங்கள், பங்குச் சீட்டுகள் அல்லது பிற வகையான காப்புறுதிகளை வாங்குதல் அல்லது விற்றல்;

(9) அனைத்து வகையான பங்குப் பத்திரங்கள், பங்குச் சீட்டுகள் அல்லது விலை மதிப்புடையவைகளை தங்கள் வைப்பீட்டில் (on deposit) அல்லது பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு (for safe custody) பெறுதல்;

(10) பாதுகாப்பு பெட்டக வசதியை அளித்தல்;

(11) பணம் அல்லது காப்புறுதிகளை வசூலித்தல் மற்றும் அனுப்புதல்.

துணைத் தொழில்கள் (Ancillary Business):

ஒரு வங்கி ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ள துணைத் தொழில்களை வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **பிரிவு 6(1)(b) முதல் (o) வரை** பட்டியிலிட்டுக் காட்டுகிறது. அவற்றைச் சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

(1) அரசிற்கும், உள்ளூர் அதிகார அமைப்புகளுக்கும் அல்லது எந்நபர்களுக்கும் ஒரு முகவராக வங்கி செயல்படலாம் (acting as agent). சரக்குகளைப் பெற்றுக் கொள்ள அனுமதித்தல், சரக்குகளை அனுப்புதல், இரசீதுகள் கொடுத்தல், விடுவிப்பு வழங்குதல், மற்றும் வேறுவிதத்தில் வாடிக்கையாளரின் பகர அதிகாரம் (attorney) பெற்றவராக வங்கி செயல்படலாம் – **பிரிவு 6(1)(b).**

(2) அரசு மற்றும் தனியார் கடன்களுக்காக ஒப்பந்தம் செய்தல் மற்றும் அவற்றை மாற்றியளித்தல் அல்லது அளித்தல் – **பிரிவு 6(1)(c).**

(3) அரசு அல்லது தனியார் பங்கு வெளியீடுகள், மாநிலத்தின் மற்றும் நகராட்சியின் கடன்கள் மற்றும் பங்குகள், பங்கு முதல், கடனுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு செயலாக்கம் கொடுத்தல், காப்பீடு செய்தல், பொறுப்புறுதி அளித்தல், அவற்றின் நிருவாகத்தில் பங்கேற்றல் மற்றும் வெளியீட்டுத் திட்டங்களை நிறைவேற்றுதல்; மேலும் அவற்றை வெளியிட பணம் கடன் கொடுத்தல் – **பிரிவு 6(1)(d).**

(4) பொறுப்புறுதி மற்றும் ஈட்டுறுதி வணிகத்தின் எந்தவொரு வகையையும் செய்தல் மற்றும் ஈடுபடுதல் – **பிரிவு 6(1)(e).**

(5) வங்கி நிறுவனத்தின் கடன் கோரிக்கைகளை முழுமையாக அல்லது பகுதியாக தீர்க்கும் வகையில், அதன் உடைமையில் வரும் எந்த சொத்தையும் நிருவகித்தல், விற்றல் மற்றும் தனக்குரிய தொகையை வசூலித்தல். – பிரிவு **6(1)(f).**

(6) கடன் மற்றும் முன் பணம் எதற்காகவும் காப்புறுதியாக அளிக்கப்பட்ட சொத்து எதனின் உரிமை, உரிமை மூலம் அல்லது நலன் அல்லது அத்தகு சொத்து எதனையும் கைக் கொள்ளுதல், வைத்திருத்தல் மற்றும் கையாளுதல் – **பிரிவு 6(1)(g).**

(7) பொறுப்பாண்மைகளை (trusts) மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல் – **பிரிவு 6(1)(h).**

(8) ஒரு நிறைவேற்றாளராக, பொறுப்பாண்மையராக அல்லது வேறு விதத்தில் ஒரு சொத்தின் நிருவாகத்தை மேற்கொள்ளுதல் – **பிரிவு 6(1)(i).**

(9) வங்கி நிறுவன ஊழியர்களின் அல்லது முன்னாள் ஊழியர்களின் நலனுக்கான சங்கங்கள், நிலையங்கள், நிதியங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் ஆதரவளித்தல் அல்லது அவற்றிற்கு உதவியளித்தல். ஒய்வூதியங்கள், படிகள் ஆகியவற்றை வழங்குதல் மற்றும் காப்பீட்டிற்கு பணம் செலுத்தல். அறப்பணி அல்லது நல நோக்குத் திட்டங்கள் அல்லது பொட்காட்சி அல்லது அரசு, பொது மற்றும் பயனுள்ள பிற நோக்கம் எதற்கும் பணம் வழங்குதல் அல்லது பணத்திற்கு பொறுப்புறுதியளித்தல் – **பிரிவு 6(1)(j).**

(10) வங்கி நிறுவனத்தின் நோக்கங்களின் வசதிக்காக அல்லது அவசியத்திற்காக அதன் கட்டிடம் அல்லது பணி எதனையும் கைக் கொள்ளுதல், கட்டுதல், பராமரித்தல் மற்றும் திருத்தியமைத்தல் – **பிரிவு 6(1)(k).**

(11) வங்கி நிறுவனத்தின் சொத்து முழுவதையும் அல்லது அதன் பகுதியை மற்றும் அதன் உரிமைகளை விற்றல், முன்னேற்றல், நிருவகித்தல், மேம்படுத்தல், பரிமாற்றம் செய்தல், வாடகைக்கு விடுதல், அடைமானம் வைத்தல், வகை செய்தல் அல்லது வேறுவகையில் கையாளுதல் – **பிரிவு 6(1)(l).**

(12) நிறுவனம் அல்லது நபர் எவரொருவரின் தொழில் முழுவதையும் அல்லது அதன் பகுதியை கைக் கொள்ளுதல் அல்லது மேற்கொள்ளுதல்; ஆனால் அதன் தொழில் இப்பிரிவில் கூறப்பட்டுள்ள தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் – **பிரிவு 6(1)(m).**

(13) வங்கி நிறுவனத்தின் தொழிலை மேம்படுத்தும் அல்லது முன்னேற்றும்

வண்ணம் உள்ள அனைத்து உடனிகழ்வான செயல்களையும் செய்யலாம் – **பிரிவு 6(1)(n).**

(14) மத்திய அரசு, அரசிதழில் வெளியிடும் அறிக்கை மூலமாக, குறிப்பிடும் எந்த தொழிலிலும், அதில் ஈடுபடுவது ஒரு வங்கி நிறுவனத்திற்கு சட்டப்படியானது என்றால், அது ஈடுபடலாம் – **பிரிவு 6(1)(o).**

மேற்கண்ட தொழில்கள் தவிர ஒரு வங்கி நிறுவனம் வேறு எந்தத் தொழிலிலும் ஈடுபடலாகாது என்று பிரிவு 6(2) விதிக்கிறது.

எவ்வகையான தொழில்களில் வங்கிகள் ஈடுபடக் கூடாது?

ஒரு வங்கி, சில வகையான தொழில்களில் ஈடுபட, வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **8–வது பிரிவு** தடை விதிக்கிறது (Prohibition of trading). அதன்படி,

நாம் மேலே கண்ட பிரிவு 6–ல் அல்லது ஒப்பந்தம் எதிலும் யாது கூறப் பட்டிருப்பினும், வங்கி நிறுவனம் எதுவும், சரக்குகளை (goods) வாங்குதல் அல்லது விற்றல் அல்லது பண்ட மாற்றம் செய்து கொள்ளலில் (bartering) நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபடக் கூடாது. எனினும், வாங்கிய கடனுக்கு காப்புறுதியாக வங்கியிடம் கொடுக்கப்பட்டிருப்பவைகளுக்கு இந்நிபந்தனை பொருந்தாது.

மேலும் மற்றவர்களுக்காக வணிகம் எதிலும் அல்லது சரக்குகளை வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்து கொள்ளலில் ஒரு வங்கி ஈடுபடலாகாது. எனினும் வசூலித்தலுக்காக அல்லது மாற்றிக் கொள்வதற்காக வங்கியால் பெறப்படும் மாற்றுச் சீட்டுகளுக்கு இந்நிபந்தனை பொருந்தாது.

மேற்கண்ட பிரிவில் வரும் **"சரக்குகள்" (goods)** எனப்படும் பதத்தில், தொடர்தகு பாத்தியங்கள் (actionable claims), பங்கு முதல் (stock), பங்குகள், பணம், தங்கம், வெள்ளி, நறுமணப் பொருட்கள் மற்றும் மேற்படி பிரிவு 6(1)(a)–யில் கூறப்பட்டிருக்கும் அனைத்து முறையவாணவங்களும் (instruments) நீங்கலாக, அசையும் சொத்து ஒவ்வொன்றையும் (movable property) குறிக்கும்.

2. Describe the main powers of the Reserve Bank of India under the Banking Regulation Act, 1949. (வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949ன்படி இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியமான அதிகாரங்களை விளக்குக.)

(அல்லது)

Licensing of Banking Companies - Write short notes. (வங்கி நிறுவனங்களுக்கு உரிமம் அளிப்பது – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the powers of the Reserve Bank of India under the Banking Regulation Act, 1949 to supervise and control other banks. (வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949–ன் கீழ் இந்திய ரிசர்வ் வங்கி, மற்ற வங்கிகளை மேற்பார்வையிடவும் கட்டுப்படுத்தவும் கொண்டுள்ள அதிகாரங்களை விளக்குக.)

(அல்லது)

Explain the relationship between the Reserve Bank of India and the Commercial Banks (இந்திய ரிசர்வ் வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையே உள்ள உறவு நிலையை விளக்குக.)

(அல்லது)

Discuss the powers of the Indian Reserve Bank to control the Banking Institutions. (வங்கி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கிக்கு உள்ள அதிகாரங்களை விவாதிக்க.)

முன்னுரை:

1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கிக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரங்கள்:

(1) வங்கி நிறுவனங்கள் அளிக்கும் கடன் மற்றும் முன்பணங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் (Power to Control Advances):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **21–வது பிரிவின்படி** இந்திய ரிசர்வ் வங்கி வங்கி நிறுவனங்கள் கடைப்பிடிப்பதற்கென முன்பணக் (கடன்) கொள்கைகளை (policy in relation to advances) வகுத்துத் தருகிறது. இதை வங்கிகள் அனைத்தும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ரிசர்வ் வங்கி எந்தெந்த நோக்கங்களுக்காக, எவ்வளவு கடன் தரலாம் அல்லது தரக் கூடாது என்பதை நிருணயிக்கிறது. பிணையங்களின் பேரில் கடன் (secured advances) தரும்போது, எத்தனை சதவீதத்திற்குக் குறையாமல் பிணையங்களின் மதிப்பு இருக்க வேண்டுமென்பதை ரிசர்வ் வங்கி நிருணயிக்கிறது. மேலும் கடன்களின் மீதான வட்டி விகிதம் மற்றும் பிற நிபந்தனைகளை வகுத்து, வங்கி நிறுவனங்களின் கடன்களை தனது கட்டுப்பாட்டிற்குள் இந்திய ரிசர்வ் வங்கி வைத்துள்ளது.

(2) வங்கி நிறுவனங்களுக்கு உரிமம் அளித்தல் (Licensing of Banking Companies):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **22–வது பிரிவின்படி** ஒரு வங்கி இந்தியாவில் வங்கித் தொழில் புரிய வேண்டுமெனில், அது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். இந்த உரிமத்தை வழங்குவதற்கு முன்பாக, உரிமம் கோரும் வங்கியின் கணக்குப் புத்தகங்களை இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வு செய்து, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இந்திய நிறுவனங்களுக்கான நிபந்தனைகள்: வங்கித் தொழில் புரிய இந்திய நிறுவனம் ஒன்று உரிமம் கோரினால், அங்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வு செய்யும். இந்நிபந்தனைகள் **பிரிவு 22(3)–ல்** கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

(1) தற்போதைய அல்லது எதிர்கால வைப்பீட்டாளர்கள் தங்கள் வைப்பீடுகளைக் கோரினால், அவற்றைத் திருப்பிக் கொடுக்கும் நிலையில் அந்த நிறுவனம், இருக்கிறதா அல்லது இருக்குமா?

(2) அந்நிறுவனத்தின் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பீட்டாளர் களின் நலனுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அதன் அலுவல்கள் நடத்தப்பட வில்லை அல்லது நடத்தப்படமாட்டாது.

(3) அந்நிறுவனத்தின் உத்தேச மேலாண்மையின் பொதுவான தன்மை (general character of the proposed management of the company), பொது நலனுக்கு அல்லது வைப்பீட்டாளர்களின் நலனுக்கு குந்தகமாக இராது.

(4) அந்நிறுவனம் போதுமான மூலதன கட்டமைப்பையும் (adequate capital structure), வருமானம் ஈட்டும் வளத்தையும் கொண்டுள்ளது.

(5) அந்நிறுவனத்திற்கு இந்தியாவில் வங்கித் தொழில் நடத்த உரிமம் வழங்குவதன் வாயிலாக, பொது நலனின் தேவை பூர்த்தியாகும்.

(6) அந்நிறுவனம் தனது வங்கித் தொழிலை மேற்கொள்ள விழைய உத்தேசித்துள்ள முதன்மைப் பகுதியில் இருக்கும் வங்கியியல் வசதிகள், அந்தப் பகுதியில் ஏற்கனவே உள்ள வங்கிகளின் விரிவாக்கத்திற்கான ஆற்றலின் பரவெல்லை மற்றும் பிற தொடர்புடைய காரணிகளைக் கருத்தில் கொண்டு, அந்நிறுவனத்திற்கு உரிமம் வழங்குவது, நிதியின் நிலைத்த தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுடன் இணங்கிய வங்கியல் முறையின் செயல்பாடு மற்றும் தொகுத்தமைத்தலுக்கு குந்தகம் விளைவிக்காது என்று ரிசர்வ் வங்கி மன நிறைவடைய வேண்டும்.

(7) மேலும் அந்நிறுவனம் இந்தியாவில் செய்ய உத்தேசித்திருக்கும்

வங்கித் தொழில், பொது மக்களின் மற்றும் வைப்பீட்டாளர்களின் நலன்களுக்கு குந்தகம் ஏதும் ஏற்படுத்தக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, அவசியமானது என்று இந்திய ரிசர்வ் வங்கி கருதி விதிக்கும் பிற நிபந்தனைகள் எதையும், அவ்வங்கி பூர்த்தி செய்தல் வேண்டும்.

அயல்நாட்டு நிறுவனங்களுக்கான நிபந்தனைகள்: இந்தியாவில் வங்கித் தொழில் புரிய, இந்தியாவிற்கு அப்பால் பதிவு செய்யப்பட்டுள்ள அயல் நாட்டு நிறுவனம் ஒன்று உரிமம் கோரினால், அந்நிறுவனத்தின் பதிவேடுகளை இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வு செய்தல் வேண்டும். அதுபோல் நாம் மேலே கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று அறிந்து கொள்ள வேண்டும். இந்நிபந்தனைகள் மட்டுமல்லாது, பின்வரும் கூடுதல் நிபந்தனைகளையும் அந்நிறுவனம் பூர்த்தி செய்துள்ளதா என்று இந்திய ரிசர்வ் வங்கி தெரிந்து கொள்ள வேண்டும் என்று பிரிவு **பிரிவு 22(3A)** கூறுகிறது. அக்கூடுதல் நிபந்தனைகள் வருமாறு.

(1) அந்நிறுவனம் இந்தியாவில் வங்கித் தொழில் நடத்துவது, பொது நலனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

(2) அந்நிறுவனம் எந்நாட்டில் பதிவு செய்யப்பட்டதோ அந்நாடு அல்லது அந்நாட்டின் சட்டம், இந்திய நாட்டில் ஒரு வங்கியாக பதிவு செய்யப்பட்ட வங்கி நிறுவனங்களுக்கு எதிராக எந்த வகையிலும் பாகுபடுத்துதல் கூடாது.

(3) இந்தியாவிற்கு அப்பால் பதிவு செய்யப்பட்ட வங்கி நிறுவனங் களுக்கு பொருந்தக் கூடிய சட்டத்தின் எல்லா வகைமுறைகளையும் அந்நிறுவனம் பூர்த்தி செய்கிறதா என்று இந்திய ரிசர்வ் வங்கி காண வேண்டும்.

வழங்கிய உரிமத்தை இரத்து செய்தல் (Cancelling the licence): மேற்கண்ட பிரிவின் கீழ் ரிசர்வ் வங்கி தான் ஒரு வங்கி நிறுவனத்திற்கு வழங்கிய உரிமத்தை பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இரத்து செய்யலாம். அவை,

(1) இந்தியாவில் அந்நிறுவனம் வங்கித் தொழில் செய்ய இயலாது போய்விட்டால்; அல்லது

(2) அவ்வங்கி நிறுவனத்திற்கு உரிமம் அளிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி நிபந்தனைகள் எதையும் பிரிவு 22(1)–ன் கீழ் விதித்திருந்து, அதை அவ்வங்கி எப்பொழுதேனும் பூர்த்தி செய்யத் தவறிவிட்டால்; அல்லது

(3) நாம் ஏற்கனவே விரிவாகக் கண்ட பிரிவு 22(3) மற்றும் பிரிவு 22(3A)–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் எவற்றையேனும் அவ்வங்கி எப்பொழுதேனும் பூர்த்தி செய்யத் தவறிவிட்டால். **[பிரிவு 22(4)]**

இவ்வாறு இரத்து செய்ததனால் பாதிக்கப்பட்ட வங்கி, மத்திய அரசிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். அதுவும், ரிசர்வ் வங்கி தனது இரத்து செய்தல் முடிவை அவ்வங்கி நிறுவனத்திற்கு தெரிவித்த தினத்திலிருந்து 30 தினங்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் **[பிரிவு 22(5)]**. இதில் மத்திய் அரசின் முடிவே இறுதியானதாகும் **[பிரிவு 22(6)]**.

(3) கிளைகள் திறக்க அனுமதித்தல் (Permission for Opening Branches):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **23–வது பிரிவின்படி,** ஒரு வங்கி நிறுவனம் இந்தியாவில் ஒரு புதிய இடத்தில் தனது வங்கித் தொழிலை நடத்துவதற்கு (அதாவது கிளைகள் திறப்பதற்கு) அல்லது அது அச்சமயத்தில் வங்கித் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து வேறிடத்திற்கு (அது இந்தியாவிற்குள்ளோ அல்லது இந்தியாவிற்கு அப்பாலோ) தனது வங்கித் தொழிலை மாற்றுவதற்கு, அது இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

(4) தகவல் கோரும் அதிகாரம் (Power to Call for Information):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு **27(1),** முன்னதாக ஒவ்வொரு வங்கி நிறுவனமும், தனது சொத்து மற்றும் பொறுப்புகளின் (assets and liablities) விபர அறிக்கைகளை இந்திய ரிசர்வ் வங்கியிடம் மாதந்தோறும் சமர்ப்பிக்க வேண்டும் (submission of returns) என்று விதிக்கிறது. அதற்கடுத்த பிரிவு **27(2)**–ஆனது, ஒரு வங்கி அதனது தொழில் அல்லது செயற்பாடுகள் தொடர்பான தகவல் மற்றும் அறிக்கைகளை (information and statements) தன்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்று எப்பொழுது வேண்டுமானாலும் அவ்வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஏவுரைக்க அதிகாரம் படைத்தது.

(5) தகவலை வெளியிடும் அதிகாரம் (Power to publish information):

மேற்கண்ட பிரிவு **27(2)–ன்** கீழ், இந்திய ரிசர்வ் வங்கி பெறும் தகவல் எதையும் பொது நலன் கருதி, மக்கள் மத்தியில் வெளியிட அதற்கு **பிரிவு 28** அதிகாரமளித்துள்ளது.

(6) வங்கி நிறுவனங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் (Power to Inspect Banking Companies):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **35–வது பிரிவின்படி,** இந்திய ரிசர்வ் வங்கி தானாக முற்பட்டு அல்லது மத்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில், வங்கி நிறுவனங்களையும், அதன் பதிவேடுகளையும், கணக்குப் புத்தகங்களையும் ஆய்வு

செய்யலாம். இத்தகு ஆய்வின் முடிவில் ரிசர்வ் வங்கி அளிக்கும் ஆய்வறிக்கையின் பேரில், அந்த வங்கி நிறுவனத்தின் நிருவாகம், பொது நலனுக்கு விரோதமாக நடத்தப்படுகிறது என்று மத்திய அரசு அபிப்பிராயப்பட்டால், அந்த வங்கி நிறுவனம் புதிய வைப்பீடுகள் ஏதும் பெறக் கூடாது என்று அதன் மீது மத்திய அரசு தடை விதிக்கலாம். அதுபோல் அந்நிறுவனத்தைக் கலைத்துவிடும்படி இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஆணையிடலாம்.

(7) ஏவுரைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் (Power to Issue Directions):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 35A–யின்படி, ஒரு வங்கி நிறுவனத்திற்கு, பொது நலன் அல்லது வங்கியியல் கொள்கையின் அடிப்படையில் அல்லது வைப்பீட்டாளர்களின் நலனுக்கு விரோதமாக அல்லது வங்கி நிறுவனத்திற்கு குந்தகமாக அவ்வங்கியின் வங்கித் தொழில் நடத்தப்படுவதை தடுப்பதற்காக அல்லது அவ்வங்கிக்கு உரியதொரு நிருவாக மேலாண்மையை பெற்றுத் தருவதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி உரிய ஏவுரைகளைப் பிறப்பிக்கலாம்.

(8) எச்சரிக்கை விடுக்கும் மற்றும் அறிவுறுத்தும் அதிகாரம் (Power to caution and give advice):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் 36–வது பிரிவின்படி, ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று வங்கி நிறுவனங்களுக்கு ரிசர்வ் வங்கி எச்சரிக்கை விடுக்கலாம் அல்லது அவ்வாறு ஈடுபடுவதை தடை செய்யலாம். மேலும் வங்கி நிறுவனங்களுக்குண்டான அறிவுரைகளைப் பொதுவாக வழங்கலாம். தனது அறிவுறுத்தங்களை நிறைவேற்றும்படி வங்கி நிறுவனங்களுக்கு ரிசர்வ் வங்கி ஆணையிடலாம். மேலும் அவ்வங்கி நிறுவனங்களின் நிருவாக மேலாண்மையில், தான் அவசியமெனக் கருதும் அத்தகு மாற்றங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கள் செய்யும்படி ரிசர்வ் வங்கி ஆணையிடலாம்.

(9) வங்கி நிறுவனங்களின் உயர்மட்ட மேலாண்மையின் மீது கட்டுப்பாடு (Control over Top Mangement):

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 36AA–யின்படி, வங்கி நிறுவனங்களின் உயர் மட்ட மேலாண்மையின் மீது முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரத்தை மிகப் பரந்த அளவில் இந்திய ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. ஒரு வங்கி நிறுவனத்தின் தலைவர், நிருவாக இயக்குநர், மேலாளர் அல்லது தலைமை நிருவாக அலுவலர் ஆகியோரை நியமனம் செய்ய அல்லது மறுநியமனம் செய்ய அல்லது பதவியிலிருந்து நீக்க, இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெற வேண்டும். மேலும் ரிசர்வ் வங்கி அசியமெனக் கருதினால், ஒரு வங்கியின்

தலைவர், இயக்குநர், தலைமை நிருவாக அலுவலர் அல்லது பிற அலுவலர் அல்லது ஊழியர் ஆகியோரை அப்பதவியிலிருந்து நீக்கலாம். அவ்வாறு நீக்கப்பட்ட பதவிக்கு வேறு உரிய நபரை அமர்த்தலாம்.

பிரிவு 36AB–யின்படி வங்கியியல் கொள்கைக்கு அல்லது பொது நலனுக்கு அல்லது வங்கியின் அல்லது வைப்பீட்டாளர்களின் நலனுக்கு அவசிய மானது என்று ரிசர்வ் வங்கி கருதினால், சம்பந்தப்பட்ட வங்கியின் இயக்குநர்கள் வாரியத்தில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட கூடுதல் இயக்குநர்களை ரிசர்வ் வங்கி நியமனம் செய்யலாம்.

முடிவுரை:

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் மேற்கண்ட வகைமுறைகளின்படி, இந்திய ரிசர்வ் வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ள பரந்த அதிகாரங்களினால், தனது கட்டுப்பாட்டில் உள்ள வங்கி நிறுவனங்களின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்தி, ஒரு சீரிய முறையில் அவற்றைக் கொண்டு செல்ல முடிகிறது. அதாவது இந்த அதிகாரங்களின் வாயிலாக, இந்திய ரிசர்வ் வங்கி, மற்ற வணிக வங்கிகளுடன் கொண்டுள்ள உறவு நிலையை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது எனலாம் **(Regulates the relationship between Reserve Bank of India and Commercial Banks).**

3. Suspension of business of Banking Companies - Write short notes. (வங்கி நிறுவனங்களின் தொழிலை நிறுத்தி வைத்தல் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Winding up of banking companies - Write short notes. (வங்கி நிறுவனங்களின் கலைப்பு – சிறு குறிப்பு வரைக.)

வங்கி நிறுவனத்தின் தொழிலை நிறுத்தி வைத்தல் (Suspension of banking business):

1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **37–வது பிரிவானது,** ஒரு வங்கி நிறுவனம் தனது கடப்பாடுகளை (obligations) நிறைவேற்றத் தற்காலிகமாக இயலாதிருக்கும் பொழுது, அது தனது வங்கித் தொழிலை தற்காலிகமாக நிறுத்தி வைத்துக் கொள்ள உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறுகிறது. இவ்விண்ணப்பத்தின் பேரில், அவ்வங்கி நிறுவனம் தனது தொழிலை ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு நிறுத்தி வைத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம். அந்தக் கால அளவின் போது,

அவ்வங்கி நிறுவனத்தின் சொத்துடைமைகளையும், கணக்குப் புத்தகங்களையும், ஆவணங்களையும் தன் வசம் எடுத்துக் கொள்ள, ஒரு தனி அலுவலரை (Special Officer) நியமிக்கலாம். மேலும் மேற்கண்ட கால அளவிற்குள் அவ்வங்கி தனது கடன்களை திருப்பிச் செலுத்திவிட வேண்டும். எனினும் இந்த கால அளவு மொத்தமாக ஆறு மாதங்களுக்கு மேல் அனுமதிக்கப்படாது.

வங்கி நிறுவனத்தைக் கலைத்தல் (Winding-up):

மேற்கண்ட பிரிவு 37–ன்படி, எந்த வங்கி நிறுவனத்தின் நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோ அந்நிறுவனம் இனி தனது வங்கித் தொழிலை தொடங்குவது அல்லது தொடர்ந்து இயங்குவது, அதன் வைப்பீட்டாளர்களின் நலனுக்கு விரோதமாக அமையும் என்று இந்திய ரிசர்வ் வங்கி **பிரிவு 37(4)–ன்** கீழ் கருதினால், அது அவ்வங்கி நிறுவனத்தைக் கலைத்துவிடும்படி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதன் பேரில் அந்நிறுவனத்தைக் கலைக்க உயர் நீதிமன்றம் **பிரிவு 38–ன் கீழ்** ஆணை பிறப்பித்தல் வேண்டும். எனினும் அச்சமயத்தில் உயர் நீதிமன்றம் பின்வரும் இரு கூறுகள் உள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். அவை (1) அவ்வங்கி நிறுவனம் தனது கடன்களை செலுத்த இயலவில்லை. (2) அவ்வங்கி நிறுவனத்தைக் கலைக்க மேற்படி பிரிவு 37–ன் கீழ் அல்லது பிரிவு 38–ன் கீழ் இந்திய ரிசர்வ் வங்கி விண்ணப்பம் செய்துள்ளது.

உயர் நீதிமன்றம் அவ்வங்கி நிறுவனத்தைக் கலைப்பதற்காக **பிரிவு 38–ன்** கீழ் மேற்கண்டவாறு ஆணை பிறப்பித்த பின்னர், அந்நிறுவனத்தைக் கலைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கவனிப்பதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி செய்யும் ஒரு விண்ணப்பத்தின் பேரில், அதிகாரபூர்வ கலைப்பதிகாரி (Official Liquidator) ஒருவரை உயர் நீதிமன்றம் நியமனம் செய்யும். மேலும் இந்திய ரிசர்வ் வங்கியை, பாரத ஸ்டேட் வங்கியை அல்லது வேறேதேனும் வங்கியை, ஏன் தனிப்பட்ட ஒரு நபரைக் கூட கலைப்பதிகாரியாக உயர் நீதிமன்றம் நியமனம் செய்யலாம்.

பிரிவு 41A–யின்படி அவ்வங்கி நிறுவனம் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் அந்நிறுவனத்திற்கு பிணையின் பேரில் கடன் கொடுத்தவர்கள் (secured creditor), பிணை ஏதுமன்றி கடன் கொடுத்தவர்கள் (unsecured creditor) அனைவரின் பட்டியலைக் கலைப்பதிகாரி தயாரித்து, அவர்களின் உரிமைக் கோரிக்கைகளைக் கேட்டுப் பெறுவார். இதன்பொருட்டு, கடன் கொடுத்தவர்களுக்கு கலைப்பதிகாரி, முன்னதாக அறிவிப்பு அனுப்புதல் வேண்டும்.

பிரிவு 43A–யின்படி அவ்வங்கி முதலில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களுக்கு அவ்வங்கியின் சொத்துடைகளிலிருந்து முதலில் தொகை செலுத்தப்

படும் (preferential payments). பின்னிட்டு எஞ்சியுள்ள சொத்துடைமைகளிலிருந்து, முதலில் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூ.250/– அல்லது அவர்கள் கணக்கில் இருப்பில் உள்ள தொகை, இவற்றில் எத்தொகை குறைவானதோ அது செலுத்தப்படும். பின்னர், அவ்வங்கியின் பிற வைப்பீட்டாளர்களுக்கு ரூ.250/– அல்லது அவர்கள் கணக்கில் இருப்பில் உள்ள தொகை, இவற்றில் எத்தொகை குறைவானதோ அது செலுத்தப்படும். பின்னிட்டு அவ்வங்கிக்கு பொதுவான முறையில் கடன் கொடுத்தவர்களின் கடன்கள் தீர்க்கப்படும்.

பிரிவு 44–ன் கீழ் ஒரு வங்கி நிறுவனம், தனது வங்கித் தொழிலை தன்னிச்சையாக கலைத்துக் கொள்ள (voluntary winding up) உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அதற்கு முன், அவ்வங்கிக்கு கடன் கொடுத்தவர்கள் அனைவரின் கடன்களையும் முழுமையாக அவ்வங்கி தீர்க்க இயலத்தக்க நிலையில் உள்ளது என இந்திய ரிசர்வ் வங்கி சான்றிதழ் அளிக்க வேண்டும். இதன் பேரில் உயர் நீதிமன்றம் கலைப்பிற்கு ஆணையிடலாம்.

4. Amalgamation of banking companies - Write short notes. (வங்கி நிறுவனங்களின் இணைப்பு – சிறு குறிப்பு வரைக.)

1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் **பிரிவு 44A** வங்கி நிறுவனங்களின் இணைப்பு குறித்த நடைமுறையை விளக்குகிறது. இதன்படி, வங்கிகளை இணைப்பதற்கான வரைமுறைகளைக் கொண்ட ஒரு திட்டம் (a scheme containing the terms of amalgamation) வரையப்பட்டு, அது சம்பந்தப்பட்ட வங்கி நிறுவனங்கள் ஒவ்வொன்றின் பங்குதாரர்கள் கூட்டத்தின் முன் வைக்கப்படுதல் வேண்டும். இத்திட்டம், அந்நிறுவனங்கள் ஒவ்வொன்றின் பங்குதாரர்கள் மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கை கொண்ட பெரும்பான்மை பங்குதாரர்களால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேற்படி திட்டத்திற்கு எதிராக ஓட்டளித்த பங்குதாரர்கள், தங்கள் பங்குகளுக்கான மதிப்பை (value of the shares) கோரிப் பெற உரிமை படைத்தவர்கள். இந்த மதிப்பை இந்திய ரிசர்வ் வங்கியே திர்மானிக்கும். பங்குதாரர்கள் மேற்கண்ட திட்டத்தை ஏற்றுக் கொண்டால், அது அனுமதிக்காக (sanction) இந்திய ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ரிசர்வ் வங்கி அனுமதியளித்தவுடன், ஒரு வங்கியுடன் இணைந்த அம்மற்றொரு வங்கி நிறுவனத்தின் சொத்துடைமைகளும், பொறுப்புகளும் மேற்படி திட்டத்தின் வரைமுறைகளின்படி அது இணைந்த வங்கி நிறுவனத்திற்கு மாற்றப்படும். முடிவில் மேற்கண்டவாறு ஒரு வங்கியுடன் இணைந்த அம்மற்றொரு வங்கி (amalgamated banking company) கலைக்கப்பட்டதாக இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்படும்.

5

வங்கியரும் வாடிக்கையாளரும் [Banker and Customer]

ஒரு சிறு அறிமுகம்:

நம் இந்தியத் திருநாட்டில் பல்வேறு வங்கிகள் நிறுவப்பட்டுள்ளதையும், அவை நாட்டின் வேளாண் துறை, தொழிற்துறை மற்றும் பொருளாதாரத் துறை வளர்ச்சியடைய பாடுபடுவதையும் நாம் சென்ற அத்தியாயங்களில் கண்டோம். இன்றைக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு காரணம், வணிக வங்கிகளே என்று கூறலாம். இவை இன்று தங்கள் வாடிக்கையாளர்களின் நலனுக்காக ஆற்றி வரும் பணிகளும், கொடுத்து வரும் சேவைகளும் அளப்பரியது. எனவே நாம் இந்த அத்தியாயத்தில் 'வங்கியர்', 'வாடிக்கையாளர்' எனும் சொற்டொர்களின் வரையறைகளையும், இவர்கள் இருவருக்கிடையே உள்ள உறவுமுறையையும் சற்று விரிவாகக் காண உள்ளோம்.

1. Define the terms 'banker' and 'customer'. Explain the relationship between a banker and customer. ('வங்கியர்' மற்றும் 'வாடிக்கையாளர்' என்ற சொற்றொடர்களை வரையறை செய்க. வங்கியர்க்கும் வாடிக்கையாளர் களுக்கும் இடையே உள்ள உறவினை விளக்குக.)

(அல்லது)

Define 'banker' and 'customer'. Discuss their general and legal

relationship with illustrations. ('வங்கி' மற்றும் 'வாடிக்கையாளர்' இவற்றை வரையறு. அவர்களின் பொதுவான மற்றும் சட்டப்பூர்வமான உறவுமுறைகளை உதாரணங்களுடன் விவாதிக்க.)

(அல்லது)

Discuss the relationship between a banker and a customer. (ஒரு வங்கியர் மற்றும் வாடிக்கையாளருக்கும் இடையேயான உறவு பற்றி விவாதிக்க.)

(அல்லது)

"Banker is a privileged debtor" - Comment. ("வங்கியர் ஒரு சலுகை பெற்ற கடனாளி". விமர்சிக்க.)

(அல்லது)

Banker - Write short notes. (வங்கியர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Customer - Write short notes. (வாடிக்கையாளர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Banker and Customer relationship - Write short notes. (வங்கியருக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு முறைகள் – சிறு குறிப்பு வரைக.)

வங்கியர் [Banker] – வரையறை:

இந்திய நாட்டின் வங்கி முறைக்கு முன்னோடி, இங்கிலாந்து நாட்டின் வங்கி முறையாகும். எனவே முதற்கண் நாம் இங்கிலாந்து நாட்டில் 'வங்கியர்' எனும் பதத்திற்கு என்ன வரையறை கூறப்பட்டுள்ளது என்று அறிய வேண்டும். இங்கிலாந்து நாட்டுச் சட்டங்கள் எதிலும் 'வங்கியர்' எனும் பதத்திற்கு வரையறை கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இங்கிலாந்து நாட்டின் அறிஞர் பெருமக்கள் பலரும் 'வங்கியர்' எனும் பதத்திற்கு வரையறை தர முயன்றனர். ஆனால் அவர்களால் ஒரு திருப்திகரமான வரையறையைக் கூற முடியவில்லை.

இந்நிலையில் வங்கியியல் நடவடிக்கைகள் தொடர்பாக இங்கிலாந்து நாட்டில் **Foley v. Hill**[1] எனும் ஒரு வழக்கு எழுந்தது. இதைத் தொடர்ந்து இம்மாதிரியான வழக்குகள் மேலும் பல எழுந்தன. அவைகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில், 'வங்கியியல் சட்டம்' **(Law of Banking)** எனும்

1. (1848) 2 H.L.C.

நூலை எழுதிய முனைவர் ஹெர்பர்ட் எல். ஹார்ட் எனும் அறிஞர் 'வங்கியர்' எனும் பதத்திற்கு சற்று தெளிவான ஒரு வரையறையைக் கொடுக்க முனைந்து, அதில் வெற்றியும் கண்டார். அவரது வரையறை வருமாறு.

முனைவர் ஹெர்பர்ட் எல். ஹார்ட் (Dr.Herbert L. Hart) கூறும் வரையறை:

இவரது வரையறையின்படி, "ஒரு வங்கியர் எனப்படுபவர், தனது வழக்கமான வணிகப்போக்கில், யாரிடமிருந்து, யாருக்காக நடப்புக் கணக்குகளின் பேரில் பணத் தொகைகளைப் பெற்றுக் கொள்கிறாரோ, அவர்களால் தன் பேரில் வரையப்படும் காசோலைகளுக்குப் பணம் கொடுப்பவர் ஆவார்."[1] இதன்படி, ஒரு நபர், நிறுவனம் அல்லது நிறுமம் ஒரு வங்கியாளராக அல்லது வங்கியராக கருதப்பட வேண்டுமெனில், முறையே அவர் அல்லது அது செய்ய வேண்டிய இன்றியமையாப் பணி, நடப்பு வைப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதும், அவற்றின் பேரில் வரையப்படும் காசோலைகளுக்குப் பணம் வழங்குவதும் ஆகும்.

சர் ஜான் பேஜட் (Sir John Paget) கூறும் வரையறை:

ஹார்ட் கூறிய மேற்படி வரையறையை சற்று மேம்பட்ட வடிவத்தில் சர் ஜான் பேஜட் எனும் மற்றொரு சட்ட அறிஞர் கூறினார். இவரது வரையறையின் படி, வங்கியர் என்பவர் பின்வரும் நான்கு பணிகளை ஆற்றுதல் வேண்டும். அவை

1. வைப்புக் கணக்கில் தொகை பெறுதல் வேண்டும்.
2. நடப்புக் கணக்கில் தொகைகளைப் பெறுதல் வேண்டும்.
3. காசோலைகளை வாடிக்கையாளருக்கு வெளியிடவும் அவர் விடுக்கும் காசோலைகளுக்கு பணம் வழங்கவும் வேண்டும்.
4. வாடிக்கையாளர்களுக்காக அவர்களது குறுக்குக் கோடிட்ட மற்றும் குறுக்குக் கோடிடாத காசோலைகளை வசூலித்துக் கொடுக்க வேண்டும்.

இந்நான்கு பணிகளை ஆற்றாத எந்நபரும் அல்லது கூட்டுருக் குழுவும் அல்லது வேறுஎதுவும் ஒரு வங்கியர் ஆகார்[2], என்பதே இவரது வரையறை.

மேலும், "வங்கித் தொழில் நடத்துபவர் தம்மை வங்கியர் என்று பொது

1. "A Banker is one who in the ordinary course of his business, honours cheques drawn upon him by persons from and for whom he receives money on current accounts" - **Dr. Herbert L. Hart, Law of Banking, at p. 1.**
2. "No person or body corporate or otherwise, can be a banker who does not (i) take deposit accounts, (ii) take current accounts, (iii) issue and pay cheques, and (iv) collect cheques, crossed and uncrossed, for his customers" - **Sir John Paget.**

மக்களிடம் பகிரங்கமாக அறிவித்ததலோடு, பொதுமக்களும் அவரை வங்கியாளராக அங்கீகரிக்க வேண்டும்; அவருடைய முக்கியத் தொழில், வங்கியியலாகவே இருக்க வேண்டும்; வங்கியியல் தொழிலிருந்துதான் அவர் பொதுவாக தனது வாழ்க்கை வருமானத்தைப் பெற வேண்டும்"[1], என்றும் சர் ஜான் பேஜட் வலியுறுத்துகிறார். இவ்வரையறை சற்று விரிவானது என்றாலும், முழுமையானதல்ல. ஏனெனில், இவ்வரையறையில் தற்கால வங்கியின் வேறுபல முக்கியப் பணிகள் அடங்கவில்லை. இருப்பினும், அவர் வாழ்ந்த காலத்தில், இன்றைய பணிகள் ஏதும் அறியப்படாததால், இதற்காக அவரைக் குறை கூற முடியாது.

இந்தியச் சட்டங்கள் கூறும் வரையறை (Definition by Indian Laws):

இந்தியாவில் 1881–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 3–வது பிரிவு, "வங்கியர் என்பவர், வங்கியராகச் செயல்படும் எந்நபரையும் உள்ளடக்கியதாகும்"[2] என்று வங்கியருக்கு வரையறை தருகிறது. இதிலிருந்து நாம் வங்கியருக்கு உண்டான பொருள் எதையாவது அறிந்து கொள்ள முடிகிறதா என்றால், சுத்தமாக இல்லை என்றே கூற வேண்டும்.

இதற்கடுத்து 1891–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வங்கியர்களின் புத்தகங்கள் சாட்சியச் சட்டம் (The Bankers' Books Evidence Act, 1891), 1899–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய முத்திரைகள் சட்டம் (The Indian Stamp Act, 1899) ஆகியவற்றிலும் 'வங்கியர்' எனும் பதத்திற்கு திருப்தி கரமான வரையறை ஏதும் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் 'வங்கியர்' எனும் பதத்திற்கு வரையறை கொடுக்க முதன் முதலில் ஹில்டன் யங் என்பவர் தலைமையின் கீழ் ஒரு ஆணையம் (Hilton Young Commission) அமைக்கப்பட்டது. இவ்வணையம் கூறிய வரையறையின் பெரும்பகுதியை 1936–ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் [The Indian Companies (Amendment) Act, 1936] ஏற்றுக் கொண்டு வரையறை அளித்தது. எனினும் 1949–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட வங்கி ஒழுங்குமுறைச் சட்டம்தான் (The Banking Regulation Act, 1949) 'வங்கியர்' எனும் பதத்திற்கு வரையறை தருவதில் முழுமையான வெற்றியைக் கண்டது என்று கூறலாம்.

1. "One claiming to be a banker must profess himself to be one and the public must accept him as such; his main business must be that of banking from which, generally, he should be able to earn his living" - **Sir John Paget.**

2. **"Banker includes any person acting as a 'banker'"**-Section 3 of the Negotiable Instruments Act, 1881.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 5(b)–ஆனது, **"வங்கியியல்" (Banking)** என்றால், கடன் கொடுத்தல் அல்லது முதலீடு செய்தல் நோக்கங்களுக்காக, கேட்பின் பேரில் அல்லது வேறு வகையில் திருப்பிக் கொடுக்கத் தக்கவாறு மற்றும் காசோலை, வரைவோலை, ஆணை அல்லது வேறுவகையில் திரும்பப் பெறத் தக்கவாறு, பொது மக்களிடமிருந்து பண வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல் என்று பொருள்[1], என வரையறுக்கிறது.

அதுபோல், பிரிவு 5(c)–ஆனது, **"வங்கியியல் நிறுவனம்" (Banking Institution)** என்றால், இந்தியாவில் வங்கியல் தொழில் செய்யும் நிறுவனம் எதுவும் என்று பொருள்[2], என வரையறுக்கிறது.

எனவே இந்த இரண்டு வரையறைகளையும் சேர்த்து, நாம் வங்கியருக்கு அல்லது வங்கி நிறுவனத்திற்கு பொருள் கூறலாம். அதன்படி "வங்கியர்" என்பவர், பிரிவு 5(b)–யின் கீழான வங்கியல் தொழிலைச் செய்யும் ஒரு நிறுவனம் ஆகும்.

மேற்படி பிரிவு 5(b)–கூறும் வரையறையின்படி ஒரு 'வங்கியர்' என்பவர்,

(1) பொதுமக்களிடமிருந்து பண வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்;

(2) மேற்கண்டவாறு ஏற்றுக் கொள்வது, கடன் கொடுத்தல் மற்றும் முதலீடு செய்யும் நோக்கங்களுக்காக இருத்தல் வேண்டும்;

(3) வைப்பீடு செய்த பொதுமக்கள் கேட்கும் போது அல்லது வேறு வகையில் அப்பண வைப்பீட்டை அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(4) மேலும், வைப்பீடு செய்த பொது மக்கள் தங்கள் பண வைப்பீடுகளை காசோலை, வரைவோலை அல்லது வேறுவகையில் திரும்ப எடுத்துக் கொள்ள வகை செய்து தரல் வேண்டும்.

இன்று இவ்வரையறை 'வங்கியருக்குண்டான' ஒரு திருப்திகரமான, ஏற்றுக் கொள்ளத்தக்க வரையறையாக உள்ளது. ஆனால் பணம் கடன் கொடுத்தல் செய்து வரும் வட்டித் தொழிலர் ஒரு வங்கியரல்ல என **Bank of Commerce Ltd. v. Kunj Behari Kar**[3] எனும் வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

1. "**Banking** means the accepting, for the purpose of lending or investment, of deposits of money from the public, repayable on demand or otherwise, and withdrawable by cheque, draft, order or otherwise" - **Section 5(c) of the Banking Regulation Act, 1949.**

2. "**Banking Company** means any company which transacts the business of banking in India" - **Section 5 (c) of the Reserve Bank of India Act, 1949.**

3. **A.I.R. 1945 II**

வாடிக்கையாளர் [Customer] - வரையறை:

வங்கித் தொழிலில் வாடிக்கையாளர்கள் 'இதயம்' போன்றவர்கள். வாடிக்கையாளர்கள் இல்லாமல் வங்கித் தொழில் கிடையாது. ஆனால், ஆங்கிலச் அல்லது இந்தியச் சட்டத்தில் 'வாடிக்கையாளர்'' என்பவர் யார் என்பதற்கான வரையறை கூறப்படவில்லை. எனவே, வாடிக்கையாளரின் வரையறையைக் காண, நாம் அறிஞர் பெருமக்களும், நீதிமன்றங்களும் கூறியுள்ள கருத்துரைகளை அறிதல் வேண்டும்.

ஹெர்பர்ட் எல். ஹார்ட் (Dr.Herbert L. Hart) கூறும் வரையறை:

இவர் கூறும் வரையறையின்படி, **"வாடிக்கையாளர் என்பவர் வங்கியரிடத்தில் கணக்கு வைத்திருப்பவர் அல்லது அவரை அவ்வாறு கருதி ஒரு வங்கியர் பணிவிடை புரிய வழக்கமாக பொறுப்பேற்றிருக்க வேண்டும்"**[1]. எனவே இதன்படி, வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரும் வாடிக்கையாளர் ஆகிவிடுவர்.

சர் ஜான் பேஜட் (Sir John Paget) கூறும் வரையறை:

பின்னர் வந்த சர் ஜான் பேஜட் எனும் அறிஞர், ஹார்ட் கூறிய மேற்படி வரையறையை ஏற்றுக் கொள்ளவில்லை. சர் ஜான் பேஜட்டின் வரையறைப்படி ஒரு நபர் வங்கியரின் வாடிக்கையாளராகக் கருதப்பட பின்வரும் இரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

1. வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் சில காலமாவது நடைமுறைத் தொடர்பு இருக்க வேண்டும். (There must be some recognisable course or habit of dealing between him and the bank)

2. அத்தொடர்பு வழக்கமான வங்கித் தொழிலின் இயல்புடையதாக இருக்க வேண்டும். (Such dealing must be in the nature of regular banking business).

வாடிக்கையாளர் என்ற சொல் 'customer' என்ற ஆங்கிலச் சொல்லின் நேர் மொழிபெயர்ப்பாகும். இச்சொல் வழக்கம் (Custom) என்பதன் தொடர்ச்சியாகப் பிறந்ததாகும். வழக்கம் என்பது தொடர்ச்சியாக ஒரு நபர் மேற்கொள்ளும் நடவடிக்கை ஆகும். எனவே, ஒருவர் மற்றொருவரின் வாடிக்கையாளராக, அவர் அம் மற்றொருவருடன் சில காலமாவது தொடர்ச்சியாக மற்றும் வழக்கமாகத் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்பது இயல்பான, நடைமுறைக்கு ஒத்து வரக்கூடிய ஒரு கொள்கையாகும். இக்கொள்கையை **"கால இடைவெளிக் கோட்பாடு" (Duration Theory)** என்று கூறுவர்.

1. "a customer is one who has an account with a banker or for whom a banker habitually undertakes to serve as such." - **Dr. Hart.**

சர் ஜான் பேஜட் கூறிய வரையறையின் முதற் நிபந்தனையை, **Mathews v. William Brown & Co.**[1] என்ற வழக்கில் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, "ஒரு நபர், வங்கி ஒன்றின் வாடிக்கையாளராக வேண்டுமெனில், அவ்வங்கியில் அவர் ஏதேனுமொரு கணக்கை ஆரம்பித்து அதனைத் தொடர்ச்சியாகவும் வழக்கமாகவும் பராமரித்து வர வேண்டும்; ஆனால் அவ்வங்கியில் ஒரு கணக்கைத் தொடங்குவதில் முதன்முதலாக செய்யப்படும் கொடுக்கல்–வாங்கல் செயற் தொடர்பினால், அங்கு வங்கியர்–வாடிக்கையாளர் உறவு ஏற்படுவதில்லை"[2], என்று கூறியது.

ஆனால் சர் ஜான் பேஜட் கூறிய மேற்கண்ட "கால இடைவெளிக் கோட் பாட்டை" பிற்காலத்தில் வந்த அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், ஒருவர் எத்தனை முறை தொடர்பு கொண்டால் வாடிக்கையாளர் ஆவார், எவ்வளவு காலத்திற்கு இத்தகு தொடர்பு நீடிக்க வேண்டும் எனும் வினாக்களுக் கெல்லாம் விடை ஏதும் சர் ஜான் பேஜட்டின் வரையறையில் இல்லை. எனவே, நீதிமன்றங்களும் சர் ஜான் பேஜட்டின் கருத்திற்கு உடன்படாமல், டாக்டர் ஹார்ட் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தன. இது பற்றிய ஆங்கில நீதிமன்றங்கள் கூறிய கருத்துரைகள் வருமாறு.

Great Western Railway Company v. London and County Banking Co.[3] –எனும் வழக்கின் பொருண்மைகளின்படி, ஹக்கின்ஸ் என்பவர் வரி வசூலிப்பவர். அவர் தனது பெயருக்கு அளிக்கப்படும் காசோலைகளை சம்பந்தப்பட்ட வங்கியில் முன்னிட்டு, பணம் பெற்றுக் கொள்வார். இவ்வழக்கத்தை அவர் பல ஆண்டுகளாக பின்பற்றி வந்தார். இந்நிலையில் அவரது பெயருக்கு ஒரு காசோலை வழங்கப்பட்டது. ஆனால் அதில் "தொகை பெறுநரின் கணக்கில்" (Account Payee) என்று எழுதப்பட்டு குறுக்கு கோடிடப்பட்டிருந்தது (crossed cheque). ஆனால் அவர் மோசடி செய்து, அக்காசோலைக்குரிய தொகையை வங்கிக் கணக்கு ஏதும் தொடங்காமலேயே வழக்கம் போல் சம்பந்தப்பட்ட வங்கியில் முன்னிட்டு, தொகை பெற்றுக் கொண்டார். ஹக்கின்ஸ் செய்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டு, அத்தொகையைத் திரும்பப் பெறுவதற்காக வாதி நிறுவனம் ஹக்கின்ஸ் மீது வழக்கிட்டது. அப்பொழுது அங்கு எழுந்த முக்கிய வினா யாதெனில், ஹக்கின்ஸ் என்பவர் வங்கியின் ஒரு வாடிக்கையாளரா என்பதுதான்.

1. 10 T.L.R. (1894) 386
2. "in order to constitute a person as customer of a bank, he should have some sort of an account with the bank, but that the initial transaction in opening an account did not set-up the relation of a banker and customer, and there had to be some measure of continuity and custom."
3. (1901) A.C. 414

வழக்கை ஆராய்ந்த **நீதிப்பெருமகனார் டுனிடின் (Lord Dunedin)** அவர்கள், **ஹக்கின்ஸ்–க்கு வங்கியில் கணக்கு ஏதும் இல்லை; எனவே அவர் ஒரு வாடிக்கையாளர் அல்லர்** என்று தீர்ப்புரைத்தார். எனவே இத்தீர்ப்பிலிருந்து நமக்கு எதிர்மறையாகத் தெரிவது யாதெனில் **"வங்கியில் ஏதேனும் ஒரு வகையான கணக்கு வைத்திருப்பவர் வங்கியின் வாடிக்கையாளர்"** என்பதே. இது டாக்டர் ஹார்ட்டின் வரையறையைப் பிரதிபலிக்கிறது. தொடர்ந்து நடந்த எல்லா வழக்குகளிலும் இவ்வரையறையே ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

Lodbroke v. Tod[1] – எனும் வழக்கில் **நீதிபதி பெய்ல்ஹக் (Mr. Justice Bailhache)** வழங்கிய தீர்ப்பு 'வாடிக்கையாளர்' எனும் பதத்தின் வரையறையை மேலும் தெளிவாக்கியது. அவர் தமது தீர்ப்பில், **"வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு, முதலாவது காசோலை பண வசூலுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனேயே தொடங்கிவிடுகிறது; பணம் எப்போது செலுத்தப்படுகிறதோ அப்போது அன்று"**[2] என்று கூறினார்.

Commissioner of Taxation v. English Scottish and Australian Bank[3] – இவ்வழக்கில், நாம் முன் கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை, இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் இருந்த உச்ச நீதிமன்றமாகிய பிரிவி கவுன்சில் (Privy Council) உறுதி செய்தது. **நீதிப்பெருமகனார் டுனிடின் (Lord Dunedin)** தமது தீர்ப்பில் **"வாடிக்கையாளர் எனும் சொல், கால இடைவெளி ஓர் இன்றியமையாத அம்சமாக இல்லாத ஒரு உறவினைக் குறிக்கிறது"**[4] என்று கூறினார்.

Savory & Co. v. Lloyds Banks Ltd.[5] – மிக முக்கியமான இவ்வழக்கில், இலண்டன் பங்குத்தரகு நிறுவனங்களில் ஒன்று, வாதி நிறுவனம். இதில் பெர்க்கின்ஸ், ஸ்மித் எனும் இரு எழுத்தர்கள் பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் வாதி நிறுவனம், மிட்லாண்ட் பேங்கர்ஸ் லிட். எனும் தனது வங்கியருக்கு இரு காசோலைகளை அனுப்பியது. அவற்றில் தொகை பெறுநர் பெயருக்கு அல்லது கொணர்பவருக்கு செலுத்தப்பட வேண்டும் என்று எழுதப் பட்டிருந்தது. மேற்கண்ட இரு காசோலைகளையும் கணக்கேட்டில் பதிவு செய்வதற்குப் பதிலாக, வாதி நிறுவனத்தின் எழுத்தர்களான மேற்படி பெர்க்கின்ஸ்,

1. 30 T.L.R. (1914) 433
2. "The relation of banker and customer begins as soon as the first cheque is paid in and accepted for collection and not merely when it is paid"
3. (1920) A.C. 683
4. "The word 'customer' signifies a relationship in which duration is not of the essence....."
5. (1932) T.L.R. 344

ஸ்மித் ஆகிய இருவரும், மேற்படி காசோலைகளைத் திருடிச் சென்று, அவற்றில் தொகை பெறுநரின் மேலெழுத்தைப் (endorsement) மோசடியாக எழுதி, தங்களது அறிவுறுத்தலின்படி பணம் வசூலிக்க பிரதிவாதி வங்கியின் இலண்டன் கிளையில் முன்னிட்டனர். அதாவது பெர்கின்சைப் பொறுத்தவரையில், பணம் வசூலிக்கப்பட்டு அதே வங்கியின் வாக்கிங்டான் (Walkington) கிளையில் உள்ள அவரது கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். ஸ்மித்தைப் பொறுத்தவரையில், பணம் வசூலிக்கப்பட்டு, அதே வங்கியின் ரெட் ஹில் (Red Hill) கிளையில் உள்ள அவரது மனைவியின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். இந்நிலையில் வாதி நிறுவனம், தங்கள் எழுத்தர்கள் செய்த கையாடலைக் (conversion) கண்டுபிடித்து, அத்தொகைகளைத் திரும்பப் பெறுவதற்காக பிரதிவாதி வங்கியின் மீது வழக்கிட்டனர். இங்கு ஸ்மித்தின் மனைவி ஒரு வாடிக்கையாளரா என்ற வினா நீதிமன்றத்தின் முன் எழுந்தது. அப்பொழுது ஒருவர், **ஒரு முறை வங்கியுடன் செயல்தொடர்பு வைத்துக் கொண்டாலே போதும், அவர் அவ்வங்கியின் வாடிக்கையாளர் ஆகிவிடுவார்** என்றும், இதனடிப்படையில், ஸ்மித்தின் மனைவி ஒரு வாடிக்கையாளரே என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இந்தியச் சட்டங்களில் 'வாடிக்கையாளரின்' இடம்:

நமது நாட்டுச் சட்டங்களில் ஏனோ சில முக்கியமான பதங்களுக்கு வரையறை கொடுக்கப்படுவதில்லை. இந்த வகையில் 'வாடிக்கையாளர்' எனும் முக்கியமான பதத்திற்கும் நமது இந்தியச் சட்டங்கள் எதிலும் வரையறை தரப் படவில்லை. மாற்றுமுறை ஆவணங்கள் குறித்துக் கூறும் 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்திலும் கூட 'வாடிக்கையாளர்' எனும் பதம் ஒரே ஒரு முறைதான் வருகிறது என்பது அதை விடப் பரிதாபமானது. அதுவும் அதன் வரையறையைக் கூறும் முகமாக இல்லை. அதன் **பிரிவு 131 மற்றும் 131A–ல்**, ஒரு வசூலிக்கும் வங்கியருக்கு (Collecting Banker) எப்பொழுது சட்டப் பாதுகாப்பு கிடைக்கிறது என்றால், அது ஒரு வாடிக்கையாளருக்காக அவரது காசோலை அல்லது வரைவோலைக்கான பணத்தை வசூலித்துப் பெறும் பொழுதுதான் என்று கூறுகிறது. இதில் 'வாடிக்கையாளர்' எனும் பதத்திற்கு பொருள் ஏதும் விளக்கப் பட்டுள்ளதா என்றால், தெளிவாக 'இல்லை' என்று கூறலாம்.

எனவே ஆங்கில நாட்டு அறிஞர்களும், நீதிமன்றங்களும் 'வாடிக்கையாளர்' எனும் பதத்திற்கு கூறிய வரையறைகளையே நாம் பின்பற்ற வேண்டியுள்ளது. நமது இந்திய நீதிமன்றங்களும் பின்பற்றி வருகின்றன என்று கூறலாம். அந்த வகையில் **Central Bank of India v. Gopinathan Nair**[1] எனும் வழக்கில் **அறிஞர் ஹார்ட்** கூறிய வரையறையை நமது **கேரளா உயர் நீதிமன்றம்** ஏற்றுக் கொண்டது.

1. AIR 1970 Ker. 74

எனவே நாம் இதுகாறும் கண்டவற்றிலிருந்து ஒரு நபரை, வங்கி ஒன்றின் வாடிக்கையாளர் என்று கூற பின்வரும் அம்சங்கள் முக்கியமானதாகும். அவை,–

1. வங்கிக் கணக்கு ஒன்றை வாடிக்கையாளர் துவக்க வேண்டும். அது சேமிப்பு, நடப்பு அல்லது நிலையான வைப்பீட்டுக் கணக்காக இருக்கலாம். அக்கணக்கில் தேவையான தொகையைச் செலுத்தி, சம்பந்தப்பட்ட நபர் தன் பெயரில் அக்கணக்கைத் துவங்க வேண்டும்.

2. வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையிலான தொடர்பு (dealings), வங்கியியல் தொழில் சார்ந்த தன்மையுடையதாக இருக்க வேண்டும்.

3. ஒரு நபர் கணக்குத் தொடங்கிய அந்த நிமிடமே அவர் அவ்வங்கியின் வாடிக்கையாளராக ஆகிவிடுகிறார். அவர்களுக்கு இடையில் சிறிது காலமாவது வங்கியல் தொழில் தொடர்பு, நடந்து கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியம் ஏதுமில்லை.

4. அதுபோல் அத்தொடர்பு, தொடர்ச்சியானதாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

5. ஒரு வாடிக்கையாளர் ஒரு ஆளாக (நபர்) இருக்க வேண்டுமென்ற அவசியம் ஏதுமில்லை. அவர் ஒரு நிறுமமாக, கூட்டுப்பங்கு நிறுவனமாக, ஒரு சங்கமாக அல்லது சட்டரீதியான வேறு நபராகவும் இருக்கலாம். **1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 45Z**–ன்படி "வாடிக்கையாளர்" எனும் பதத்தில், அரசாங்கத்தின் ஒரு துறை **(a Government Department)** மற்றும் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகமும் **(a Corporation)** உள்ளடங்கும் என்று கூறுகிறது.

வாடிக்கையாளரின் வரையறையை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் யாது?

நாம் வாடிக்கையாளரின் வரையறையைக் குறித்து, ஏன் இவ்வளவு விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வினா மனதில் உதித்தால், அது நியாயமானதே. இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

முதற்கண், ஒரு வங்கியருக்கும் அதன் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுவதாகும். இவ்வொப்பந்தம் அவ்வாடிக்கையாளர் அவ்வங்கியில் தனக்கென ஒரு கணக்கைத் துவங்க, அவ்வங்கியிடம் விண்ணப்பித்து, அதை அவ்வங்கி ஏற்றுக் கொண்டவுடனே எழுந்து விடுகிறது. மேற்கண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், அவ்வங்கியர் மற்றும் வாடிக்கையாளரின் உரிமைகளும் கடப்பாடுகளும் நெறிமுறைப்படுத்தப்

படுகின்றன. இத்தகு உரிமைகளும் கடமைகளும் மீறப்படுமானால், பாதிக்கப்பட்ட தரப்பினர் ஒப்பந்த மீறுகைக்காக அல்லது அவருக்கு இழைக்கப்பட்ட வேறு தீங்கு எதற்காகவும் இழப்பீடு கோரி வழக்கிடலாம்.

எடுத்துக்காட்டு (Illustration): வங்கியர் ஒருவர், தனது வாடிக்கை யாளரின் நடப்புக் கணக்கில் (current account) போதிய பணமிருந்தும், அவரது காசோலைக்குண்டான பணத்தை தரத் தவறுதலாக மதிப்பு மறுத்துவிடுகிறார் (wrongfully dishonours). மேலும் அவ்வங்கியர் அக்காசோலையை **"வரைந்தோரை தொடர்பு கொள்க– போதிய பணமில்லை" (Refer to Drawer - insufficient funds)** என்று தவறுதலாக மேற்குறிப்பு செய்து திருப்பியளித்து விடுகிறார். இங்கு அவ்வாடிக்கையாளர் அவ்வங்கியின் மீது ஒப்பந்த மீறுகை மற்றும் மானநட்டத்திற்காக இழப்பீடு கோரி வழக்கிடலாம்.

இரண்டாவதாக, வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள ஒப்பந்தத்தின் வரைமுறைகள் (terms of contract), உட்கிடையானது (implied). **எடுத்துக்காட்டாக,** சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கான விண்ணப்பப் படிவத்தில், அக்கணக்கை தொடங்கும் வாடிக்கையாளர் முன்னிடும் (present) காசோலைகளை, வரைவோலைகளை வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்றோ, அல்லது தனது கணக்கிலிருந்து பணம் பெற, தான் முன்னிடும் காசோலைகளுக்கு தனக்கோ அல்லது கொணர்பவருக்கோ பணம் கொடுக்க வேண்டுமென்றோ எந்த வரைமுறையும் இருப்பதில்லை. இவையெல்லாம் வாடிக்கையாளர் ஒருவர் வங்கியில் கணக்கைத் தொடங்குவதால், அவ்வங்கியர் உட்கிடையாக ஏற்றுக் கொள்ளும் ஒப்பந்த வரைமுறைகளாகும்.

எனினும் இவ்விதமான உட்கிடையான ஒப்பந்தத்தால் எழும் உரிமைகளையும் கடப்பாடுகளையும், அதில் ஒரு மூன்றாம் நபர் ஒருவரின் உரிமைகள் நுழையா திருக்கும் வரை தவிர, வெளிப்படையான ஒப்பந்த வரை முறைகளால் (express terms of contract) மாற்றிக் கொள்ளலாம். **எடுத்துக்காட்டாக,** வாடிக்கையாளர் ஒருவர் அளிக்கும் காசோலைக்கு, அதன் தொகை பெறுநருக்கு (payee) பணம் அளிக்க வேண்டியது, வங்கியின் கடப்பாடு ஆகும். இது ஒரு உட்கிடை ஒப்பந்த வரைமுறை. ஆனால் அவ்வாடிக்கையாளர் அக்காசோலைக்கு பணம் தர வேண்டாம் (countemand or stop payment) என்று தனது வங்கியருக்கு, எழுத்து மூலமாகச் செய்யும் விண்ணப்பத்தின் வாயிலாக அவர் அறிவுறுத்தலாம். இங்கு மேற்கண்ட வெளிப்படையான ஒப்பந்த வரைமுறையினால், அக்காசோலைக்கு மதிப்பு மறுக்க வேண்டிய கடப்பாடு அவ்வங்கியருக்கு ஏற்படுகிறது. இத்தகு வெளிப்படையான ஒப்பந்த வரைமுறைகள் ஏதும் இல்லாமல் இருக்கும் பொழுது, இயல்பான உட்கிடை ஒப்பந்த வரைமுறைகளே அமலில் இருக்கும்.

மூன்றாவதாக, வாடிக்கையாளராக இல்லாத ஒரு மூன்றாம் நபருக்கு (third party) வங்கியர் எவ்வித கடப்பாடும், கடமையும் கொண்டவரல்லர்.

மேற்கண்ட மூன்று காரணங்களை அடிப்படை அஸ்திவாரமாகக் கொண்டதே, வங்கியர்–வாடிக்கையாளர் உறவு. இதைத்தான், அடுத்து நாம் காண உள்ளோம்.

வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு [The Relationship between a Banker and Customer]:

ஒரு வங்கி இன்று பல்வேறு சேவைகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இச்சேவைகளுக்கு அடிப்படை, நாம் முன் சென்ற பத்திகளில் கண்டவாறு வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள உட்கிடை ஒப்பந்த உறவு ஆகும். இந்த வகையில் ஒரு வங்கியருக்கும் அதன் வாடிக்கை யாளருக்கும் இடையே உள்ள உறவை நாம் (1) பொது நிலை உறவு (General Relationship); (2) சிறப்பு நிலை உறவு (அல்லது சட்ட நிலை உறவு) [Special (or) Legal Relationship] எனும் இரு தலைப்புகளில் காணலாம்.

I. வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான பொது நிலை உறவு [The General Relationship between a Banker and Customer]:

(1) கடன் பெறுநர் மற்றும் கடன் தருநர் உறவு (Relationship as Debtor and Creditor):

ஒருவர் வங்கியொன்றில் கணக்கு தொடங்கியுடவுடன், அவ்வங்கியர் கடன் பெறுநர் (Debtor) நிலையையும், கணக்கு தொடங்கிய வாடிக்கையாளர் கடன் தருநர் (Creditor) நிலையையும் அடைந்து விடுகின்றனர். ஏனெனில் வாடிக்கையாளர் தனது பணத்தை அக்கணக்கில் இட்டு வைக்கிறார். வங்கியர் அப்பணத்தை, தனது வங்கித் தொழில் நோக்கங்களுக்காக பயன்படுத்துகிறார். அவ்வாறு கணக்கில் இட்டு வைக்கப்படும் தொகைக்கு, வங்கியர் ஒரு குறிப்பிட்ட சதவீத வட்டியை வாடிக்கையாளருக்குத் தருகிறார்.

ஆனால் இந்நிலைப்பாடு, ஒரு சமயத்தில் தலைகீழாக மாறுகிறது. அதாவது வாடிக்கையாளரின் கணக்கில் போதுமான பணமில்லாது போகும் நேர்வில், அவரது காசோலைக்கு, அதிகப் பற்றாக (O.D.-Over Draft) வங்கியர் பணம் கொடுத்தால், அங்கு வங்கியர் கடன் தருநராகவும், வாடிக்கையாளர் கடன் பெறுநராகவும் ஆகிவிடுகின்றனர்.

ஆனால் வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள இந்தக் கடன் பெறுநர்–கடன் தருநர் உறவு, மூன்றாம் நபர்களிடம் சாதாரண வணிகக் கடன் தொடர்பாக செய்து கொள்ளும் அத்தகு உறவிலிருந்து மாறுபட்டதாகும். **இங்கு வங்கியர் ஒரு சலுகை பெற்ற கடன் பெறுநராக அல்லது மதிப்பு மிக்க கடனாளியாக [Privileged Debtor (or) Dignified borrower]** உள்ளார். இது எவ்வாறு என்பதை பின்வரும் காரணங்கள் விளக்குகின்றன.

(1) பணத்தைச் செலுத்தக் கோரி கடன் தருநர் கேட்க வேண்டும் (The Creditor must demand payment): சாதாரண வணிகக் கடனில், ஒரு குறிப்பிட்ட தேதியில் அல்லது அதற்கு முன்போ அல்லது கடன் தருநர் கேட்கும் பொழுதோ கடன் பெறுநர், கடனைச் செலுத்தி விடுகிறார். ஆனால் வங்கிக் கணக்கில் உள்ள வாடிக்கையாளரின் தொகையை வங்கியர் (கடன் பெறுநர்) தானாக முன் வந்து இவ்வாறு கொடுக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவ்வாடிக்கையாளர் (கடன் தருநர்) தனது கணக்கில் உள்ள பணத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் செலுத்தக் கோரி வங்கியரிடம் கேட்க வேண்டும். கணக்கில் உள்ள பணத்தை காசோலை வரைவதன் மூலம் தனக்குச் செலுத்தும்படி கோரலாம் அல்லது மற்றவர்கள் பெயருக்கு காசோலை வரைந்து, அவருக்கு பணம் செலுத்தும்படியும் கோரலாம். அப்பொழுதுதான் வங்கியர் பணம் செலுத்த வேண்டும். எனவே ஒரு வங்கியர், சாதாரணக் கடன் பெறுநரிடமிருந்து மாறு பட்டவர்; சலுகை பெற்றவர்.

(2) உரிய இடத்திலும் நேரத்திலும் பணத்தைக் கேட்க வேண்டும் (Demand for payment must be made in proper place and time): சாதாரண வணிகக் கடனில், கடன் தருநர் தனது கடனை செலுத்தக் கோரி கடன் பெறுநரை அவரது வீடு என்றில்லாமல் எங்கு வேண்டுமானலும், எப்பொழுது வேண்டுமானலும் கேட்கலாம். ஆனால் ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கில் உள்ள பணத்தை எடுக்க, அவர் அவ்வங்கியின் எந்தக் கிளையில் கணக்கு வைத்துள்ளாரோ, அக்கிளையில்தான் பணம் செலுத்தக் கோரி கேட்க முடியும். அதுவும் வங்கி அலுவல் நேரத்தில் மட்டுமே கேட்க முடியும். (ஆனால் இந்நிலை தற்பொழுது **'பணம் எடுக்கும் பற்று அட்டைகள்' (Debit Cards)** அறிமுகமான பிறகு மாறிவிட்டது. ஏனெனில், வாடிக்கையாளர் ஒருவர் எங்கு வேண்டுமானலும், 24 மணி நேரங்களும் தானியங்கி **பணம் வழங்கும் இயந்திரத்தின் (ATM)** மூலம் தனது கணக்கில் உள்ள பணத்தை பெற்றுக் கொள்ளலாம். எனினும், சில வங்கிகள் இவ்வசதியை இன்னும் அறிமுகப்படுத்தவில்லை.)

(3) உரிய முறையில் பணத்தை கேட்க வேண்டும் (Demand for payment must be made in proper manner): வங்கிக் கணக்கில் உள்ள

பணத்தை காசோலை, வரைவோலை அல்லது ஆணையின் வாயிலாக செலுத்தக் கோரி வங்கியரை, வாடிக்கையாளர் ஒருவர் கேட்டல் வேண்டும் என்பது சட்டம் விதிக்கும் நிபந்தனை. இதை விடுத்து வாய்மொழியாக அல்லது தொலைபேசி வாயிலாக, தனக்கு அல்லது மற்றொருவருக்கு தன் கணக்கிலிருந்து பணத்தைக் அளிக்கக் கோரி வங்கியரை, ஒரு வாடிக்கையாளர் கோர முடியாது. ஆனால் சாதாரண வணிக் கடனில் கடன் தருநர், வாய்மொழியாகக் கூட தனது கடனைச் செலுத்தக் கோரி கடன் பெறுநரைக் கேட்க முடியும்.

(4) காலவரையறை பொருந்தாது (Limitation not applicable): கொடுத்த கடனை வசூலிக்க, பணம் கடன் கொடுத்த தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் வழக்கிட வேண்டும் என்பது காலவரையறைச் சட்டம் விதிக்கும் நிபந்தனை. இது சாதாரண வணிகக் கடன்களுக்கு மட்டுமே பொருந்தும்; வங்கியருக்கும்–வாடிக்கையாளருக்கும் இடையிலான கடன் பெறுநர்–கடன் தருநர் உறவிற்கு பொருந்தாது. ஒரு வாடிக்கையாளர், அவர் ஒரு வங்கியில் கணக்குத் தொடங்கி மூன்றாண்டுகள் கழிந்த பிறகும், அக்கணக்கில் இருந்து தனது பணத்தை திரும்பப் பெற உரிமை படைத்தவர்.

(5) காப்புறுதி தர வேண்டியதில்லை (No need to give security): வாடிக்கையாளரிடமிருந்து பணம் பெறும் வங்கியர் ஒரு வகையில் கடன் வாங்கியவரே என்றாலும், அதற்காக அவர் எந்த காப்புறுதியையும் (Security) தர வேண்டியதில்லை. வங்கியர் வாடிக்கையாளருக்கு அளிக்கும் செல்லேடும் (Pass Book), இட்டு வைப்பு ரசீதும் (Fixed Deposit Receipt) கூட ஒரு கடனுறுதிச் சீட்டு (Promissory Note) அல்ல. ஆனால், வங்கியர் ஒருவர் வாடிக்கையாளருக்குக் கடன் வழங்கும் போது அல்லது சாதாரண வணிகக் கடனில் கடன் தருநர் கடன் பெறுநருக்கு கடன் வழங்கும் போது, காப்புறுதி கேட்கவும் அல்லது சொத்துக்களைப் பிணையமாகக் கேட்கவும் உரிமை உண்டு. சொத்துக்களைப் பிணையமாகக் கேட்டு வாடிக்கையாளர் தர இயலவில்லை யாயின், கடன் வழங்கவும் வங்கியர் மறுத்து விடலாம்.

மேற்கண்டவற்றை காணுறும் பொழுது, **"வங்கியர் ஒரு சலுகை பெற்ற கடனாளி"** என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகும்.

(2) பொறுப்பாண்மையர் மற்றும் பயனுரிமையராக உறவு (Relationship as Trustee and Beneficiary):

'பொறுப்பாண்மையர்' (Trustee) என்பவர் மற்றொருவரின் நலனுக்காக, ஒருவர் ஒப்படைத்த சில பொருள்களை அல்லது சொத்துக்களை அல்லது பணத்தை தம்வசம் வைத்துக் கொண்டு, அவர் அறிவுறுத்தியபடி செயல்படுவதாகும். யாருடைய

நலனுக்காக ஒப்படைக்கப்பட்டதோ, அவர் 'பயனுரிமையர்' (Beneficiary) எனப்படுவர். சில சமயங்களில் ஒப்படைத்தவரே பயனுரிமையராக இருப்பார். இவ்வாறு ஒப்படைக்கப் பெற்ற ஒரு பொறுப்பாண்மையர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றை, தன்னுடையது போல் பாதுகாப்பாக வைத்து பராமரித்து வர வேண்டும்; அதிலிருந்து தனக்காக இலாபமெதையும் ஈட்டுதல் கூடாது.

இந்த வகையில் ஒரு வங்கியரும், அதனது வாடிக்கையாளரின் பொறுப்பாண்மையராக செயல்படுகிறார். **எடுத்துக்காட்டாக,** ஒரு வாடிக்கையாளர் தனது நகைகளையும் ரொக்கத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு, வங்கியரிடம் ஒப்படைக்கிறார் என்றால், அங்கு அவ்வங்கியர், அவ்வாடிக்கையாளரின் (பயனுரிமையர்) நலனுக்காக அச்சொத்துக்களுக்கு அல்லது பணத்திற்கு பொறுப்பாண்மையராக உள்ளார். அவற்றை வங்கியர் பாதுகாப்பாக வைத்துப் பேணி வர வேண்டும்.

அதுபோல், ஒரு வாடிக்கையாளர் மற்றொரு வங்கிக்கு வரையப்பட்ட காசோலை ஒன்றை பணமாக்கும் பொருட்டு தனது வங்கிக் கணக்கில் முன்னிட்டால், அது பணமாக்கப்பட்டு அவரது கணக்கில் சேரும் வரை, அவ்வங்கியர் அக்காசோலைக்கு பொறுப்பாண்மையராக உள்ளார். காசோலையை வசூலிப்பதில் தவறுகை ஏதேனும் ஏற்பட்டால் அல்லது தவறான கணக்கிற்கு காசோலையின் தொகை வரவு வைக்கப்பட்டால், அதற்கு அவ்வங்கியரே பொறுப்பு.

ஆனால், 'வங்கியர் ஒரு பொறுப்பாண்மையர்' எனும் நிலைப்பாடு, 'வங்கியர் ஒரு கடன் பெறுநர்' எனும் நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு வாடிக்கையாளர் தனது பணத்தை வங்கியில் வைப்பீடு செய்கிறார் அல்லது சேமிப்புக் கணக்கில் இட்டு வைக்கிறார் என்றால், அப்பணத்தை அவ்வங்கியர் தனது வங்கியின் வணிக நலனுக்காக பயன்படுத்த லாம்; கடன் கோரும் மற்றவர்களுக்கு அளிக்கலாம். எனவே இங்கு வங்கியர் ஒரு கடன் பெறுநராகச் செயல்படுகிறார்; பொறுப்பாண்மையராக அல்ல.

ஒரு வங்கியருக்கும்–வாடிக்கையாளருக்கும் இடையிலான பொறுப் பாண்மையர்–பயனுரிமையர் உறவு, அவ்வாடிக்கையாளர் தனது பணத்தையும், ஆவணங்களையும் எந்த வகையில், எந்நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்று அவ்வங்கியருக்கு அளிக்கும் **'தனிவகை அறிவுறுத்தல்களின்' (Specific instructions)** மூலமே எழுகிறது. இந்த அறிவுறுத்தல்களை மீறி வங்கியர் செயல்படும் பொழுது, அவர் தனது வாடிக்கையாளருக்கு பொறுப்புடையவர் ஆகிறார்.

New Bank of India v. Union of India[1] - எனும் வழக்கில் ஒரு

1. (1981) 51, Company Case, p. 378

வாடிக்கையாளர் வங்கியிடம் கடன் வாங்கியிருந்தார். அவர் அதைக் கட்டத் தவறி விடுகிறார். எனவே அவர் வங்கியிடம் ஒப்படைத்திருந்த பங்கு பத்திரங்களை அவ்வங்கி விற்று, அதன் வருவாயை அக்கடன் தொகைக்கு ஈடு செய்து கொள்கிறது. இங்கு வாடிக்கையாளர் கடன் தொகையை திரும்பச் செலுத்தி இருக்கும் பொழுது, அப்பங்குப் பத்திரங்களை வங்கியர் விற்றிருந்தால், அது பொறுப்பாண்மை மீறல் (breach of trust) ஆகும். ஆனால் அவ்வாடிக்கையாளர் கடன் தொகையைச் செலுத்தவில்லை. எனவே அதற்காக அவரது பங்குகளை விற்றது செல்லும் என்றும், இங்கு வங்கியர், அவ்வாடிக்கையாளரின் பொறுப்பாண்மையராக இல்லை என்றும் தீர்ப்புரைக்கப்பட்டது.

(3) முகவர் மற்றும் முதல்வராக உறவு (Relationship as Agent and Principal):

ஒருவர் தனக்காக அல்லது தனக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட செயலை அல்லது சில செயல்களைச் செய்வற்கு, அவரால் நியமிக்கப்படும் நபரே 'முகவர்' **(Agent)** எனப்படுவார். அவரை நியமிப்பவர் 'முதல்வர்' **(Prinicipal)** எனப்படுவார். இவர்களது தொடர்பை **1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டம்** நெறிமுறைப்படுத்துகிறது. எனவே முதல்வர் கூறியபடி செய்ய வேண்டியது முகவரின் கடமை. அதற்கு மாறாகச் செய்து இழப்பு ஏதேனும் ஏற்படுத்தினால், அதற்கு முகவரே பொறுப்பு. அதுபோல் முகவரின் செயல்பாட்டினால், இலாபமேதும் விளைந்தால், அதனை முதல்வரிடம் முகவர் ஒப்படைத்தல் வேண்டும். இந்த விளக்கத்தின் அடிப்படையில், ஒரு வங்கியர் அவரது வாடிக்கையாளரின் முகவராகவும் செயல்படுகிறார்; பல்வேறு முகமைப் பணிகளை (agency functions) ஆற்றுகிறார். இங்கு வாடிக்கையாளரே, அவ்வங்கியின் முதல்வர் ஆவார்.

எடுத்துக்காட்டாக, தனது வாடிக்கையாளருக்காக அவர் முன்னிடும் காசோலைகளை, வரைவோலைகளை (demand drafts) வசூலித்துக் கொடுக்கிறார்; வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய பல்வேறு பாக்கிகளை [உதாரணமாக காப்பீட்டு முனைமம் (Insurance premium), கடன் அட்டைக்குரிய தொகைகள் (Credit card payments)] அவரது கணக்கில் உள்ள பணத்தைக் கொண்டு செலுத்துகிறார்.

(4) ஒப்படைவு பெறுநர் மற்றும் ஒப்படைப்பவராக உறவு (Relationship as Bailee and Bailor):

'ஒப்படைவு' என்பது ஒருவர் தனது பொருளை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மற்றொருவரிடம் ஒப்படைத்து, அந்நோக்கம் முடிந்ததும் அப் பொருளை திரும்பப் பெறுவதாகும். எடுத்துக்காட்டாக, கடிகாரத்தைப் பழுது நீக்க ஒருவரிடம் ஒப்படைக்கிறோம். பழுது நீக்கப்பட்ட பிறகு, அவர் அக்கடிகாரத்தை

திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும். இதில் கடிகாரத்தை ஒப்படைப்பவர், 'ஒப்படைப்பவர்' (Bailor) என்றும், கடிகாரத்தைப் பழுது நீக்குவதற்காக பெறுபவர் 'ஒப்படைவு பெறுநர்' (Bailee) என்றும் அழைக்கப்படுகிறார். இவர்களது உறவுகளை, இந்திய ஒப்பந்தச் சட்டம் நெறிப்படுத்துகிறது. இந்த வகையில், ஒரு வங்கியர்–வாடிக்கையாளர் முறையே ஒப்படைவு பெறுநராகவும் – ஒப்படைப்பவராகவும் உள்ளனர்.

எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளர் ஒருவர் தனது பொருளையும் காப்புறுதிகளையும் (articles and securities), பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு, வங்கியரிடம் ஒப்படைக்கிறார் என்றால், அங்கு அவ்வங்கியர் 'ஒப்படைவு பெறுநராகவும்', அவ்வாடிக்கையாளர் 'ஒப்படைப்பவராகவும்' உள்ளார். சாதாரண அறிவுத் திறம் வாய்ந்த ஒரு மனிதர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பொருளின் மீது எந்த அளவு கவனம் செலுத்துவாரோ, அதே அளவிற்கு ஒரு வங்கியரும் தன்னிடம் வாடிக்கையாளர் ஒப்படைத்த பொருளின் மீது கவனம் செலுத்த வேண்டும். அவர் இவ்வாறு கவனம் செலுத்தியும், அப்பொருளுக்கு இழப்பு, அழிவு அல்லது மதிப்பழிதல் ஏற்பட்டால், அதற்கு வங்கியர் (ஒப்படைவு பெறுநர்) பொறுப்பல்ல. இக்கொள்கை, **இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 151 மற்றும் 152**–லிருந்து பிறந்ததாகும்.

(5) அடைமானம் பெறுபவர் மற்றும் அடைமானம் வைப்பவராக உறவு (Relationship as Mortgagee and Mortgagor):

வங்கியில் ஒரு வாடிக்கையாளர் தான் பெறவிருக்கும் கடனுக்கு காப்புறுதியாக (ஆதரவாக) தனது அசையாச் சொத்தை அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுப்பதின் வாயிலாக அடைமானம் செய்து அல்லது அச்சொத்தின் மூலப் பத்திரங்களை வங்கியரிடம் வைப்பீடு செய்து ஒரு தகைமை நெறி அடைமானத்தை உருவாக்கி வங்கியிடமிருந்து கடன் பெற்றால், அங்கு வங்கியர் 'அடைமானம் பெறுபவராகவும்' (Mortgagee) வாடிக்கையாளர் 'அடைமானம் வைப்பவராகவும்' ஆகிவிடுகிறார். இவர்களது இவ்வுறவை சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) நெறிப்படுத்துகிறது.

(6) வாடகைக்குப் பெறுவர் மற்றும் வாடகைக்கு விடுபவராக உறவு (Relationship as Lessee and Lessor):

ஒரு வாடிக்கையாளர் தனது விலைமதிப்புள்ள பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு, வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தை வாடகைக்கு (safety locker) பெறும் பொழுது, அப்பெட்டகத்தில் வைக்கப் பட்டுள்ள பொருட்களுக்கு பாதுகாப்பளிக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வங்கியர் செய்ய வேண்டும். இங்கு வங்கியர் 'வாடகைக்கு விடுபராகவும்', வாடிக்கையாளர் 'வாடகைக்கு பெறுபவராகவும்' உள்ளனர்.

II. வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான சிறப்பு நிலை உறவு (அல்லது) சட்ட நிலை உறவு [The Special Relationship (or) Legal Relationship between a Banker and Customer]:

இதுகாறும் நாம் வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான பொது நிலை உறவுகளைப் பார்த்தோம். இனி இவர்களுக்கிடையில் உள்ள சில சிறப்பு நிலை உறவுகளைக் காண உள்ளோம். அவற்றை வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள 'சட்ட நிலை உறவுகள்' என்றும் அழைப்பர். அவை முறையே **(1) வங்கியரின் கடமைகள் (Banker's Duties)** என்றும் **(2) வங்கியரின் உரிமைகள் (Banker's Rights)** என்றும் இரு தலைப்புகளின் ஆராயத் தக்கதாக உள்ளன.

அதே சமயத்தில் உறவு என்பது இருபுறத் தொடர்புகளிலிருந்து எழுவ தாகும். இங்கு வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள உறவு பரஸ்பரமானது (reciprocal). எனவே வங்கியரின் கடமைகள், வாடிக்கையாளர்களின் உரிமைகள் ஆகின்றன; அதுபோல் வங்கியரின் உரிமைகள், வாடிக்கையாளர்களின் கடமைகள் ஆகின்றன (the Banker's duties are the customer's rights and the banker's rights are the customer's duties).

இத்தகு சிறப்பு நிலை உறவான வங்கியரின் கடமைகள் மற்றும் உரிமைகளை இந்நூலில் முறையே **பக்கம் எண்கள். 138 மற்றும் 149–ல்** தனித் தனியான அத்தியாயங்களின் கீழ்க் காண உள்ளோம்.

-oOo-

6

வங்கியரின் சிறப்பு வகை வாடிக்கையாளர்கள் [Special Types of Banker's Customers]

1. Who are the special types of customers of bankers? -Discuss. (வங்கியின் சிறப்பு வாடிக்கையாளர்கள் யார் யார்? அவர்களைப் பற்றி விவரிக்கவும்.)

முன்னுரை:

இந்திய ஒப்பந்தச் சட்டப்படி ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதி படைத்த எவரும், வங்கி ஒன்றில் கணக்கு ஒன்றைத் துவக்குவதன் மூலம் அதன் வாடிக்கையாளர் ஆகலாம். இதற்கு அவர் அவ்வங்கியிடம் விண்ணப்பிக்க வேண்டும்; வங்கியின் நடைமுறைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட வேண்டும். இந்த வகையில் இன்று தனிப்பட்ட நபர்கள் பலரும், பல நிறுவனங் களும், நிறுமங்களும் (Firm) வங்கியின் வாடிக்கையாளர்களாக உள்ளனர். எனினும் ஒப்பந்தம் செய்து கொள்ள இந்திய ஒப்பந்தச் சட்டப்படி தகுதியற்ற இளவர்கள், குடிகாரர்கள், பித்தர்கள், நொடிப்புநிலை அடைந்தவர்கள் ஆகியோர் வங்கியின் வாடிக்கையாளர்களாக முடியுமா, எனும் வினா எழுகிறது. மேலும் கல்வியறிவற்றவர்கள், பெண்கள், இந்து கூட்டுக் குடும்பம், நிறுமங்கள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள், சங்கங்கள், பொறுப்பாண்மையர் ஆகியோர் வங்கியின் வாடிக்கையாளாராக முடிந்தாலும், அவர்களது சட்ட நிலைப்பாடு யாது, என்ற வினாவும் எழுகிறது. இதற்கு அடுத்து வரும் பத்திகள் விளக்கமளிக்கின்றன.

வங்கியரின் சிறப்பு வகை வாடிக்கையாளர்கள்-யார்?

(1) இளவர் (Minor):

18 வயதை அடையாதவர்கள் இளவர் எனப்படுவர். மற்றவர்களுடன் இளவர் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லாது; ஆரம்பம் முதலே இல்லா நிலையதாகும் (void abinitio). எனினும் இளவருக்கு இயற்கைக் காப்பாளராக (தாய், தந்தை) அல்லது நீதிமன்றத்தால் காப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர், இளவரின் பெயரில் வங்கியில் கணக்கு தொடங்கலாம். இவ்வாறு இளவரின் பெயரில் கணக்கு துவக்கப்படும் போது, ஒரு வங்கியர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இளவரின் பெயரில் சேமிப்புக் கணக்கு (savings account) மட்டுமே துவக்க வங்கியர் அனுமதிக்க வேண்டும்; நடப்புக் கணக்கு (current account) துவக்க அனுமதித்தல் கூடாது. ஏனெனில் நடப்புக் கணக்கில், அதிகப் பற்றாக (over draft) பணம் பெற்றுக் கொண்டால், அதைத் திரும்பச் செலுத்தும் தனிப்பட்ட பொறுப்பு ஏதும் இளவருக்குக் கிடையாது. கணக்கு துவங்கும் பொழுது இளவரின் காப்பாளர் கூறும் இளவரின் பிறந்த தேதியை வங்கியர் தனது பதிவேட்டில் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை இளவர் இறந்து விட்டால், அவரது கணக்கில் உள்ள தொகையை அவரது காப்பாளருக்கு வங்கியர் கொடுக்க வேண்டும். அதுபோல் இளவர் 18 வயதை அடையும் முன்னர், காப்பாளர் இறந்துவிட்டால், இளவரின் கணக்கில் உள்ள தொகையை அவர் 18 வயது அடைந்த பின்னர், அவரிடம் வங்கியர் கொடுக்கலாம் அல்லது அவரது காப்பாளராக நீதிமன்றம் செய்யும் நபருக்கு கொடுக்கலாம். எனினும் இதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, கணக்கு துவக்கும் விண்ணப்பப் படிவத்தில் 'பெயர் நியமனம்' (nomination) செய்து கொள்ளலாம். அப்படி நியமனம் செய்யப்பட்ட நபருக்கு, வங்கியர் பணம் கொடுக்கலாம். இளவரின் பெயரில் கணக்கு துவங்கும் பொழுது, அவரது தந்தையை விட தாயாரைக் காப்பாளராக நியமனம் செய்விக்கும்படி வங்கிகளை, தற்பொழுது இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது (Reserve Bank's Directive). 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 26–வது பிரிவின்படி, இளவர் ஒருவர், மாற்றுமுறை ஆவணத்தை வரையவும் (draw), மேலெழுத்து செய்யவும் (endorse), ஒப்படைக்கவும் (deliver), ஆவண மாற்றம் செய்யவும் (negotiate) உரிமை படைத்தவர். எனவே அவர், செல்லுபடியாகத் தக்க வகையில், காசோலை ஒன்றை வரையலாம். இதனால், அவரது காசோலைக்கு பணம் கொடுக்க வங்கியர் கடமைப்பட்டவர். இப்பிரிவின் அடிப்படையில், தற்பொழுது பல வணிக வங்கிகள் இளவரின் பெயரில் கணக்கு துவக்கி, அதனை அவரே இயக்குவதற்கு அனுமதிக்கின்றன என்பது வங்கியில் முறையில் சற்று முன்னேற்றமான கூறாகும்.

(2) பித்தர்கள் (Lunatics):

1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 12–வது பிரிவின்படி, புத்தி சுவாதீனமற்றவர்கள் (பித்தர்கள்) ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்தில் ஈடுபடத் தகுதியற்றவர்கள். எனினும் சிலருக்கு புத்தி சுவாதீனமின்மை தொடர்ச்சியாக இராது. அது விட்டு விட்டு ஏற்படும். எனவே, அவர்கள் புத்தி சுவாதீனமுடையவர்களாக இருக்கும் இடைவெளி நேரத்தில் (lucid intervel), கணக்கு தொடங்கலாம்; புத்தி சுவாதீனமற்ற நிலையில் இருக்கும் பொழுது, கணக்குத் துவங்க வங்கியர் அனுமதித்தல் கூடாது. ஒரு வாடிக்கையாளர் புத்தி சுவாதீனமற்றவராக ஆகிவிட்டார் எனும் தகவல் கிடைத்தவுடன், வங்கியர் அவரது வங்கி கணக்கை முடக்கி (suspend) வைக்க வேண்டும். இவ்வாறு முடக்கி வைப்பது, அவர் புத்தி சுவாதீனமடைந்து விட்டார் (sanity) என்பதற்கான நிரூபணம் வங்கியருக்கு கிடைக்கப் பெறும் வரை அல்லது இது குறித்து நீதிமன்றத்திடமிருந்து ஒரு ஆணை வங்கியருக்கு சார்வு செய்யப்படும் வரை தொடருதல் வேண்டும்.

(3) குடிகாரர்கள் (Drunkards):

குடிபோதை நிலையில் உள்ள குடிகாரர் ஒருவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம், 'தவிர்தகு ஒப்பந்தமாகும்' (voidable). ஒப்பந்தமொன்றில் தரப்பினராக உள்ள ஒருவர், அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் சமயத்தில், தான் குடிபோதை நிலையில் இருந்ததாகவும், அதனால் பகுத்தறிவுக்கு உகந்த ஒரு முடிவை எடுக்க முடியவில்லை என்றும் மெய்ப்பித்து, இதனால் அவ்வொப்பந்தத்தை இரத்து செய்யும்படி, நீதிமன்றத்தில் வழக்கிடலாம். எனவே குடிபோதையில் இருக்கும் ஒருவர் கணக்குத் துவங்க விரும்புகிறார் என்றால், அவருக்கு வங்கியர் கணக்குந் துவங்க அனுமதித்தல் கூடாது. ஆனால், ஒரு வாடிக்கையாளர் குடிபோதையில் ஒரு காசோலையை வங்கியரிடம் முன்னிடுவரானால், வங்கியர் இரு சாட்சிகளின் கையொப்பங்களைப் பெற்றுக் கொண்டு, அந்தக் காசோலைக்கு உண்டான பணத்தைக் கொடுக்கலாம்.

(4) கல்வியறிவற்றவர்கள் (Illiterates):

கல்வியறிவற்றவர் கையெழுத்து போட இயலாதவர். எனவே அவரது இடது கை பெருவிரல் ரேகையையும், அவரது சமீபத்திய புகைப்படம் ஒன்றையும் வங்கியர் பெற வேண்டும். கணக்குத் துவக்குவதற்கான விண்ணப்பப் படிவமும், புகைப்படமும் தருதி வாய்ந்த இரண்டு சாட்சிகளால் சான்றுக் கையொப்பம் செய்யப்பட வேண்டும். கல்வியறிவற்ற ஒருவர், தனது கணக்கிலிருந்து பணம் எடுக்க, அவரே நேர்முகமாக வங்கியில் ஆஜராகி, அதன் அலுவலர் ஒருவர் முன்னிலையில் தனது கைரேகையை காசோலையில் பதிக்க வேண்டும். அது மற்றொரு சாட்சியால் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும்.

(5) மணமான பெண் (Married Woman):

மணமான பெண்ணொருத்தி, செல்லத்தக்க ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபடத் தகுதிபடைத்தவர். எனவே அவள் பெயரில் வங்கியர் கணக்கைத் துவக்கலாம். எனினும் பின்வரும் சூழ்நிலைகளில் தவிர, ஒரு பெண், வங்கியிடமிருந்து பெற்ற கடனுக்கு, அவளது கணவரைப் பொறுப்பாக்க முடியாது. அவை,– (1) அக்கடன் அவளது கணவனின் அதிகாரத்தின் பேரில் அல்லது கணவனின் இசைவுடன் பெறப்பட்டிருந்தால்; (2) அக்கடன் அப்பெண்ணிற்கு அவசிமாக உள்ள உணவு, உடை, இருப்பிடத்திற்காக பெறப்பட்டிருந்து, அவற்றை அவளது கணவன் அவளுக்கு அளிக்கத் தவறும் பொழுது, அவள் பெற்ற கடனுக்கு அவளது கணவனும் பொறுப்புடையவர். எனவே மணமான பெண்ணிற்கு கடன் கொடுக்கும் பொழுது, அவளது கணவனின் இசைவைப் பெறுவது, வங்கியருக்கு நலம் பயக்கும்.

(6) கூட்டுக் கணக்கு (Joint Account):

கூட்டுக் கணக்கு என்பது, இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் வங்கியில் துவக்கும் ஒரு கணக்காகும். இதற்கான விண்ணப்பப்படிவத்தில், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கையொப்பமிட வேண்டும். மேலும் அக்கணக்கை இயக்குவதற்கு அவர்களில் எவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார் என்பது குறித்த திட்டவட்டமான அறிவுறுத்தல்களை (specific instructions) வங்கியர் பெற வேண்டும். இவ்வறிவுறுத்தல்கள் இல்லாதிருந்தால், யார் யாருடைய பெயரால் கூட்டுக் கணக்குத் தொடங்கப்பட்டுள்ளதோ, அவர்கள் அனைவரும் கையொப்பமிட்டுள்ள காசோலைகளுக்கு மட்டுமே வங்கியர் பணம் கொடுத்தல் வேண்டும். இரண்டு நபர்களின் பெயரில் ஒரு கூட்டுக் கணக்கு துவக்கப்படும் பொழுது, அதனை பின்வரும் முறைகளில் ஏதேனுமொன்றின்படி இயக்கலாம். அவை, (1) இருவரும் அல்லது எஞ்சுநர் (both or survivor); (2) இருவரும் கூட்டாக (both jointly); (3) இருவரிலொருவர் அல்லது எஞ்சுநர் (either or survivor); (4) முன்னவர் அல்லது எஞ்சுநர் (former or survivor); (5) பின்னவர் அல்லது எஞ்சுநர் (latter or survivor). மேற்கண்ட இயக்கு முறைகளில் இன்று அதிகம் வழக்கத்திலிருப்பது, இருவரிலொருவர் அல்லது எஞ்சுநர் (either or survivor) முறை ஆகும். இது பெரும்பாலும் கணவனும் மனைவியும் சேர்ந்து துவக்கும் கூட்டுக் கணக்கில் பின்பற்றப்படுகிறது.

(7) இந்து கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family):

இந்து கூட்டுக் குடும்பம் ஒன்றின் சட்ட நிலைப்பாடு, இந்துச் சட்டத்தால் நன்கு அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இந்து கூட்டுக் குடும்பச் சொத்துக்களிலும், வியாபாரத்திலும் அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் பங்குண்டு. இதில் ஒரு உறுப்பினர் இறந்துவிட்டால், அவருக்குரிய பங்கு அவரது ஆண் வாரிசுகளை

இறங்குரிமையில் சென்றடைகிறது. இவ்வாறு பங்கு பெறும் அனைத்து உறுப்பினர்களும், 'பங்குரிமையர்கள்' (Coparceners) எனப்படுகின்றனர். அக்கூட்டுக் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் 'கர்த்தா' (Karta) என்றழைக்கப் படுகிறார். எனவே இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் ஒன்றின் பெயரில் வங்கியில் கணக்குத் துவக்க, அதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் உரிய வயதடைந்த குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் வங்கியர் கையொப்பம் பெற வேண்டும். எனினும் இக்கணக்கை இயக்க உரிமை படைத்தவர், அக்கூட்டுக் குடும்பத்தின் 'கர்த்தா' ஆவார். எனவே அக்குடும்பத்தின் 'கர்த்தா' எவர் என்பது குறித்து விண்ணப்பப் படிவத்தில் வங்கியர் கேட்டறிந்து, குறித்துக் கொள்ள வேண்டும். மேலும் இந்து கூட்டுக் குடும்பத்தால் செய்யப்படும் அவ்வியாபாரம், பரம்பரை யானது என்றும், குடும்பத்தில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்புகளை வங்கியருக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்துதல் வேண்டும் என்றும் அனைத்து பங்குரிமையர்களும் கையொப்பமிட்ட ஒரு பொறுப்பேற்புக் கடிதத்தை (Letter of undertaking) வங்கியர் கேட்டுப் பெற வேண்டும். இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தின் பெயரில் வங்கியிடமிருந்து கடன் அல்லது அதிகப் பற்று பெறப் பட்டிருக்கும் பொழுது, அவ்வியாபாரம் பரம்பரையானதாக இருப்பின், அனைத்து பங்குரிமையர்களும் அவர்கள் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து பெறும் பங்கின் அளவிற்கு பொறுப்புடையவர்கள் ஆவர். ஒருவேளை அவ்வியாபாரம் பரம்பரையானதாக அல்லாமல் இருப்பின், பங்குரிமையர்கள் அக்குடும்பத்திற்காக தனிப்பட்ட விதத்தில் வங்கியருக்கு பொறுப்புடையவர்கள்.

(8) கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm):

இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் கூட்டாகச் சேர்ந்து, ஒரு தொழில் தொடங்கும் போது அது கூட்டாண்மை (Partnership) எனப்படும்.இதில் சேரும் ஒவ்வொருவரும் கூட்டாளி (Partner) எனப்படுவார். இவர்களது தொழிலமைப்பு, நிறுமம் (Firm) எனப்படும். கூட்டாண்மை நிறுமத்தை, கூட்டாண்மைச் சட்டப்படி (Partnership Act) பதிவு செய்தல் வேண்டும். இதனால் ஒரு கூட்டாண்மை நிறுமம், தங்கள் உரிமையியல் கோரிக்கைகளுக்காக மற்றவர்கள் மீது வழக்கிட முடிகிறது. ஒரு கூட்டாண்மை நிறுமத்தின் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட கூட்டாளிகள் அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில், அக்கூட்டாண்மை நிறுமத்தின் பெயரில் வங்கியர் ஒரு கணக்குத் துவங்கலாம். ஆனால் கூட்டாண்மைச் சட்டப்படி, தனியொரு கூட்டாளியின் பெயரில் ஒரு கூட்டாண்மைக் கணக்கைத் தொடங்குவதற்கு ஒரு கூட்டாளிக்கு உட்கிடையான அதிகாரம் இல்லை. கணக்கைத் துவக்குவதற்கு, அந்நிறுமத்தின் கூட்டாளிகள் அனைவரின் கையொப்பமும் தேவை என்றும், கூட்டாண்மைப் பத்திரத்தின் (Partnership deed) சான்று நகல் தேவை என்றும் ஒரு வங்கியர் கோருவது நலம்.

மாறான உடன்படிக்கை ஏதும் இருந்தாலன்றி, கூட்டாளிகளில் எவரும் காசோலை வரையலாம். அதற்கு வங்கியர் பணம் செலுத்தக் கடமைப்பட்டவர். எனினும் கூட்டாண்மை நிறுமத்தின் கணக்கை இயக்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ள கூட்டாளி யார் என்பது குறித்து வங்கியர் திட்டவட்டமான அறிவுறுத்தல் களைப் (specific instructions) பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். வங்கியர், ஒரு கூட்டாண்மை நிறுமத்திற்கு கடன்களும், அதிகப்பற்றுகளும் வழங்கலாம். ஒரு கூட்டாளிக்கு அதே வங்கியில் சொந்தக் கணக்கு இருக்குமானால், அதன் வரவு–செலவுகளை நிறுமத்தின் கணக்குடன் எந்த வகையிலும் கலந்து விடாதவாறு வங்கியர் விழிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(9) கூட்டுப் பங்கு நிறுவனம் (Joint Stock Company):

வங்கியின் பல்வேறு வகையான வாடிக்கையாளர்களில், மிகவும் முக்கியமானவர்(து), கூட்டுப் பங்கு நிறுவனம் ஆகும். இது நிறுவனங்கள் சட்டப்படி பதிவு செய்யப்படும் ஒரு கூட்டுரு அமைப்பாகும் (Body Corporate). இது சட்டத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நபர் (artificial person). ஒரு கூட்டுப் பங்கு நிறுவனம், அது ஒரு வணிக நிறுவனமாக இருந்தாலும் சரி, அல்லது வணிகம் புரியாத நிறுவனமாக இருந்தாலும் சரி, அதன் பெயரில் வங்கியர் கணக்குத் துவங்கலாம். ஆனால் அதற்கு முன்பு வங்கியர் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) தன்னை அந்த நிறுவனத்தின் வங்கியராக நியமித்து, நிறுமத்தின் இயக்குநர்கள் வாரியம் (Board of Directors) நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் சான்று நகலை (Certified copy) வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தீர்மானத்தில் அந்நிறுவனத்தின் தலைவர் (Chairman) கையொப்பமிட்டிருக்க வேண்டும்; செயலாளர் (Secretary) மேலொப்பம் செய்திருக்க வேண்டும்.

(2) அது ஒரு கூட்டுப் பங்கு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழை (Certificate of Incorporation) வங்கியர் கேட்டுப் பெற வேண்டும்.

(3) பொது நிறுவனங்களைப் பொறுத்து, அதன் தொழில் தொடக்கச் சான்றிதழை (Certificate of commencement of busines) வங்கியர் கேட்டுப் பெற வேண்டும். இது தனியார் நிறுவனங்களுக்குப் பொருந்தாது.

(4) அந்நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டின் (Memorandum of Association) சமீபத்திய படிகளை வங்கியர் கேட்டுப் பெற வேண்டும்.

(5) ஒரு நிறுவனத்தின் உள்–மேலாண்மையை எவ்வாறு நடத்துவது என்பதற்குண்டான விதிமுறைகளை வகுத்துரைக்கும் ஆவணம், செயல்முறை

விதிகள் ஏடு (Articles of Association) எனப்படுகிறது. இதன் சான்று நகலையும் (Certified copy) வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(6) மேற்கண்ட ஆவணங்களில் வங்கியருக்கு ஏதேனும் அய்யம் எழுந்தால், அதைத் தீர்த்துக் கொள்ள நிறுவனங்களின் பதிவாளர் வசம் உள்ள அந்நிறுவனத்தின் கோப்புகளை வங்கியர் ஆய்வு செய்யலாம்.

(7) நிறுவன இயக்குநர்களின் பெயர்ப் பட்டிலைப் (List of Directors) வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(8) கணக்கை இயக்குவதற்கு யாருக்கு நிறுவனம் அதிகாரமளித்துள்ளது என்பதற்குண்டான அறிவுறுத்தல்களை வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(9) கணக்குத் துவக்கும் விண்ணப்பப் படிவத்தை, நிறுவனத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் (authorised signatories) பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும்.

(10) இயக்குநர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர்களின் மாதிரிக் கையொப்பங்களை வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(11) பொதுவாக ஒருவர் வங்கியில் கணக்குத் துவங்க, அவ்வங்கியில் கணக்கு வைத்துள்ள எவரேனும், அவரை வங்கிக்கு அறிமுகப்படுத்தி (Introduction), விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும். ஆனால் இந்த அறிமுகம், ஒரு நிறுவனம் கணக்குத் துவக்கும் நேர்வில் தேவையில்லை.

(10) *நிறைவேற்றாளர்களும் நிருவாகிகளும்* (Executors and Administrators):

ஒருவர் இறந்த பின், அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனித்து கையாளுவதற்காக நியமனம் செய்யப்படுபவர், நிறைவேற்றாளரும் நிருவாகியும் ஆவர். இவர்கள் இருவரும் ஒரே பணியைத்தான் செய்யக் கூடியவர்கள்தாம் என்றாலும், இவர்கள் நியமிக்கப்படும் விதம் மாறுபட்டது. அதாவது ஒருவர் தனது உயிலில், தனது இறப்பிற்குப் பிறகு அந்த உயிலில் கண்டுள்ள சரத்துக்களை எவர் நிறைவேற்ற வேண்டும் என்று அவரது பெயரைக் குறிப்பிட்டு எழுதுவாரானால், அவர் **'நிறைவேற்றாளர்' (Executor)** என்றழைக்கப்படுவார். ஆனால் ஒருவர் தனது உயிலில் மேற்கண்டவாறு எவரையும் நியமனம் செய்யாது இறந்துவிட்டால், அல்லது நிறைவேற்றாளராக நியமனம் செய்யப்பட்டவர், அவ்வாறு செயல்பட மறுத்தால் அல்லது நிறைவேற்றாளர் இறந்து போய்விட்டால், அங்கு இறந்து போனவருக்கு உரிமையுடைய சொத்துக்களைப் பெறவும், அவற்றை உயில்படி பகிர்ந்து கொடுக்க வேண்டிய முறையையும், அவர் செலுத்த வேண்டிய கடன்

களையும் கவனித்து நிருவாகம் செய்வதற்காக நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படும் நபர், **'நிருவாகி' (Administrator)** எனப்படுவார்.

நிறைவேற்றாளர், உயிலின் வழியாக நியமனம் செய்யப்படுவதால், அவரது அதிகாரங்களும், உரிமைகளும் அவ்வுயிலின் சரத்துக்களினால் அவரைச் சேர்ந்தடைகிறது. எனவே, அவ்வுயிலில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி அவர் செயல்பட வேண்டும். ஆனால் அதற்கு முன்பாக அவர் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் மனுச் செய்து, **'உயில் மெய்ப்பிதழ்' (Probate)** ஒன்றைப் பெற வேண்டும். இந்த ஆவணம்தான் மேற்படி உயிலையும், அதன் வழியான நிறைவேற்றாளரின் நியமனத்தையும் அதிகாரப்பூர்வமாக ஊர்ஜிதம் செய்கிறது. அதுபோல், நிருவாகி என்பவர் நீதிமன்றத்தால் **'நிருவாக உரிமைப் பத்திரம்' (Letters of Administration)** ஒன்று வழங்கப்படுவதன் வாயிலாக நியமனம் செய்யப்படுகிறார். இவரும் உயிலில் கண்டுள்ள சரத்துக்களின்படி செயல்பட வேண்டும். ஒருவேளை இறந்தவர் உயிலேதும் எழுதி வைக்கவில்லையெனில், இறந்து போனவரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த பிரச்சனைகளை சட்ட வகைமுறைகளின்படி தீர்த்து வைக்க வேண்டும்.

இத்தகு நிலைப்பாடு கொண்ட நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியுடன், ஒரு வங்கியர் செயல் தொடர்பு கொள்ளும் பொழுது, பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவை,–

(1) வங்கியின் ஒரு வாடிக்கையாளர் இறந்து போனது தெரிய வந்தவுடன், அவரது கணக்கிலிருந்து பணம் செலுத்துவதை வங்கியர் நிறுத்த வேண்டும். அவரது நிறைவேற்றாளர், நீதிமன்றத்திலிருந்து உயில் மெய்ப்பிதழ் பெற்ற பிறகு, அவரை அக்கணக்கை இயக்க அனுமதிக்க வேண்டும். அதுபோல் ஒரு நிருவாகியின் நேர்வில், அவர் நீதிமன்றத்திலிருந்து நிருவாக உரிமைப் பத்திரம் பெற்ற பிறகு, அவரை அவ்வாடிக்கையாளரின் கணக்கை இயக்க வங்கியர் அனுமதிக்கலாம். எனினும் இதற்கு முன்பாக, மேற்கண்ட ஆவணங்களை வங்கியர் ஆய்வு செய்தல் வேண்டும். பின்னிட்டு நிறைவேற்றாளர் அல்லது நேர்விற்கேற்ப நிருவாகியின் பெயரில் ஒரு கணக்கைத் துவக்கி, அதில் இறந்து போன வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள பாக்கித் தொகையை மாற்ற வேண்டும். அக்கணக்கின் பெயர், "இறந்து போன அ.ஆ., என்பவரின் சொத்துக்காக இ.ஈ., எனும் நிறைவேற்றாளர் (அல்லது நிருவாகி)" ["AB executor (or Administrator) to the estate of CD deceased"]

(2) ஒருவேளை இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்கள் நிறைவேற்றாளர்களாக அல்லது நிருவாகிகளாக நியமனம் செய்யப்படுங்கால், அவர்களுக்கு இறந்து போனவரின் சொத்துக்களில் கூட்டு நலன் (joint inter-

est) உள்ளது. அச்சமயத்தில் அவர்களில் எவரெல்லாம், அவ்வங்கிக் கணக்கை இயக்கலாம் என்பது குறித்து அனைவரும் அதிகாரக் கடிதம் ஒன்றை எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டும். அதை வங்கியர் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதிகாரம் பெற்ற அந்நிறைவேற்றாளர்கள் அல்லது நிருவாகிகள் அளிக்கும் காசோலைகளுக்கு வங்கியர் பணம் கொடுக்கலாம். எனினும் ஒரு காசோலைக்கு பணம் அளிக்க வேண்டாம் என்று நிறைவேற்றாளர் களில் அல்லது நிருவாகிகளில் எவரும் வங்கிக்கு அறிவுறுத்தலாம்.

(3) நிறைவேற்றாளர்களும் நிருவாகிகளும் இறந்து போனவரின் சொத்துக்களையும், பணத்தையும் கையாடல் செய்து விடாமல் இருக்க, வங்கியர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி பெற்றுள்ள அதிகப்பற்றுத் (கடன்) தொகையைத் தீர்ப்பதற்காக, இறந்து போனவரின் கணக்கிலிருந்து, மேற்படியார்களின் சொந்தக் கணக்கிற்கு பணத்தை மாற்றிக் கொள்ள வங்கியர் அனுமதித்தல் கூடாது. அதுபோல் நிறைவேற்றாளர் அல்லது நிருவாகிக்கு தனிப்பட்ட விதத்தில் கடனளிப்பதற்காக, இறந்து போனவரின் சொத்துக்களை வங்கியர் காப்புறுதிகளாகப் பெறுதல் கூடாது. சுருங்கக் கூறின் இறந்து போனவரின் கணக்குகள், அவர் உயிருடன் இருந்தால் எவ்வாறு இயக்கப் படுமோ, அவ்வாறே அவரது நலனுக்காக மட்டுமே இயக்கப்பட நிறைவேற்றாளர் அல்லது நிருவாகியை வங்கியர் அனுமதிக்க வேண்டும்.

(11) பொறுப்பாண்மையர்கள் (Trustees):

'பொறுப்பாண்மையர்' (Trustee) என்பவர் மற்றொருவரின் நலனுக்காக, ஒருவர் ஒப்படைத்த சில பொருட்களை அல்லது சொத்துக்களை அல்லது பணத்தை தம்வசம் வைத்துக் கொண்டு, அவர் அறிவுறுத்தியபடி செயல்படுவதாகும். இவர்களை அறங்காவலர் என்றும் கூறுவதுண்டு. யாருடைய நலனுக்காக ஒப்படைக்கப்பட்டதோ, அவர் 'பயனுரிமையர்' (Beneficiary) எனப்படுவார். சில நேர்வுகளில் ஒப்படைத்தவரே பயனுரிமையராக இருப்பார். இதுவே 'பொறுப்பாண்மை' (Trust) எனப்படுகிறது. ஒப்படைத்தவர், 'பொறுப்பாண்மையை நிறுவியர்' (Author of the Trust) எனப் படுவார். இவ்வாறு பொறுப்பாண்மையை ஏற்படுத்திக் கொள்வதற்காக எழுதப்படும் ஆவணம் 'பொறுப்பாண்மை ஆவணம்' (Trust Deed) எனப்படும். பொறுப்பாக நிருவாகம் செய்யும் பொருட்டு ஒப்படைக்கப்பட்ட பொருள், பணம் அல்லது சொத்து 'பொறுப்பாண்மைச் சொத்து' (Trust Property) எனப்படும். ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் கூட 'பொறுப்பாண்மையராக' நியமனம் செய்யப்படுவதுண்டு. பொறுப்பாண்மையர்கள் பெயரில் வங்கிக் கணக்கு துவக்கும் பொழுது, வங்கியர் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) முதற்கண், வங்கிக் கணக்கு துவக்க விரும்பும் விண்ணப்ப

தாரர்களை பொறுப்பாண்மையர்களாக நியமனம் செய்த பொறுப்பாண்மை ஆவணத்தை, வங்கியர் கவனமாக ஆய்ந்து பார்க்க வேண்டும். அதில் பொறுப்பாண்மையர்களின் பெயர்கள், பொறுப்பாண்மைச் சொத்தை நிருவாகம் செய்வதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பிற நிபந்தனைகளும் வரைமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். பொறுப்பாண்மையர்கள் சேர்ந்தே செயல்பட வேண்டும் என்றும், தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மற்றவர்களிடம் ஒப்படைக்கத் தகுதியற்றவர்கள் என்றும் அந்த ஆவணத்தில் பொதுவாக வகை செய்யப்பட்டிருப்பதுண்டு. எனவே வங்கியர் அந்த ஆவணத் திலிருந்து பொறுப்பாண்மையர்களின் அதிகாரங்களையும் பணிகளையும் அறிதல் வேண்டும்.

(2) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பொறுப்பாண்மையர்களின் நேர்வில், யார் கணக்கை இயக்க அதிகாரம் படைத்தவர் என்பதற்குண்டான தெளிவான அறிவுறுத்தல்களை (clear instructions) வங்கியர் கேட்டுப் பெற வேண்டும். இத்தகு அறிவுறுத்தல் வழங்கப்படவில்லையானால், பொறுப்பாண்மையர்கள் அனைவரும் காசோலை முதலிய ஆவணங்களில் கையொப்பமிட வேண்டும்.

(3) பொறுப்பாண்மையின் பயனுரிமையர்களின் நலனைக் காக்க வங்கியர் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். இல்லாதுபோனால், பொறுப்பாண்மையர் செய்யும் மோசடிக்கு, வங்கியர், மேற்படி பயனுரிமையாளர் களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்புடையராகிவிடுவார்.

(4) பொறுப்பாண்மைச் சொத்தை அடகு அல்லது அடைமானம் வைத்து வங்கியிடமிருந்து பணம் கடன் வாங்க பொறுப்பாண்மையர்களுக்கு பொறுப்பாண்மை ஆவணத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி, வங்கியர் பொறுப்பாண்மையர் களுக்கு கடன் வழங்குதல் கூடாது.

(12) தனிக்கழகங்கள், சங்கங்கள், அறப்பணி நிறுவனங்கள் (Clubs, Trustees and Charitable Institutions):

தனிக்கழகங்கள், சங்கங்கள், அறப்பணி நிறுவனங்கள் ஆகியவை வணிக நோக்கமற்றவையாகும். இவை வங்கியில் கணக்கு துவங்கலாம். அப்பொழுது வங்கியர் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) மேற்கண்டவை சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். அதற்குண்டான பதிவுச் சான்றிதழை வங்கியர் கேட்டுப் பெற வேண்டும்.

(2) மேற்கண்டவையின் விதிகள், உபவிதிகள் (Bye-laws) ஆகியவை அடங்கிய ஆவணத்தின் நகலை வங்கியர் கேட்டுப் பெற வேண்டும்.

(3) வங்கியில் கணக்கு துவக்க, அவற்றின் மேலாண்மைக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்க வேண்டும். அதில் அவ்வங்கியரை, தங்களுக்குரிய வங்கியராக நியமனம் செய்திருக்க வேண்டும். மேலும் யாரெல்லாம் வங்கிக் கணக்கை இயக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர் எனும் விபரமும் மற்றும் அக்கணக்கிற்குத் தேவையான பிற அறிவுறுத்தல்களும் அடங்கியிருக்க வேண்டும். இத்தீர்மானத்தின் நகலை, வங்கியர் தனது பதிவேட்டிற்காக கேட்டுப் பெற வேண்டும்.

(4) அதுபோல் மேற்கண்ட கழகம், சங்கம் முதலானவை வங்கியிலிருந்து பணம் கடன் வாங்க விழைந்தால், அவ்வாறு கடன் வாங்க அது அதிகாரமளிக்கப் பட்டுள்ளதா என்பதை அதன் சாசனம் (Charter) அல்லது அமைப்பு முறையீட்டை ஆய்வு செய்வதன் மூலமாக வங்கியர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(5) கணக்கை இயக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர் இறந்துவிட்டால் அல்லது பதவி விலகிவிட்டால், அந்த இடத்திற்கு புதிதாக ஒரு உறுப்பினர் நியமனம் செய்யப்படும் வரை, வங்கியர் அக்கணக்கை இயக்க அனுமதித்தல் கூடாது.

(6) மேற்கண்ட கழகம், சங்கம் முதலானவைகளுக்கு கணக்கு உள்ள அதே வங்கியில், அக்கணக்கை இயக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபரின் சொந்தக் கணக்கும் இருப்பின், அதில் மேற்படி கழகம் அல்லது சங்கத்தின் பணம், வரவு வைக்கப்படாத முறையில் வங்கியர் கவனமாக இருக்க வேண்டும். அதாவது கழகம், சங்கம் முதலியவையின் கணக்கு, அதனை இயக்குபவரின் சொந்தக் கணக்கோடு கலந்துவிடக் கூடாது.

முடிவுரை:

ஒரு வங்கிக்கு இத்தனை வகையில் வாடிக்கையாளர்கள் உள்ளனரா என்று நாம் வியப்புறலாம். இவ்வாறு வாடிக்கையாளர்களின் வகைகள் பெருகியதற்கு காரணம், வங்கியில் பணம் வைப்பீடு செய்தால், அது அங்கு பத்திரமாக இருக்கும் எனும் நம்பிக்கை மக்களிடம் முளைத்ததுதான் என்றால் அது மிகையல்ல. வங்கியில் பல விதமான வாடிக்கையாளரும் வைப்பீடு செய்யும் பணத்தைக் கொண்டு, வங்கியர் கடன் கோரும் மற்றவர்களுக்கு கடனுதவி செய்கின்றனர். வணிகம் செய்யும் எவரும், அவருக்கு அதிக எண்ணிக்கையில் வாடிக்கையாளர்கள் இருக்க வேண்டும் என்றே விரும்புவர். வங்கிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு சிறந்த வங்கியரின் இலட்சியம், தனக்கு வீட்டிற்கு ஒரு வாடிக்கையாளராவது இருக்க வேண்டும் என்று கருதுவதுதான். எனினும் மேற்கண்டவாறு பல்வேறு வகையான வாடிக்கையாளர்களின் கணக்கைத் துவக்கும் பொழுது, வங்கியர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதே நிதர்சனமான உண்மை.

7

பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள் [Different Types of Accounts]

ஒரு சிறு அறிமுகம்:

கடன் தருநர்–கடன் பெறுநர் எனும் உறவு நிலை, வங்கியரோடு வாடிக்கை யாளருக்கு ஏற்படும் தொடர்பின் அடிப்படை அம்சமாகும். இவ்வுறவு அவர் பெயரில் அவரிடம் பணம் பெற்றுக் கொண்டு வங்கியர் கணக்குத் துவக்கியவுடன் தொடங்கி விடுகிறது. வாடிக்கையாளரிடம் இருந்து பணத்தை வைப்பீடாகப் (Deposit) பெறுவது தான் வங்கியரின் மிக முக்கியமான பணி ஆகும். பல்வேறு வாடிக்கையாளரிடம் இருந்து வைப்பீட்டுத் தொகையாகப் பெறப்படும் பணமே வங்கியர் தமது தொழிலை நடத்த மூலாதாரமாக அமைகிறது. எனவே, பெருமளவு வைப்பீட்டுத் தொகைகளைத் திரட்டுவதில், இன்று வங்கியரிடையே கடும் போட்டி நிலவுகிறது. சகல தரப்பு மக்களிடமிருந்தும், அவர்களிடம் உபரியாக உள்ள சேமிப்புப் பணத்தைத் திரட்டுவதற்காக பல்வேறு வகையான கவர்ச்சிகரமான வைப்பீட்டுத் திட்டங்களை (Deposit Schemes) இன்று அனைத்து வங்கியரும் அறிமுகப்படுத்தி வருகின்றனர். தொடர் வைப்பீட்டுத் திட்டங்கள் (Recurring Deosits) , பணச் சான்றிதழ்கள் (Cash Certificates), பல் நோக்கு வைப்பீட்டுத் திட்டங்கள் (Multi-purpose Deposit Schemes) எனப் பல்வேறு திட்டங்கள் இன்று புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வைப்பீட்டுக் கணக்குகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து விடலாம். அவற்றைக் குறித்துதான் நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம்.

1. What are the different types of accounts? Explain each of them in detail. (பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள் யாவை? அவை ஒவ்வொன்றையும் விரிவாக விளக்குக.)

பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள்:

(1) சேமிப்பு வங்கிக் கணக்குகள் (Savings Bank Accounts):

சேமிப்பு வங்கிக் கணக்கு வசதி முக்கியமாக நடுத்தர வர்க்கத்தினர், குறைந்த வருமானம் உள்ளவர்கள், மாதச் சம்பளம் பெறுவோர் ஆகியோரிடையே சேமிக்கும் வழக்கத்தை வளர்ப்பதற்காகவே வங்கியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சேமிப்புக் கணக்குகள் பொதுவாக வியாபாரிகளுக்கும், தொழிலமைப்பு களுக்கும் ஏற்றவை அல்ல.பொதுவாக, சேமிப்புக் கணக்கை குறைந்தபட்சமாக ரு.500/– செலுத்தித் தொடங்கலாம். சேமிப்புக் கணக்கில் காசோலை வசதி பெற கணக்கில் குறைந்தபட்சமாக ரு.1000/– இருப்பு இருக்க வேண்டும்.

சேமிப்பு வங்கிக் கணக்கின் சிறப்பியல்புகள் (Special Features of Savings Bank Account):

1. வரவு இருப்புக்கு வட்டி உண்டு (Interest on credit balance) : சேமிப்புக் கணக்கில் இருப்பு உள்ள தொகைக்கு வங்கியர் வட்டி வழங்குவர். சேமிப்புக் கணக்கில் நிரந்தரமாக உள்ள குறைந்தபட்சத் தொகைக்கு மாதந் தோறும் கணக்கிடப்பட்டு அரையாண்டிற்கு ஒரு முறை வட்டி வழங்கப் பெறும். இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைக்கு ஏற்ப இவ்வட்டி விகிதம் அமையும்.

2. பணம் பெறுவதில் உள்ள வரம்புகள் (Restrictions on getting money): ஒரு ஆண்டிற்குள் இத்தனை முறைதான் (எடுத்துக்காட்டாக 150 முறை) பணம் எடுக்கலாம் எனவும், இவ்வளவு தொகைதான் அதிகபட்சமாகப் எடுக்க முடியும் எனவும் வங்கியர் சில வரம்புகள் விதித்துள்ளனர். இவ்வரம்புகள் வங்கிக்கு வங்கி மாறுபடுகின்றன. எனினும் நடைமுறையில் இவ்வரம்புகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை, என்பதே உண்மை.

3. வைப்பீடு செய்வதில் வரம்புகள் (Restrictions on Deposit): வாடிக்கையாளர் ஒருவர் தனது சேமிப்பில் கணக்கில் ரூ.5/–ற்கு மேற்பட்ட எவ்வளவு பெரிய தொகையையும் வைப்பீடு செய்யலாம். சேமிப்பு கணக்கில் வைப்பீடு செய்வதற்காக ஒரு மூன்றாம் நபருக்குச் செலுத்தத்தக்க காசோலைகளை வங்கியர் ஏற்றுக் கொள்வதில்லை. அதுபோல் வாடிக்கையாளர் தனது சேமிப்புக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பைப் பராமரிக்கத் தவறிவிட்டால், அதற்காக வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை சேவைக் கட்டணமாக விதிக்கின்றனர்.

4. வட்டி தருவதில் உள்ள வரம்புகள் (Restrictions on interest): சேமிப்புக் கணக்கில் ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் இருப்பு வைத்துக் கொள்ளலாம். ஆனால், வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் உள்ள தொகைக்கு வட்டி தருவதில்லை.

5. வங்கிச் செல்லேடு (Bank Pass-book): சேமிப்புக் கணக்கில் செய்யப்படும் பற்று–வரவுகளைக் ஒரு புத்தகத்தில் வங்கியர் குறித்துக் கொடுப்பர். இது **செல்லேடு** எனப்படுகிறது. இதை வாடிக்கையாளர் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். பணம் போடும் போதும், எடுக்கும் போதும் வாடிக்கையாளர் இந்தச் செல்லேட்டை வங்கிக்கு கொண்டு வந்து, பற்று–வரவுகளை பதிந்து கொள்ள வேண்டும். (இது குறித்து விளக்கமாக பின்னர் காண உள்ளோம்.)

(2) நடப்புக் கணக்குகள் (Current Accounts):

நடப்புக் கணக்குகள் என்பன, அன்றாடம் வாடிக்கையாளர் பற்று–வரவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வைப்பீட்டுக் கணக்காகும் (active and running accounts). நடப்புக் கணக்கில் ஒரு வாடிக்கையாளர் எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் செலுத்தலாம். பணமும் பெறலாம். எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலுத்தலாம். அதுபோல், எவ்வளவு தொகை வேண்டுமானாலும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திரும்பப் பெறலாம். நடப்புக் கணக்குத் தொடங்க விரும்புவோர் குறைந்தபட்சம் ரூ.2000/– செலுத்தி கணக்கு தொடங்க வேண்டும். எனினும் இது வங்கிக்கு வங்கி மாறுபடுகிறது.

அரசாங்க நிறுவனங்கள், தொழிலமைப்புகள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுமங்கள், வர்த்தக நிலையங்கள், வணிகர்கள் முதலியோர் நடப்புக் கணக்கு வைத்திருத்தல் இன்று பரவலாகக் காணப்படும் ஒரு வழக்கமாகும். நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் கேட்ட மாத்திரத்தில், அக்கணக்கிலிருந்து வங்கியர் பணம் கொடுக்க வேண்டும். இதன் பொருட்டு வங்கியர் தனது அன்றாட இருப்பில் போதுமான தொகையை பராமரித்து வர வேண்டும். இதனால் இது வங்கியின் 'கேட்பு பொறுப்புகள்' (Demand Liabilities) எனப்படுகின்றன. மேலும், நடப்புக் கணக்கில் நிகழும் நடவடிக்கைகளை வைத்து அவ்வாடிக்கையாளரின் நிதிநிலையை வங்கியரும் புரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனால் தேவையான காலத்தில் அதிகப்பற்று பெறுதலும் சுலபமாகிறது. மேலும், நடப்புக் கணக்கு உள்ளவர்கள் மட்டுமே அதிகப்பற்று வசதியைப் (Over-draft facility) பெற இயலும்.

நடப்புக் கணக்கின் சிறப்பியல்புகள் (Special Features of Current Account)

1. அடிப்படை நோக்கம் (Basic Object) : நடப்புக் கணக்கைத் தொடங்குவதன் நோக்கம், சேமிப்புக் கணக்கைப் போல சேமிப்பதற்காகவோ அல்லது

நிலைத்த வைப்பீட்டுக் கணக்கைப் போன்று வட்டி வருமானம் பெறுவதற்காகவோ அல்ல. நடப்புக் கணக்கில் அன்றாடம் பணம் கட்டிவிடுவதன் மூலம் பணத்தை பாதுகாத்து வைக்க வேண்டிய இடரிலிருந்து வணிகர்கள் விடுபடுகின்றனர். பணம் தர வேண்டியவருக்குக் காசோலைகளைத் தருவதன் மூலமும், பணம் வர வேண்டியவரிடமிருந்து காசோலைகளை, வரைவோலைகளைப் பெற்று வங்கிக் கணக்கில் வசூலிக்கச் செலுத்தி விடுவதன் மூலமும் தினந்தோறும் பலமுறை பணத்தை எண்ணிச் சரிபார்த்து வாங்குதல், கொடுத்தல் ஆகிய வேலைகளையும் தவிர்த்து விடுகின்றனர்.

2. நடப்புக் கணக்கிற்கு வட்டி இல்லை (No interest for current account) : வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கில் இருப்பு இருக்கும் தொகைக்கு வங்கியர் வட்டி தருவது இல்லை. இந்திய ரிசர்வ் வங்கியும் இதுபற்றி சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளது. அதன் முன் அனுமதியின்றி நம் நாட்டில் உள்ள வங்கிகள் நடப்புக் கணக்கிற்கு வட்டி தரக்கூடாது.

3. நடப்புக் கணக்கு வைத்திருப்போருக்கு கிடைக்கும் சிறப்புச் சலுகைகள் (Special privileges) : நடப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய சில சிறப்புச் சலுகைகள் பின்வருமாறு.

(a) அதிகப்பற்று பெறும் வசதி (Over-draft facility), நடப்புக் கணக்கு வைத்து இருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். மற்றவர்களுக்கு வேறு வகைக் கடன்கள் கிடைக்கலாம். ஆனால், இவ்வசதி சேமிப்புக் கணக்கில் இல்லை.

(b) நடப்புக் கணக்கு உள்ள வாடிக்கையாளர், மூன்றாவது நபருக்கு செலுத்தப் பெற வேண்டிய காசோலைகளை (Thrid party cheques) அவரிடம் மேலெழுத்து கையொப்பம் (Endorsement) பெற்றுத் தமது கணக்கின் வாயிலாக வசூலிக்க முடியும். இவ்வசதி சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இல்லை.

4. பணம் திரும்பப் பெறுவதில் வரம்புகள் ஏதும் இல்லை (No restrictions as to withdrawal of cash) : நடப்புக் கணக்கு வைத்திருப்பவர் ஒரே நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் திரும்பப் பெறலாம்.

5. சேவைக் கட்டணம் (Service charges): நடப்புக் கணக்கினை வாடிக்கையாளர் அடிக்கடி இயக்குவதால், வங்கியர்களின் பணி அதிகமாகிறது. எனவே இதன் பொருட்டு சேவைக் கட்டணமாக ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டிற்கொரு முறை அல்லது அரையாண்டிற்கு ஒரு முறை, நடப்புக் கணக்கில் பற்றெழுதுவதன் மூலம் வங்கிகள் வசூலித்துக் கொள்கின்றன. இருப்பினும், அதிக அளவு பணத்தை இருப்பில் கொண்டுள்ள நடப்புக் கணக்குகளுக்கு, வங்கியர் இச்சேவைக் கட்டணம் விதிப்பதில்லை.

(3) நிலை வைப்பீட்டுக் கணக்குகள் (Fixed Deposit Accounts):

வைப்பீடுகளின் வகைகள் (Types of Deposits):

'வைப்பீடுகள்' (Deposits) இரு வகைப்படும். அவை (1) கேட்பு வைப்பீடுகள் (Demand Deposits); (2) காலவரையறை வைப்பீடுகள் (Time Deposits). முதல் வகை, வாடிக்கையாளர் கேட்கும் பொழுது வங்கியரால் திரும்பச் செலுத்தத்தக்க வைப்பீடுகள். இரண்டாவது வகை, பணம் வைப்பீடு செய்யும் போது, வங்கியரும், வாடிக்கையாளரும் (வைப்பீட்டாளர்) ஒப்புக் கொள்ளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் திரும்பச் செலுத்தக் கூடிய வைப்பீடுகள்.

நாம் இதுகாறும் கண்ட, **சேமிப்பு வங்கிக் கணக்கு, நடப்புக் கணக்கு** ஆகியவை கேட்பு வைப்பீடுகள் ஆகும். அக்கணக்குகளில் வாடிக்கையாளரால் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை, அவர் கேட்கும் பொழுது, வங்கியர் திரும்பத் தர வேண்டும். அதுபோல் இனி நாம் காணவிருக்கும் **நிலை வைப்பீடுகள் (Fixed Deposits), தொடர் வைப்பீடுகள் (Recurring Deposits)** ஆகியவை 'கால வரையறை வைப்பீடுகள்' ஆகும். ஏனெனில், இங்கு வாடிக்கையாளரால் வைப்பீடு செய்யப்பட்ட தொகை, ஒரு குறிப்பிட்ட காலம் சென்ற பிறகுதான், அவருக்கு திரும்பத் தரப்படும்.

வங்கியருக்குத் தம் தொழிலை நடத்துவதற்குத் தேவையான பணத்தின் பெரும்பகுதி நிலை வைப்பீடுகள் மூலமே கிடைக்கிறது. வங்கியர் பெறும் வைப்பீட்டுத் தொகையில் 60% இந்நிலை வைப்பீடுகளேயாகும். எனவே, இந்நிலை வைப்பீட்டின் மூலமாகக் கிடைத்த தொகையினையே வங்கியர் மற்றவர்களுக்குக் கடனாகத் தந்து அதன் மூலம் தமது தொழிலை நடத்து கின்றனர். எனவே, வங்கித் தொழிலின் அடிப்படையே இந்நிலை வைப்பீடுகள்தாம் என்றால் அது மிகையாகாது. இத்நிலை வைப்பீடுகள், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகே வங்கியர் திருப்பிச் செலுத்த வேண்டியவையாகும். வாடிக்கையாளர் தமது விருப்பம் போல் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் நிலை வைப்பீடு செய்ய முடியும். நீண்ட கால நிலை வைப்பீட்டிற்கு வட்டி விகிதம் அதிகமாகவும் இருக்கும்.

நிலை வைப்பீடு செய்யப்படும் தொகைகளுக்கு வங்கியர் தரும் வட்டி விகிதம் அவ்வப்போது ரிசர்வ் வங்கி அனுப்பும் சுற்றறிக்கை மூலம் நெறி முறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தியாவில் உள்ள எல்லா வங்கிகளும் இந்நிலை வைப்பீடுகளுக்கு ஒரே மாதிரியாகவே வட்டி வழங்குகின்றன. கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளை விட அரை சதவிகிதம் கூடுதலாக வட்டி வழங்க அதிகாரம் தரப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள், பொறுப்பாண்மைகள் ஆகியவைகளிடம் இருந்து பெறும் நிலை வைப்பீட்டுத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் மேலும்

அரை சதவிகிதம் கூடுதலாக வட்டி தரவும் வகை செய்யப் பட்டுள்ளது.

நிலை வைப்பீட்டின் சிறப்பம்சங்கள் (Special Features of Fixed Deposit):

1. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகே திரும்பத் தரப்படும் (Repayment after a specified period) : நிலை வைப்பீட்டுத் தொகைகளை வங்கியர் குறிப்பிட்ட காலக் கெடு முடிந்த பிறகே வாடிக்கையாளருக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்கிடையில் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. எனினும் காலக் கெடு முடியும் முன்பே பணத்தைத் திரும்பப் பெறவும் வழி உள்ளது. அவ்வாறு பெறும் போது வாடிக்கையாளர் வட்டியில் ஒரு பகுதியை இழக்க நேரிடும். (இது பற்றி பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.)

2. வட்டி விகிதமும் வட்டி வழங்கும் காலமும் (Rate of interest and period): மற்ற வகை வைப்பீடுகளை விட நிலை வைப்பீட்டிற்கு அதிக வட்டி தருதல் வங்கியரின் வழக்கமாகும். ஏனெனில், இவ்வைப்பீட்டிற்கான தொகையை ஒரு குறிப்பிட்ட நிச்சயமான காலத்திற்கு வங்கியர் வாடிக்கையாளருக்கு திரும்பத் தர வேண்டியதில்லை. எனவே அத்தொகையை மற்றவர்களுக்கு சற்று அதிகமான வட்டி வீதத்திற்கு கடன் கொடுத்து, வங்கிகள் தங்கள் வங்கித் தொழிலைச் செய்கின்றன; இலாபமீட்டுகின்றன. எனவே இவ்வைப்பீடுகள் மூலமாகத் திரட்டப்படும் தொகைகளே, வங்கித் தொழிலுக்கு அடிப்படையாகும். இதற்குரிய வட்டி வீதத்தை இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது நிருணயித்து, சுற்றறிக்கை அனுப்புகிறது. பொதுவாக எவ்வளவு அதிகமான காலத்திற்கு வைப்பீடு செய்யப்படுகிறதோ, அவ்வளவு அதிகமான சதவீதம் வட்டி வழங்கப்படும். இது ஆண்டிற்கொரு முறை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படும்.

3. கெடு முடிந்தும் திரும்பப் பெறப்படாத வைப்பீடுகளும் அதற்குரிய வட்டியும் (Unclamied deposit and interest thereon): வாடிக்கையாளர் நிலை வைப்பீடு செய்யும் பொழுது, எவ்வளவு காலத்திற்கான வைப்பீடு என்று விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுகிறாரோ, அந்த காலக்கெடு முடியும் வரைதான் வங்கியர் வட்டி வழங்குவார். அக்காலக்கெடு முடிந்த 14 நாட்களுக்குள் வாடிக்கை யாளர் தமது வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெற வேண்டும் அல்லது மீண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யவில்லையானால், அவ்வைப்பீட்டிற்கு சேமிப்புக் கணக்கிற்குரிய குறைந்த சதவீத வட்டியே வழங்கப்படும்.

4. நிலை வைப்பீட்டு இரசீது (Fixed Deposit Receipt): நிலை வைப்பீட்டில் பணம் செலுத்துபவருக்கு வங்கியர் மற்ற கணக்குகளைப் போலச் செல்லேடு **(Pass Book)** ஏதும் தருவதில்லை. மாறாக, நிலை வைப்பீட்டு இரசீது

ஒன்று தரப்படும். இந்த இரசீதே, வங்கியர் வாடிக்கையாளரிடம் இருந்து பணம் பெற்றதற்கு ஆதாரம் அல்லது சான்று ஆகும்.

5. திரும்பப் பெறும் முறை (Method of getting back the deposit amount) : நடப்புக் கணக்கில் அல்லது சேமிப்புக் கணக்கில் காசோலை மூலம் பணம் பெறுவது போல நிலை வைப்பீட்டிலுள்ள தொகையைத் திரும்பப் பெற முடியாது. நிலை வைப்பீட்டு இரசீதின் பின்புறம் குறிப்பிட்டுள்ள இடத்தில் ரூ.1/-க்கான வருவாய் வில்லை (Revenue Stamp) ஒட்டி, அதன் மீது கையொப்பம் இட்டுக் கொடுத்தால்தான், அதற்குரிய தொகை திரும்பத் தரப்படும். இந்நடைமுறை ரூ.500/-க்கும் மேலான தொகையை திரும்பப் பெறும்பொழுது கடைபிடிக்கப்படும்.

6. கடன் தருநர்-கடன் பெறுநர் உறவு நிலை (Debtor-Creditor relationship) : நிலை வைப்பீட்டில் பணம் செலுத்திய வாடிக்கையாளருக்கும், வங்கியருக்கும் இடையே உள்ள உறவு, கடன் தருநர் – கடன் பெறுநர் உறவு ஆகும். இங்கு வாடிக்கையாளர் கடன் தருநராகவும், வங்கியர் கடன் பெறுநராகவும் உள்ளனர்.

7. முதிர்வடையும் முன்பே பணம் பெறுதல் (Withdrawing money before maturity) : பொதுவாக, நிலை வைப்பீட்டில் இட்டு வைக்கப்படும் தொகையினை, அதில் குறிப்பிட்ட காலக் கெடு முடிந்த பின்னரே திருப்பித் தருதல் வேண்டும். அதாவது நிலை வைப்பீடு முதிர்வடைந்த பிறகே பணம் திரும்பத் தரப்படும். எனினும், நிலை வைப்பீடு முதிர்வடையாத முன்னரே, பணம் வைப்பீடு செய்த வாடிக்கையாளர் தமது அவசரத் தேவைகளுக்காகக் கணக்கை முடித்துப் பணத்தை திரும்பப் பெறலாம். இதற்கு அவருக்கு உரிமை உண்டு. இவ்வாறு முதிர்வடையும் முன்னரே முடிக்கப் பெறும் வைப்பீட்டுக் கணக்கிற்கு **(Pre-mature closure of fixed deposit account)** ஒரு குறிப்பிட்ட சதவீத வட்டியை பிடித்துக் கொண்டு குறைந்த வட்டியையே வங்கியர் தருவார். இவ்வட்டி விகிதமும் இந்திய ரிசர்வ் வங்கி மூலம் நெறிமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதனால் வாடிக்கையாளருக்கு வட்டி இழப்பு (Loss of interest) ஏற்படுகிறது.

8. நிலை வைப்பீட்டு இரசீதினை காப்புறுதியாகக் கொடுத்து கடன் பெறுதல் (Loan on the security of fixed deposit receipt): வாடிக்கையாளர் தனக்கு வட்டி இழப்பு ஏற்படாமல், அதே சமயத்தில் தனது அவசரத் தேவைக்குப் பணமும் பெற, தனது நிலை வைப்பீட்டுக் இரசீதை (கணக்கை) வங்கியரிடம் காப்புறுதியாகக் கொடுத்து கடன் பெறலாம். இதனால் வங்கியருக்கும் நெருக்கடி ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது. வாடிக்கையாளரும் தமது அவசரத் தேவையை வட்டி இழப்பு இல்லாமல் நிறைவு செய்து கொள்ள முடிகிறது. மேலும், ஒரு வாடிக்கையாளர் தனது நிலை வைப்பீட்டு இரசீதை, மற்றொருவர்

அவ்வங்கியிடம் வாங்கும் கடனுக்குண்டான காப்புறுதியாகவும் கொடுக்க இயலும். வாடிக்கையாளர் இவ்வாறு பெறும் கடனுக்கு, அவ்வைப்பீட்டிற்கு வழங்கப்படும் வங்கியால் கொடுக்கப்படும் வட்டியின் சதவீதத்தை விட குறைந்தபட்சம் 2 சதவீதம் கூடுதலாக வட்டி விதிக்கப்படும். மூன்றாம் நபர்கள் வாங்கும் கடன்களுக்கு எனில், ஒரு கடனுக்கு வங்கிகள் இன்று இயல்பாக வசூலிக்கும் வட்டி வீதமே பொருந்தும். மேலும் வைப்பீட்டுத் தொகையில் 75 சதவீதத்திற்கு மேல் கடன் வழங்கப்படாது. இச்சதவீதம் மேலும் அதிகமாகும். கடன் பெறும் முன்பு வாடிக்கையாளர் தம்மிடம் உள்ள நிலை வைப்பீட்டு இரசீதின் பின்புறம் வருவாய் வில்லை ஒட்டி, அதன் மீது கையொப்பமிட்டு வங்கியரிடம் காப்புறுதியாக ஒப்படைத்துவிட வேண்டும்.

(4) தொடர் வைப்பீட்டுக் கணக்குகள் (Recurring Deposit Accounts):

ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரையிலும், ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலும் திரும்பத் திரும்ப தொடர்ந்து வங்கியில் பணம் வைப்பீடு செய்யும் திட்டத்திற்கு, தொடர் வைப்பீட்டுத் திட்டமென்று பெயர். இதன் கீழ் நாள், வார, மாத வைப்பீட்டுக் கணக்குத் திட்டங்களைத் வங்கிகள் தொடங்கியுள்ளன. இந்த வைப்பீடுகள் மீதான வட்டி வீதங்கள், பெரும்பாலும் நிலை வைப்பீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தையொத்தவாறே உள்ளன. இந்த வைப்பீடுகளின் கால அளவு பொதுவாக ஆறு மாதங்கள் முதல் பத்தாண்டுகள் வரை வேறுபடுகின்றன. இத்தகு வைப்பீடுகளில், வைப்பீட்டாளர் ஒரு குறிப்பிட்ட தொகையை நாள்தோறும், வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் வைப்பீடு செய்கிறார். இதன் மீதான வட்டி, காலாண்டு தோறும் சேரும் கூட்டு வட்டியாக கணக்கிடப்படுகிறது.

இவ்விதமான கணக்கை, ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் பெயரில் வங்கியர் துவக்கலாம். ஒரு இளவரின் பெயரில், அவரது காப்பாளர் துவக்கலாம். இக்கணக்கைத் துவக்கும் சமயத்தில், வைப்பீட்டாளருக்கு வங்கியரால் ஒரு செல்லேடு (Pass-book) வழங்கப்படும். பணத்தை வைப்பீடு செய்யும் போதும், பணத்தைத் திரும்பப் பெறும் பொழுதும், இச்செல்லேடு வங்கியில் முன்னிடப்பட வேண்டும். மாதந்திர தொடர் வைப்பீட்டுக் கணக்காக இருக்கும் பொழுது, ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய வைப்பீட்டுத் தொகையை அம்மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு முன்னர் வங்கியில் செலுத்திவிட வேண்டும். அதுபோல் இக்கணக்கில் சேர்ந்த தொகையானது, இறுதி மாதத்திற்குரிய தொகை செலுத்தப்பட்ட பிறகு, ஒரு மாதம் கழித்தே வட்டியுடன் கொடுக்கப்படும்.

2. State the procedure to be adopted and the precautions to be taken by a banker while opening a new account. (வங்கியர் ஒருவர் ஒரு புதிய கணக்கு ஆரம்பிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை

மற்றும் எத்தகைய கவனத்துடன் செயல்பட வேண்டும் என்பதைக் கூறுக.)

(அல்லது)

Explain the formalities involved for opening and operating bank accounts. (வங்கிக் கணக்குகளை தொடங்குவதிலும் கையாளுவதிலும் அடங்கியுள்ள நடைமுறைகளை விளக்குக.)

(அல்லது)

What procedure does a banker follow in opening a new account? What precautions does he take in opening the account of a minor and why? (ஒரு புதிய கணக்கைத் துவக்குவதில் வங்கியர் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது? இளவர் ஒருவரின் கணக்கைத் துவக்குவதில் வங்கியர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை? ஏன்?)

முன்னுரை:

ஒருவர் வங்கியில் புதிய கணக்கொன்றை துவக்குவதன் மூலம், அங்கு வங்கியர்–வாடிக்கையாளர் உறவும் தொடங்குகிறது. ஒவ்வொருவரும் கணக்குத் துவங்கத் தம்மை அணுகும் போது, வங்கியர் வழக்கமான சில நடைமுறைகளை பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்நடைமுறைகளும், நடவடிக்கைகளும் தவறான நபர்கள் வங்கி வசதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதையும், அதனால் ஏற்படும் விரும்பத்தகாத பின்விளைவுகளையும் பெருமளவுக்குத் தவிர்த்து விட உதவும். அதிலும் குறிப்பாக, காசோலை வசதியோடு கூடிய கணக்குகளைத் துவக்குமுன், வங்கியர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் ஒரு வங்கியருக்கு உதவி புரிந்திடும் வகையில், பின்வரும் சில நடைமுறைகளும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அமைகின்றன எனில் அது மிகையன்று.

நடைமுறைகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் [Procedure and Precautions]:

(1) சேமிப்பு வங்கிக் கணக்குகள் மற்றும் நடப்புக் கணக்குகளை துவக்கும் நேர்வில் (In case of opening of Savings Bank Accounts and Current Accounts):

1 உரிய படிவத்திலான விண்ணப்பம் (Application on the prescribed form):

ஒரு வங்கியில் சேமிப்பு வங்கிக் கணக்கை அல்லது நடப்புக் கணக்கைத் துவக்க வேண்டுமெனில், உரிய படிவத்திலான விண்ணப்பம் ஒன்றை பூர்த்தி

செய்து வங்கியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பப் படிவத்தை வங்கியரே வழங்குவர். சேமிப்புக் கணக்கிற்கென தனியாக ஒரு விண்ணப்பமும், தனிநபர்கள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுமங்கள் ஆகியோர்கள் நடப்புக் கணக்கை துவக்குவதற்கென தனியாக ஒரு விண்ணப்பத்தையும் வங்கியர் வைத்திருப்பர். வங்கிக் கணக்கை துவக்க விரும்பும் விண்ணப்பதாரர், அவ்விண்ணப்பப் படிவத்தில் தனது பெயர், தொழில், முழு முகவரி, ஆகியவற்றைக் குறிப்பிட்டு, தனது மாதிரிக் கையொப்பத்தை இட வேண்டும். மேலும் தன்னை வங்கியருக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் நபரின் பெயர், தொழில், முழு முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு, அவரது மாதிரிக் கையொப்பத்தையும் பெற்றுத் தர வேண்டும். மேலும் விண்ணப்பப் படிவத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கும், வங்கி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்படுவதாக விண்ணப்பதாரர் பொறுப்பேற்று கையொப்பமிட வேண்டும். தனது சமீபத்திய சிறிய அளவிலான (Pass-port size) புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தில் ஒட்ட வேண்டும்.

2. கல்வியறிவற்ற நபரின் விண்ணப்பம் (Application by an illiterate):

விண்ணப்பதாரர் கல்வியறிவற்றவராக இருப்பின், அவரது விண்ணப்பத்தை அவர் சொல்லக் கேட்டு மற்றொருவர் பூர்த்தி செய்தல் வேண்டும். மேலும் அவர் தனது இடது கை பெருவிரல் ரேகையை இரு சாட்சிகள் முன்னிலையில் அவ்விண்ணப்பத்தில் வைக்க வேண்டும். அவ்விரு சாட்சிகளும் தங்கள் பெயர் மற்றும் முழு முகவரியுடன் அதில் கையொப்பமிட வேண்டும். இத்தகு நபர்களுக்கு காசோலை வசதி வழங்கப்படமாட்டாது. (எனவே இவர்கள் தங்கள் கணக்கிலிருந்து பணம் எடுக்க, வங்கியில் நேர்முகமாக ஆஜராகி, பணம் எடுக்கும் சீட்டிலும் (withdrawal slip) அதன் பின்புறத்திலும் சாட்சி ஒருவரின் அல்லது வங்கி அலுவலர் ஒருவர் முன்னிலையில் கைரேகை வைக்க வேண்டும்.)

3. இளவரின் விண்ணப்பம் (Application by a minor):

18 வயதை பூர்த்தி செய்யாதவர், இளவர். இளவரின் பெயரில் அவரது காப்பாளர் சேமிப்புக் கணக்கு துவக்கலாம். இளவரின் கணக்கைத் துவக்குவதில், வங்கியர் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது குறித்து நாம் ஏற்கனவே விரிவாக பக்கம் எண். 79–ல் 'வங்கியரின் சிறப்பு வகை வாடிக்கையாளர்கள்' எனும் அத்தியாயத்தில் கண்டுள்ளோம்.

4. விண்ணப்பதாரரை வங்கிக்கு அறிமுகம் செய்து வைத்தல் (Introducing the Applicant to the Banker):

விண்ணப்பதாரரின் பெயரில் ஒரு சேமிப்பு வங்கிக் கணக்கை அல்லது நடப்புக் கணக்கை துவக்கும் பொழுது, அவர் பொறுப்புடைய ஒரு நபர்தானா

(respectable person) என்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, வங்கியர் அவரது உண்மையான விபரத்தை (அடையாளத்தை) அறிந்து கொள்ள வேண்டும். எனவே தனது உண்மை அடையாளத்தை மெய்ப்பிக்காத நபர்களுக்கு அல்லது அல்லது விரும்பத்தகாத நபர்களுக்கு கணக்குத் துவக்க மறுக்க வங்கியருக்கு உரிமை உண்டு. இதனால் திருடர்கள், கொள்ளையர்கள் போன்றோர் வங்கியில் கணக்குத் துவக்குவது தடுக்கப்படுகிறது. எனவே விண்ணப்பதாரர் நல்லவர்தான் என்று வங்கியருக்கு அறிமுகம் செய்து வைக்கும் நடைமுறை மிகவும் இன்றியமை யாததாக உள்ளது. அதைப் பின்வரும் மூன்று வழிகளில் ஏதேனுமொன்றின்படி செய்யலாம்.

(a) பொறுப்பான நபர் மூலம் அறிமுகம் (Introduction by a respectable person): விண்ணப்பதாரர் கணக்குத் துவக்க விழையும் அதே வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒரு வாடிக்கையாளரின் மூலம் அல்லது அவ்வங்கியில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு தெரிந்த பொறுப்பான ஒரு நபரின் வாயிலாக விண்ணப்பதாரரை வங்கியருக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கும் நபர், விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவத்தில் தனது பெயர் மற்றும் முழு முகவரியுடன் கையொப்பம் செய்தல் வேண்டும்.

(b) பொறுப்பான நபரின் பெயரைச் சுட்டுவதன் மூலம் அறிமுகம் (Introduction by referring the name of a respectable person): பொறுப்பான நபர் எவரது பெயரையாவது அல்லது வேறு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நபர் எவரது பெயரையாவது சுட்டுரைப்பதன் மூலம் விண்ணப்ப தாரர் வங்கியரிடம் தம்மை அறிமுகம் செய்து கொள்ளலாம். இவ்வாறு விண்ணப்ப தாரரால் பெயர் சுட்டப்பட்ட நபரின் நேர்மை, ஒழுக்கம் மற்றும் நிதி நிலை ஆகியவற்றை வங்கியர் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அந்நபரிடமும் விண்ணப்பதாரரைப் பற்றி விசாரிக்க வேண்டும். அவர் விண்ணப்பதாரரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கூறவில்லையானால் அல்லது பதிலேதும் அளிக்கவில்லையானால், விண்ணப்பதாரருக்கு கணக்கு துவக்க வங்கியர் மறுக்க வேண்டும். பொதுவாக இந்நடைமுறையை வங்கியர் பின்பற்றுவ தில்லை. ஏனெனில் வங்கியருக்கு ஆக்கப்பூர்வமான பணிகள் பல உள்ளன. எனவே விண்ணப்பதாரரைப் பற்றியும், அவரை அறிமுகம் செய்து வைக்கும் நபரைப் பற்றியும் விசாரித்துத் தெரிந்து கொள்ளுமளவிற்கு நேரமில்லை. எனவே மேற்கண்ட மாதிரியான அறிமுக முறையை வங்கியர் தவிர்த்துவிடுகின்றனர்.

(c) அதிகாரபூர்வமான அடையாள அட்டைகள் மூலம் அறிமுகம் (Introduction by authanticated identification cards): இந்திய ரிசர்வ்

வங்கியானது, வாக்காளர் அட்டை, நியாய விலையில் பொருட்களைப் பெறுவதற்கான அட்டை (Ration Card), வருமான வரி அடையாள அட்டை, பணிபுரியும் இடத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை, கடவுச் சீட்டு (Pass-port) போன்ற அதிகாரபூர்வமான அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்று, விண்ணப்பதாரர் தமது அடையாளத்தை வங்கியருக்கு மெய்ப்பித்து அறிமுகம் செய்து கொள்ளப் போதுமான ஆவணங்களாகும் என்று அறிவுறுத்தியுள்ளது. எனினும் இவ்வாறு துவக்கப்படும் கணக்குகளுக்கு காசோலை வசதி பெறவியலாது.

மேற்கண்ட மூன்று வழிகளில் இன்று பெரும்பாலும் வங்கியர் பின்பற்றுவது, முதல் வழியைத்தான் என்று திட்டவட்டமாகக் கூறலாம். அறிமுகம் செய்து வைப்பவர், சம்பந்தப்பட்ட அதே வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒரு நபராக இருக்க வேண்டும். அவர் வங்கியில் நேர்முகமாக ஆஜராகி, தனக்கு விண்ணப்பதாரரைப் பற்றி கடந்த இத்தனை ஆண்டுகளாக நன்கு தெரியும் என்று வங்கி அலுவலர் முன்னிலையில் தனது பெயர், முழு முகவரி, தனது கணக்கின் எண் ஆகியவற்றை விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவத்தில் அதற்குரிய இடத்தில் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் வசித்து வருகிறார் என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள, இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையின் படி தற்பொழுது, வங்கியர், நாம் மேலே கண்ட அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்றை அல்லது அதையொத்த அதிகாரபூர்வமான ஆவணத்தைக் கோருகின்றன.

எது சரியான அறிமுகமாக அமையும்? (What constitutes proper introduction?):

நாம் ஏற்கனவே கண்டபடி, அறிமுகம் செய்து வைக்கும் நபரே, ஒரு பொறுப்பான நபராக இருத்தல் வேண்டும். மரியாதைக்குரியவராகவும், நன் மதிப்புடையவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் விண்ணப்பதாரரைப் பற்றிக் கூறும் அபிப்பிராயத்திற்கும் மதிப்பிருக்கும். எனவே இந்த அறிமுக விஷயத்தில் ஒரு வங்கியர் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும். பின்வரும் ஒரு முக்கிய வழக்கில், சரியான அறிமுகத்திற்கு எது தேவை, அது குறித்த வங்கியரின் கடமை யாது என்பது விவாதிக்கப்பட்டது.

Indian Bank v. Catholic Syrian Bank[1] – எனும் வழக்கில், வங்கியில் கணக்குத் துவக்க விழையும் விண்ணப்பதாரர் ஒருவரை, அவ்வங்கியில் ஏற்கனவே கணக்கு வைத்துள்ள, வங்கியருக்கு நன்கு தெரிந்த ஒரு வாடிக்கையாளர் அறிமுகம் செய்து வைத்தார். ஆனால் அவர் செய்தது யாதெனில், அவ்விண்ணப்ப

1. 1980 T.N.L.N.J. p. 23

தாரரை வங்கிக்கு அழைத்துச் சென்று, அவ்விண்ணப்பதாரர் இந்தூரிலிருந்து வருபவர் என்றும், அந்த இடத்தில் விற்கும் தரை விரிப்புகளை வாங்குவதற்கு வசதியாக, வங்கியில் கணக்கு ஒன்றைத் துவக்க விழைகிறார் என்றும் அவ்வங்கியின் மேலாளரிடம் கூறினார். இங்கு அவர், அவ்விண்ணப்பதாரரை தனக்கு நன்றாகத் தெரியும் என்றோ, தனக்கும் அவருக்கும் இடையே வெகுநாள் வணிகத் தொடர்பு உள்ளது என்றோ, அவர் நல்லெண்ணத்துடன் கூடிய ஒரு வாடிக்கையாளராக இருப்பார் என்றோ, எனவே அவரது பெயரில் எவ்வித இடருமின்றி கணக்குத் துவக்கலாம் என்றோ எவ்வித உறுதிமொழியையும் கூற வில்லை. எனினும் வங்கியர் அவ்விண்ணப்பதாரரை கணக்குத் துவக்க அனுமதித் தார். அவர், தனது கணக்கை இயக்கிய விதத்தின் அடிப்படையில், பின்னிட்டு மேற்கண்ட இரு வங்கிகளுக்கும் இடையே வழக்கொன்று எழுந்தது. அவ்வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கையில், அவ்விண்ணப்பதாரரின் உரிய அறிமுகத்தைப் பெறுவதில் வங்கியர் கவனக்குறைவாக இருந்துவிட்டார் என்றும், அவரைக் கணக்குத் துவக்குவதற்கு அனுமதிப்பதற்கு முன், அவர் நம்பிக்கைக் குரியவர்தானா என்பதை அறிந்து கொள்ள நன்கு விசாரித்திருக்க வேண்டுமென்றும், அதற்கு அறிமுகம் செய்து வைப்பவரின் இயல்பான வார்த்தைகளையே முழுமையாகச் சார்ந்திருப்பதை விட வேறு முறைகளிலும் வங்கியர் செயல்பட்டு அவ்விண்ணப்பதாரரின் உண்மை விபரங்களை வங்கியர் தெரிந்து கொண்டிருந்திருக்க வேண்டும் என்றும் கூறியது.

5. மாதிரிக் கையொப்பங்கள் (Specimen signatures):

விண்ணப்பதாரரின் இரண்டு அல்லது மூன்று மாதிரிக் கையொப்பங்களை ஒரு தனித்தாளில் பெற்று அதனை வங்கியர் அகர வரிசைப்படி தனது பதிவேட்டில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். இருவர் பெயரில் கூட்டாகக் கணக்கு துவங்கப் பெற்றால் இருவரின் மாதிரிக் கையொப்பமும் பெறப்பட வேண்டும். கூட்டாண்மை நிறுமமாயின், பொதுவாக பங்குதாரர்கள் அனைவரது மாதிரிக் கையொப்பமும் பெறப்படுதல் வேண்டும். வசூலிப்பதற்காக காசோலை முன்னிடப்படும் ஒவ்வொரு முறையும், காசோலையில் உள்ள கையொப்பத்தையும் தனது பதிவேட்டில் உள்ள மாதிரிக் கையொப்பத்தையும் ஒத்து நோக்கி இரண்டும் ஒரே மாதிரி இருந்தால் மட்டுமே, வங்கியர் காசோலைக்குப் பணம் வழங்க வேண்டும். எனினும் ஒரு வாடிக்கையாளர் வங்கியருக்கு மிகவும் பரிச்சயமான விதத்தில் தனது வங்கிக் கணக்கை இயக்கிக் கொண்டிருந்தால், இந்நடைமுறையை வங்கியர் பின்பற்றுவதில்லை.

6. வாடிக்கையாளரல்லாத, ஆனால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபரால் கையாளப்படும் கணக்குகள் (Accounts operated by a Mandate Holder):

சில சமயங்களில் வாடிக்கையாளர் தமது கணக்கை வேறு ஒரு நபர் கையாள (இயக்க) (to operate) அனுமதித்து அதிகாரம் தருவதும் உண்டு. அவ்வாறு கையாளும் வேறு நபர், அதிகாரம் பெற்றவர் (Mandate Holder) எனப் படுவார். எனவே, வாடிக்கையாளர் தமது கணக்கை வேறுநபரின் மூலம் கையாள விரும்பினால், தமது அதிகார அளிப்படைவை எழுத்து மூலம் வங்கியருக்கு தெரியப் படுத்துதல் வேண்டும். மேலும் அதிகாரம் பெற்றவரின் மாதிரிக் கையொப்பங் களையும், வங்கியர் தனித்தாளில் வாங்கிக் கொண்டு, அதைத் தமது பதிவேட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

7. முதலில் செலுத்தும் தொகையை, ரொக்கமாகவே செலுத்த வேண்டும் (Initial payment must be in cash):

வங்கியில் கணக்கு துவக்கும் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு குறையாத ஒரு தொகையை, ரொக்கமாகவே முதலில் செலுத்த வேண்டும். எடுத்த எடுப்பிலேயே காசோலையைச் செலுத்தி கணக்கை துவக்க வங்கியர் அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு அனுமதித்தால், காசோலையை மட்டும் வசூலித்துக் கொண்டு, பின்னர் அக்கணக்கை வாடிக்கையாளர் எப்பொழுதும் இயக்காமல் விட்டுவிடலாம். இதனால், வங்கியரின் நேரம் வீணாகிறது. எனினும், ஒரு விண்ணப்பதாரர் ரொக்கத்தோடு காசோலையையும் செலுத்துவதில் தவறில்லை. இருப்பினும் செல்லேட்டில் (Pass Book), முதல் பதிவுக் குறிப்பாக (First Entry) ரொக்கமாகச் செலுத்தப்பட்ட தொகையே வரவு வைக்கப்படுதல் வேண்டும். சில தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் வங்கிக்கு நன்கு அறிமுகம் ஆனவர்களின் காசோலைகளை முதல் வரவாகப் பெற்றுக் கொண்டு கணக்கு ஆரம்பித்தல் தடை செய்யப்படவில்லை. எனினும், இக்காசோலை வசூலாகும் முன்பு காசோலைப் புத்தகம் (Cheque Book) தருவதை வங்கியர் தவிர்த்துவிட வேண்டும்.

8. வாரிசுதாரரின் பெயர் நியமனம் (Nomination):

வங்கியில் கணக்கு துவக்கிய விண்ணப்பதாரர் ஒருக்கால் இறந்து விட்டால், அக்கணக்கில் உள்ள தொகையானது, யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவரது பெயர், வயது, முழு முகவரி, உறவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பதாரர், தமது விண்ணப்பப் படிவத்தின் வாயிலாகவே அத்தகு நபரை நியமிக்க வேண்டும். இது பெயர் நியமனம் எனப்படுகிறது.

(2) நிலை வைப்பீட்டுக் கணக்குகளைத் துவக்கும் நேர்வில் (In case of opening of Fixed Deposit Accounts):

1. உரிய படிவத்திலான விண்ணப்பம் (Application on the prescribed form):

வங்கியில் நிலை வைப்பீடு செய்ய விரும்பும் விண்ணப்பதாரர், அதற்குரிய

விண்ணப்பப் படிவத்தை வங்கியரிமிருந்து பெற்று, அதில் தன்னுடைய பெயர், தந்தை/கணவனின் பெயர், தொழில், முழு முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு, தான் நிலை வைப்பீடு செய்ய விழையும் தொகை, எவ்வளவு காலத்திற்கு அத்தொகை வைப்பீடாக இருக்க வேண்டியது எனும் விபரங்களையும் குறிப்பிட வேண்டும். தனது மாதிரிக் கையொப்பத்தையும் இட வேண்டும்.

2. அறிமுகம் (Introduction):

நிலை வைப்பீடு செய்ய பொதுவாக அறிமுகம் தேவையில்லை. எனினும் வங்கியியல் வழக்கத்தின்படி, அவ்வங்கியில் கணக்கு வைத்திருக்கும் பொறுப்பான நபர் ஒருவர், விண்ணப்பதாரரை தனக்கு இவ்வளவு காலமாகத் தெரியும் என்றும், அவர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி சரியானதே என்றும் குறிப்பிட்டு, அதன் கீழ் தனது கையொப்பத்தை இட வேண்டும்.

3. வாரிசுதாரரின் பெயர் நியமனம் (Nomination):

வைப்பீடு செய்யும் விண்ணப்பதாரர் ஒருக்கால், வைப்பீட்டுத் தொகை வங்கியிலிருக்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்துவிட்டால், அத்தொகை யாருக்கு போய்ச் சேர வேண்டும் என்பதை அவரது பெயர், வயது, முழு முகவரி, உறவு ஆகியவற்றை தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும். இவ்வாறு பெயர் நியமனம் செய்யப்படுபவர், ஒரு இளவராக (Minor) இருக்கும்பட்சத்தில், அவரது காப்பாளரின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். இளவரின் பெயரில் அவரது காப்பாளர், நிலை வைப்பீடு செய்யலாம். அப்பொழுது அக்காப்பாளர் மேற்படி இடைப்பட்ட காலத்தில் இறந்துவிட்டால், அத்தொகையை யாருக்கு கொடுப்பது என்பது குறித்தும் பெயர் நியமனம் செய்யலாம். இது ஒரு மிக முக்கியமான நடைமுறையாகும்.

4. நிலை வைப்பீட்டு இரசீது வழங்குதல் (Issuing Fixed Deposit Receipt):

விண்ணப்பதாரர் வைப்பீடு செய்த தொகையைப் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக, வங்கியர் நிலை வைப்பீட்டு இரசீது ஒன்றை வழங்குதல் வேண்டும். அதில் விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட விபரங்கள் காணப்படும். மேலும் அவ்வைப்பீடு எந்தத் தேதியில் முதிர்வடைகிறது, வட்டி வீதம் யாது, முதிர்வின் பொழுது வட்டியுடன் சேர்த்து கிடைக்கும் தொகை எவ்வளவு என்பதையும் வங்கியர் குறிப்பிட வேண்டும்.

5. வட்டி வழங்கல் (Payment of Interest):

பொதுவாக நிலை வைப்பீட்டின் மீதான வட்டி, அதன் காலக் கெடு முடிவடைந்து முதிர்வடையும் போது வங்கியரால் வைப்பீடு செய்யப்பட்ட

தொகையுடன் சேர்த்துக் கொடுக்கப்படும் என்றாலும், விண்ணப்பதாரர் விரும்பினால், அவ்வட்டியை காலாண்டிற்கு ஒரு முறை அல்லது அரையாண்டிற்கு ஒரு முறையும் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை அவருக்கு அவ்வங்கியில் சேமிப்பு கணக்கிருந்தால், அதில் வரவு வைக்கப்படும். ஆனால் இதற்குண்டான அறிவுறுத்தல்களை (instructions) வங்கியருக்கு, விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்திலேயே குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும். எனினும் விண்ணப்பதாரர் அவ்வட்டியை நேர்முகமாக வங்கியின் ரொக்க மேடையிலும் (cash payment counter) பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு வட்டி பெறும் பொழுது, வங்கியர் அவ்விண்ணப்பதாராரிடமிருந்து நிலை வைப்பீட்டு இரசீதைப் பெற்று, அதன் பின்புறம் வட்டி கொடுத்த விபரத்தை மேலெழுத்துச் செய்து திரும்ப அவ்விண்ணப்பதாராரிடமே வழங்குதல் வேண்டும்.

6. நிலை வைப்பீட்டின் பேரில் கடன் பெறல் (Loan on Fixed Deposit):

நிலை வைப்பீட்டுத் தொகையில் 75 சதவீதத்தை கடனாகப் பெற விண்ணப்பதாரருக்கு உரிமை உண்டு. இது குறித்து நாம் ஏற்கனவே விரிவாக சென்ற வினாவின் விடையில் கண்டுள்ளோம்.

7. முதிர்வின் பொழுது நடைமுறை (Procedure on maturity):

நிலை வைப்பீட்டிற்குரிய காலக் கெடு முடிவதைத்தான், நாம் 'முதிர்வடைதல்' என்கிறோம். எனவே முதிர்வடைந்த வைப்பீட்டுத் தொகையை வட்டி சேர்த்து விண்ணப்பதாரர் பெறலாம். அல்லது வட்டி சேர்ந்த அத்தொகையை அப்படியே மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மறு வைப்பீடு செய்ய வங்கியரை அறிவுறுத்தலாம். அல்லது வட்டியை மட்டும் பெற்றுக் கொண்டு, அசல் தொகையை மறு வைப்பீடு செய்யவும் அறிவுறுத்தலாம். இது நிலை வைப்பீட்டைப் புதுப்பித்தல் (renewal of fixed deposit) எனப்படுகிறது. இவ்வாறு செய்யாத வைப்பீடு களுக்கு வங்கியர் வைப்பீட்டிற்குரிய வட்டி வீதத்தை தருவதில்லை. அதாவது வைப்பீடு முதிர்வடைந்த 14 நாட்களுக்குள், புதுப்பிக்கப்பட வேண்டும். இல்லாது போனால், அதற்கு சேமிப்பு வங்கிக் கணக்கிற்குரிய குறைந்த வட்டி வீதமே வழங்கப்படும். முதிர்வடையும் முன்பாகக் கூட வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெறலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட சதவீத வட்டியை வங்கியர் பிடித்துக் கொள்வர்.

8. கல்வியறிவற்றவர் செய்யும் நிலை வைப்பீடு (Fixed Deposit by illiterate):

கல்வியறிவற்ற நபர், கையொப்பமிட முடியாது. எனவே அவருக்குரிய விண்ணப்பப் படிவத்தை இரு சாட்சிகளின் முன்னிலையில், அவர் சொல்ல மற்றொருவர் கேட்டு பூர்த்தி செய்தல் வேண்டும். அவரது இடது கை பெருவிரல் ரேகையை விண்ணப்பப் படிவத்தில் அவ்விரு சாட்சிகளின் முன்னிலையில்

வங்கியர் பெற வேண்டும். அவ்விரு சாட்சிகளும் தங்கள் பெயர் மற்றும் முழு முகவரியுடன் கையொப்பமிட வேண்டும்.

முடிவுரை:

மேற்கண்டவற்றில் உரிய முறையிலான விண்ணப்பம், அறிமுகம், பெயர் நியமனம் ஆகியவை குறித்த நடைமுறைகளும், வங்கியர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சேமிப்பு, நடப்பு மற்றும் நிலை வைப்பீட்டுக் கணக்குகளுக்கு பொதுவானதாகும். இத்தகு நடைமுறைகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் வங்கியர் பின்பற்றாமல், கணக்குத் தொடங்கினால் அவர் எதிர்காலத்தில் பல இன்னல்களுக்கும், இழப்பிற்கும் உள்ளாக நேரிடலாம்.

3. Explain the risks in opening Accounts without proper introduction. (உரிய அறிமுகம் இல்லாமல் துவக்கப்படும் கணக்குகளால் ஏற்படும் இன்னல்களை விளக்குக.)

(அல்லது)

What are the risks run by a banker in opening a account without obtaining a suitable introductory reference? (உரிய அறிமுகக் குறிப்பு பெறாமல் ஒரு கணக்கைத் தொடங்குவதில் வங்கியரால் எதிர்கொள்ளப்படும் இன்னல்கள் யாவை?)

(அல்லது)

Why is introduction considered necessary for opening a new current account? Explain. (ஒரு புதிய நடப்புக் கணக்கைத் தொடங்குவதில் அறிமுகம் இன்றியமையாதது என்று ஏன் கருதப்படுகிறது? விளக்குக.)

முன்னுரை:

உரிய முறையிலான அறிமுகம் இல்லாமல், விண்ணப்பதாரரின் கணக்கைத் துவக்க அனுமதிப்பது, வங்கியரின் கவனமின்மையையே சுட்டிக் காட்டுகிறது. இது மோசடி செய்தல், திரித்துக் கூறல் போன்ற வழக்குகளுக்கு எளிதாக வழி வகுக்கிறது. இதனால் வங்கியர் மட்டுமல்ல, பொதுமக்களும் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அவை வருமாறு.

வங்கியருக்கு ஏற்படும் இன்னல்கள் (அல்லது) ஏன் அறிமுகம் இன்றியமையாதது?

(a) வங்கியர் சட்டப்பூர்வமான பாதுகாப்பைப் பெறவியலாது (The

Banker cannot avail of the statutory protection): மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 131–வது பிரிவின்படி, வாடிக்கையாளர் ஒருவருக்கு உரிமையில்லாத அல்லது குறைபாடுடைய உரிமையுடைய காசோலை, மாற்றுச் சீட்டு ஆகியவற்றை அவருக்காக வங்கியர் வசூலிக்கும் பொழுது, வங்கியருக்கு சட்டப்படியான பாதுகாப்பு உள்ளது. இங்கு வங்கியர் உரிய கவனத்துடனும், நன்னம்பிக்கையுடன் செயல்பட்டிருந்தால், அக்காசோலையின் உண்மையான உரிமையாளருக்கு எதிராக எவ்வித பொறுப்பும் இல்லை. ஆனால் அதே சமயத்தில் விரும்பத் தகாத அல்லது உரிய அறிமுகம் இல்லாத நபர்களின் பெயரில் கணக்குத் துவக்கி, அதில் அவர்கள் வசூலிப்பதற்காக முன்னிடும் திருடப்பட்ட அல்லது பொய்யாகப் புனையப்பட்ட காசோலை, மாற்றுச் சீட்டு போன்றவைகளை வங்கியர் வசூலித்துக் கொடுத்தால், மேற்படி பிரிவு 131–ன் சட்டப் பாதுகாப்பைப் பெற இயலாது. அவர்கள் அப்பணத்தை கணக்கிலிருந்து எடுத்துக் கொண்டு, தலை மறைவாகிவிடுவர். பின்னிட்டு, மேற்படி காசோலை முதலியவற்றின் உண்மையான உரிமையாளருக்கு வங்கியர் பொறுப்பாகிவிடுவர்.

(b) அதிகப் பற்றினால் ஏற்படும் இன்னல் (Risk in case of over-draft): முறையாக அறிமுகம் செய்து வைக்கப்படாத வாடிக்கையாளருக்கு வங்கியர் கவனக்குறைவாக அல்லது தவறுதலாக அதிகப் பற்று கொடுத்து, அதை வாடிக்கையாளர் திரும்பச் செலுத்தாமல் தலைமறைவாகிவிட்டால், அதற்கு வங்கியரே பொறுப்பாகிவிடுவார். வாடிக்கையாளர் முறையான அறிமுகம் உள்ளவ ராக இருந்திருப்பின், அவர் மீது வழக்கிட்டு அதிகப் பற்றுத் (கடன்) தொகையை வசூலித்துவிடலாம். மேற்கண்ட நிகழ்வில் இது முடியாமல் போய்விடுகிறது.

(c) விடுவிக்கப் பெறாத நொடிப்புநிலையின் போது ஏற்படும் இன்னல் (Risk in case of undischarged insolvent): முறையாக அறிமுகம் செய்யப்படாத ஒரு வாடிக்கையாளர் நொடிந்தவராக நீதிமன்றத்தால் அறிவிக்கப் பட்டால், அவர் அதிலிருந்து விடுவிக்கப்படும் வரை, அவரது அனைத்து தொகைகளும், சொத்துக்களும் பற்றுகைக்கு (ஜப்திக்கு) உரியதாகிவிடும். எனவே அவரால் வங்கியில் செய்யப்பட்ட அனைத்து வைப்பீடுகளும் ஜப்திக்குரியவையே.

(d) காசோலைகளை தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் இன்னல் (Risk of misusing the cheques): கணக்கு வைத்திருப்பவர் தம் விருப்பப்படி காசோலைகளைப் பயன்படுத்தலாம். எனினும், முறையான அறிமுகம் இல்லாத வாடிக்கையாளர், இவ்வுரிமையைத் தவறாகப் பயன்படுத்தி, கணக்கில் போதிய பணமில்லாதிருக்கும் பொழுது, காசோலைகளை பொதுமக்களிடம் கொடுத்து அவர்களை ஏமாற்றிவிடலாம். மேலும், வங்கியருக்கும் இவ்வாறு கொடுக்கப்பட்ட காசோலைகள் நெருக்கடியை ஏற்படுத்திவிடும்.

(e) மூன்றாம் நபரின் காசோலைகளை வசூலித்துக் கொடுப்பதில் ஏற்படும் இன்னல் (Risk in case of collection of third party cheques): நடப்புக் கணக்கில் மூன்றாம் நபரின் பெயரில் உள்ள காசோலைகளை வசூலிக்க வசதி உள்ளது. எனவே, முறையான அறிமுகம் இல்லாத வாடிக்கையாளர், தனக்கு உரிமையில்லாத அல்லது திருடப்பட்ட காசோலைகளைப் பொய்யான மேலெழுத்து செய்து, தனது கணக்கின் மூலம் வசூலித்து, அத்தொகையை எடுத்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு. இதனால், வங்கியர் முறையற்ற உரிமை மாற்றம் (Conversion) செய்த குற்றத்துக்கு உள்ளாவதோடு, அக்காசோலையின் உண்மையான உரிமையாளருக்கும் பொறுப்புடையவராவார்.

முடிவுரை:

எனவே, தவறான நபர்கள் வங்கி வசதிகளையும் காசோலை வசதி களையும் பெறுதலைத் தடுத்து, வங்கியரின் இன்னலைத் தவிர்க்க, முறையான அறிமுகம் இன்றியமையாததாகும்.

4. Discuss the legal aspects of entries in a Pass book. (வங்கிச் செல்லேட்டில் உள்ள பதிவுகள் பற்றிய சட்ட நிலைமையை விவரி.)

(அல்லது)

"The proper function of a pass book is to constitute a conclusive and unquestionable record of the transaction between a banker and customer and it should be recognised as such"- Explain. ("ஒரு வங்கி கணக்கு புத்தகத்தின் சரியான செயல்முறை, ஒரு வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவுற்ற மற்றும் மறுக்க முடியாத ஒரு சான்று ஆகும். மேலும் அவ்வாறே அது அங்கீகரிக்கப்பட வேண்டும்" – இக்கூற்றை விளக்குக.)

(அல்லது)

"The Pass Book by itself cannot be relied upon as 'settled account'." Discuss this statement with regard to the position of the banker in respect of entries made in the Pass Book. ("வங்கிச் செல்லேட்டையே, ஒரு 'தீர்மானமான கணக்காக' நம்ப முடியாது". இக்கூற்றை செல்லேட்டில் செய்யப்படும் பதிவுகள் தொடர்பாக வங்கியரின் நிலையுடன் விவாதிக்க.)

(அல்லது)

What is the effect of entries in the pass book which are favourable

to the customer? (வங்கிச் செல்லேட்டில் வாடிக்கையாளருக்கு சாதகமாக உள்ள பதிவுகளின் விளைவு யாது?)

(அல்லது)

Pass Book and the legal effects of its entries - Write short notes. (வங்கி செல்லேடு மற்றும் அதன் குறிப்புகளின் சட்ட விளைவுகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Pass book - Write short notes. (வங்கிச் செல்லேடு – சிறு குறிப்பு வரைக.)

செல்லேடு [Pass Book] – விளக்கம்:

'வங்கிக் கணக்குப் புத்தகம்' என்பதை கலைச் சொல்லில் நாம் 'செல்லேடு' என்றழைக்கிறோம். இச்செல்லேடு, வங்கியில் சேமிப்பு வங்கிக் கணக்கு அல்லது நடப்புக் கணக்கு தொடங்கும் வாடிக்கையாளர்களுக்கு வங்கியர் வழங்கும் சிறிய கையடக்கமான புத்தகமாகும். வாடிக்கையாளர்கள் தம்மிடம் செய்யும் வரவு–செலவுகளை வங்கியர் தங்கள் பேரேட்டில் (Ledger) பதிந்து கொள்வர். அதுபோல், அவ்வரவு–செலவுகளை வங்கியர், வாடிக்கையாரிடம் கொடுக்கப்பட்டுள்ள செல்லேட்டில் பதிந்து கொடுப்பார். எனவே வங்கியருக்கு அவரது பேரேடு; வாடிக்கையாளருக்கு அவரது செல்லேடு. இவை இரண்டும் வங்கியருக்கும், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கும் இடையில் நடக்கும் வரவு–செலவுகளைக் காட்டும் ஆவணங்களாக உள்ளன.

செல்லேட்டின் நிரல் பத்திகள் [Columns]:

செல்லேட்டில் முக்கியத்துவம் வாய்ந்த நிரல் பத்திகள் (Column) மூன்றாகும். வாடிக்கையாளர் தனது கணக்கிலிருந்து பணம் எடுத்தால், அது பற்று பத்தியிலும் (Debit Column), பணம் செலுத்தினால் அது வரவு பத்தியிலும் (Credit Column) குறிக்கப்படும். இவ்வாறு எடுத்தல் மற்றும் செலுத்தினால் ஏற்படும் இருப்பு மாறுபாடு, இருப்பு பத்தியில் (Balance Column) வங்கியரால் குறித்துக் கொடுக்கப்படும்.

செல்லேடு வழங்கப்படுவதன் நோக்கம்:

வாடிக்கையாளருக்கு செல்லேடு வழங்குவதன் நோக்கம், அவரது கணக்கில் அவர் செய்யும் வரவு–செலவுகளை, அவருக்கு வங்கியர் அறியச் செய்வதேயாகும். வாடிக்கையாளர் வரவு–செலவுகள் மட்டுமல்லாமல், வங்கியரால் செய்யப்பட வேண்டிய வேறு சில பதிவுகளையும் வாடிக்கையாளர் அறியச்

செய்வதாகும். எடுத்துக்காட்டாக, அக்கணக்கு சேமிப்புக் கணக்காக இருக்கும் பட்சத்தில், அதற்கு வங்கியர் வழங்கும் வட்டி, நிருணயிக்கப்பட்ட இருப்புத் தொகையை விட குறைந்த இருப்புத் தொகையை அக்கணக்கு கொண்டிருப்பின் அதற்கு வங்கியர் விதிக்கும் கட்டணங்கள் ஆகியவையும் செல்லேட்டில் குறிக்கப்படும்.

செல்லேடு' என்பதன் பெயர்க் காரணம்:

வங்கியில் கணக்கு துவக்கியவுடன், அவருக்கு வங்கியர் செல்லேடு வழங்குகிறார். பின்னிட்டு தனது கணக்கில் அவ்வாடிக்கையாளர் செய்யும் வரவு–செலவுகளை குறித்துக் கொடுப்பதற்காக, அவர் தனது செல்லேட்டை வங்கியரிடம் கொடுக்கிறார். வங்கியர் தனது பேரேட்டில் அவ்வாடிக்கையாளரின் பெயரில் உள்ள பக்கத்திலிருந்து அவர் செய்துள்ள வரவு–செலவுகளை அச்செல்லேட்டில் குறித்து, மீண்டும் அதை வாடிக்கையாளர் வசமே ஒப்படைக்கிறார். எனவே இது வாடிக்கை யாளரிடமிருந்து வங்கியரின் கைக்கும், வங்கியரிடமிருந்து வாடிக்கையாளரின் கைக்கும் மாறிக் கொண்டே உள்ளது. இவ்வாறு மாறிச் செல்லும் நிகழ்விற்கு ஆங்கிலத்தில் 'Pass' என்று கூறுவர். இதனாலேயே செல்லேடு, ஆங்கிலத்தில் 'Pass Book' என்று அழைக்கப்படலாயிற்று. இந்த ஏடு இவ்வாறு மாறிமாறி செல்வதால், தமிழில் 'செல்லும் ஏடு' எனப்பட்டு, தற்பொழுது சுருக்கமாக 'செல்லேடு' எனப்படலாயிற்று (Pass book is called so, because it passes periodically from the banker to the customer and vice versa.).

செல்லேடு குறித்த முக்கியக் கருத்துக்கள் [Important Points regarding a Pass Book]:

1. வாடிக்கையாளர் செய்யும் வரவு–செலவுகளை செல்லேட்டில் பதிவு செய்யும் உரிமை வங்கியருக்கே உள்ளது. வாடிக்கையாளர் இவ்வேட்டினைத் தம்வசம் வைத்திருந்தாலும், இதில் பதிவு செய்யும் உரிமை இல்லை. வெளிப்படை யாகத் தெரியும் தவறுகளைக் கூட தாமே சரி செய்ய இயலாது. வங்கியரிடம் கொடுத்தே சரி செய்து கொள்ள வேண்டும். அதில் செய்யப்படும் பதிவுகளுக்கு எதிர் பத்தியில், அதை பதிவு செய்யும் வங்கி அலுவலர் சுருக்கொப்பம் (initials) செய்தல் வேண்டும்.

2. செல்லேட்டை வாடிக்கையாளர் வங்கியரிடம் கொடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும், அத்தேதி வரை நிகழ்ந்த அனைத்து வரவு–செலவு நடவடிக்கை களையும் (up-to-date entries) பதிவு செய்து வங்கியர், வாடிக்கையாளரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

3. செல்லேடு வழங்குவதற்காகத் தனியாக கட்டணம் ஏதும் வசூலிக்கும் வழக்கம் இல்லை. வாடிக்கையாளர் தமது செல்லேட்டைத் தொலைத்து விட்டால், மாற்றுச் செல்லேட்டை (Duplicate Pass Book) வங்கியர் தரலாம். அவ்வாறு, தரும்போது செல்லேட்டின் முகப்பில் 'மாற்றுச் செல்லேடு' என்று வங்கியர் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

4. வாடிக்கையாளர் சேமிப்பு வங்கிக் கணக்கைத் துவக்கியிருந்தால், 'பணம் எடுக்கும் சீட்டின்' (withdrawal slip) மூலம் பணத்தை திரும்பப் பெறும் ஒவ்வொரு நேர்விலும், அச்சீட்டுடன் செல்லேட்டையும் வங்கியரிடம் வாடிக்கை யாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

5. தனது கணக்கை வாடிக்கையாளர் முடித்துக் கொண்டாலும், செல்லேடு வாடிக்கையாளர் வசமே இருக்கும். வங்கியர் திரும்பப் பெறுவதில்லை.

6. சில வங்கிகள், எடுத்துக்காட்டாக, ஐசிஐசிஐ வங்கி, எச்டிஎஃப்சி வங்கி போன்றவை வாடிக்கையாளர்களுக்கு செல்லேடு வழங்குவதில்லை. மாறாக மாதத்திற்கொரு முறை, கணக்கு விபர அறிக்கையை (Statement of Account) அனுப்பிவிடுகின்றன. மேலும் இத்தகு வங்கிகளின் இணைய தளத்தின் (Internet web site) வாயிலாகவும், வாடிக்கையாளர் தனது கணக்கின் வரவு–செலவுகளை அறிந்து கொள்ளலாம். அதிலிருந்து அச்செடுத்துக் (Print-out) கொள்ளலாம்.

செல்லேட்டில் உள்ள பதிவுகளின் சட்ட நிலைப்பாடு [Legal aspects of entries in the Pass Book] (அல்லது) செல்லேட்டின் பதிவுகளும் அதன் விளைவுகளும் [Enteries in the Pass Book and their Effects]:

பொதுவாக செல்லேடு வாடிக்கையாளரின் கணக்கின் நம்பகமான, ஆதாரபூர்வமான, உண்மையான பதிவேடாகக் கருதப்படுகின்றது. தவறுகள் ஏற்படுவது மனித இயல்பாதலால், சில நடவடிக்கைகள் தவறாகப் (பிழையாகப்) பதிவு செய்யப்பட்டு விடலாம். தொகை தவறாக எழுதப்படுவதும், பற்று எழுத வேண்டியதை வரவில் எழுதி விடுவதும் இயல்பாக நிகழக் கூடியவையே. எனினும், அன்றாடம் வங்கியர் இருப்புநிலைக் குறிப்பு (Trial Balance) பார்ப்பதால் பெரும்பாலும் இத்தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுவிடும். எனவே, செல்லேடு நம்பகமான அல்லது ஆதாரபூர்வமான பதிவேடா என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. நீதிமன்றங்களும் தம்முள் வேறுபடுகின்றன. எனவே, செல்லேட்டின் முக்கியமான பணி என்ன, அதில் உள்ள பதிவுகளைப் பொறுத்து வங்கியரின் சட்ட நிலைப்பாடு யாது, அவை வங்கியரைக் கட்டுப்படுத்துமா, அங்கு வாடிக்கை

யாளரின் கடமை என்ன, அதில் உள்ள பதிவுகளை நம்பலாமா, என்பனவெல்லாம் ஆய்விற்குரிய கருத்துக்களாகும் (aspects). இவைபற்றி அறிஞர்களும், நீதிமன்றங்களும் உரைத்துள்ள கருத்துகள் வருமாறு.

அறிஞர் சர் ஜான் பேஜட்டின் கருத்து [Sir John Paget's view] :

சர் ஜான் பேஜட் எனும் அறிஞர், "வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே நடக்கும் செயல்தொடர்புகள் குறித்து ஒரு அறுதியான மற்றும் அய்யத்திற்கிடமில்லாத பதிவேட்டை உருவாக்குதலைப் பூர்த்தி செய்ய வேண்டியதுதான் செல்லேட்டின் உரிய பணியாகும்; இது அவ்வாறே அங்கீகரிக்கப் படவும் வேண்டும்...." [1] என்று குறிப்பிடுகின்றார்.

தனது இக்கருத்திற்கு ஆதாரமாக சர் ஜான் பேஜட், **Deveynes v. Noble**[2] எனும் மிக முக்கியமான வழக்கில் ஆங்கில நீதிமன்றம் கூறிய கருத்தைச் சுட்டிக் காட்டுகிறார். மேற்படி வழக்கில், செல்லேட்டின் தன்மை மற்றும் விளைவு குறித்து விசாரணை நடத்தும்படி நீதிமன்றம் ஆணையிட்டது. இந்த விசாரணை அறிக்கையின் கருத்துக்களை சுட்டிக்காட்டி மேற்படி வழக்கில் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. அதில், "வாடிக்கையாளரிடம் செல்லேட்டை ஒப்படைத்தவுடன் அவர் அதை ஆராய்கிறார்; அதில் ஏதேனும் பிழை அல்லது விடுகை இருக்கு மானால், அதைத் திருத்துவதற்காக வங்கிக்கு கொண்டு வருகிறார் அல்லது வங்கிக்கு திருப்பி அனுப்புகிறார்; இல்லையெனில், அவரது மௌனம், அதிலுள்ள பதிவுகள் சரியானவைதான் என்று எடுத்துக் கொள்ளப்படும்"[3] என்று கருத்துரைக்கப்பட்டிருந்தது.

அமெரிக்க நீதிமன்றங்களின் கருத்து [View point of the Courts of United States]:

மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, அமெரிக்க நாட்டில் உள்ள நீதிமன்றங்களால் பல வழக்குகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எடுத்துக்

1. "The proper function which the Pass Book ought to fulfil is to constitute a conclusive and unquestionable record of transactions between the banker and the customer and it should be recognised as such....." - **Sir John Paget, Law of Banking (4th Edition), p. 294.**
2. (1816) 1 Meriavale 530, 535
3. "he (customer) examines it (pass book) and if there appears any error or omission, brings and sends it back to be rectified; or if not, his silence is regarded as an admission that the entries are correct."

காட்டாக, **Morgan v. United States Mortgage and Trust Co.**[1] – எனும் வழக்கில், "செல்லேட்டில் செய்யப்பட்ட பதிவுகள் சரியானதா என்பது குறித்து ஆய்வு செய்வதில் வாடிக்கையாளர் கவனக்குறைவாக இருந்தால் அல்லது ஆய்வு செய்யாமல் விட்டுவிட்டால், அது வாடிக்கையாளரின் தவறுகை ஆகும்; இது அச் செல்லேட்டுப் பதிவேடு, ஒரு தீர்மானமான மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு என்பதற்கு சான்றாகிவிடும்"[2] என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இத்தீர்ப்புகளிலிருந்து, வாடிக்கையாளர் தமது செல்லேட்டில் உள்ள பதிவுகளைச் சரிபார்க்க வேண்டியது அவரது கடமை என்பதும், இதில் அவர் தவறி விட்டால், அது அவரது கவனக்குறைவாகக் கருதப்படும் என்பதும், இதனால் அவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு வங்கியரைப் பொறுப்பாக்க முடியாது என்பதும் தெளிவாகிறது. ஆனால் இதற்கு மாறுபட்ட கருத்துகளும் நிலவுகின்றன.

நீதியரசர் பிரே அவர்களின் மாறுபட்ட கருத்து [Justice Bray's divergent view]:

பின்னர் எழுந்த சில ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளில், சர் ஜான் பேஜட் கூறிய கருத்து அங்கீகரிக்கப்படவில்லை. **Keptigalla Rubber Estates Co. v. The National Bank of India**[3] - எனும் ஆங்கில வழக்கில் **நீதியரசர் பிரே** அவர்கள், "ஒரு செல்லேட்டை வாடிக்கையாளர் அல்லது அவரது எழுத்தர் வங்கிக்கு வெளியே எடுத்துச் சென்றுவிட்டு, எவ்வித ஆட்சேபணையுமின்றி திருப்பிக் கொண்டு வருகிறார் என்பதாலேயே வங்கிக்கும் அவரது வாடிக்கையாளருக்கும் இடையே கணக்கு தீர்க்கப்பட்டுவிட்டதாகவும், அது இருவரையும் கட்டுப்படுத்துவதாகவும் கருத முடியாது"[4] என்று கூறினார். எனினும் "ஒரு வணிக நிறுமம், செல்லேட்டில் உள்ள பதிவுகளைச் சரிபார்த்த பிறகு, அதற்கு அடையாளமாகக் கோட்டுக் குறியிட்டு, (ticking) அச்செல்லேட்டை திருப்பிக் கொடுக்கிறது என்றால், அந்நிறுமம் (வாடிக்கையாளர்) அச்செல்லேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்து, அப்பதிவுகள் சரிதான் என்று ஏற்றுக் கொண்டு விட்டது என்பதற்கு அக்குறியீட்டை முதற்தோற்றச் சான்றாக (prima facie evidence) பாவிக்க வேண்டும்" என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

1. (1913) 208 New York Rep. 218
2. "negligence or omission on the part of the customer to examine the correctness of the entries in the pass book is a fault on his part and thus renders pass book record as an evidence of settled and accepted account"
3. (1909) 2 K.B. 1010
4. "When a pass book is taken out of the Bank by the customer or some clerk of his and returned without objection, the account between the bank and his customer is regarded as settled and is binding on both"- **Justice Bray**

Chatterton v. London and County Bank[1] எனும் வழக்கிலும், "செல்லேட்டின் பதிவுகளில் உள்ள தவறைக் கண்டுபிடிக்காததால் வாடிக்கையாளர் கவனக்குறைவாக நடந்தார் என்று கூற முடியாது என்றும், பதிவுகளைச் சரி பார்க்க வேண்டிய கடமை வாடிக்கையாளருக்கு கிடையாது" என்றும் கூறப்பட்டது.

இந்திய நீதிமன்றங்களின் கருத்து [View of the Indian Courts]:

இங்கிலாந்து நீதிமன்றங்கள் சர் ஜான் பேஜட் கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டு முதலில் சில வழக்குகளில் தீர்ப்பு வழங்கினாலும், பின்னர் எழுந்த பல்வேறு வழக்குகளில் தமது நிலையை மாற்றிக் கொண்டு விட்டன. எடுத்துக்காட்டாக, நீதியரசர் பிரே வழங்கிய தீர்ப்பைக் கூறலாம். எனவே, மாறுபட்ட கருத்தின்படி, ஒரு வாடிக்கையாளர் தமது செல்லேட்டைச் சரிபார்க்க வேண்டிய கடமை கொண்டவரல்ல, என்பது ஒரு நிலைபெற்ற தீர்ப்பாகிவிட்டது. இந்த ஆங்கில வழக்கு வழிச் சட்டங்களைப் பின்பற்றி நமது இந்திய நீதிமன்றங்களும் பல வழக்குகளில் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளன. இங்கு அமெரிக்க நீதிமன்றங்கள் வாடிக்கையாளர்களுக்கு விரோதமாக வழங்கிய தீர்ப்பை இந்திய நீதிமன்றங்கள் ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, **K.S.Ramachandran v. Registrar of Co-operative Societies, Madras**[2] எனும் வழக்கில், கூட்டுறவுக் கடனுதவிச் சங்கமொன்றின் துணை விதிகளின்படி செல்லேட்டின் பதிவுகளில் அச்சங்கத்தின் செயலாளர் அல்லது இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் கையொப்பமிட வேண்டும். எனினும், செல்லேட்டின் பதிவுகளில் கையொப்பமிடுவதற்கு வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டிராத ஓர் எழுத்தர் கையொப்பமிடுவதற்கு அச்சங்கம் அனுமதித்தது. "செல்லேட்டின் பதிவுகளில் சங்கத்தின் செயலாளர் அல்லது இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் கையொப்பமிடாததால், அந்தப் பதிவுகளை அடியோடு தள்ளிவிட முடியாது" என்று **சென்னை உயர் நீதிமன்றம்** வங்கியருக்கு எதிராக தீர்ப்பளித்தது. அதாவது செல்லேட்டில் வங்கியர் தவறுகை ஏதும் புரிந்திருப்பின், அதற்குரிய பொறுப்பு அவ்வங்கியரையே சாரும் என்பது இவ்வழக்கின் சாரமாகும்.

அடுத்ததாக, **Canara Bank v. Canara Sales Corporation and others**[3] - எனும் மிக முக்கியமான வழக்கில், "செல்லேட்டில் காணப்படக் கூடிய

1. Times [London] 21st January, 1891
2. (1963) 33 Comp. cas. 807
3. (1987) 62 Comp. cas. p. 280

பிழை எதையும் வங்கியருக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை எதுவும் வாடிக்கை யாளருக்கு இல்லை. வாடிக்கையாளரின் பக்கம் சிறு சிறு கவனக்குறைவுகள் இருந்தாலும் அல்லது செல்லேட்டின் பதிவுகளில் உள்ள பிழைகளை காலத்தே கவனிக்காமல் அவ்வாடிக்கையாளர் செயலற்று இருந்தாலும், பொய்யாகப் புனையப்பட்டு (forged cheque) முன்னிடப்பட்ட காசோலைக்கு, வங்கியர் அளித்த தொகையைக் கூட திரும்பப் பெற வாடிக்கையாளருக்கு உரிமை உண்டு. வங்கியர் தங்களது இலாபத்திற்காக வங்கித் தொழிலைச் செய்கின்றனர்; வாடிக்கையாளர்களும் சில பலன்களைப் பெறுகின்றனர். அப்படி இருக்கும் பொழுது செல்லேட்டையும், வங்கியர் அனுப்பும் கணக்கு விபர அறிக்கையையும் (statement of account) வாடிக்கையாளர் மிகுந்த கவனத்துடன் பார்க்க வேண்டும் என்று வங்கியர் வாடிக்கையாளரைக் கட்டாயப்படுத்தினால், அங்கு வங்கியர் தமது வங்கித் தொழிலை இலாபகரமாக நடத்தவியலாது. செல்லேடு மற்றும் வங்கியர் அனுப்பும் கணக்கு விபர அறிக்கையில் உள்ள பதிவுகள் படிக்க முடியாதவாறு, முறையாக எழுதப்படாதவாறு அல்லது தெளிவற்றதாக இருத்தல் கூடாது என்பது பொது அறிவிற்கு எட்டிய ஒன்றாகும். வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் எப்போதும் ஒரு வித நம்பிக்கை உணர்வு நிலவி வருகிறது. இந்த நம்பிக்கையைத்தான் வங்கித் தொழிலும் நம்பியுள்ளது", என்று இந்திய உச்ச நீதிமன்றம் தெளிவாக வாடிக்கையாளருக்கு சார்பாக கருத்துரைத்தது.

செல்லேட்டுப் பதிவுகளின் விளைவுகள் [Effects of entries in the Pass Book]:

செல்லேட்டில் வங்கியர் பிழையாகச் செய்த பதிவுகளின் விளைவு யாது என்பது குறித்து நாம் அடுத்து ஆராய்தல் வேண்டும். 'பிழையான பதிவு' என்பதற்கு எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். (1) வாடிக்கையாளர் உண்மையில் செலுத்தியது ஒரு தொகை அல்லது வங்கியர் உண்மையில் வழங்கியது ஒரு தொகை. ஆனால் இதற்கு மாறான தொகையை செல்லேட்டில் பதிந்து விடுவதாகும். இத்தொகை உண்மையான தொகையைவிடக் கூடுதலாக அல்லது குறைவாக அமையலாம். (2) பற்றெழுத வேண்டியதை வரவாகவோ, அல்லது வரவைப் பற்றாகவோ மாற்றிப் பிழையாக செல்லேட்டில் எழுதுதல். இவ்வாறு பிழையாகச் செய்யப்படும் பதிவுகள் (1) வாடிக்கையாளருக்குச் சாதகமாக அல்லது (2) வங்கியருக்குச் சாதகமாக இருக்கலாம். எனவே செல்லேட்டுப் பதிவுகளின் விளைவுகளை மேற்கண்ட இரு தலைப்புகளின் கீழ் நாம் பின்வருமாறு காண்போம்.

வாடிக்கையாளருக்குச் சாதகமான பதிவுகள் (Entries favourable to the Customer) :

ஒரு செல்லேட்டின் பதிவுகளைப் பொறுத்தவரை, நீதிமன்றங்கள் வாடிக்கையாளர்களுக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கியுள்ளதை நாம் ஏற்கனவே கண்டோம். வாடிக்கையாளருக்குச் சாதகமான சில பதிவுகள் வருமாறு. (1) ஒரு முறை வரவு வைக்க வேண்டிய தொகையை இரண்டு முறை வரவு வைத்து விடுதல், (2) உண்மையான தொகையை விட அதிகத் தொகையை வரவு வைத்தல், (3) ஒரு வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்க வேண்டியதை இன்னொருவர் கணக்கில் வரவு வைத்தல், (4) உண்மையான தொகையை விடக் குறைந்த தொகையைப் பற்று எழுதுதல், (5) பற்று எழுத வேண்டியதை, எழுதாமல் விட்டு விடுதல்.

வாடிக்கையாளருக்குச் சாதகமான பதிவுகளால் ஏற்படும் சட்ட விளைவுகள் :

வாடிக்கையாளருக்கு சாதகமான பதிவுகள் என்றாலே, அவை வங்கியருக்குப் பாதகமானவை என்பது தெரிந்த விஷயம். எனவே இங்கு இருவரின் சட்டப்படியான நிலை என்ன என்பதை அறிதல் அவசியம்.

1. செல்லேட்டின் பதிவுகள் வங்கியாராலேயே செய்யப்படுகின்றன. எனவே இந்தப் பதிவுகளை வங்கியருக்கு எதிரான ஒரு சான்றாக பயன்படுத்தலாம்.

Mawji Shamji v. The National Bank of India[1] – எனும் வழக்கில், "செல்லேடு வாடிக்கையாளருக்குச் சொந்தமானது. அதில் வங்கி எழுதியுள்ள பதிவுகள், அறிக்கைகள் ஆகும். இவற்றின் மீது செயல்பட வாடிக்கையாளர் உரிமையுடையவர் ஆவார்" என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் பிழையான ஒரு பதிவின் பேரில் வாடிக்கையாளர் செயல்படும் முன்பாக, வங்கியர், தாம் செல்லேட்டில் செய்துள்ள பிழையை வாடிக்கையாளரிடம் சுட்டிக் காட்டி அதை திருத்திக் கொள்ளலாம்.

2. பிழையாக இருப்பினும், தமக்குச் சாதகமான பதிவினை உண்மை என்று நம்பி அத்தொகையைப் பெற வாடிக்கையாளர் காசோலை வரைந்து கொடுத்தால், அதன் மதிப்பை மறுக்க வங்கியருக்கு உரிமை இல்லை.

Holland v. Manchester and Liverpool District Banking Co. Ltd.[2] – எனும் வழக்கில், வாடிக்கையாளாரின் செல்லேட்டில், அவருக்கு உள்ளபடியாகச் சேர வேண்டிய தொகையை விட அதிகமான தொகையை வங்கியர் வரவு வைத்திருந்தார். இந்தப் பதிவின் அடிப்படையில், வாடிக்கையாளர் காசோலை யொன்றை வரைகிறார். இங்கு இந்தக் காசோலைக்கு பணம் கொடுக்க வங்கியர் மறுக்கவியலாது. அவ்வாறு மறுத்தால், வாடிக்கையாளரின் காசோலைக்குச் சட்ட

1. (1901) 25 Bom. 499 (515)

2. (1909) 25 T.L.R. 386

விரோதமாக பணம் கொடுக்க மறுத்ததற்காக வங்கியர் வாடிக்கையாளருக்கு இழப்பீடு வழங்க நேரிடும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

3. ஒரு வாடிக்கையாளர், வங்கி காட்டிய தவறான வரவுப் பதிவின் பேரில் செயல்பட்டு, தனது நிலையை தனக்கே குந்தகமாக மாற்றிக் கொண்ட பிறகு, அங்கு வங்கியர் அந்த வாடிக்கையாளரிடமிருந்து பணம் வசூலிக்க முரண் தடை செய்யப்படுவார் (If the customer acting upon the erroneous credit alters his position to his prejudice, the bank will be estopped from recovering the amount from the customer). சற்று எளிய மொழி நடையில் சொல்வதானால், வாடிக்கையாளர் பிழையான வரவுப் பதிவினை உண்மை என நம்பி, தவறான நோக்கம் ஏதும் இன்றி (Bonafide) வங்கியிலிருந்து பணத்தை எடுத்துச் செலவு செய்து விட்டால் வங்கியர் அத்தொகையைத் திரும்ப வசூலிக்க இயலாது. ஆனால் வாடிக்கையாளர் அப்பிழையைக் குறித்து அறிந்து கொள்ளாமல் அசட்டையாக அல்லது முழுமையான கவனக்குறைவுடன் செயல் பட்டிருந்தால், வங்கியர் அத்தொகையை திரும்ப வசூலிக்கும் உரிமை பெற்றவர். இந்த இரண்டு நிலைப்பாடுகளும் ஆராயப்பட்ட, மிக முக்கியமான வழக்கு வருமாறு.

Oakley Bowden & Co. v. Indian Bank Ltd.[1] – இவ்வழக்கில் வாடிக்கையாளர் நிறுவனம் சென்னையில் உள்ள இந்தியன் வங்கியின் தலைமை அலுவலகத்தில் நடப்புக் கணக்கு ஒன்றை வைத்திருந்தது. அந்நிறுவனத்தின் குண்டூர் வாடிக்கையாளர்கள் தாங்கள் அந்நிறுவனத்திடமிருந்து வாங்கிய சரக்கிற்குண்டான தொகைகளை, குண்டூரில் உள்ள இந்தியன் வங்கியின் கிளை அலுவலகத்தில் செலுத்தி விடுவதை வழக்கமாகக் கொண்டவர்கள். குண்டூர் கிளையும் தாங்கள் மேற்படி நிறுவனத்திற்காக பெற்ற தொகைகளை, அதன் நடப்புக் கணக்கில் வரவு வைக்கும்படி சென்னையில் உள்ள வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு தகவல் அனுப்பி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. இந்நிலையில் மேற்படி குண்டூர் கிளை இரண்டு தொகைகளை குண்டூர் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றது. இதை உடனே தந்தி மூலம் சென்னையில் உள்ள வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு தகவல் அனுப்பிவிட்டது. தந்தியைப் பெற்ற தலைமை அலுவலகம், அந்நிறுவனத்தின் கணக்கில் அவ்விரு தொகைகளையும் வரவு எழுதிவிட்டது. மேற்படி தகவலின் நகலை, மேற்படி குண்டூர் வங்கி தபாலிலும் அனுப்பி வைத்தது. இதனைப் பெற்றவுடன், மேற்படி தலைமை அலுவலகம் மீண்டும் நிறுவனத்தின் கணக்கில் அவ்விரு தொகைகளையும் வரவு வைத்தது. அதாவது ஒரு முறையே பெற்ற தொகைகளை சென்னையில் உள்ள வங்கியின் தலைமை அலுவலகம் இரு முறை அந்நிறுவனத்தின் கணக்கில் வரவு எழுதிவிட்டது.

1. A.I.R. 1964 Mad. 202

வாடிக்கையாளர் இரு முறை தொகை அனுப்பியுள்ளனர், எனவே நல்ல வியாபாரந்தான் என்று அந்நிறுவனம் நல்லெண்ணத்துடன் நம்பி, அவர்களுக்கும் இருமுறை சரக்குகளை அனுப்பி வைத்து கணக்கைத் தீர்த்துக் கொண்டுவிட்டது. இந்நிலையில் தவறான பதிவால் வரவு வைக்கப்பட்ட தொகையை திரும்பச் செலுத்தக் கோரி அந்நிறுவனத்தை வங்கியர் கேட்டனர். ஆனால், மேற்கண்ட தவறான வரவுப் பதிவுகளை (Credit entries) நம்பி தாம் இரு முறை சரக்கு அனுப்பி விட்டதாகவும், இதனால் தனக்கு பாதகமாக தனது நிலை மாறிவிட்டது என்றும் வாதிட்டது.

வழக்கை ஆராய்ந்த சென்னை உயர் நீதிமன்றம், **பொதுவாக வங்கியர் செய்த பிழையான பதிவுகளின் அடிப்படையில் வாடிக்கையாளர் நல்லெண்ணத்துடன் செயல்பட்ட பிறகு, வங்கியர் அப்பணத்தை திரும்பப் பெற உரிமை படைத்தவரல்ல என்றும்,** ஆனால் ஒரு வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கை அப்போதைக்கப்போது சரிபார்த்துக் கொள்ளும் கடமை ஏதும் அற்றவர் என்றாலும், அவர் தனது கணக்கையும், தனக்கும் வங்கிக்கும் உள்ள தகவல் தொடர்பையும் சரிபார்த்துக் கொள்ளாமல் முழுமையான கவனக் குறைவுடன் செயல்பட்டிருந்தால், அவ்வாடிக்கையாளர், தவறான வரவுப் பதிவுகளின் வாயிலாக எடுத்துக் கொண்ட தொகையை வங்கியருக்குத் திருப்பிச் செலுத்தித்தான் ஆக வேண்டும் என்றும் கூறியது.

மேலும் மேற்படி வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்ந்த நீதிமன்றம், மேற்படி வழக்கில் ஒரே மாதிரியான தொகைகள் இருமுறை அந்நிறுவனத்தின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன; இது ஒன்றே தொகைகளை வரவு வைப்பதில் எங்கோ தவறு நடந்துள்ளது என்று அய்யம் கொள்வதற்கு அந்நிறுவனத்திற்கு போதுமானது; ஆனால் அந்நிறுவனம் முழுமையான கவனக்குறைவுடன் செயல்பட்டுள்ளதால் தனது கணக்கில் ஏற்பட்ட தவறான வரவுப் பதிவுகளை அறிந்து கொள்ள முடியவில்லை; எனவே அந்நிறுவனத்திற்கு தனது கணக்கில் ஏற்பட்டுள்ள பிழை குறித்து நேரடியான அறிவிப்பு (Direct Notice) ஏதும் இல்லையென்றாலும், அது கொள்நிலையான அறிவிப்பு (Constructive Notice) பெற்றுள்ளதாகக் கருத வேண்டும்; ஆகவே வங்கியர் அந்நிறுவனத்திடமிருந்து பிழையாக வரவு வைக்கப்பட்ட தொகைகளை திரும்ப வசூலித்துக் கொள்ளலாம் என்றும் தீர்ப்புரைத்தது.

4. பொதுவாக, வங்கியரால் செல்லேட்டில் பிழையாக வரவு வைக்கப் பட்ட பணத்தை வாடிக்கையாளர் எடுத்துச் செலவழித்துவிட்டிருந்தால், அதை திரும்பப் பெற வங்கியருக்கு உரிமையில்லை. ஆனால் இதற்கு அவ்வாடிக்கையாளர் பின்வரும் சூழல்கள் நிலவின என்பதை தெளிவாக மெய்ப்பிக்க வேண்டும். அவை,

(i) வாடிக்கையாளர் செல்லேட்டில் உள்ள பதிவுகளை உண்மையிலேயே சரியானதுதான் என நம்பி நடந்ததாக மெய்ப்பிக்க வேண்டும்;

(ii) செல்லேட்டில் வங்கியரால் செய்யப்பட்டுள்ள பிழையை வாடிக்கையாளர் உண்மையிலேயே அறியாமல் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டும்.

(iii) அப்பதிவின்படியிலான தொகை தனதுதான் என்று எண்ணி, தாம் செலவழித்துவிட்டதாக வாடிக்கையாளர் மெய்ப்பிக்க வேண்டும். ஒருவர் தனது என்று கருதும் தொகையைத்தாம் செலவு செய்வார் என்பது பொதுவாக அனுமான மாகும். வங்கியர், தவறான வரவுப் பதிவின்படியிலான தொகையை வாடிக்கை யாளர் எடுத்துக் கொள்ள முன்னதாக அனுமதித்துவிட்டு, பின்னர் "பதிவில் பிழை ஏற்பட்டுவிட்டது; எனவே அத்தொகையைத் திருப்பிக் கொடு" என்று கோருவது, வாடிக்கையாளருக்கு வங்கியர் செய்யும் பெரும் குந்தகமாகும்.

சில விதிவிலக்குகள் (Exceptions): பிழையான பதிவுகள் வாடிக்கை யாளருக்குச் சாதகமாக இருப்பினும், நன்றாகத் தெரிந்திருக்கும் பிழையைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் இலாபம் அடைய அனுமதித்தல் கூடாது. அதாவது பிழையான பதிவுகளுக்காக பணம் திரும்பக் கேட்பதிலிருந்து வங்கியர் முரண்தடை செய்யப்பட்டுள்ளார் எனும் விதிக்கு, பின்வரும் சில விதிவிலக்குகள் உள்ளன.

1. வாடிக்கையாளர் முறையாகக் கணக்கை பராமரித்து வருபவராக இருப்பின், செல்லேட்டில் உள்ள பிழையை அவர் நிச்சயம் கண்டுபிடித்துவிட முடியும். இச்சமயங்களில், தான் செல்லேட்டின் பதிவுகளையே முழுக்க முழுக்க நம்பி நடந்ததாக வாடிக்கையாளர் வாதாட முடியாது. இதுதான் நாம் ஏற்கனவே கண்ட **Oakley Bowden & Co. v. Indian Bank Ltd.**[1] எனும் வழக்கில் நடந்தது.

2. வங்கிக் கணக்கில் இருந்து வாடிக்கையாளர் உண்மையில் பணத்தை எடுக்காமல் இருந்தாலும், வங்கியர் பணத்தைத் திரும்பப் பெற்று விடலாம். வேறொரு கணக்கிற்கு மாற்றம் செய்திருந்தாலும், உண்மையில் பணம் எடுக்கப் படவில்லையாதலால், வங்கியர் தமது பணத்தைத் திரும்பப் பெற உரிமை உண்டு. எனினும், தவறு கண்டுபிடிக்கப்பட்டவுடன் தாமதம் ஏதும் இன்றி வாடிக்கை யாளருக்குத் தெரிவித்துவிட வேண்டும். வாடிக்கையாளருக்குத் தெரியாமல், தானே தன் தவறைத் திருத்திக் கொண்டு, வருகின்ற காசோலைகளுக்கு பணம் மறுக்க வங்கியருக்கு உரிமை இல்லை.

வங்கியருக்குச் சாதகமான பதிவுகள் (Entries favourable to the Banker):

வங்கியருக்குச் சாதகமான பதிவுகளுக்கு எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. A.I.R. 1964 Mad. 202

(1) வாடிக்கையாளரின் கணக்கில் ஒரு முறை பற்று எழுத வேண்டியதைத் தவறுதலாக இரு முறை பற்று எழுதி விடுதல், (2) உண்மைத் தொகையை விட அதிகமான தொகையைப் பற்று எழுதுதல், (3) ஒரு வாடிக்கையாளர் கொடுத்த காசோலைக்கு வழங்கிய பணத்தை, வேறு வாடிக்கையாளர் கணக்கில் பற்று எழுதுதல், (4) செலுத்தப்பட்ட தொகையை விடக் குறைந்த தொகையை வரவு வைத்தல், (5) கணக்கில் வரவு வைக்காமலேயே விட்டுவிடுதல் (Omission).

வங்கியருக்குச் சாதகமான பதிவுகளால் ஏற்படும் சட்ட விளைவுகள் :

இங்கும், சட்டம் வாடிக்கையாளருக்கே சாதகமாகவே உள்ளது. எனினும் வாடிக்கையாளர்களுக்கு சில பொறுப்புகளும் உண்டு. இது குறித்த நிலைப்பாட்டை பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

1. பொதுவாக வாடிக்கையாளர் செல்லேட்டின் பதிவுகளைச் சரிபார்க்க வேண்டிய கடமை இல்லை. எனினும், அவ்வாறு சரிபார்த்துத் தவறுகளைச் சுட்டிக் காட்டினால் வங்கியர் அத்தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

2. தவறுகளைச் சுட்டிக் காட்ட கால வரையறை ஏதும் இல்லை. எனவே, தவறுகளைக் கண்டுபிடித்தவுடன் சுட்டிக் காட்டினால் போதுமானது. தவறு நிகழ்ந்ததைச் சுட்டிக் காட்டினால், வங்கியர் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

3. எனினும், வாடிக்கையாளர் தவறு நடந்தது தெரிந்திருந்தும், வேண்டுமென்றே மௌனமாக இருந்துவிட்டால், ஆட்சேபிக்கும் உரிமையை இழந்து விடுவார். ஆனால், வாடிக்கையாளர் (1) தனது செயல்களாலும், பேச்சினாலும் பிழைகளைக் கண்டுகொள்ளாமல் அதற்கு உடன்பட்டும், (2) அவர் உண்மையில் கவனக்குறைவாக அல்லது வேண்டுமென்றே மௌனமாகவும் இருந்திருக்கிறார் என்பதைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் வங்கியர் மெய்ப்பிக்க வேண்டும்.

Bala Krishna Pramanik v. Bhowanipore Banking Corporation Ltd.[1] – எனும் வழக்கில் வாடிக்கையாளர் தனது செல்லேட்டில் உள்ள பதிவுகளைச் அடிக்கடி சரி பார்த்துக் கொள்ளும் வழக்கமுடையவர். மேலும், அதில் பிழைகள் ஏதும் இருந்தால் விளக்கம் கேட்பதும் வழக்கம். ஒருமுறை அவ்வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய வட்டியை கணக்கிட்டு, அவரது கணக்கில் வங்கியர் பற்றெழுதி விட்டார். இவ்வட்டி விகிதம் பிழையாகக் கணக்கிடப்பட்டதாகும். இதனை வாடிக்கையாளர் முதலில் கவனிக்காமல் விட்டுவிட்டார். பிறகு சில காலம் கழித்து வாடிக்கையாளர் வங்கியரிடம் முறையிட்ட போது, அதைச் சரி செய்து தர

1. (1932) 59 Cal. 662

வங்கியர் மறுத்து விடவே மேற்படி வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றமும், வங்கியர் மேற்கண்டவாறு மறுத்தது சரியே என்று தீர்ப்பளித்தது. எனவே எப்போதும் கவனமாகப் பரிசீலனை செய்து தனது செயலாலும், பேச்சாலும் ஒப்புக் கொண்ட பிழையை, பின்னர் ஆட்சேபிக்க வாடிக்கையாளருக்கு உரிமை இல்லை என்பதை மேற்கண்ட வழக்கு தெளிவாக்குகிறது.

முடிவுரை:

முடிவாக, மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டை ஆராய்ந்து பார்க்குங்கால், சட்டம் வங்கியருக்குச் சாதகமாக இல்லை என்பதும், பல இடங்களில் வாடிக்கையாளருக்கே சாதகமாக உள்ளது என்பதும் விளங்கும். ஒரு பதிவு, பிழையாக இருப்பினும் அதை உண்மை என நம்பி, உள்நோக்கம் ஏதுமின்றி நல்லெண்ணத்துடன் நடக்கும் வாடிக்கையாளரின் நலன்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன. எனினும், வாடிக்கையாளர்கள் மோசடி செய்யும் நோக்குடன், தமது அறிவுக்கு எட்டியுள்ள பிழையான பதிவுகளைப் பயன்படுத்தி, இலாபமடைய நீதிமன்றங்கள் அனுமதிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. அதுபோல் வாடிக்கையாளரின் கவனக்குறைவைப் பயன்படுத்தி, அவருக்கு உண்மையாகச் சேர வேண்டிய தொகையையும் வங்கியர் மறுக்கவியலாது. எனவே மேற்கண்ட வற்றின் அடிப்படையில், **செல்லேட்டின் பதிவுகள் வாடிக்கையாளரின் கணக்கிற்கான முழுமையான, மறுக்கமுடியாத, ஆதாரபூர்வமான சான்று என்று கொள்வதற்கு இயலாது.** சுருங்கக் கூறின், "வங்கிச் செல்லேட்டையே, ஒரு 'தீர்மானமான கணக்காக' நம்ப முடியாது".

5. What is meant by Fixed deposit receipt? Explain its features. (நிலை வைப்பீட்டு இரசீது என்றால் என்ன? அதன் இயல்புகளை விளக்குக.)

(அல்லது)

What are the special features of a Fixed Deposit Receipt? Explain the position of the depositor in case of loss of Fixed Deposit Receipt. (நிலை வைப்பீட்டு இரசீது ஒன்றின் சிறப்பியல்புகள் யாவை? நிலை வைப்பீட்டு இரசீது தொலைந்து போனால் வைப்பீட்டாளரின் நிலையை விளக்குக.)

(அல்லது)

Discuss the legal position of a banker regarding a Fixed Deposit Receipt. (நிலை வைப்பீட்டு இரசீது ஒன்றினைக் குறித்து வங்கியரின் சட்ட நிலைப்பாட்டை விவாதிக்க.)

(அல்லது)

Fixed deposit receipt - Write short notes. (நிலை வைப்பீட்டு இரசீது – சிறு குறிப்பு வரைக.)

நிலை வைப்பீட்டு இரசீது [Fixed Deposit Receipt]:

வங்கியரிடம் செய்யப்படும் நிலை வைப்பீட்டுத் தொகையை, வங்கியர் பெற்றுக் கொண்டதற்கு சான்றாக அவர் தரும் ஆவணமே, 'நிலை வைப்பீட்டு இரசீது' (Fixed Deposit Receipt - FDR) எனப்படும். இந்த இரசீதில் பின்வரும் விபரங்கள் அடங்கியிருக்கும். அவை, 1. தொகை வைப்பீடு செய்தவரின் பெயர், 2. செலுத்தப்பட்ட தொகை, 3. அத்தொகை வைப்பீட்டில் இருக்க வேண்டிய கால அளவு, 4. வட்டி விகிதம், 5. வைப்பீடு திரும்பத் தரப்படும் தேதி. குறிப்பிட்ட காலக் கெடு முடிந்து, வைப்பீடு முதிர்வடையும் பொழுது, வைப்பீடு செய்த வாடிக்கையாளர் மேற்கண்ட நிலை வைப்பீட்டு இரசீதின் பின்புறத்தில் அதற்குரிய இடத்தில் ரூ.1/–க்குண்டான வருவாய் முத்திரை வில்லையை (Revenue Stamp) ஒட்டி, அதன் மீது கையொப்பமிட்டு வங்கியரிடம் திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும். வைப்பீட்டின் பேரில் வாடிக்கையாளர் கடன் பெற்றாலும், இந்த இரசீதை அவர் வங்கியரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

நிலை வைப்பீட்டு இரசீதின் சிறப்பியல்புகள் [Special Features of Fixed Deposit Receipt]:

1. நிலை வைப்பீட்டு இரசீது ஒரு மாற்றுமுறை ஆவணம் அல்ல (Not a Negotiable Instrument) : 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டமானது காசேலை, மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டு ஆகிய மூன்று மட்டுமே மாற்றுமுறை ஆவணங்களாகும் என்று குறிப்பிடுகிறது. இது நீங்கலான ஏனைய ஆவணங்கள் நம் நாட்டுச் சட்டப்படி மாற்றுமுறை ஆவணங்கள் ஆகாது. இதனால், நிலை வைப்பீட்டு இரசீதுகளின் முகப்பிலேயே **"மாற்றத்தக்கது அல்ல" (Not Transferable)** என்று அச்சிடப்பட்டு இருக்கும். எனவே, மேலொப்பம் (Endorsement) செய்து காசோலை, மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டு போன்று இதனை மற்றொருவருக்கு மாற்றித் தர இயலாது.

2. நிலை வைப்பீட்டு இரசீதை மற்றொருவர் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யலாம் (Assignment of Fixed Deposit Receit): நாம் முன் கண்டவாறு நிலை வைப்பீட்டு இரசீது ஒன்று, மாற்றத்தக்கது அல்ல. எனினும், மற்றொருவரின் பெயருக்கு சட்டப்படி உரிமை மாற்றம் செய்யலாம். இதற்காக நிலை வைப்பீடு செய்த வாடிக்கையாளர், உரிமை மாற்றக் கடிதம் (Letter of Assignment) ஒன்றை எழுதி, அதில் தனது கையொப்பத்தை இட்டு, யார்

பெயருக்கு உரிமை மாற்றப்பட்டதோ அவரிடம் அந்த இரசீதைக் கொடுத்து விட வேண்டும். உரிமை மாற்றக் கடிதம் வங்கியரின் முகவரியிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும். இக்கடிதத்தோடு இரசீதையும் வங்கியரிடத்தில் உரிமை மாற்றம் பெற்றவர், சேர்ப்பித்துப் பணம் பெற்றுக் கொள்ளலாம்.

3. முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்கு (Exempted from Stamp Duty): இந்திய முத்திரைச் சட்டப்படி **(Indian Stamp Act)** அய்ந்நூறு ரூபாய்களுக்கு மேற்பட்ட எல்லா இரசீதுகளிலும் ரூ.1/–க்கான வருவாய் முத்திரை வில்லை (Revenue Stamp) ஒட்டப்பட வேண்டும். ஆனால், வங்கியர் வழங்கும் நிலை வைப்பீட்டு இரசீதுக்கு, இத்தகு முத்திரை வில்லை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. எனினும் நிலை வைப்பீட்டுப் தொகையை, அது முதிர்வடைந்த பிறகு அல்லது இடையில் திரும்பப் பெறும் பொழுது வாடிக்கையாளர் இரசீதின் பின்புறம் மேற்கண்ட முத்திரை வில்லை ஒட்டி அதன் மீது கையொப்பம் இட வேண்டும்.

4. இறக்குந்தறுவாயில் கொடையாக அளிக்கலாம் (Death bed gift - Donatio mortis causa): இறக்கும் தறுவாயில் அதாவது மரணப் படுக்கையில் உள்ள ஒருவர் தம் பெயரில் உள்ள நிலை வைப்பீட்டுத் தொகையைத், தாம் விரும்பிய நபருக்கு கொடையாக வழங்கலாம். இதற்கு நிலை வைப்பீட்டு இரசீதில் தாம் அத்தொகையை கொடையாக அளிப்பதாகக் குறிப்பிட்டு, கையொப்பமிட்டு, அதனை கொடை பெறுபவர் (Donee) வசம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆயினும், இவ்வாறு கொடை வழங்குபவர் இறந்த பிறகே, கொடை பெறுபவர் அத்தொகையின் மீது உரிமை பெறுகிறார். அவர் தெய்வாதீனமாகப் பிழைத்துக் கொண்டால், கொடை பெறுபவருக்கு அவ்வைப்பீட்டுத் தொகையின் மீது எவ்வித உரிமையும் ஏற்படுவதில்லை.

5. நீதிமன்றத்தின் பற்றுகைக்கு உட்பட்டது (Liable for attachment by court): ஒருவர் மூன்றாம் நபர்களிடம் பெற்ற கடனுக்காக, அவரது பெயரில் வங்கியில் உள்ள நிலை வைப்பீட்டுத் தொகைகளை பற்றுகைக்கு (ஜப்திக்கு) ஆணையிட நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. இந்த ஆணையின்படி, வங்கியர் அவரின் வைப்பீட்டுத் தொகைகளை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். இங்கு வங்கியர் 'பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர்' (Garnishee) எனப்படுகிறார். அவருக்கு மேற்கண்டவாறு நீதிமன்றம் இடும் ஆணை 'பற்றுகை ஆணை' (Garnishee Order) எனப்படுகிறது.

6. நிலை வைப்பீட்டு இரசீது தொலைந்து போகும் நேர்வில் வைப்பீட்டாளரின் நிலை (Position of the depositor in case of loss of Fixed Deposit Receipt): வங்கியில் செய்யப்பட்ட நிலை வைப்பீடு, அதற்குரிய காலக் கெடு முடிந்தவுடன், முதிர்வடைகிறது. எனவே வைப்பீட்டாளர் அந்த

வைப்பீட்டு இரசீதை வங்கியரிடம் ஒப்படைத்து, வைப்பீட்டுத் தொகையை வட்டியுடன் திரும்பப் பெறலாம். ஆனால் இரசீது தொலைந்து போய்விட்டால் வைப்பீட்டாளர் பணம் பெற முடியுமா, எனும் கேள்வி இங்கு எழுகிறது. முடியும் என்று கூறுகிறது வங்கியியல் சட்டம். அதாவது, நிலை வைப்பீட்டு இரசீது தொலைந்து போன விபரத்தை, வைப்பீட்டாளர் உடனடியாக வங்கியருக்கு தெரியப்படுத்த வேண்டும். வங்கியர் அவ்வைப்பீட்டாளரிடமிருந்து சாதாரணமான முறையில் **ஈட்டுறுதிப் பத்திரம் (Indemnity bond)** ஒன்றை எழுதி வாங்கிக் கொண்டு, அவ்வைப்பீடு முதிர்வடைந்த பிறகு , அதற்குரிய தொகையை அளிப்பார் அல்லது மாற்று இரசீது (Duplicate receipt) ஒன்றை வழங்குவார். இங்கு தொலைந்து போன இரசீதிற்காக வங்கியர் கவலைப்படுதில்லை. அதுபோல் வைப்பீட்டாளரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், நிலை வைப்பீட்டு இரசீது.என்பது நாம் ஆரம்பத்தில் கண்டவாறு 'மாற்றத் தக்கதல்ல'. எனவே அதைக் கண்டெடுக்கும் எவரும் மேலொப்பம் செய்து தனது பெயருக்கு மாற்றிக் கொள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி வழியில்லை. சுருங்கக் கூறின், வங்கியரையோ, வைப்பீட்டாளரையோ, வைப்பீட்டு இரசீதைக் கண்டெடுத்தவர் ஏமாற்ற வழியில்லை.

நிலை வைப்பீட்டு இரசீது தொடர்பாக வங்கியரின் சட்ட நிலைப்பாடு [The Legal Position of Banker regarding a Fixed Deposit Receipt]:

வைப்பீட்டாளரிடமிருந்து நிலை வைப்பீடு பெற்றவுடன், வங்கியர் அவரது கடனாளி (Debtor) ஆகிவிடுகிறார். இங்கு வங்கியர் கொடுக்கும் நிலை வைப்பீட்டு இரசீதே, அக்கடனுக்குரிய ஆவணமாக உள்ளது. இதுதான் நிலை வைப்பீட்டு இரசீது தொடர்பாக வங்கியரின் அடிப்படை சட்ட நிலைப்பாடு ஆகும். கடனாளி எனும் மேற்படி நிலைப்பாடு, அவ்வைப்பீட்டிற்குரிய காலக் கெடு கடந்த பிறகும் அல்லது அவ்வைப்பீட்டுத் தொகையை வைப்பீட்டாளர் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லையானாலும் தொடர்கிறது. அச்சமயத்தில் வங்கியர் தன்னிடம் வைப்பீடாக உள்ள தொகைக்கு, வைப்பீட்டாளரின் பொறுப்பாண்மையராக (Trustee) மாறுவதில்லை. இக்கொள்கை முதலில் **Pearce v. Creswick**[1] எனும் ஆங்கில வழக்கிலும், பின்னிட்டு **Official Assignee of Madras v. Smith**[2] இந்திய வழக்கிலும் நீதிமன்றங்களால் ஏற்படுத்தப்பட்டது. பின்னிட்டு **Subramanian v. Kadiresan**[3] எனும் வழக்கில் பின்பற்றப்பட்டது. **எனவே**

1. (1843) 2 Hare 286
2. (1908) I.L.R. 32 Mad. 68
3. 39 Mad. 1081

சட்டம் அறிந்த ஒருவர் வங்கியில் நிலை வைப்பீடு செய்தால், அவர் "வங்கிக்கு கடன் கொடுத்துள்ளதாகக்" கூறலாம்.

6. Closing of a bank account - Write short notes. (வங்கிக் கணக்கை முடிப்பது – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the circumstances under which a banker can close the account of his customer (எச்சூழ்நிலைகளின் கீழ் ஒரு வங்கியர் தனது வாடிக்கையாளரின் கணக்கை முடிக்கலாம் என்பதை விளக்குக.)

(அல்லது)

What steps should a banker take to close the account of an undesirable customer? (விரும்பத்தகாத வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கை முடிப்பதற்கு வங்கியர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?)

(அல்லது)

Describe the circumstances when a banker should close the account of his customer. (ஒரு வங்கியர் தனது வாடிக்கையாளரின் கணக்கை கட்டாயம் முடித்தாக வேண்டிய சூழ்நிலைகளை விவரி.)

வங்கிக் கணக்கை முடித்தல் – விளக்கம்:

வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள உறவு, நாம் ஏற்கனவே கண்டவாறு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே இவ்வுறவு மேற்கண்ட இருவரும் விரும்பித் தொடரும் வரை நீடித்திருக்கும். இவர்களில் ஒருவர், மற்றொருவருக்கு, தான் அவ்வொப்பந்தத்தை தொடர விரும்பவில்லை என்று அறிவிப்புக் கொடுப்பதன் மூலம் இவ்வுறவை துண்டித்துக் கொள்ளலாம். இதன் அடிப்படையில்தான் வங்கிக் கணக்கை முடிவுக்கு கொண்டு வருதலும் அமைந்துள்ளது. வங்கிக் கணக்கை வாடிக்கையாளர் அல்லது சில சூழ்நிலைகளில் வங்கியர் முடிக்கலாம். அவற்றைப் பின்வருமாறு காண்போம்.

வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கை முடித்தல் [Closing of Account by Customer]:

ஒருவரை தனது வாடிக்கையாளராகச் சேர்த்துக் கொள்ளலாமா,

வேண்டாமா என்று முடிவெடுக்க எவ்வாறு ஒரு வங்கியருக்கு உரிமை உள்ளதோ, அவ்வாறே ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை அவ்வங்கியில் தொடர்ந்து வைத்திருக்க விரும்பாமல் முடித்துக் கொள்ள உரிமை படைத்தவர். ஆனால் இவ்வாறு முடித்துக் கொள்ளும் எண்ணத்தை வங்கியருக்கு வாடிக்கையாளர் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும். அதற்கு காரணம் எதையும் வாடிக்கை யாளர் குறிப்பிட வேண்டியதில்லை. இந்த அறிவிப்பு கிடைக்கப் பெற்றவுடன் வங்கியர் உடனடியாக அவ்வாடிக்கையாளரின் கணக்கை முடித்து, அதில் இருப்பு உள்ள தொகையை அவ்வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும். அதுபோல் வாடிக்கையாளர் தாம் பயன்படுத்தாத காசோலைகளை வங்கியரிடம் திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும்.

வங்கியர் கணக்கை முடித்தல் [Closing of Account by Banker]:

(1) நீண்ட காலமாக இயக்கப்படாததால் முடித்தல் (Closing due to non-operation of the Account for a very long time): ஒரு கணக்கு நீண்ட காலமாக வாடிக்கையாளரால் இயக்கப்படாமல் இருந்தால், அதை முடிக்கும் படி வங்கியர், வாடிக்கையாளரைக் கோரலாம். வங்கியரின் இச்செயல்பாடு, அவ்வாடிக்கையாளருக்கு கணக்கு ஏதும் தேவையில்லை எனும் அனுமானத்தின் அடிப்படையில் எழுகிறது. ஒருவேளை சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் எங்கிருக் கிறார் என்று நியாயமான முறையில் முயன்றும் வங்கியர் கண்டறிய முடியா விட்டால், அக்கணக்கில் உள்ள இருப்புத் தொகையை "கோரப்படாத வைப்பீட்டுக் கணக்கு" (Unclaimed Deposit Account) எனும் கணக்கில் மாற்றிவிட்டு, அக்கணக்கை வங்கியர் முடிக்கலாம். வாடிக்கையாளர் கண்டறியப்பட்டவுடன், அத்தொகை அவருக்கு அளிக்கப்படும்.

(2) விரும்பத்தகாத வாடிக்கையாளரின் கணக்கை முடித்தல் (Closing of the Account of Undesirable customer): ஒரு வாடிக்கை யாளர், வங்கியர் விரும்பாத வாடிக்கையாளராகிவிட்டால், அவரது கணக்கை முடிக்க, வங்கியருக்கு முழு அதிகாரம் உண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு வாடிக்கை யாளர் காசோலைகளை அல்லது மாற்றுச் சீட்டுகளை பொய்யாகப் புனைந்த குற்றத்திற்காக அல்லது கணக்கில் போதிய பணமின்றி காசோலைகளைக் கொடுத்த குற்றத்திற்காக தண்டனை பெற்றவராக இருப்பின் அல்லது கடன்கள் அல்லது அதிகப்பற்றுகளை குறித்த காலத்தில் செலுத்தத் தவறியதால், அவர் வங்கியர் விரும்பாத வாடிக்கையாளர் ஆகிவிடுகிறார். எனினும் இவ்வாறு முடிக்கும் முன்பு, வங்கியர் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(a) வங்கியர் தான் அவ்வாறு வாடிக்கையாளரின் கணக்கை முடிக்க விரும்பும் தனது எண்ணத்தை சம்பந்தப்பட்ட அவ்வாடிக்கையாளருக்கு உரிய அறிவிப்பு மூலம் தெரிவித்து, அக்கணக்கில் இருப்பு உள்ள தொகையை பெற்றுக் கொள்ள வரும்படி அழைப்பு விடுக்க வேண்டும். மேலும் அதற்கு போதிய காலம் கொடுக்க வேண்டும். இத்தகு அறிவிப்புக் கொடுக்காமல் வங்கியர் தன்னிச்சையாக அவரது கணக்கை முடிக்கக் கூடாது.

(b) மேற்கண்ட அறிவிப்பைப் பெற்ற பிறகும், அவ்வாடிக்கையாளர் கணக்கை முடிக்கவில்லையானால், அவருக்கு மீண்டும் ஒரு அறிவிப்பை வங்கியர் கொடுக்க வேண்டும். அதில், கணக்கை முடிப்பதற்கு ஒரு இறுதி நாளை நிர்ணயம் செய்து, அந்த தேதியில் கணக்கு முடிக்கப்படவில்லையானால், அதனை தாமே முடித்துவிடுவதாக வங்கியர் குறிப்பிடுதல் வேண்டும். அதற்கு இடைப்பட்ட சாலத்தில், வாடிக்கையாளர் அக்கணக்கில் பணம் ஏதும் செலுத்தினால், அதை ஏற்றுக் கொள்ள வங்கியர் மறுக்க வேண்டும். மேலும் அவருக்கு புதிதாக காசோலைப் புத்தகத்தை வழங்குவதையும் தவிர்க்க வேண்டும். இந்நடவடிக்கைகள் வங்கியரை, அவ்வாடிக்கையாளருக்கு பொறுப்பாக்காது. எனினும், அவ் வாடிக்கையாளர் தனது கணக்கின் இருப்பில் உள்ள தொகையின் அளவிற்கு, யாருக்கேனும் காசோலை கொடுத்தால், அதற்குரிய தொகையை அளிக்க வங்கியர் மறுத்தல் கூடாது. போதுமான காரணமில்லாமல், வங்கியர் அவ்வாறு பணம் கொடுக்க மறுத்தால், அவர் 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 31–வது பிரிவின் கீழ் வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவராகிவிடுவர்.

(c) வங்கியர் தனது இரண்டாவது அறிவிப்பில் குறிப்பிட்ட தேதியில் வாடிக்கையாளர் கணக்கை முடிக்கத் தவறினால், அக்கணக்கை வங்கியரே முடித்தல் வேண்டும். அதில் இருப்பு உள்ள தொகையை, அவ்வாடிக்கையாளருக்கு வரைவோலை மூலம் அனுப்பி வைக்க வேண்டும். இதற்கு பின்னிட்டு வாடிக்கையாளர் எவருக்கேனும் காசோலை ஏதும் கொடுத்து, அதற்குரிய மதிப்பை அளிக்க வங்கியர் மறுத்தால், அதற்காக வங்கியர் பொறுப்பாகமாட்டார்.

(3) வாடிக்கையாளரின் மரணத்தால் (By the death of Customer): வாடிக்கையாளர் ஒருவர் இறந்துவிட்டார் என்ற தகவல் வங்கியருக்கு கிடைக்கப் பெற்றவுடன், வங்கியர் அவரது கணக்கின் இயக்கத்தை நிறுத்திவிட வேண்டும். ஏனெனில், வாடிக்கையாளரின் மரணத்தால், அவர் வங்கியருக்கு கொடுத்துள்ள அதிகாரமும் செயலிழந்துவிடுகிறது. எனவே வங்கியர் கணக்கை முடிக்கலாம்.

(4) வாடிக்கையாளருக்கு பித்து பிடித்தலால் (By the insanity of

Customer): வாடிக்கையாளர் ஒருவருக்கு பித்துபிடித்துவிட்டது என்று தகவல் கிடைத்தவுடன், வங்கியர் அவரது கணக்கிலிருந்து பணம் செலுத்தப்படுவதை நிறுத்திவிட வேண்டும். அவர் முழுமையான பித்தராக மாறிவிட்டார் என்று நீதிமன்றம் பிறப்பித்த ஆணை கிடைத்தால், அவரது கணக்கை வங்கியர் முடிக்கலாம்.

(5) வாடிக்கையாளர் நொடிப்புநிலையராகுதல் (By the insolvency of Customer): வாடிக்கையாளர் ஒருவர் நொடிப்புநிலையரென நீதிமன்றம் விளம்புகை செய்தால் அல்லது வாடிக்கையாளராக உள்ள நிறுவனமொன்று கலைக்கப்பட்டால், அங்கு வாடிக்கையாளர்–வங்கியர் என்ற உறவும் அற்றுப் போகிறது. எனவே மேற்படியார்களின் கணக்குகளில் இருப்பில் உள்ள தொகையை வங்கியர் சொத்துப் பேணுநரின் (Official Receiver) பெயருக்கு மாற்றுதல் வேண்டும்.

(6) பொருள் பற்றுகை ஆணையினால் (By the Garnishee Order): வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கில் உள்ள தொகையை பற்றுகை (ஜப்தி) செய்ய வங்கியருக்கு நீதிமன்றம் பொருள் பற்றுகை ஆணையை அனுப்பினால், வங்கியர் அக்கணக்கின் இயக்கத்தை நிறுத்தி வைத்துவிட்டு, பற்றுகை செய்ய ஆணையிடப் பட்ட தொகையை நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆனால் அதே சமயத்தில், அக்கணக்கில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் பற்றுகை செய்து அனுப்பும்படி, நீதிமன்றம் அந்த ஆணையில் குறிப்பிட்டிருந்தால், அதுபோக மீதியுள்ள தொகையிலிருந்து அவ்வாடிக்கையாளர் கொடுக்கும் காசோலைக்கு வங்கியர் பணம் கொடுக்க வேண்டும்.

(7) உரிமை மாற்றியளித்தல் மூலம் (By Assignment): வாடிக்கை யாளர் ஒருவர் தனது கணக்கில் இருப்பில் உள்ள தொகையை மூன்றாம் நபருக்கு எழுத்து மூலமான உரிமை மாற்றியளிப்பின் மூலம் மாற்றியளிக்கலாம். இவ்வாறு உரிமை மாற்றம் பெற்றவர், இது குறித்து வங்கியருக்கு அறிவிப்பு அனுப்பினால், வங்கியர் தனது வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து அம்மூன்றாம் நபருக்கு பணம் செலுத்தக் கடமைப்பட்டவர்.

7. What exactly is the difference between a Savings, Current and Fixed Deposit Account? (ஒரு சேமிப்பு, நடப்பு மற்றும் நிலை வைப்பீட்டுக் கணக்கிற்கிடையே உள்ள சரியான வேறுபாடுகள் யாவை?)

(அல்லது)

Differentiate a Savings Account from a Current Account. (சேமிப்புக் கணக்கிலிருந்து நடப்புக் கணக்கை வேறுபடுத்துக.)

சேமிப்புக் கணக்கு [Savings Account]	நடப்புக் கணக்கு [Current Account]	நிலை வைப்பீடு கணக்கு [Fixed Deposit Account]
1. இது ஒரு கேட்பு வைப்பீடு. எனவே இதனை வாடிக்கை யாளர் கேட்கும் போது திருப்பிக் கொடுக்க வேண்டும்.	1. இது ஒரு கேட்பு வைப்பீடு. எனவே இதனை வாடிக்கை யாளர் கேட்கும் போது திருப்பிக் கொடுக்க வேண்டும்.	1. இது ஒரு காலவரம்பு வைப்பீடு. ஏனெனில், இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகே வைப்பீட்டாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.
2. கேட்பின் பேரில் பணம் திருப்பிக் கொடுக்க வங்கியர் போதிய பணக் காப்பு நிதிகளை வைத்து வர வேண்டும்.	2. கேட்பின் பேரில் பணம் திருப்பிக் கொடுக்க வங்கியர் போதிய பணக் காப்பு நிதிகளை வைத்து வர வேண்டும்.	2. இந்த வைப்பீடுகளைத் திருப்பிக் கொடுக்க, வங்கியர் பணக்காப்பு நிதிகளை வைத்து வர வேண்டியதில்லை.
3. இக்கணக்கு துவக்க வாடிக்கையாளரை வங்கி யருக்கு ஒரு பொறுப்பான நபர் அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.	3. இக்கணக்கு துவக்க வாடிக்கையாளரை வங்கி யருக்கு ஒரு பொறுப்பான நபர் அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.	3.இங்கு அத்தகு அறிமுகம் பொதுவாகத் தேவையில்லை.
4. இதற்கு வட்டி விகிதம் குறைவு.	4. இதற்கு வட்டியே கொடுக்கப் படுவதில்லை.	4. இதற்கு வட்டி விகிதம் அதிகம்.
5. இது சிறு சேமிப்பாளர் களுக்கு பொருத்தமானது. ஏனெனில், இது சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கிறது.	5. இது தொழிலதிபர்களுக்கும் வணிக நிறுவனங்களும் பொருத்தமானது. ஏனெனில், வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சேவைகள் அளிப் பதே இதன் நோக்கம்.	5. இது முதலீட்டாளர்களுக்கு பொருத்தமானது. ஏனெனில், இங்கு சேமிப்புக் கணக்கை விட கூடுதல் வட்டி தரப் படுகிறது.
6. இக்கணக்கில் அதிகப் பற்று பெறும் வசதி இல்லை.	6. இக்கணக்கில் அதிகப்பற்று பெற வசதி உண்டு.	6. நிலை வைப்பீட்டு இரசீதைக் காப்புறுதியாகக் கொடுத்து அதன் பேரில் இங்கு கடன் பெறலாம்.
7. இங்கு வைப்பீட்டாளர் கொள்கையளவிலும் நடைமுறையிலும் வங்கியின் ஒரு வாடிக்கையாளர்.	7. இங்கும் வைப்பீட்டாளர் கொள்கையளவிலும் நடைமுறையிலும் வங்கியின் ஒரு வாடிக்கையாளர்.	7. ஆனால் இங்கு வைப்பீட்டாளர் கொள்கையளவில் மட்டுமே ஒரு வாடிக்கையாளர். நடை முறையில் அல்ல.

சேமிப்புக் கணக்கு [Savings Account]	நடப்புக் கணக்கு [Current Account]	நிலை வைப்பீடு கணக்கு [Fixed Deposit Account]
8. இக்கணக்கு துவக்கும் பொழுது, செல்லேடு ஒன்று வங்கியரால் வழங்கப்படுகிறது. மேலும் அதற்குரிய செலுத்துச் சீட்டுகள் (Pay-in-slips) வழங்கப்படுகின்றன.	8. இக்கணக்கு துவக்கும் பொழுது, செல்லேடு ஒன்று வங்கியரால் வழங்கப்படுகிறது. மேலும் அதற்குரிய செலுத்துச் சீட்டுகள் (Pay-in-slips) வழங்கப்படுகின்றன.	8. இக்கணக்கு துவக்கும் பொழுது, நிலை வைப்பீட்டு இரசீது (Fixed Deposit Receipt) மட்டுமே வழங்கப் படுகிறது. செல்லேடு (Pass book) வழங்கப்படுவதில்லை.
9. மேலொப்பத்துடன் கூடிய மூன்றாம் நபர் காசோலைக்கு உண்டான பணத்தை இந்தக் கணக்கின் மூலம் வசூலிக்க முடியாது.	9. மேலொப்பத்துடன் கூடிய மூன்றாம் நபர் காசோலைக்கு உண்டான பணத்தை இந்தக் கணக்கின் மூலம் வசூலிக்க முடியும்.	9. இவ்வசதி இக்கணக்கிற்குப் பொருந்தாது.
10. இக்கணக்கிலிருந்து காசோலை அல்லது பணம் எடுக்கும் தாள் (withdrawal slip) மூலம் பணம் எடுக்கலாம்.	10. இக்கணக்கிலிருந்து காசோலை மூலம் மட்டுமே பணம் எடுக்க முடியும். பணம் எடுக்கும் தாள் மூலம் முடியாது.	10. இக்கணக்கிற்குப் பொருந்தாது.
11. இக்கணக்கிலிருந்து ஒரு ஆண்டிற்கு இத்தனை முறை தான் பணம் எடுக்க வேண்டும் என்று உச்ச வரம்பு உள்ளது.	11. அத்தகு உச்ச வரம்பு ஏதும் இல்லை. எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம்.	11. இக்கணக்கிற்குப் பொருந்தாது.
12. இதில் குறைந்தபட்ச இருப்பு ரூ. 500/– இருக்க வேண்டும்.	12. இதில் குறைந்தபட்ச இருப்பு ரூ. 2000/– இருக்க வேண்டும்.	12. இக்கணக்கிற்குப் பொருந்தாது.

-o0o-

8

கடன் பெறுநராக வங்கியர்
[Banker as Borrower]

ஒரு சிறு அறிமுகம்:

ஒரு வங்கியருக்கும், அதன் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள இயல்பான உறவு "கடன் தருநர்–கடன் பெறுநர்" எனும் உறவாகும். இதை நாம் சென்ற அத்தியாயங்களில் கண்டோம். இவ்வுறவு ஒருவரது பெயரில் அவரிடம் பணம் பெற்றுக் கொண்டு வங்கியர் கணக்குத் துவக்கியவுடன் தொடங்கி விடுகிறது. வாடிக்கையாளர் இல்லையெனில் வங்கித் தொழிலும் இல்லை. இந்த வகையில், ஒரு வங்கிக்கு இரண்டு முக்கியப் பணிகள் உள்ளன. அவை பணம் கடன் பெறுதல், கடன் கொடுத்தல். இவற்றில் நாம் இந்த அத்தியாயத்தின் வழியாக ஒரு வங்கியரின் கடன் பெறுதல் பணியைக் காண உள்ளோம். வேறுவிதத்தில் கூறுவதானால், ஒரு வங்கியரைக் கடனாளியாகக் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

Banker as Borrower - Write short notes. (வங்கியர் கடனாளி என்ற நிலையில் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the forms of borrowing by a banker. (வங்கியர் கடன் வாங்கும் வழிமுறைகளை விளக்குக.)

(அல்லது)

"The main source of supply of banker's borrowed funds is in the form of deposits by customers" - Explain ("வங்கியரின் கடன் நிதிகளை அளிப்பதில் முக்கிய ஆதாரமாக விளங்குவது வாடிக்கையாளர் களின் வைப்பீடுகளே ஆகும்" – விளக்குக.)

(அல்லது)

Discounting of Bills - Write short notes. (மாற்றுச் சீட்டுகளின் தள்ளுபடி – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Garnishee Order - Write short notes. (பொருள் பற்றுகை ஆணை – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

வங்கியியல் தொழிலில், கடன் வாங்குதல் என்பது வங்கியருக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில், வங்கியர் குறைந்த வட்டி விகிதத்தில் பணம் கடன் வாங்கி, அதை அதிகமான வட்டி விகிதத்தில் மற்றவர்களுக்கு கடன் கொடுத்து, தங்கள் ஒரு வங்கித் தொழிலை நடத்துகின்றனர். எனவே இதற்கு பணம் கடன் வாங்க வேண்டும். அது பின்வரும் வழிமுறைகளின் மூலம் வங்கியருக்குச் சாத்தியமாகின்றன.

கடன் வாங்கும் வழிமுறைகள் [Forms of Borrowing]:

இன்று வங்கிகள் வரைவோலை முதலியவற்றின் மூலம் பணம் மாற்றிக் கொடுக்கும் சேவைகள், தரகு, பாதுகாப்பு பெட்டக வாடகை போன்றவற்றின் மூலமும் தங்கள் இலாபங்களில் ஒரு பகுதியை ஈட்டுகின்றன என்றாலும், வங்கிகளில் குறைந்த வட்டியின் பேரில் வாடிக்கையாளர்களால் வைப்பீடு செய்யப்படும் நிதிகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாகத்தான் வங்கியர் தங்கள் இலாபங்களில் பெரும் பகுதியை ஈட்டுகின்றன என்று கூறலாம். இங்கு ஒரு வாடிக்கையாளர் வங்கியில் தனது தொகையை வைப்பீடு செய்வதன் மூலமாக, வங்கியருக்கு அவர் கடன் கொடுக்கிறார் என்று பொருள். அதாவது வைப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம், வங்கியர் தனது வாடிக்கையாளரிடம் கடன் வாங்குகிறார் என்றும் கூறலாம். இதனை முதல் நிலை வைப்பீடு (Primary Deposit) என்பர். இங்கு வங்கியில் வைப்பீடு செய்யும் முயற்சியை முதலில் வாடிக்கையாளர்களே செய்கின்றனர். எனவே வங்கியர் தனது கடன் தொகையை திரட்டும் வழிமுறைகளில் முதலாவதாக நிற்பது, வாடிக்கையாளர்களின் வைப்பீடுகளே ஆகும் எனில் அது மிகையன்று.

அடுத்து இரண்டாவது நிலை (Secondary Deposits) வைப்பீடுகளாக வருவது, வங்கியர் வெளியிடும் பிணையாவணங்கள் (Bonds), கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures) மற்றும் பணச் சான்றிதழ்கள் (Cash Certificates) ஆகும். இவற்றை வெளியிடுவதன் மூலம், பணத்தை தங்களிடம் வைப்பீடு (முதலீடு) செய்யும்படி மக்களுக்கு வங்கிகள் அழைப்பு விடுக்கின்றன. இவற்றில் பிணையாவணங்கள் என்பன, வங்கிகளிடம் மக்கள் செய்யும் வைப்பீடுகளை, வங்கியர் பங்குச் சந்தைகளில் இலாபம் தரக்கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்து, பின்னர் பங்குகளின் விலை உயரும் பொழுது, அவற்றை விற்று தங்களுக்குரிய தரகை மட்டும் இருத்திக் கொண்டு, இலாபத்தை வைப்பீட்டாளர் களுக்கு வழங்குகின்றன. அதுபோல் வங்கிகள் அப்போதைக்கப்போது கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகின்றன. அதில் முதலீடு செய்பவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இலாபஈவு வழங்குகின்றன. பணச் சான்றிதழ்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் சில வணிக வங்கிகள், சில குறிப்பிட்ட ஆண்டுகள் முடிந்த பின்பு அதில் குறிப்பிட்டுள்ள முகமதிப்பை (face value) திரும்பக் கொடுக்கின்றன. எனவே பொதுமக்கள் வங்கியில் வைப்பீடுகளின் வாயிலாகச் செய்யும் முதலீடே, வங்கிகளின் கடனாக உருவாகின்றன என்று கூறலாம்.

மாற்றுச் சீட்டுத் தள்ளுபடி [Discounting of Bills]:

வங்கிகள் தங்களது குறுகிய கால கடன் தேவைகளுக்கு, தங்களிடம் உபரியாக பணம் வைத்திருக்கிற வாடிக்கையாளர்களின் மாற்றுச் சீட்டுகளுக்கு தள்ளுபடி அளித்து பணம் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு வங்கியர் பெறும் கடனை அடைக்கும் காலம் 90 நாட்களுக்கு மிகக் கூடாது. இவ்வாறு மாற்றுச் சீட்டுகளுக்கு தள்ளுபடி அளிக்கப்பட்ட போதும், மேற்படி மாற்றுச் சீட்டுகளை வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கியரே தங்களின் பத்திரமான பாதுகாப்பில் வைத்துக் கொள்கிறார். மாற்றுச் சீட்டுகள் முதிர்வடைந்ததும், அதற்கான தொகை சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

பல்வேறு வகையான வைப்பீடுகள்[Different types of Deposits]:

பொது மக்கள் செய்யும் வைப்பீடுகள் மூலமாக வங்கிகள் தங்கள் நிதி யாதரங்களைத் திரட்டிக் கொள்கின்றன என்று நாம் சென்ற அத்தியாயத்திலேயே விரிவாகக் கண்டோம். இந்த வைப்பீடுகளில் 'நிலை வைப்பீடு' எனும் திட்டத்தை அனைத்து வங்கிகளும் செயல்படுத்தி வருகின்றன. சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கிலும் வாடிக்கையாளர்கள் வைப்பீடு செய்த போதிலும், அவையெல்லாம் வாடிக்கையாளர்கள் கேட்ட மாத்திரத்தில் வங்கியர் திரும்பக் கொடுக்கத் தக்க

'கேட்பு வைப்பீடுகளாக' (Demand Deposits) உள்ளன. எனவே இவற்றினால் வங்கியருக்கு பெரும் இலாபம் ஏதுமில்லை. அதாவது இத்தகு கணக்குகளின் மூலமான வைப்பீட்டின் அளவு, அனுதினமும் மாறக்கூடியது. அது கூடலாம் அல்லது குறையலாம். எனவே இந்த இருப்பை நம்பி, வங்கியர் மற்றவர்களுக்கு கடன் கொடுப்பதில்லை. எனவே வங்கியருக்கு இலாபமீட்டிக் கொடுப்பதெல்லாம், வாடிக்கையாளர்கள் செய்யும் நிலை வைப்பீடுகளே ஆகும். ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட காலம் கடந்த பிறகே வாடிக்கையாளருக்கு வட்டியுடன் திரும்பக் கொடுக்கப்படுகிறது. எனவே இதனை 'கால வைப்பீடுகள்' (Time Deposits) என்றும் கூறுகிறோம். இதற்கு இடைப்பட்ட காலத்தில் அவ்வைப்பீட்டுத் தொகையை மற்றவர்களுக்கு அதிக வட்டிக்கு கடன் கொடுத்து, வங்கிகள் இலாபமீட்டலாம். அடிப்படை ஒன்றுதான் என்றாலும், நிலை வைப்பீடுகளை வங்கிகள், பல கவர்ச்சிகரமான திட்டங்களின் வாயிலாக அறிமுகப்படுத்தியுள்ளார். அவை வருமாறு.

(a) மிகு சேமிப்புத் திட்டம் (Super Savings Scheme): இது ஒரு நீண்ட காலச் சேமிப்புத் திட்டமாகும். இதன்படி ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகை நீண்ட காலத்திற்கு வைப்பீடு செய்யப்படுகிறது. அந்த காலம் முடிந்தவுடன் மொத்தத் தொகையுடன், அதற்குரிய வட்டியும் சேர்த்து வைப்பீட்டாளருக்கு திருப்பி அளிக்கப்படும்.

(b) பணச் சான்றிதழ்கள் (Cash Certificates): வங்கிகள் பல்வேறு முக மதிப்புடைய பணச் சான்றிதழ்களை அவ்வப்போது வெளியிடுகின்றன. இவற்றின் வெளியீட்டு விலை, முக மதிப்பை விடக் குறைவாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட காலம் கழித்து, இதன் முகமதிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

(c) ஆண்டுத் தொகை வைப்பீட்டுத் திட்டம் (Annuity Deposit Scheme): குறிப்பிட்ட சில ஆண்டுகள் கழித்து மாதந்தோறும் ஒரு சீரான வருமானத்தைப் பெறுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. அக்குறிப்பிட்ட ஆண்டுகள் 3, 5, 7 மற்றும் 10 ஆண்டுகளாக உள்ளன. இத்திட்டத்தில் வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட தொகையை முதலில் வைப்பீடு செய்தல் வேண்டும். பின்னிட்டு மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில், வாடிக்கையாளர் எதைத் தேர்வு செய்தாரோ, அவை முடிந்த பிறகு, அவ்வாடிக்கையாளருக்கு மாதந்தோறும் ஒரு தொகை அளிக்கப்படும். இத்தொகையில் வைப்பீட்டுத் தொகையின் ஒரு பகுதியும், வட்டியும் அடங்கும்.

(d) மறு முதலீட்டுத் திட்டம் (Re-investment Plan): இது ஏறத்தாழ நிலை வைப்பீடுகளைப் போன்றதே. எனினும், இதில் வட்டி காலந்தோறும் கணக்கிடப்பட்டு, அத்தொகை மீண்டும் வைப்பீட்டுத் தொகையுடன் சேர்க்கப்பட்டு,

முதலீடு செய்யப்படுகிறது. அதாவது அசலுடன் வட்டி சேர்ந்து, மீண்டும் அசல் ஆகிவிடுகிறது. பின், அத்தொகைக்கு வட்டி கணக்கிடப்படுகிறது. வைப்பீடு செய்யப்பட்ட குறிப்பிட்ட காலம் முடிந்து, வைப்பீடு முதிர்வடையும் போது, அவ்வாறு சேர்ந்த தொகை முழுவதையும் வைப்பீட்டாளர் பெறுகிறார்.

(e) கல்வி வைப்பீட்டுத் திட்டம் (Educational Deposit Scheme): இத்திட்டம், வைப்பீட்டாளர்களைத் தங்கள் குழந்தைகளின் கல்விக்காகச் சேமிக்கும்படி தூண்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இதன்படி ஒரு வைப்பீட்டாளர், தனது குழந்தை, மழலையர் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரையில் படிக்கும் காலத்தின் பொழுது, மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பீடு செய்து வர வேண்டும். ஏழாம் வகுப்பிற்கு பிறகு, அக்குழந்தை பல்கலைக் கழக படிப்பை முடிக்கும் வரையில், ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வங்கி திருப்பிக் கொடுக்கிறது.

(f) தொடர் ஓய்வூதியத் திட்டம் (Perennial Pension Plan): இதன் படி, வைப்பீட்டாளர், ஒரு குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் 84 மாதங்களுக்கு வைப்பீடு செய்கிறார். 85–ஆம் மாதத்திலிருந்து வங்கி அவருக்கு மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஓய்வூதியமாக அளிக்கிறது. ஓய்வூதியம் பெறுவதை வைப்பீட்டாளர் நிறுத்த விழைந்தால், ஒரு குறிப்பிட்ட தொகையை வங்கியரிடமிருந்து அவர் பெற்றுக் கொள்ளலாம்.

(g) தொடர் வைப்பீடு (Recurring Deposit) : இதில் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (எடுத்துக்காட்டாக, 12, 24, 48, 60 மாதங்களுக்கு) வைப்பீட்டாளர் வைப்பீடு செய்கிறார். மேற்குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன், அத்தொகை வட்டியுடன் அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவை தவிர, வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான (Deposits by Non-Resident Indians) வைப்பீட்டுத் திட்டங்களும் உண்டு.

உரிய தேதிக்கு முன் பணம் கொடுத்தல் [Payment before due date]:

நிலை வைப்பீடுகள் அதற்குரிய காலக் கெடு முடிந்ததும், முதிர்வடை கிறது. எனவே அவ்வைப்பீட்டுத் தொகையை வட்டியுடன் வங்கியர் வாடிக்கை யாளருக்கு அளிக்க வேண்டும். இது பொதுவான நடைமுறையாகும். எனினும் வங்கியர், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக, நிலை வைப்பீடுகளை அவற்றிற்கு உரிய முதிர்வுத் தேதிக்கு முன்னரே திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கின்றனர். ஆனால் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி, ஒரு

குறிப்பிட்ட சதவிகித வட்டியை பின்வருமாறு கணக்கிட்டு வங்கியர் பிடித்துக் கொள்கின்றனர். அதாவது,

(1) அவ்வைப்பீடு எவ்வளவு காலத்திற்கு வங்கியில் இருந்ததோ, அந்தக் காலத்திற்கான வட்டி விகிதம் முதலில் நிருணயித்துக் கொள்ளப்படுகிறது.

(2) இரண்டாவதாக, அந்த வட்டி விகிதத்திலிருந்து 2 சதவீதம் குறைத்துக் கொள்ளப்படுகிறது.

எடுத்துக்காட்டாக 'அ' என்பவர், ரூ.5000/–த்தை 2 ஆண்டுகளுக்கு 7 சதவிகித வட்டிக்கு வங்கியில் வைப்பீடு செய்கிறார். ஆனால் அவர் ஓராண்டு முடிவில், தனது வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெற்றுக் கொள்ள விழைகிறார். இங்கு வங்கியில் அவரது வைப்பீடு ஓராண்டு இருந்தது. எனவே அதற்குரிய வட்டி 6 சதவிகிதம் ஆகும். தற்பொழுது, இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்படி அறிவுறுத்தலின்படி இந்த 6 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதத்தை கழித்துக் கொண்டு, அவ்வைப்பீட்டிற்கு 4 சதவிகித வட்டியே வங்கியர் வழங்குவர். இதனால் வாடிக்கையாளருக்கு வட்டி இழப்பு ஏற்படுகிறது.

எனினும் இந்திய ரிசர்வ் வங்கியின் மற்றொரு அறிவுறுத்தலின்படி, ஒரு வைப்பீடு முதிர்வடைவதற்கான உரிய தேதிக்கு முன்னரே, அதை வைப்பீடு செய்த வைப்பீட்டாளர் இறந்து போனால், மேற்கண்டவாறு 2 சதவீகிதத்தைப் பிடித்துக் கொள்ளாமல், அவ்வைப்பீடு எவ்வளவு காலத்திற்கு வங்கியில் இருந்ததோ அதற்குரிய வட்டியுடன், அவரது வாரிசுதாரர்களுக்கு வங்கியர் அளித்தல் வேண்டும்.

முதிர்வடைந்த நிலை வைப்பீடுகளுக்கு பணம் திரும்பக் கொடுத்தல் [Repayment of Matured Fixed Deposits]:

எவ்வளவு காலத்திற்கு பணம் வங்கியில் நிலையாக வைப்பீடு செய்யப் படுகிறதோ, அக்காலம் முடிவடையும் பொழுது, அவ்வைப்பீடு முதிர்வடைகிறது என்றும், அவ்வைப்பீட்டை வட்டி சேர்த்து வங்கியர் வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டும் என்றும் நாம் ஏற்கனவே கண்டோம். இவ்வாறு முதிர்வடைந்த வைப்பீடுகளைப் பொறுத்தவரை, அது முதிர்வடைந்த தேதியிலிருந்து 14 நாட்களுக்குள், வைப்பீட்டாளர் வங்கிக்கு வந்து நிலை வைப்பீட்டு இரசீதை கையொப்பமிட்டு வங்கியரின் ஒப்படைத்து, அதற்குரிய தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அவ்வைப்பீட்டை மீண்டும் மற்றொரு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள வேண்டும். தவறினால், அத்தொகை பெற்றுக் கொள்ளப் படும் வரை அல்லது அவ்வைப்பீடு புதுப்பிக்கப்படும் வரை, அவ்வைப்பீட்டிற்கு சேமிப்புக் கணக்கிற்குரிய குறைந்த வட்டி விகிதமே வழங்கப்படும். மாறாக, நிலை

வைப்பீட்டிற்குரிய வட்டி விகிதம் வழங்கப்படாது. இது இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் வெளியிட்ட அறிவுறுத்தலின்படியிலானது.

வைப்பீடுகளை பற்றுகை செய்ய நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் ஆணை [Order of Attachment of Deposits by the Court] (அல்லது) பொருள் பற்றுகை ஆணை [Garnishee Order]:

ஒருவர், மூன்றாம் நபர்களிடம் பெற்ற கடனுக்காக, அவரது பெயரில் வங்கியில் உள்ள நிலை வைப்பீட்டுத் தொகைகளை பற்றுகைக்கு (ஜப்திக்கு) ஆணையிட நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. இந்த ஆணையின்படி, வங்கியர் அவரின் வைப்பீட்டுத் தொகைகளை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். இங்கு வங்கியர் **'பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர்' (Garnishee)** எனப்படுகிறார். அவருக்கு மேற்கண்டவாறு நீதிமன்றம் இடும் ஆணை **'பற்றுகை ஆணை' (Garnishee Order)** எனப்படுகிறது. முன்னதாக வைப்பீட்டாளருக்கு கடன் கொடுத்துள்ள மூன்றாம் நபர்கள், அக்கடனை வசூலிப்பதற்காக அவர் மீது உரிமை வழக்கிட்டு தீர்ப்பாணை (Decree) பெற்றிருக்க வேண்டும். இங்கு 1908–ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி, தீர்ப்பாணையை பெற்றுள்ள அம்மூன்றாம் நபர்கள், தீர்ப்பாணை பெற்றவர்கள் (Decree Holders) எனப்படுகின்றனர். யாருக்கு எதிராக தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதோ (இங்கு மேற்படி வைப்பீட்டாளர்) அவர், தீர்ப்புக் கடனாளி (Judgment Debtor) எனப்படுகிறார். எனவே தீர்ப்புக் கடனாளிக்கு எதிராக மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற மனுச் (Execution Petition) செய்யும் பொழுதுதான், அவர் வங்கியில் செய்துள்ள வைப்பீட்டை பற்றுகை செய்ய நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும்.

எனினும் அவ்வைப்பீட்டாளரும் மற்றவர்களும் சேர்ந்து தங்கள் பெயரில் கூட்டாக வைப்பீடு ஏதும் செய்திருந்தால், அதைப் பற்றுகை செய்யவியலாது. அவரது பெயரில் தனியாக வைப்பீடு இருத்தல் வேண்டும். எனவே ஒருவருக் கெதிரான தீர்ப்பாணைக்காக, அவர் மற்றவர்களுடன் சேர்ந்து செய்துள்ள வைப்பீடுகளை பற்றுகை செய்து, அத்தொகையை நீதிமன்றத்திற்கு அனுப்ப வங்கியர் மறுக்கலாம்.

மேற்கண்ட நிலைப்பாடு வாடிக்கையாளர் செய்யும் நிலை வைப்பீடுகளைப் (Fixed Deposit) பொறுத்தது. எனினும் ஒரு வாடிக்கையாளரின் சேமிப்புக் கணக்கு வைப்பீடு (Savings Deposit Account) அல்லது நடப்புக் கணக்கு வைப்பீடு (Current Deposit Account) ஆகியவற்றில் உள்ள தொகைகளும்

நீதிமன்றத்தின் பற்றுகை ஆணைக்கு உட்பட்டதே. வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கில் உள்ள தொகையை பற்றுகை (ஜப்தி) செய்ய வங்கியருக்கு நீதிமன்றம் பொருள் பற்றுகை ஆணையை அனுப்பினால், வங்கியர் அக்கணக்கின் இயக்கத்தை நிறுத்தி வைத்துவிட்டு, பற்றுகை செய்ய ஆணையிடப்பட்ட தொகையை நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆனால் அதே சமயத்தில், அக்கணக்கில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் பற்றுகை செய்து அனுப்பும்படி, நீதிமன்றம் அந்த ஆணையில் குறிப்பிட்டிருந்தால், அதுபோக மீதியுள்ள தொகையிலிருந்து அவ்வாடிக்கையாளர் கொடுக்கும் காசோலைக்கு வங்கியர் பணம் கொடுக்க வேண்டும்.

வருமான வரித் துறையால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் [Attachment of Deposits by the Income Tax Authorities]:

வருமான வரி விதிக்கப்பட்ட ஒருவர், வருமான வரித் துறைக்கு வருமான வரி செலுத்தாமல் இருந்தால், அவரால் கொடுபட வேண்டிய வரித் தொகையை, அவரது வங்கிக் கணக்கில் இருப்பிலுள்ள பணத்திலிருந்து, தங்கள் துறைக்கு செலுத்துமாறு வருமான வரித் துறையினர் வங்கியிடம் கேட்பதற்கு, அவர்களுக்கு, 1961–ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டம் பிரிவு 226(3)–ன்படி அதிகாரம் உள்ளது. வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒரு வாடிக்கையாளர், வருமான வரி விதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் பொழுது, அவர் அவ்வங்கியில் செய்துள்ள வைப்பீட்டுக் கணக்குகளைப் பொறுத்து, வங்கிகளுக்கு மேற்படி பிரிவின் கீழ், வருமான வரித் துறையினர் தற்பொழுது அடிக்கடி அறிவிப்பு அனுப்பி வருகின்றனர். இந்த அறிவிப்புகளுக்கு இணங்கி, தனது வாடிக்கையாளரின் வைப்பீடுகளை பற்றுகை செய்து, வருமான வரித்துறைக்கு அனுப்ப வங்கியர் கட்டுப்பட்டவர். இந்த அறிவிப்பு, நிலை வைப்பீடுகளுக்கு மட்டுமல்லாமல், சேமிப்பு வைப்பீடுகள், நடப்பு வைப்பீடுகள் ஆகியவற்றிற்கும் பொருந்தும். எனினும் ஒரு நிலை வைப்பீடு, அது கொடுபட வேண்டிய தேதிக்கு முன்பு வருமான வரித் துறையிடமிருந்து மேற்கண்ட அறிவிப்பு வருமானால், அதற்கு வங்கியர் உடனடியாக இணங்கி நடக்க வேண்டியதில்லை. ஆனால் வைப்பீடு முதிர்வடைந்ததும், அத்தொகையை வருமான வரித் துறைக்கு செலுத்தக் கடமைப்பட்டதாகும். கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் வருமான வரி செலுத்த வேண்டியவராக இருந்து, அப்பொழுது மேற்கண்ட அறிவிப்பு வருமானால், அக்கணக்கில் உள்ள தொகையில் பாதியை வங்கியர் வருமான வரித் துறையினரிடம் செலுத்த வேண்டும்.

-o0o-

9

வங்கியரின் கடமைகள் [Duties of a Banker]

ஒரு சிறு அறிமுகம்:

வங்கியருக்கும், அதன் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள உறவு இரு வகைப்படும். அவை (1) பொது நிலை உறவு; (2) சிறப்பு நிலை உறவு. இவற்றில் பொது நிலை உறவை நாம் அத்தியாயம் எண். 5–ல் கண்டோம். அடுத்து ஒரு வங்கியருக்கு உள்ள கடமைகளும், உரிமைகளுமே அவர் வாடிக்கையாளருடன் கொண்டுள்ள சிறப்பு நிலை உறவாகும். அந்த வகையில் நாம் இந்த அத்தியாயத்தில் வங்கியரின் கடமைகளையும் (Duties of a Banker), அடுத்த அத்தியாயத்தில் வங்கியரின் உரிமைகளையும் (Rights of a Banker) காண உள்ளோம்.

1. Explain the duties of a banker. (ஒரு வங்கியாளரின்கடமைகளை விளக்குக.)

(அல்லது)

Duties of a banker - Write short notes. (ஒரு வங்கியரின் கடமைகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Disclosure of the secrecy of customer's account - Write short notes. (வாடிக்கையாளரின் கணக்கு இரகசியத்தை வெளியிடல் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே வங்கியர், வாடிக்கையாளருக்கு பின்வரும் கடமைகளை ஆற்ற வேண்டியுள்ளது. அவற்றில் தவறினால், அது ஒப்பந்த மீறுகை யாகிவிடும்; அதற்கு வங்கியரே பொறுப்பு. அக்கடமைகள் வருமாறு.

வங்கியரின் கடமைகள் [Duties of a Banker]:

(1) காசோலைகளுக்கு பணம் வழங்குதல் (மதிப்பளித்தல்) (Obligation to honour the cheques):

வங்கியர் சேமிப்பு மற்றும் நடப்பு கணக்குகளில் ஏற்றுக் கொள்ளும் தொகைகள், கேட்பு வைப்பீடுகள் (Demand Deposits) ஆகும். வாடிக்கையாளர்கள் காசோலை வழங்கி கேட்கும் போது அவர்கள் கணக்கிலிருந்து பணம் வழங்க வேண்டியது, வங்கியரின் கடமையாகும். இக்கடமையிலிருந்து தவறினால், அதனால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு வங்கியரே பொறுப்பு, என்று **1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 31** குறிப்பிடுகிறது. எனினும் இவ்வாறு காசோலைகளுக்கு மதிப்பளிக்க, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். அவை

(a) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்க வேண்டும் (there must be sufficient funds);

(b) காசோலை எல்லா வகையிலும் முழுமையானதாக இருக்க வேண்டும் (complete in all respects); அதாவது அதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விபரங்கள் முழுமையாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்;

(c) அக்காசோலை செலுத்தப்படலுக்காக உரிய முறையில் முன்னிடப் பட வேண்டும். (cheque must be presented for payment in proper manner). அதாவது, வங்கியின் வேலை நாளிலும், நேரத்திலும், வங்கியின் எந்தக் கிளையில் கணக்கு உள்ளதோ அங்கு செலுத்தலுக்காக காசோலை முன்னிடப்பட வேண்டும். கீறலிடப்பட்ட காசோலைகளுக்கு வங்கியர் தனது ரொக்க மேடையில் (cash counter) பணம் தரத் தேவையில்லை. அதை தனது கணக்கிலிட்டுத்தான் வாடிக்கையாளர் வசூலிக்க வேண்டும்;

(d) தக்க காலவரையறைக்குள் காசோலை முன்னிடப்பட வேண்டும் (must be presented within the limitation period). அதாவது ஒரு காசோலை அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் வரையே

செல்லத்தக்கதாகும். இதற்குள் அதை வங்கியில் கொடுத்து, பணமாக்கிக் கொள்ள வேண்டும். தவறினால், அக்காசோலை மதிப்பிழந்ததாகிவிடும்.

(e) காசோலையை வசூலிக்க காலம் எடுத்துக் கொள்ளலாம் (Banker may take time for collection). அதாவது, வெளியூர் வங்கியின் காசோலை ஒன்றை வசூலிப்பதற்காக வாடிக்கையாளர் ஒருவர் தனது கணக்கில் முன்னிட்டால், அதனை அந்த ஊருக்கு அனுப்பி பணம் வசூலித்து அவ்வாடிக்கையாளரின் கணக்கில் சேர்க்க சில தினங்கள் பிடிக்கும். ஆனால் அதற்குள் வாடிக்கையாளர் அக்காசோலையின் மீது பணம் வழங்கும்படி கேட்டால், வங்கியர் மறுத்துவிடலாம்.

(f) அக்காசோலைக்குரிய பணத்தின் பயன்பாட்டை (way of employment of funds) வங்கியர் கவனித்தல் வேண்டும் . அதாவது, தனக்குத் தெரிந்தே ஒரு வாடிக்கையாளர் அவரது கணக்கில் உள்ள தொகையே முறையின்றிப் பயன் படுத்த வங்கியர் அனுமதிக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, பொறுப்பாண்மை (Trust) ஒன்றின் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று இருந்து, அதன் பொறுப்பாண்மையர் (Trustee) அக்கணக்கிலிருந்து, அதே வங்கியில் உள்ள தனது சொந்தக் கணக்கிற்கு பணத்தை மாற்ற காசோலை கொடுத்தால், அதற்கு பணம் வழங்க வங்கியர் மறுக்கலாம். மேலும் பொறுப்பாண்மையின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட நோக்கத்திற்காக காசோலை வழங்கப்பட்டால், அதனை மறுக்கவும் வங்கியர் அதிகாரம் பெற்றவர். எனினும், இவற்றையெல்லாம் சரிபார்த்துக் கொண்டிருப்பது வங்கியருக்கு நடைமுறைச் சாத்தியமல்ல. வேறு வழிகளில் பொறுப்பாண்மையர் அப்பணத்தை எடுத்து, தமது நலன்களுக்குப் பயன்படுத்தி விடவும் வாய்ப்பு உண்டு.

(g) காசோலைக்கு பணம் வழங்க, சட்டப்படியான தடை ஏதும் இருத்தல் கூடாது. (there must not be any legal bar to honour the cheque): எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள தொகையை பற்றுகை செய்ய நீதிமன்றம் ஆணை (Garnishee Order) பிறப்பித் திருக்கும் பொழுது, எவ்வளவு தொகை அவ்வாறு பற்றுகைக்கு ஆணையிடப் பட்டுள்ளதோ, அத்தொகையை வங்கியர் வாடிக்கையாளரிடம் செலுத்தாமல் நிறுத்தி வைத்துவிட வேண்டும். எனினும் இதற்கு மேல் உள்ள தொகைக்கு வாடிக்கையாளர் காசோலை வழங்கினால், அதற்கு வங்கியர் பணம் தர வேண்டும்.

2. வாடிக்கையாளர் கணக்கின் இரகசியம் காக்கும் கடமை (Obligation to maintain secrecy of customer's account):

பொதுவாக, ஒருவரின் நிதிநிலையை, அவரது வங்கிக் கணக்கிலிருந்து அறியலாம். வாடிக்கையாளர் ஒருவரின் வங்கிக் கணக்கில் உள்ள விஷயங்கள் மூன்றாம் நபர்களுக்கு தெரிய நேர்ந்தால், அது அவ்வாடிக்கையாளரின் நற்பெயரை பாதிக்கலாம் அல்லது இழப்புகளைக் கூட ஏற்படுத்தலாம். எனவே வங்கியர் தனது

வாடிக்கையாளர் பெயரில் உள்ள கணக்குப் பதிவேடுகளை பொது மக்களோ அல்லது அரசு அதிகாரிகளோ பார்க்க அனுமதிக்கக் கூடாது. அவற்றின் இரகசியத்தை காக்க வேண்டும். ஆரம்பத்தில் இது ஒரு சட்டப்படியான கடமையாக வங்கியர் மீது விதிக்கப்படவில்லை. ஆனால் பின்வரும் ஒரு முக்கியமான வழக்கு எழுந்த பிறகு, இந்நிலை மாறிவிட்டது.

Tournier v. National Provincial and Union Bank of England[1] – எனும் வழக்கில் டூர்னியர் என்பவர் தனது வங்கிக் கணக்கில் உள்ள தொகையை விட அதிகமாகப் பெற்று வந்தார். அதாவது அதிகப் பற்று (over draft) பெற்று வந்தார். இதனை கட்டக் கோரி வங்கியர், டூர்னியரைக் கேட்ட பொழுது, அவர் வாரந்தோறும் ஒரு தொகையை செலுத்துவதாக ஒப்புக் கொண்டார். அவ்வாறே சில காலம் செலுத்தியும் வந்தார். இதற்கிடையில், அவருக்கு வேறொரிடத்தில் வேலை கிடைத்த காரணத்தால், அங்கு சென்று விட்டார். எனவே மேற்படி வாரந்தோறுமான தொகையை அவர் செலுத்தவில்லை. இதனால் வங்கி மேலாளர், டூர்னியர் வேலை பார்க்கும் நிறுவனத்தின் இயக்குநர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, டூர்னியர் தனது கணக்கில் மிக அதிமாக அதிகப்பற்று வாங்கியிருப்பதாகவும், அவர் குதிரைப் பந்தயத்திற்காக அப்பணத்தைச் செலவிடுவதாகவும், அவருடைய காசோலைகளில் பெரும்பாலானவைகளுக்கு பணம் கொடுக்க மறுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். இதன் பேரில் டூர்னியரை, அந்நிறுவன இயக்கநர்கள் வேலையிலிருந்து நீக்கி விட்டனர். இதனால் டூர்னியர் இழப்பீடு கோரி வங்கியர் மீது மேற்படி வழக்குத் தொடர்ந்தார். இதில் நீதிமன்றம், "வாடிக்கையாளரின் கணக்கின் நிலவரத்தை வெளிப்படுத்தாமல் இருக்கும் கடமை வங்கியருக்கு உண்டு என்பதில் அய்யமில்லை" என்று தீர்ப்புரைத்தது. இத்தீர்ப்பிலிருந்து வாடிக்கையாளரது கணக்கின் இரகசியத்தைக் காக்க, வங்கியர் சட்டப்படி கடமைப்பட்டவர் எனப்பட்டது.

வங்கியியல் அறிஞர் **சர் ஜான் பேஜட்** என்பவர் ஒரு படி மேற்சென்று, வாடிக்கையாளர் ஒருவர் இறந்த பிறகும்கூட, அவரது கணக்கின் இரகசியத்தை காக்கும் கடமை வங்கியருக்கு உள்ளது என்று அழகாக உரைக்கிறார்.

நமது நாட்டில் 1969–ஆம் ஆண்டு வரை இக்கடமை சட்டத்தின் முலம் விதிக்கப்படவில்லை. பின்னிட்டு 1970–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வங்கியியல் நிறுவனங்கள் (கூட்டுருக்களை கையகப்படுத்தல் மற்றும் மாற்றுதல்) சட்டத்தின் **[Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1970]** 13–வது பிரிவின்படி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் மேற்கண்ட கடமையை தவறாது பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறது.

1. (1924) 1 K.B. 461

இரகசியம் வெளியிடக்கூடிய சூழ்நிலைகள் (Circumstances in which disclosure of secrecy is required) (அல்லது) இரகசியம் காக்க வேண்டிய கடமைக்கு விதிவிலக்குகள் (Exceptions): மேற்கண்ட இரகசியம் காக்கும் கடமை, ஒரு முழுமையான கடமை (Absoluted Duty) அல்ல. இதற்கு சில விதிவிலக்குகளும் (Exceptions) உண்டு. சில நியாயமான சூழ்நிலைகளில் வங்கியர் வாடிக்கையாளரின் கணக்கு இரகசியங்களை வெளியிட வேண்டி வரும். அவை வருமாறு:–

1. சட்டத்தால் கோரப்படும் பொழுது வெளியிடுதல் (Disclosure required by Law) : சட்டம், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வாடிக்கையாளரின் கணக்கு விபரங்களை வெளியிடும்படி கோரினால், அங்கு வங்கியர் அதை வெளிப்படுத்த சட்டப்படி கடமைப்பட்டவர். எடுத்துக்காட்டாக, 1961–ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் 131–வது பிரிவின்படி, வங்கி நிறுவனத்தின் அலுவலர் உள்ளிட்ட எவரையும், அவர்கள் வசம் உள்ள கணக்குப் புத்தகங்களையும், பிற ஆவணங்களையும் முன்னிடுமாறு கோர வருமான வரித்துறையினர் அதிகாரம் பெற்றுள்ளனர். இத்துறையினர் கோரும் கணக்கு விபரப் பட்டியலை, அவர்கள் அளிக்க வேண்டும். அதுபோல், 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுப் பங்கு நிறுவனத்தின் தொடர்புகளை ஆய்வு செய்ய மத்திய அரசு நியமிக்கும் ஆய்வாளர் எவரும், அந்நிறுவனத்தின் வங்கியர் உட்பட அனைத்து அலுவலர்களும், ஊழியர்களும் அந்நிறுவனத்தின் பதிவேடுகளையும், ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தக் கோரலாம். மேலும் 1891–ஆம் ஆண்டின் வங்கியர்களுடைய புத்தகங்கள் சாட்சியச் சட்டத்தின்படி, ஒரு வாடிக்கையாளரின் கணக்கு தொடர்பான தகவலை வெளிப்படுத்தும்படி நீதிமன்றம் ஆணையிட்டால், வங்கியர் நீதிமன்றம் கோரும் தகவலை வெளிப்படுத்த கடமைப்பட்டவர். இதுபோல், 1934–ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு 45B- யின்படியும், 1949–ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் 26–வது பிரிவின்படியும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 94(3)–ன்படியும், 1973–ஆம் ஆண்டின் அந்நிய செலாவணிச் சட்டத்தின் கீழும் வங்கியர் வாடிக்கையாளரின் கணக்கை வெளிப்படுத்தும் கடமை கொண்டவர். எனினும், வங்கியியல் அறிஞர்கள் **"அவ்வாறு வெளியிடும்போது கவனமாகச் செயல்பட வேண்டும் என்றும், தேவையில்லாத விவரங்களைத் தரக்கூடாது"** என்றும் கூறுகின்றனர்.

2. பொது நலன் கருதி வெளியிடுதல் (Disclosure in the Interest of the Public) : வாடிக்கையாளர் கணக்கு பற்றிய விபரங்கள் பொது நலனுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருந்தால், அவரது கணக்கு பற்றிய இரகசியங்களை வெளியிடுதல் உண்மையில் வங்கியரின் கடமை என்றே சொல்லாம். எடுத்துக்

காட்டாக ஒரு வாடிக்கையாளர் தேச விரோதச் செயல் செய்ய தமது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை பயன்படுத்துகிறார் என்றால், அதை பொது நலன் கருதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வெளிப்படுத்தலாம்.

3. வங்கியர் தமது நலன் கருதி வெளியிடுதல் (Disclosure in Banker's own Interest) : வங்கியர், தமது நலனைப் பாதுகாத்துக் கொள்வதற் காக, வாடிக்கையாளரது கணக்கின் இரகசியத்தை வெளியிடுவதில் தவறில்லை. கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வங்கியர் இரகசியத்தை வெளியிடலாம்.

(a) பொறுப்புறுதி கொடுத்தவருக்கு வெளியிடுதல் : வாடிக்கையாளர் ஒருவர், தாம் வாங்கிய கடனைச் செலுத்தத் தவறினால் அவருக்காக பொறுப்புறுதி கொடுத்தவருக்கு **(Guarantor)**, அவ்வாடிக்கையாளர் உண்மையை வெளியிடுவதில் தவறில்லை. மேலும் அவர்கள் இருவரும் கடனை செலுத்தவில்லையானால், அவர்கள் மீது வழக்கிடும் பொருட்டு, தனது வழக்குரைஞருக்கு வங்கியர் அவ்வாடிக்யைாளரின் மற்றும் அவருக்கு பொறுப்புறுதி அளித்தவரின் கணக்கு விபரங்களை வெளியிடலாம்.

(b) மற்ற வங்கியருக்கு வெளியிடுதல் (Banker's reference) : வேறு வங்கியர் தமது வாடிக்கையாளர் பற்றி விபரம் கேட்டால், அதனை வெளியிடுவது வங்கிகளிடையே பரஸ்பரம் நிலவி வரும் ஒரு வழக்கமாகும். எனினும், இங்கு வங்கியர் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

(c) தமது நிலையை நியாயப்படுத்த வெளியிடுதல் (As a Defence of Past Action): வங்கியர் தாம் கடந்த காலத்தில் செய்த செயல்களைச் சரியானது என்று நியாயப்படுத்த, வாடிக்கையாளரின் கணக்கை வெளியிடலாம்.

(d) வாடிக்கையாளரின் முன்னனுமதியுடன் வெளிடுதல் (Disclosure with the prior permission of the Customer): முன்னர் குறிப்பிட்ட மூன்று சூழ்நிலைகளிலும் வங்கியர், வாடிக்கையாளரின் முன்னனுமதி பெறாமலேயே கணக்குப் பற்றிய இரகசியங்களை வெளியிட்டு விடலாம். ஆனால், வேறு எந்தச் சூழ்நிலையிலும் வாடிக்கையாளரின் முன்னனுமதியுடன் மட்டுமே கணக்கு நிலைமை பற்றிய செய்திகளை வெளியிடலாம். வாடிக்கையாளரின் ஒப்புதல் வெளிப் படையாகவோ (Express) அல்லது உட்கிடையாகவோ (Implied) இருக்கலாம்.

Sunderland v. Barclay's Bank[1] - எனும் வழக்கில், திருமதி. சுண்டர் லேண்ட் எனும் பெண்மணி, ஆடைத் தயாரிப்பாளர் ஒருவர் பெயரில் காசோலை ஒன்றைக் கொடுத்தார். ஆனால் இதற்கு பணமளிக்க வங்கியர் மறுத்துவிட்டார்.

1. The Times, 24th and 25th November, 1938)

இதற்குண்டான காரணத்தை தெரிவிக்கும்படி, திருமதி. சுண்டர்லேண்ட் தனது வங்கியின் மேலாளரிடம் தொலைபேசி மூலம் கேட்டார். அதற்கான காரணத்தை மேலாளர், திருமதி. சுண்டர்லேண்ட்–டிடம் விளக்கிக் கொண்டிருக்கும் பொழுது, அதனை தனது கணவரிடமும் கூறும்படி தொலைபேசியை தனது கணவரிடம் கொடுத்து விட்டார். அப்பொழுது, திருமதி. சுண்டர்லேண்ட், குதிரைப் பந்தயத்தில் ஈடுபட்டு, குதிரைப் பந்தய தொழிலர்களிடம் (book-makers) கண்டபடி பிணையம் கட்டுவதாகவும், எனவே அவர் கொடுத்த காசோலைக்கு பணம் வழங்க மறுத்துவிட்டதாகவும் அவரது கணவரிடம் மேலாளர் விளக்கினார். இதன் பேரில், தனது கணக்கு விபரத்தை தன் கணவரிடம் வெளிப்படுத்தியதற்காக திருமதி. சுண்டர்லேண்ட், வங்கியர் மீது வழக்குத் தொடர்ந்தார். அதில், திருமதி. சுண்டர் லேண்ட் கேட்டுக் கொண்டற்கு, அவரது உட்கிடையான அனுமதியின் பேரில்தான், அவ்வுரையாடலின் தொடர்ச்சியாக அவரது கணக்கு விபரத்தை, அவரது கணவருக்கு வெளிப்படுத்தியதாகவும், எனவே இதற்காக வங்கியர் இழப்பீடு ஏதும் கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

வாடிக்கையாளரது கணக்கின் இரகசியத்தை வெளிடுவதற்கு முன்பாக வங்கியர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் : வாடிக்கையாளரின் அனுமதி பெற்று அல்லது பெறாமல், எந்தச் சூழ்லையிலும் அவரது கணக்கின் இரகசியத்தை வெளியிடும் முன்னர், வங்கியர் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் (Precaution) நடந்து கொள்ள வேண்டும். அந்நடவடிக்கைகள் வருமாறு.

1. வங்கியர் தனது விருப்பு–வெறுப்புக்குட்பட்டு, கணக்கு விபரங்களை அளித்தல் கூடாது; நேர்மையாகச் செயல்பட வேண்டும். **2.** வாடிக்கையாளரின் கணக்கை அடிப்படையாக வைத்தே, அதன் விபரங்களை தெரிவித்தல் வேண்டும். **3.** கணக்கின் பொதுவான நிலை பற்றிய விபரங்களை மட்டுமே கூற வேண்டும். உண்மையான தொகைகளை (actual figures) தெரிவிக்க வேண்டியது இல்லை. **4.** வாடிக்கையாளரின் நிதி நிலைமை பற்றிய மிகவும் உயர்வாகவோ (too high) அல்லது மிகவும் தாழ்வாகவோ (too low) எண்ணும்படி, கணக்கு விபரங்களை வெளியிடக் கூடாது. **5.** இயன்ற வரை தொலைபேசி முலம் கணக்கு விபரங்களைத் தெரிவிப்பதைத் தவிர்ப்பது நலம்.

முடிவாக, மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகள் நீங்கலாக ஏனைய சூழல்களில் வங்கியர் வாடிக்கையாளரின் இரகசியங்களை வெளியிட்டால், அதற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் ஆகிவிடுவார். மேலும், இதனால் பாதிக்கப்பட்ட மூன்றாவது நபருக்கு அல்லது வங்கியர் கூறிய கணக்கு விபரங்களை அறிந்து கொண்டு செயல்பட்ட மூன்றாவது நபருக்கும் இழப்பீடு தரவேண்டி வரும்.

2. Wrongful dishonour of cheque by banker - Write short notes. (வங்கியரின் தவறுதலான காசோலை மறுப்பு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the consequences of wrongful dishonour of cheque by banker. (வங்கியரின் தவறுதலான காசோலை மறுப்பால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.)

காசோலையின் மதிப்பை வங்கியர் தவறாக மறுத்தல் [Wrongful Dishonour of cheque by Banker] – விளக்கம்:

எல்லா வகையிலும் முழுமை பெற்ற, சட்டத் தடை ஏதும் இல்லாத நிலையில் முறையாக முன்னிடப்பட்ட காசோலைக்கு பணம் வழங்க வேண்டியது வங்கியரின் தலையாய கடமையாகும். தவறுதலாகவோ (Mistake) அல்லது கவனக்குறைகாவோ (Negligence) அக்காசோலைக்கு வங்கியர் பணம் செலுத்த மறுத்துவிட்டால், அது தவறான மதிப்பு மறுப்பாகும் (Wrongful Dishonour). இதனால் வ்ங்கியர் பின்வரும் விளைவுகளுக்குப் பொறுப்பாவர்.

காசோலையின் மதிப்பு மறுப்பால் ஏற்படும் விளைவுகள் [Consequences of Wrongful Dishonour of cheque]:

ஒரு காசோலையின் மதிப்பு தவறாக மறுக்கப்பட்டால், அங்கு வாடிக்கை யாளரின் நலன்கள் பல வகைகளில் பாதிக்கப்படும். அவரது, நாணயத்திற்கும், நற்பெயருக்கும் களங்கம் ஏற்படும். பண நட்டம் (Pecuniary Loss) ஏற்படவும் வழியுண்டு. எனவே பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர் வங்கியர் மீது வழக்குத் தொடர்ந்து இழப்பீடு பெறவும் உரிமை உண்டு என்று முன்னதாக **Marzetti v. Williams**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது. இங்கு எத்தகு இழப்பீடுகளை வாடிக்கையாளர் பெற உரிமை உண்டு என்று ஆராய்தல் நலம். அதற்கு முன் நாம் இழப்பீட்டின் வகைகளைக் அறிந்து கொள்ள வேண்டும்.

இழப்பீட்டின் வகைகள் (Kinds of Damages): ஆங்கிலச் சட்டப்படி இழப்பீடு இரு வகைப்படும். அவை, (1) தொகை அறுதியிடப்பட்ட இழப்பீடு (Liquidated Damages); (2) தொகை அறுதியிடப்படாத இழப்பீடு (Unliquidated Damages). வாடிக்கையாளர், தொகை அறிதியிடப்படாத இழப்பீடு கோர ஆங்கிலச் சட்டம் உரிமை அளித்துள்ளது. வாடிக்கையாளரின் நாணயம், நற்பெயர் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட இழப்பு, காசோலையின் தொகை ஆகியவற்றுக்கு ஏற்ப இந்த இழப்பீட்டுத் தொகையை மதிப்பிட்டு நீதிமன்றம் நிருணயிக்கும்.

1. (1830) I.B. and Ad. 415

ஆனால், நமது நாட்டில், இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Contract Act) இழப்பீட்டை மூவகையாகப் பிரித்துள்ளது. அவை,–

1. பெயரளவு இழப்பீடு அல்லது சாதாரண இழப்பீடு (Nominal Damages or Ordinary Damages),
2. பெருமளவு இழப்பீடு அல்லது சிறப்பு இழப்பீடு (Substantial Damages or Special Damages),
3. எச்சரிக்கை இழப்பீடு (Exemplary Damages) அல்லது தண்டனை யாகக் கருதத்தக்க இழப்பீடு (Vindictive Damages).

இந்தியச் சட்டப்படி வாடிக்கையாளர் பெயரளவு இழப்பீடு அல்லது பெருமளவு இழப்பீடு கேட்க உரிமை உள்ளது. சாதாரண சூழ்நிலைகளில் பெயரளவு இழப்பீடு கேட்க இயலும். அசாதாரணமான சூழநிலைகளில் பெருமளவு இழப்பீடு கோரவும் உரிமை உள்ளது.

இழப்பீட்டினை மதிப்பிடுதல் (Assessment of Damages) : இழப்பு அல்லது நட்டம் என்பது ஒருவருடைய நற்பெயருக்கு அல்லது நாணயத்துக்கு ஏற்படும் இழப்பும், அவருக்கு ஏற்படும் பண நட்டமும் ஆகும். பண நட்டத்தைவிட நற்பெயருக்கு ஏற்படும் களங்கம் ஒருவரைப் பெரிதும் பாதிக்கும். அதிலும், வாணிபத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரது நற்பெயருக்கு ஏற்படும் களங்கம் மற்றவர்களைவிட (வாணிபத்தில் ஈடுபடாதவர்களை விட) பெருமளவு அவருக்கு பாதிப்பையும், பொருள் விரயத்தையும் ஏற்படுத்திவிடும். எனவே, நீதிமன்றங்களும் இவ்விருவருக்கும் வேறு வேறான கொள்கைகளைப் பின்பற்றி இழப்பீட்டினை மதிப்பிடுகின்றன. நாமும் அவ்வழியிலேயே ஆராய்வோம்.

வாடிக்கையாளர் ஒரு வணிகராக இருப்பின் (When Customer is a Trader): வாடிக்கையாளர் வணிகம் செய்பவராக இருந்து, அவரது காசோலைக்கு பணம் செலுத்த வங்கியர் தவறாக மறுத்தால், அவருக்கு சக வணிகர்களிடையே பெரும் அவமதிப்பும், பாதிப்பும், நட்டமும் ஏற்படுகிறது. எனவே அவர் சிறப்பு இழப்பீடு **(Special Damages)** கேட்க உரிமை படைத்தவர். அவர் தமக்கு உண்மையில் எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என்பதைக் கூட மெய்ப்பிக்க வேண்டியதில்லை என **Robin v. Steward**[1] எனும் வழக்கில் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனினும் மற்றொரு மாறுபட்ட வழக்கு வருமாறு.

Sterling v. Barclay's Bank Ltd.[2] –எனும் வழக்கில், திருமதி.

1. (1854) 14 C.B. 595
2. The Accountants' Journal, September 1930, p.367.

ஸ்டெர்லிங் எனும் பெண்மணியின் காசோலைக்கு வங்கியர் பணம் தர தவறுதலாக மறுத்துவிட்டார். இங்கு அப்பெண்மணி வங்கியரிடமிருந்து பெருமளவு இழப்பீடு பெற உரிமையற்றவரெனவும், சாதாரண இழப்பீடே பெற உரிமையுடையவரென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில், இதற்கு முன் கணக்கில் போதிய பணமில்லாததால், அப்பெண்மணியின் இரு காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கப் பட்டுள்ளது. மேலும் அப்பெண்மணி தொடுத்த வழக்கில் அவரது பக்கம் சான்றுரைக்க நீதிமன்றத்தில் ஆஜரான அவரது சாட்சியே, "அப்பெண்மணி செய்து வந்த வணிகத்தில் உள்ளவர்கள், தங்கள் காசோலையின் மதிப்பு மறுக்கப் படுவதை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை; ஏனெனில் அவர்களது வாழ்க்கை கைக்கும் வாய்க்குமே சரியாக உள்ளது" என்று அப்பெண்மணிக்கு விரோதமாக சான்றுரைத்தார்.

வாடிக்கையாளர் ஒரு வணிகராக இல்லாதிருப்பின் (When Customer is a Non-trader): வாடிக்கையாளர் ஒரு வணிகராக இல்லையெனில், அவரது காசோலையின் மதிப்பு மறுப்பால் ஏற்படும் நட்டமும் குறைவு. எனவே, அவர் பெயரளவு இழப்பீடு (Nominal Damages) மட்டுமே கோர முடியும்; பெருமளவு இழப்பீடு கோர முடியாது. ஆனால், தமக்கு பெருமளவு நட்டமும், நற்பெயருக்குக் களங்கமும் ஏற்பட்டு விட்டது என்று அவ்வாடிக்கையாளர் மெய்ப்பித்தால், பெருமளவு இழப்பீடு கோர வாய்ப்பு உண்டு. எனினும், இதை முடிவு செய்வது, இழப்பீட்டை நிருணயிப்பது ஆகியவை நீதிமன்றத்தின் கையில்தான் உள்ளது.

Canara Bank Ltd. v. I.V.Rajagopal[1] – எனும் வழக்கில் வாடிக்கையாளர், வணிகத்தில் ஈடுபட்டுள்ளவரல்ல. அவர் புகழ்பெற்ற நிறுவனமொன்றில் இணைப்பு அலுவலராக (Liaison Officer) பணிபுரிகிறார். அவர் தனது சொந்தக் கணக்கிலிருந்து தொலைபேசித் துறைக்கு தனது நிறுவனத்தின் தொலைபேசி கட்டணமாக ரூ.294/–அய் காசோலை மூலம் செலுத்துகிறார். ஆனால் இக்காசோலைக்கு வங்கியர் தவறுதலாக மதிப்பளிக்க வில்லை. இதனால் தொலைபேசித் துறை, அந்நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விடுகின்றனர். இதனால் அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் அவரை பணி நீக்கம் செய்துவிடுகின்றனர். எனவே அவர் தனது சம்பளம், தன்மானம், மதிப்பு ஆகியவற்றை இழந்ததற்காகவும், மன வருத்தத்திற்காகவும் இழப்பீடாக ரூ.50,000/– கோரி வங்கி மீது வழக்குத் தொடர்ந்தார். இதில் நீதிமன்றம், அவ்வாடிக்கையாளர் ஒரு வணிகரல்லாத (Non-trader) பொழுதும், அவருக்கு ஏற்பட்ட பெரும் இழப்பை மெய்ப்பித்துள்ளார் என்றும், எனவே அவர் பெருமளவு இழப்பீடு பெற உரிமையுடையவர் என்றும் கூறி,

1. (1975) 1 M.L.J. 420 (Mad.)

அவருக்கு ரூ.10000/–த்தை சம்பள இழப்பாகவும், ரூ.4000/–த்தை தன்மானம், மதிப்பு ஆகியவற்றை இழந்தற்காகவும் மனவருத்தத்திற்காகவும் கொடுக்க வங்கிக்கு ஆணையிட்டது.

எனவே பொதுவாக, வாடிக்கையாளர் வணிகராயின் பெருமளவு இழப்பீடும் (Substantial Damages), வணிகர் அல்லாதவராயின் பெயரளவு இழப்பீடும் (Nominal Damages) பெறலாம் என்பது தெளிவாகிறது.

காசோலையின் தொகையும் இழப்பீட்டுத் தொகையும் : பெருமளவு இழப்பீடு கோரும் பொழுது, அதனை மதிப்பிடுவதில் காசோலையின் தொகை முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது. **"மிகக் குறைந்த தொகைக்கான காசோலையின் மதிப்பு தவறுதலாக மறுக்கப்பட்டால், அதற்கு மிகப் பெரிய இழப்பீட்டுத் தொகை தரவேண்டும்." (Smaller the amount of Cheque, greater the quantum of Damages)** என்ற கொள்கையை அனைத்து நீதிமன்றங்களும் கடைப்பிடிக்கின்றன. இது நடைமுறைக்கு ஏற்ற, இயல்பான கோட்பாடாகும். ஏனெனில், மிகக் குறைவான தொகையுள்ள காசோலைக்குண்டான பணத்தைக் கூட வங்கியில் இருப்பு வைத்திருக்க வக்கில்லாதவர் எனும் அவப் பெயர் இங்கு வாடிக்கையாளருக்கு ஏற்படுகிறது.

Davidson v. Barclay's Bank Ltd.[1] – எனும் வழக்கில் டேவிட்சன் எனும் குதிரைப் பந்தயப் பணயத் தொழிலர் (Book -maker) £ 2–15–8 தொகைக்குக் கொடுத்த காசோலைக்கு அவரது கணக்கில் போதிய அளவு பணம் இருப்பில் இருந்தும், அதற்கு வங்கி பணம் கொடுக்க தவறுதலாக மறுத்துவிட்டது. எனவே அவர் தொடுத்த வழக்கில், அவருக்கு £ 250 இழப்பீடாகக் கொடுக்க நீதிமன்றம் வங்கிக்கு ஆணையிட்டது. அப்பொழுது, " ஒரு பந்தயப் பணயத் தொழிலரின் நம்பகத்தன்மையானது, அவர் தன்னிடம் பந்தயம் கட்டியவர்களுக்கு பணம் செலுத்தும் திறனைப் பொறுத்ததாகும்; இங்கு ஒரு சிறிய தொகைக்கான காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்ட போதிலும், அது வாதிக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது. எனவே அவர் கணிசமான இழப்பீடு பெற உரிமையுடையவர்" என்று நீதிமன்றம் கூறியது.

-o0o-

1. (1940) 1 All E.R. 316

10

வங்கியரின் உரிமைகள்
[Rights of a Banker]

ஒரு சிறு அறிமுகம்:

வங்கியருக்கும், அதன் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள சிறப்பு நிலை உறவில் ஒரு பகுதியான 'வங்கியரின் கடமைகளை' நாம் சென்ற அத்தியாயத்தில் கண்டோம். அதன் மறுபகுதியான 'வங்கியரின் உரிமைகளை' நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

Explain the rights of a banker. (ஒரு வங்கியரின் உரிமைகள் பற்றி விளக்குக.)

(அல்லது)

Rights of Banker - Write short notes. (வங்கியரின் உரிமைகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

State the circumstances under which a banker can exercise his right of general lien and particular lien. Mention also as to when he cannot exercise his right of general lien and particular lien. (எவ்வகைச் சூழ்நிலைகளில் வங்கியர் பொதுப் பற்றுரிமை மற்றும் தனிப் பற்றுரிமையைச் செலுத்த முடியும் என்பது குறித்துக் கூறுக. எப்போது

வங்கியர் பொதுப் பற்றுரிமை மற்றும் தனிப்பற்றுரிமையை செலுத்த முடியாது என்பது குறித்தும் குறிப்பிடுக.)

(அல்லது)

Lien - Write short notes. (பற்றுரிமை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Banker's Lien - Write short notes. (வங்கியரின் பற்றுரிமை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

"Banker's lien is an implied pledge" - Discuss. ("வங்கியரின் பற்றுரிமை ஒரு உட்கிடையான அடகு" – விவாதி.)

(அல்லது)

State the rule in Clayton's case regarding appropriation of payment. (செலுத்திய பணத்தை முறைப்படி ஒதுக்குதல் குறித்து கிளேடோன் வழக்கின் விதியைக் குறிப்பிடுக)

(அல்லது)

Rule in Clayton's case - Write short notes. (கிளேட்டோன் வழக்கு விதி – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Appropriation of payments - Write short notes. (செலுத்திய பணத்தை ஈடுபடுத்துதல் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Rule in Devaynes v. Noble - Write short notes. (டேவேனஸ் எதிர் நோபள் வழக்கின் விதி – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒரு வங்கியர், தனது வாடிக்கையாளருடன் கொள்ளும் உறவில், அந்தந்த நேர்விற்கேற்ப, வங்கியருக்கு பின்வரும் ஆறு உரிமைகள் எழுகின்றன. அவை,

வங்கியரின் உரிமைகள் [Rights of a Banker]:

I. பொதுப் பற்றுரிமைக்கான உரிமை (Right of General Lien):

இது வங்கியருக்கு உள்ள உரிமைகளில் மிக முக்கியமானதாகும்.

இவ்வுரிமை குறித்து அறிவதற்கு முன், பற்றுரிமை குறித்த விளக்கத்தையும், அதன் வகைகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பற்றுரிமை (Lien)–விளக்கம்: பற்றுரிமை என்றால், கடன் வாங்கிய ஒருவர், அக்கடனை திரும்பச் செலுத்தும் வரை, கடன் கொடுத்தவர் வசம் உள்ள அவரது பொருட்களையும் (goods), காப்புறுதிகளையும் (securities) கடன் கொடுத்தவர், பிணையமாக தன் வசமே இருத்திக் கொள்ளும் உரிமையாகும். கடன் தொகை திரும்பச் செலுத்தப்பட்டவுடன் இவ்வுரிமை முடிவுக்கு வருகிறது. ஆனால், இவ்வாறு பற்றுரிமைக்கு உட்பட்ட பொருளை விற்க பற்றுரிமை பெற்றுள்ளவருக்கு உரிமை இல்லை. ஆனால் வாங்கிய கடனுக்கு ஈடாக அப்பொருட்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பின், அவற்றை விற்கவும் உரிமை உண்டு.

பற்றுரிமையின் வகைகள் (Kinds of Lien) : பற்றுரிமை இரு வகைப்படும். அவை, 1. பொதுப் பற்றுரிமை (General Lien) 2. தனிப் பற்றுரிமை (Particular Lien).

பொதுப் பற்றுரிமை (General Lien): ஒருவர் தமக்கு வரவேண்டிய கடன் தொகை முழுவதற்கும் தன்னிடம் கடன் பெற்றவர் ஒப்படைத்துள்ள அல்லது ஈடாக வைத்துள்ள அனைத்துப் பொருட்களையும் தம்வசமே இருத்திக் கொள்ளும் உரிமையே, பொதுப் பற்றுரிமை எனப்படுகிறது.

தனிப் பற்றுரிமை (Particular Lien): ஒருவர், தம்மிடம் மற்றொருவர் ஒப்படைத்த பொருளின் மீது அவர், தமது உழைப்பை அல்லது பணத்தை அல்லது நேரத்தைச் செலவிட்டு, அவ்வாறு பணியாற்றியமைக்காக அவருக்குத் தர வேண்டிய ஊதியத்தைத் தரும் வரையில் அப்பொருளைத் தம் வசமே இருத்திக் கொள்ளும் உரிமையே, தனிப் பற்றுரிமை எனப்படுகிறது. உதாரணமாக, தையல் காரர் தம்மிடம் தைப்பதற்காகத் தரப்பட்ட துணியை, அதனைத் தைக்கக் கொடுத்தவர் அதற்கான கூலியைக் கொடுக்கும் வரை, தம் வசமே இருத்திக் கொள்வதாகும்.

வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை எச்சூழ்நிலைகளில் செலுத்த முடியும்? (அல்லது) வங்கியரின் பற்றுரிமை பொதுப் பற்றுரிமையே (Banker's Lien is always a General Lien) : இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 171–வது பிரிவு வங்கியருக்கு பொதுப் பற்றுரிமையை அளிக்கிறது. இப்பிரிவின்படி, "வங்கியர்கள் ...., முரண்பாடான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்குங்கால், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் எவற்றையும், கணக்கின் ஒரு பொதுவான பாக்கிக்கு (general balance of account) காப்புறுதியாக இருத்தி வைத்துக் கொள்ளலாம்," என்று கூறுகிறது. இதில் உள்ள பொதுவான பாக்கி என்பது, வங்கியரிடம் ஒருவர் பெற்றுள்ள பிணைக் கடன் அல்லது பிணையில்லாக் கடன்

பாக்கி அனைத்தையும் உள்ளடக்கியதாகும். பிணைக் கடன் என்பது காப்புறுதி பெற்றதாகும் (secured debt). பிணையில்லாக் கடன் என்பது காப்புறுதியற்ற தாகும். இங்கு பிணையில்லாக் கடனில் உள்ள பாக்கிக்காக, பிணைக் கடனில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருட்களை, வங்கியர் அப்பாக்கி செலுத்தப்படும் வரை தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ளலாம். எனவே, வங்கியரின் பற்றுரிமை பொதுப் பற்றுரிமையே ஆகும்.

வங்கியரின் பொதுப் பற்றுரிமையின் சிறப்பம்சங்கள் (Special Features of Banker's Right of General Lien): (1) வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை உள்ளது என்பதை மேலே கண்டோம். ஆனால் பின்வரும் நேர்வுகளில் வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை செயல்படுத்த இயலாது. அவை,

(a) வாடிக்கையாளரின் பொறுப்பாண்மையராக (trustee) அல்லது முகவராக (agent) வங்கியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் காப்புறுதிகள் மீது வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை செயற்படுத்தவியலாது;

(b) வங்கியரின் பொதுப் பற்றுரிமைக்கு முரண்பாடாக வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே ஒரு வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் இருக்கும் பொழுது, அங்கும் வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை செயற்படுத்தவியலாது.

(2) வங்கியரின் பொதுப் பற்றுரிமை ஒரு உட்கிடை அடகிற்கு ஒப்பாகும் (A Banker's lien is tantamount to an implied pledge): வங்கியர் தனது கடன் அடைபடும் வரை, கடன் பெற்றவர் கொடுத்த பொருள் மற்றும் காப்புறுதியை தன்னிடமே இருத்தி வைத்துக் கொள்ள முடியுமே தவிர, அவற்றை விற்க வங்கியருக்கு உரிமை இல்லை. ஆனால் பெற்ற கடனுக்கு ஈடாக வாடிக்கையாளர், தமது பொருட்களை அல்லது காப்புறுதிகளை வங்கியரிடம் ஒப்படைத்திருந்து, அவர் அக்கடனை அடைக்கவில்லையானால், அவற்றை வங்கியர் விற்க உரிமை படைத்தவர்.

ஒரு அசையும் பொருளை ஈடாக வைத்து கடன் பெறுதல் 'அடகு' எனப்படுகிறது. கடன் பெற்றவர் அக்கடனை அடைக்கவில்லையானால், அடகு பெற்றவர், அப்பொருளை விற்று, அவ்விற்பனைத் தொகையை தனது கடனுக்கு சரி செய்து கொள்ளலாம். வங்கியரின் பொதுப் பற்றுரிமையிலும், ஒரு அடகிற்குரிய குணாதிசயங்கள் உள்ளன. எனவே **வங்கியரின் பொதுப் பற்றுரிமை ஒரு அடகிற்கு ஒப்பானது** எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, வங்கியரிடம் நகை அடகு வைத்து கடன் பெறுகிறார்கள். கடன் தொகை செலுத்தப்படவில்லையானால், அந்நகையை பொது

ஏலத்தில் விட்டு, அதில் கிடைக்கும் தொகையை தமது கடனுக்கு வங்கியர் சரி செய்து கொள்கின்றனர். ஆனால் நாம் முன்கண்டவாறு, கடனுக்கு ஈடாக ஒப்படைக்கப்பட்ட பொருட்களுக்கு, காப்புறுதிகளுக்கு மட்டுமே வங்கியருக்கு விற்பனை உரிமை உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வங்கியரிடம் பொதுவாக ஒப்படைக்கப்பட்ட பிற பொருட்களைப் பொறுத்து, அவற்றை அவர் வெறுமனே இருத்தி வைத்துக் கொள்ளலாமே தவிர, அவற்றை விற்று தனது கடனுக்குச் சரி செய்து கொள்ள முடியாது.

(3) வங்கியரின் பற்றுரிமை இந்திய ஒப்பந்தச் சட்டத்தால் எழுவதாகும் (The right of lien is conferred upon the banker by the Indian Contract Act): இந்திய ஒப்பந்தச் சட்டம், வங்கியருக்கு பற்றுரிமையை அளித்துள்ளது. எனவே பற்றுரிமைக்கென தனியாக ஒரு ஒப்பந்தத்தை வங்கியரும், வாடிக்கையாளரும் செய்து கொள்ள வேண்டியதில்லை. எனினும் வாங்கிய கடனுக்கு காப்புறுதியாக (ஈடாக) ஒப்படைக்கப்படும் பொருட்களைப் பொறுத்து, ஒரு பற்றுரிமை ஒப்பந்தத்தை வங்கியர், வாடிக்கையாளரிடம் செய்து கொள்வது வங்கியருக்குப் பாதுகாப்பானது. இதனால், எதிர்காலத்தில் வாடிக்கையாளர் கடனை செலுத்தத் தவறும் பொழுது, அப்பொருட்களை வங்கியர் விற்கவும் செய்யலாம்.

(4) கடன் வாங்கியவர் பெயரில் உள்ள பொருட்கள் மற்றும் காப்புறுதிகள் மீது மட்டுமே வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை செயற்படுத்த முடியும் (Banker can exercise his right of lien on goods or securities standing in the name of the borrower only). எனவே கடன் வாங்கியவர் பெயரிலும் மற்றொருவர் பெயரிலும் கூட்டாக உள்ள பொருட்களின் அல்லது காப்புறுதிகளின் மீது வங்கியர் தனது பற்றுரிமையை செயல்படுத்த முடியாது.

(5) எக்கடனுக்காக காப்புறுதிகள் கொடுக்கப்பட்டதோ அக்கடன் அடைக்கப்பட்ட பிறகும் கூட, **வாடிக்கையாளரின் மற்றொரு கடனுக்காகவும் அக்காப்புறுதிகளை வங்கியர் தம் வசமே இருத்திக் கொள்ள பொதுப் பற்றுரிமை உண்டு.** இங்கு வாடிக்கையாளர், தனது மற்றொரு கடனுக்காகவும் அக்காப்புறுதிகளை ஈடாக கொடுத்துள்ளாக அனுமானிக்கப்படுகிறது. ஆனால் இதற்கு முரண்பாடான ஒப்பந்தம் ஏதும் இருத்தல் கூடாது.

வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை எச்சூழ்நிலைகளில் செலுத்த முடியாது? (அல்லது) வங்கியரின் பொதுப் பற்றுரிமைக்கு விதிவிலக்குகள் (Exceptions to the Right of General Lien of Banker): ஒரு வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையை செயல்படுத்த, அடிப்படையான நிபந்தனைகள்

இரண்டு. அவை (1) வங்கியர் எனும் தகுதியில் அவரிடம் பொருட்கள் அல்லது காப்புறுதிகள் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். (2) அவற்றின் மீது வங்கியர் பொதுப் பற்றுரிமையைச் செயல்படுத்துவதைத் தடை செய்யுமளவிற்கு முரணான ஒப்பந்தம் எதுவும் வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே இருத்தல் கூடாது. இதற்கு மாறாக நிலவும் சூழ்நிலைகளில், வங்கியர் தனது பொதுப் பற்றுரிமையைச் செயற்படுத்த முடியாது. அதாவது செலுத்த முடியாது. அச் சூழ்நிலைகள் வருமாறு. அவை,

(a) பாதுகாப்பு வைப்பீட்டில் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் (Safe custody deposits): வாடிக்கையாளர் தனது நகை, ஆவணங்கள், காப்புறுதிகள் ஆகியவற்றை பாதுகாப்பாக வங்கியின் பெட்டக அறையில் வைத்திருக்கும் பொருட்டு வங்கியிடம் ஒப்படைக்கிறார். இவற்றின் மீது வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை கிடையாது. ஏனென்றால், இங்கு வங்கியர் வாடிக்கையாளரின் பொறுப்பாண்மையராகச் (trustee) செயற்படுகிறார். அவற்றை பத்திரமாக வைத்து பாதுகாத்து வர வேண்டியது வங்கியரின் கடமையாகும்.

(b) குறித்தவகை நோக்கத்திற்காக ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் (Documents deposited for special purpose): ஒரு வாடிக்கையாளர் மாற்றுச் சீட்டு அல்லது வேறு ஆவணங்களை, அதிலிருந்து கிடைக்கக் கூடிய தொகையை வேறு நோக்கத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும் என்று அறிவுறுத்தலின் பேரில் பொருட்டு வங்கிக்கு அனுப்புகிறாரென்றால், அந்த ஆவணங்களின் மீது வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை இல்லை. எடுத்துக் காட்டாக, வாடிக்கையாளர் ஒருவர் சில நிறுவனங்களின் பங்குகளை ஒரு குறிப் பிட்ட விலைக்கு அல்லது அதற்கு மேல் விற்கும்படி வங்கியரிடம் ஒப்படைக்கிறார். அவை வங்கியரின் வசம் உள்ளது. இந்நிலையில், அவ்வாடிக்கையாளர் அவ்வங்கியில் பெற்றுள்ள கடனுக்காக அப்பங்குகளை தன்வசமே வங்கியர் இருத்திக் கொள்ளக் கூடாது; இங்கு பொதுப் பற்றுரிமை கிடையாது. ஏனென்றால் இங்கு அவை ஒப்படைக்கப்பட்ட நோக்கம் வேறு. எனவே அதை நிறைவேற்றத்தான் வங்கி பாடுபட வேண்டுமே தவிர, தனது கடனுக்காக இருத்திக் கொள்ள அல்ல.

(c) பொதுப் பற்றுரிமை தனிப் பற்றுரிமையாக மாறிவிடும் பொழுது (Right of General lien becomes that of Particular lien): வங்கியருக்கு உள்ள பற்றுரிமை, எப்பொழுதும் ஒரு பொதுப் பற்றுரிமையே என்று நாம் ஆரம்பத்தில் கண்டோம். எனவே ஒரு பொதுப் பற்றுரிமை, தனிப்பற்றுரிமையாக மாறிவிட்டால், அதை வங்கியர் செயற்படுத்த முடியாது.

Vijay Kumar v. M/s. Jullundur Body Builders, Delhi and others[1]

1. A.I.R. 1981 Delhi 126

- எனும் வழக்கில் வாடிக்கையாளர் ஒருவர் வங்கியரிடம் பெற்ற வங்கிப் பொறுப்புறுதிக் கடனுக்கு (Bank Guarantee) ஈடாக தனது இரண்டு நிலை வைப்பீட்டு இரசீதுகளை (Fixed Deposit Receipts) ஒப்படைத்தார். மேலும், தனது கடன் கணக்குகள் கொடுபடும் வரை, அவை வங்கியிலேயே இருக்கும் என்று முகப்புக் கடிதம் (covering letter) ஒன்றையும் எழுதிக் கொடுத்தார். வங்கியர், அந்த இரசீதுகளின் பின்புறத்தில், **"வ.பொ. 11/80–க்கு பற்றுரிமை"** ("Lien to BG 11/80") என்று எழுதிக் கொண்டனர். அதாவது வங்கிப் பொறுப்புறுதிக் கடனுக்கு மட்டுமே பற்றுரிமை எனும் பொருளில் மேற்கண்டவாறு எழுதப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு, வாடிக்கையாளர் மேற்படி பொறுப்புறுதிக் கடனை அடைத்துவிட்டு, தான் ஒப்படைத்த இரண்டு நிலை வைப்பீட்டு இரசீதுகளையும் கோரினார். ஆனால் அவர் பெற்ற மற்ற கடன்களுக்காக, அவற்றின் மீது தங்களுக்கு பொதுப் பற்றுரிமை உள்ளது என்றும், எனவே அவற்றை திரும்ப கொடுக்கவியலாது என்றும் கூறினார். ஆனால் வாடிக்கையாளர் வழக்கிட்டார். அதில், தனது கடிதத்தின்படி வங்கியர் பொதுப் பற்றுரிமையைக் கொண்டிருந்தாலும், வங்கியர் அந்த இரசீதுகளின் பின்புறத்தில் எழுதியுள்ள வாசகங்களின்படி, அது ஒரு தனிப் பற்றுரிமையாக மாறிவிட்டது என்று குறிப்பிட்டார். இதனை தில்லி உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, இங்கு ஆரம்பத்தில் அந்த இரசீதுகளின் மீது வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை இருந்தது. ஆனால் அது பின்னிட்டு தனிப்பற்றுரிமையாக மாறிவிட்டது. எனவே, வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை இல்லை. அந்த இரசீதுகளை வாடிக்கையாளர் வசம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று தீர்ப்புரைத்தது.

(d) வங்கியில் கவனக்குறைவாக விட்டுச் செல்லப்பட்ட பொருட்கள், காப்புறுதிகள் (Goods and Securities left with the Banker negligently): வங்கியில் வாடிக்கையாளர் ஒருவர் தவறுதலாக அல்லது கவனக்குறைவாக விட்டுச் சென்ற பொருட்கள் அல்லது காப்புறுதி ஆவணங்கள் மீது வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை கிடையாது.

(e) வங்கியர் கடன் கொடுப்பதற்கு முன்பாக, அக்கடனை பெறுதற் பொருட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்ட காப்புறுதிகளின் மீது வங்கியருக்கு பொதுப் பற்றுரிமை இல்லை. எடுத்துக்காட்டாக, அடைமானக் கடன் பெற வேண்டுமெனில், வாடிக்கையாளர் முதற்கண் தனது அசையாச் சொத்தின் மூலப் பத்திரங்களை (securities) வங்கியரிடம், அதன் சட்ட ஆலோசகரின் அபிப் பிராயத்திற்காக (Legal Opinion) ஒப்படைக்க வேண்டும். அவற்றை வாடிக்கையாளர் பெற்றுள்ள மற்ற கடன்களுக்காக, வங்கியர் தன்னிடம் இருத்திக் கொள்ளக் கூடாது.

(f) வாடிக்கையாளரின் பணத்தின் மீது பொதுப் பற்றுரிமை இல்லை (No lien on money deposited): வாடிக்கையாளர் தனது சேமிப்புக் கணக்கில்

அல்லது நடப்புக் கணக்கில் வைப்பீடு செய்துள்ள பணத் தொகைகளின் மீது, வங்கியர் பொதுப் பற்றுரிமையைச் செயற்படுத்த முடியாது. அதாவது அவர் அவ்வங்கியில் வாங்கியுள்ள கடனுக்காக, அத்தொகைகளை தன்வசமே இருத்திக் கொள்ள முடியாது. மாறாக, அத்தொகைகளை தான் வழங்கிய கடனுக்காக **சரிக் கட்டிக் கொள்ளக் கூடிய உரிமை (Right of Set-off)** வங்கியருக்கு உண்டாகிறது. இவ்வுரிமையைத்தாம் நாம் அடுத்துக் காண உள்ளோம்.

II. சரிக்கட்டிக் கொள்ளும் உரிமை (Right of Set-off) (அல்லது) கணக்குகளை ஒருங்கிணைக்கும் உரிமை (Right to Combine accounts):

இதை 'எதிரிடைக் கோரிக்கை' என்றும் கூறலாம். இவ்வுரிமை கடன் தருநர்–கடன் பெறுநர் ஆகிய இருவரிடையேயும் ஒருவர் மற்றொருவரிடமிருந்து வாங்கிய கடனை பரஸ்பரம் விடுவித்துக் கொள்ள பயனாகிறது. இங்கு இரு கடன்களும் சரி செய்து கொள்ளப்படுகிறது (adjusted). இது வங்கியரைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான சட்டப்படியான உரிமையாகும். இதை பின்வரும் ஒரு எடுத்துக்காட்டின் வாயிலாகக் கண்டால் எளிதில் விளங்கும். 'அ' என்பவர் ஒரு வங்கியரிடமிருந்து ரூ.5000/– அதிகப்பற்று (கடன் கணக்கு) வாங்கியுள்ளார். அதே சமயத்தில் அவரது சேமிப்பு வங்கிக் கணக்கில் ரூ.2000/– வரவு இருப்பு உள்ளது. வங்கியர் மேற்கண்ட இரண்டு கணக்குகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம், அவரது சேமிப்பு வங்கிக் கணக்கில் உள்ள ரூ.2000/–த்தை அதிகப்பற்றுக் கணக்கிற்கு சரிக் கட்டிக் கொண்டு, மீதமுள்ள ரூ.3000/–த்தை மட்டும் கோரலாம். இங்கு 'அ' எனும் அவ்வாடிக்கையாளர் வங்கியிடமிருந்து அதிகப் பற்று பெற்றதனால், அவர், கடன் பெறுநராக உள்ளார். அதே சமயத்தில் தனது பணத்தை சேமிப்புக் கணக்கில் வைப்பீடு செய்துள்ளதால், வங்கிக்கு கடன் தருநராகவும் உள்ளார். அதுபோல், வங்கியர் முந்தய நேர்வில் கடன் தருநராகவும், பிந்தய நேர்வில் கடன் பெறுநராகவும் மாறிய நிலையில் உள்ளார். வங்கியர் மேற்கண்டவாறு தனது சரிக் கட்டும் உரிமையை செயல்படுத்துவதால், மேற்கண்ட இருவரின் கடன்களும் பரஸ்பரம் விடுவித்துக் கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள் (Conditions) (அல்லது) வங்கியர் எச்சூழ்நிலைகளில் தனது சரிக் கட்டும் உரிமையை செயற்படுத்த முடியாது?: வங்கியரின் மேற்படி உரிமை ஒரு முழுமையான உரிமை அன்று. இது பின்வரும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அதாவது வாடிக்கையாளரின் கணக்குகளை மேற்கண்ட நோக்கத்திற் காக வங்கியர் ஒருங்கிணைக்க, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் (Conditions for exercising the right of set-off or the right to combine the accounts of a customer).

(a) கணக்குகள் ஒரே பெயரிலும், ஒத்த உரிமையிலும் இருத்தல் வேண்டும் (The accounts must be in the same name and in the same right): வங்கியர் சரிக் கட்டிக் கொள்ள விழையும் வாடிக்கையாளரின் கணக்குகள் அனைத்தும், அவர் பெயரிலேயே இருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு கூட்டாண்மை நிறுமத்தின் பங்குதாரர்கள் தங்கள் சொந்தப் பெயரிலும், அதே சமயத்தில் கூட்டாண்மை நிறுமத்தின் பெயரிலும் வங்கியில் கணக்கு வைத்திருந்தனர். கூட்டாண்மை நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடனிற்கு, வங்கியர் அப்பங்குதாரர்களின் பெயர்களில் உள்ள கணக்குகளின் பணத்தை சரிக் கட்டிக் கொள்ள முடியாது. அதுபோல் ஒரே பெயரில் இருந்தால் மட்டும் போதாது; ஒத்த உரிமையிலும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இளவர் ஒருவரின் காப்பாளர் எனும் தகுதியில் அவரது பெயரில் உள்ள கணக்கை, அவரது (காப்பாளர்) சொந்தக் கணக்குடன் ஒப்பிட முடியாது. இங்கு இரண்டு கணக்குகளிலும் அவருக்கு ஒத்த உரிமை இல்லை.

(b) அச்சமயத்தில் பாக்கி நிற்கும் கடனுக்கு மட்டுமே இவ்வுரிமையை வங்கியர் செயல்படுத்த முடியும். (The right can be exercised in respect of debts due for the present): எனவே வங்கியர் தனது சரிக்கட்டும் உரிமையை ஒரு எதிர்காலக் கடனுக்காகச் செயல்படுத்த முடியாது.

(c) கடனாக நிற்கும் தொகைகள் நிச்சயமானதாக இருக்க வேண்டும் (The amount of debts must be certain): அதாவது வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே பரஸ்பரம் பாக்கி நிற்கும் கடன் தொகைகள் நிச்சயிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இவர்களில் ஒருவரின் கடன் தொகை எவ்வளவு என்பதை என்பதை நிச்சயிக்க முடியவில்லையானாலும், வங்கியர் தனது சரிக் கட்டும் உரிமையை செயற்படுத்த முடியாது. எடுத்துக்காட்டாக, ஒருவர் வாங்கும் கடனுக்காக பொறுப்புறுதி ஏற்பவரின் (Guarantor) கடன் செலுத்தும் பொறுப்பு எப்பொழுது எழுகிறது என்றால், கடன் பெற்றவர் அக்கடனை செலுத்தத் தவறும் பொழுதுதான். எனவே வங்கியர் முதலில் கடன் பெற்றவரை கடன் தொகையைக் கட்டுமாறு கோர வேண்டும். இவ்வாறு கோருவதற்கு முன்பாக பொறுப்புறுதி ஏற்பவரின் கடன் பொறுப்பு நிச்சயமானதல்ல. கடன் பெற்றவர், கடன் தொகையை செலுத்திவிட்டால், பொறுப்புறுதி ஏற்பவரின் கடன் பொறுப்பும் மறைந்துவிடும். எனவே இச்சூழலில், பொறுப்புறுதி ஏற்பவரின் கணக்கில் உள்ள தொகையை வங்கியர் சரிக்கட்டிக் கொள்ளக் கூடாது.

(d) வங்கியரின் இவ்வுரிமைக்கு முரணாக எவ்வொப்பந்தமும், வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே இருத்தல் கூடாது.

(e) சரிக்கட்டிக் கொள்ளும் உரிமை, வங்கியரின் தன்விருப்புரிமைக்கு

உட்பட்டதாகும் (Right of set-off is subject to Discretion of Banker): வங்கியர் இவ்வுரிமையைச் செயல்படுத்த, வாடிக்கையாளர் தனது கிளைகளில் எங்கெல்லாம் கணக்கு வைத்துள்ளாரோ, அவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கலாம்.

(f) பற்றுகை ஆணைக்கு முன்பாக சரிக்கட்டும் உரிமை (Right of set-off before Garnishee Order): வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள தொகையை பற்றுகை செய்ய நீதிமன்றம் பற்றுகை ஆணை பிறப்பித்திருந்தால், வங்கியர் அத்தொகையை பற்றுகை செய்து அனுப்புவதற்கு முன்பு, தனக்கு வரவேண்டிய கடன் தொகையை முதலில் சரிக்கட்டிக் கொள்ள உரிமை உண்டு.

III. பணத்தை ஒதுக்கீடு செய்யும் உரிமை (Right of Appropriation of Payment) (அல்லது) கிளேட்டன் வழக்கின் விதி (Rule in Clayton's Case):

வாடிக்கையாளர் ஒருவர் ஒரு வங்கியில் தனது பெயரில் சேமிப்பு வங்கிக் கணக்கு, நடப்புக் கணக்கு, நிலை வைப்பீட்டுக் கணக்கு, தொடர் வைப்பீட்டுக் கணக்கு ஆகிய அனைத்தையும் வைத்திருக்கலாம். அதுபோல் அதே வங்கியில் தனது பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட நடப்புக் கணக்குகளையும் வைத்திருக்கலாம். இவ்வாறு வைத்துக் கொள்ளத் தடையேதுமில்லை. மேலும் அதே வங்கியில் ஒன்றுக்கு மேற்பட்ட கடன் கணக்குகளையும் வாடிக்கையாளர் கொண்டிருக்கலாம். இந்தக் கணக்குகளுக்கெல்லாம் வாடிக்கையாளர் பணம் செலுத்தி அவற்றை இயக்கி வருகிறார். அப்பணங்கள் அவர் செலுத்துச் சீட்டில் (pay-in-slips) குறிப்பிடும் கணக்கு எண்ணில், வரவு வைக்கப்படுகிறது.

ஆனால் அதே சமயத்தில் வாடிக்கையாளர், தான் வங்கியில் செலுத்தும் ஒரு தொகையை தனது பெயரில் உள்ள எக்கணக்கில் வரவு வைப்பது என்று அவர் வங்கியருக்கு குறிப்பிடாது விட்டுவிட்டால், வங்கியர் எவ்வாறு செயல்படுவது, எனும் வினா எழுகிறது. அப்பொழுது, வங்கியர் அத்தொகையை அவ்வாடிக்கையாளர் பெற்றுள்ள கடன் கணக்கிலோ அல்லது அவரது கணக்குகளில் ஏதேனும் ஒன்றிலோ, தன்விருப்புரிமைப்படி வரவு வைக்கலாம். இதை வாடிக்கையாளர் குறை கூற முடியாது; அப்பணத்தையும் திரும்பப் பெறவியலாது.

ஒருவேளை அவ்வாடிக்கையாளருக்கு அவ்வங்கியில் ஒரே ஒரு கணக்கு மட்டுமே இருந்து, அதில் அவர் அடிக்கடி பணம் போடவும், எடுக்கவும் செய்து வருகிறார் என்றால், அங்கு எவ்வரிசையில் வங்கியர் தொகை ஒதுக்கீடு செய்வது என்று வினாவும் அடுத்து எழுகிறது. பற்றுப் பக்கத்தில் எழுதப்படும் முதற் தொகையானது, வரவுப் பக்கத்தில் எழுதப்படும் அடுத்த தொகையால் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் (The first item on the debit side will be the item to be discharged or reduced by a subse-

quent item on the credit side). அதாவது ஒரு கணக்கின் வரவினப் பதிவுகள், செலவினப் பதிவுகளை காலவரிசைப்படி சரிக்கட்டிக் கொள்ளும் விதத்தில் பதியப்பட வேண்டும். (the credit entries in the account will adjust or set-off the debit entries in chronological order). அதிகப்பற்று பெறப்பட்ட நடப்புக் கணக்குகளுக்கு (overdrawn current accounts) வங்கியர் மேற்கண்ட விதியை முக்கியமாகப் பின்பற்றுகின்றனர். இவ்விதி பிறக்கக் காரணம், பின்வரும் ஒரு முக்கியமான வழக்குதான் எனில் அது மிகையன்று.

கிளேட்டன் வழக்கு விதி (அல்லது) தேவேநஸ்–எதிர்–நோபிள் வழக்கு [Rule in Clayton's Case (or) Deveynes v. Noble][1] – வங்கியியலைப் பொறுத்தவரை இது ஒரு மிக முக்கியமான வழக்காகும். இவ்வழக்கின் பொருண்மைகளை சற்று கவனமாகப் படித்தால்தான், இவ்வழக்கால் விளைந்த கொள்கையும் புரியும்.

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, வங்கித் தொழில் புரிவதற்காக, அய்ந்து பங்குதாரர்கள் சேர்ந்து "தேவேநஸ், டெவேஸ், நோபள் & கோ" எனும் பெயரில் நிறுமம் ஒன்றை ஆரம்பித்தனர். தேவேநஸ் என்பவர் மூத்த பங்குதாரர் ஆவார். அவர் இறந்துவிடவே, எஞ்சியுள்ள பங்குதாரர்கள் தங்கள் நிறுமத்தின் வங்கித் தொழிலை தொடர்ந்து நடத்தினர். ஆனால் இறந்து போன தேவேநஸ்–ன் பெயரை அந்நிறுமத்திலிருந்து நீக்கிவிடவில்லை. எனவே, தேவேநஸ்–ன் பெயர், அந்நிறுமத்தில் தொடருவதை அவரது வாரிசுதாரர்கள் ஆட்சேபித்தனர். ஓராண்டு கழித்து, அந்நிறுமம் நட்டமடைந்து, நொடிப்பு நிலை எய்திவிட்டது. பங்குதாரர்கள் பெயரிலும் எந்தச் சொத்தும் இல்லை. ஆனால் இறந்து போன தேவேநஸ்–ன் பெயரில் சொத்திருந்தது. எனவே அந்நிறுமத்திற்கு கடன் கொடுத்தவர்கள், தங்கள் கடன் தொகைகளை இறந்து போன தேவேநஸ்–ன் சொத்துக்களிலிருந்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அந்நிறுமத்திற்கு மேற்கண்டவாறு கடன் கொடுத்தவர்களில் (creditor) ஒருவர் தான், இவ்வழக்கின் நாயகன் என்.கிளேட்டன் என்பவர் ஆவார். இவர் அந்நிறுமத்தில் நடப்புக் கணக்கு ஒன்றை வைத்திருந்தார். மேலும் இவர் தேவேநஸ் இறந்த பிறகு, ஆனால், அந்நிறுமம் நொடிப்பு நிலையை அடைவதற்கு முன்பாக, எஞ்சியுள்ள பங்குதாரர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, அந்நிறுமத்தில் உள்ள தனது கணக்கில் பணம் செலுத்துவதையும், அதிலிருந்து பணம் எடுப்பதையும் தொடர்ந்து செய்து கொண்டே வந்தார். தேவேநஸ் இறக்கும் பொழுது, கிளேட்டனின் கணக்கில் £ 1,713 இருப்பு இருந்தது. பின்னர் சில தினங்கள் கழித்து, கிளேட்டன், தனது கணக்கிலிருந்து பல முறை பணம்

1. (1816) I Mer. 529, 572

எடுத்தார். இதனால் அக்கணக்கின் இருப்பு £ 453–ஆக குறைந்துவிட்டது. இதற்குப் பின்னிட்டும் அந்நிறுமத்தின் எஞ்சிய பங்குதாரர்கள், கிளேட்டனுக்கு அவரது கணக்கிலிருந்து தொகை செலுத்தினர். அந்த வகையில் £ 1,713 –க்கு அதிகமாகவே தொகை செலுத்திவிட்டனர். இங்கு ஒரு விநோதமான சூழ்நிலை உருவானது. தேவேநஸ் இறப்பிற்கும், அந்நிறுமம் நொடிப்பு நிலை அடைவதற்கும் இடைப்பட்ட காலத்தில், கிளேட்டன் தனது கணக்கில் வரவு இருப்பு உள்ள தொகைக்கும் (£ 1,713) அதிகமான தொகையை திரும்ப எடுத்துக் கொண்டு விட்டார். ஆனால் அதே சமயத்தில் தேவேநஸ் இறக்கும் பொழுது கணக்கில் இருந்ததைவிட (£ 1,713), அதிகமான தொகையை அக்கணக்கின் வரவுப் பக்கத்தில் இருக்குமளவு செலுத்தியுள்ளார். இங்கு கிளேட்டன், பின்வரும் இரண்டு அடிப்படைகளில் மேற்படி வழக்கிட்டு, வாதம் புரிந்தார். அவை,

(1) மேற்படி தேவேநஸ் இறந்த பிறகு, தன்னால் திரும்பப் பெறப்பட்ட தொகையானது (withdrawals), அதே காலகட்டத்தில் தன்னால் செலுத்தப்பட்ட தொகையால் சரி செய்து கொள்ளப்பட்டது. எனவே,–

(2) தேவேநஸ் இறக்கும் பொழுது, தனது கணக்கில் என்ன தொகை இருப்பு இருந்ததோ, அதை அவரது சொத்துக்களிலிருந்து தனக்கு செலுத்த வேண்டும்.

ஆனால் கிளேட்டனின் மேற்படி வாதத்தை சர் வில்லியம் கிராண்ட் (Sir William Grant M.R.) எனும் நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை. வங்கியரிடம் செலுத்தப்படும் பணத்தை, வங்கியர் எவ்வாறு வாடிக்கையாளர்களின் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்வது என்பது குறித்த பொது விதி ஒன்றை பின்வருமாறு கூறினார்.

அதன்படி, ஒரு நடப்புக் கணக்கில், முதலில் செலுத்தப்படும் தொகை, முதலில் எடுக்கப்படும் தொகையாக அனுமானிக்கப்படும் (it is presumed that the sum first paid is the sum first drawn out). பற்றுப் பக்கத்தில் உள்ள முதல் தொகையானது, வரவுப் பக்கத்தில் உள்ள முதல் தொகையால் குறைக்கப்படுகிறது. எனவே வரவுப் பக்கத்தில் உள்ள பதிவுகள் பற்றுப் பக்கத்தில் உள்ள பதிவுகளை காலவரிசைக்கிரமப்படி சரிக்கட்டிக் கொள்கிறது. அதாவது ஒரு கணக்கின் வரவுப் பக்கத்தில் உள்ள தொகையினங்கள் தேதிவாரியாக பற்றுப் பக்கம் உள்ள தொகையினங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். **இவையே கிளேட்டன் வழக்கின் விதிகள் ஆகும்.**

இவற்றின் அடிப்படையில், தேவேநஸ் இறக்கும் பொழுது, கிளேட்டன் அவ்வங்கி நிறுமத்திற்கு அளித்திருந்த பழைய கடன்கள், அந்நிறுமத்தின் பங்குதாரர்கள் அவரது கணக்கில் இருப்பு இருந்த தொகைக்கும் அதிகமாகவே

அவருக்கு செலுத்திய தொகையால் தீர்ந்து போனது. எனவே அந்நிறுமம் நொடிப்பு நிலை அடைந்த போது இருந்த கடன்கள், புதிய கடன்கள் ஆகும். இதற்கு இறந்து போன பங்குதாரரின் சொத்துக்கள் பொறுப்பாகாது, என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி பணத்தை ஒதுக்கீடு செய்ய வங்கியருக்கு உள்ள உரிமை (Right of Appropriation of Banker in India): நமது இந்திய நாட்டில், இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்படும் வரை, வங்கிகள் கிளேட்டன் வழக்கில் கூறப்பட்ட விதிகளின்படியே பணத்தை ஒதுக்கீடு செய்து வந்தன. இந்நிலையில் 1872–ஆம் ஆண்டில் இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இது தனது 59 முதல் 61 வரை உள்ள பிரிவுகளின் வழியாக, மேற்படி கிளேட்டன் வழக்கில் சற்று குழப்பமான நிலையில் கூறப்பட்ட விதிகளை, தெளிவுபடுத்தியது. இவை ஒரு கடனாளி, தனக்கு கடன் கொடுத்தவருக்கு தனித்தனியாகவும், வெவ்வேறாகவும் பல கடன்கள் கொண்டவராக இருந்தால், எல்லாக் கடன்களையும் அடைக்க முடியாத அளிவில் அவர் ஒரு தொகையைச் செலுத்தினால், எந்தக் கடனுக்கு அந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதற்கு மூன்று வழிமுறைகளைக் கூறுகின்றன. அவை வருமாறு.

(1) கடனாளி அறிவித்திருக்குமிடத்து (Where the debtor intimates) (பிரிவு 59): கடனாளி பணம் செலுத்தும் போது, ஒரு குறிப்பிட்ட கடனைத் தீர்க்க அப்பணத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவித்திருந்தால், கடன கொடுத்தவர் (வங்கியர்) அவ்வாறே செய்ய வேண்டும். அவ்வித அறிவிப்பு ஏதும் இல்லையெனில், அப்பணத்தை சூழ்நிலைக்கொப்ப ஒதுக்கீடு செய்யலாம்.

(2) கடனாளி எவ்வித அறிவிப்பையும் செய்யவில்லை; மேலும் சூழ்நிலைகள் எதுவும் உணர்த்தக் கூடிய வகையில் இல்லையெனில் (Where the debtor does not intimate and the circumstances are not indicative) (பிரிவு 60): இச்சமயத்தில் கடனாளிக்கு, கடன் கொடுத்தவர் (வங்கியர்) தனது தன்விருப்புரிமையின்படி, சட்டப்படியாக கெடுவாகியிருக்கும் கடன் எதற்கும் கடனாளி செலுத்தும் பணத்தை ஒதுக்கீடு செய்யலாம்.

(3) கடனாளி அறிவிக்காமலிருந்து மற்றும் கடன் கொடுத்தவர் ஒதுக்கீடு செய்யத் தவறியிருப்பின் (Where the debtor does not intimate and creditor fails to appropriate) (பிரிவு 61): இச்சூழ்நிலையில் கடனாளி செலுத்திய பணம் காலவரிசைப்படியில் கடன்களைத் தீர்க்கப் பயன்படுத்தப்பட வேண்டும். கடன்கள் ஒரே காலத்தில் பெறப்பட்டதாக இருப்பின், அப்பணம் விகிதாச்சார அளவில் கணக்கிடப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்படும். இதனை சட்ட ஒதுக்கீடு (Appropriation by law) என்றும் அழைப்பர்.

செலுத்தப்படும் பணத்தை ஒதுக்கீடு செய்யும் முறை குறித்து நாம் இதுகாறும் கண்ட இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வழிமுறைகள், ஒரு வங்கியருக்கு நன்றாகவே பொருந்தும்.

IV. வட்டி, சேவைக் கட்டணங்கள், இடைநிகழ்வுக் கட்டணங்கள் ஆகியவற்றை விதிக்க உரிமை (Right to charge Interest, Service Charges, Incidental Charges etc.):

வங்கியர் ஒரு கடன் தருநராக, வாடிக்கையாளர் தம்மிடம் பெற்ற கடன் மற்றும் முன்பணத்திற்கு வட்டி விதித்து, அதை வசூலிக்கும் உரிமை படைத்தவர் ஆவார். அதுபோல் வாடிக்கையாளர் வைத்துள்ள நடப்புக் கணக்கைப் பராமரிக்க, வங்கியர் இடைநிகழ்வுக் கட்டணங்களை விதித்து, அவற்றை அக்கணக்கில் பற்று எழுதுவதன் மூலம் வசூலித்துக் கொள்ளலாம். இவ்வாறு பற்று எழுதும் முன்பு, வாடிக்கையாளருக்கு அறிவிப்பு எதையும் வங்கியர் தரக் கடமைப்பட்டவரல்ல. இங்கு இடைநிகழ்வுக் கட்டணம் என்பதை சேவைக் கட்டணமாகவும் கருதலாம்.

V. கணக்கை முடிக்கும் உரிமை (Right to Close and Account):

வங்கியர், வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கை முடிக்க உரிமை படைத்தவர். ஆனால் நடப்புக் கணக்கை முடிக்கும் முன்பு, வாடிக்கையாளருக்கு அறிவிப்பு வழங்குதல் வேண்டும். (கணக்கை முடித்தல் குறித்து நாம் 'பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள்' எனும் தலைப்பின் கீழான 7–ஆம் அத்தியாயத்தின் இறுதியில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

VI. காலவரையறைச் சட்டத்தின் கீழ் வங்கியரின் உரிமை (Right under the Law of Limitation):

வங்கிகளில் செய்யப்படும் நிலை வைப்பீடுகளைப் பொறுத்தவரை, அதற்குரிய காலக் கெடு முடிந்து, வாடிக்கையாளர் கோரும் பொழுது கொடுக்கப்பட வேண்டியதாகும். 1963–ஆம் ஆண்டின் காலவரையறைச் சட்டத்தின் பகுதி II-ன் சரத்து 22–ன்படி, மேற்கண்டவாறு வாடிக்கையாளர் கோரிய தேதியிலிருந்துதான் காலவரையறைச் சட்டம் செயலுக்கு வருமே தவிர, தொகை வைப்பீடு செய்யப் பட்ட தேதியிலிருந்தல்ல. இங்கு மேற்படி சரத்து கூறும் கால வரையறை, மூன்று ஆண்டுகள் ஆகும். எனவே ஒரு நிலை வைப்பீடு **முதிர்வடைந்து, அதை வாடிக்கையாளர் கோரிய தேதியிலிருந்து** மூன்று ஆண்டுகளுக்குள் வங்கியரால் திருப்பித் தரப்படத் தக்கதாகும். ஆனால் சாதாரண வணிக நடவடிக்கையில் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற, **அதனைக் கடனாகக் கொடுத்த தேதியிலிருந்து** மூன்றாண்டுகளுக்குள் வழக்கிட வேண்டும்.

-oOo-

11

வங்கியியல் முறையாவணங்கள் [Banking Instruments]

ஒரு சிறு அறிமுகம்:

ஒரு சாதாரண வணிகத்தில் கூட, ரொக்கச் சீட்டு (cash bill), பற்றுச் சீட்டு (credit bill), விலைக் குறிப்பு (invoice), இரசீது போன்ற பல்வேறு ஆவணங்கள் பயனாகின்றன. அதுபோல் வங்கித் தொழிலிலும் பல்வேறு ஆவணங்கள் பயனாகின்றன. ஆனால் அத்தகு ஆவணங்கள் சட்டம் வகுத்துள்ள முறைப்படி அமைந்திருக்க வேண்டும். எனவே அவற்றை **'முறையாவணங்கள்' (Instruments)** என்கிறோம். நாம் இந்த அத்தியாயத்தில் அப்படிப்பட்ட வங்கியியல் முறையாவணங்கள் யாவை, அவற்றின் விளக்கம் யாது என்பன வற்றைச் சுருக்கமாகக் காண உள்ளோம்.

Banking Instruments - Write short notes. (வங்கியியல் முறையாவணங்கள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Travellers Cheques - Write short notes. (பயணிகள் காசோலைகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Bank notes - Write short notes. (வங்கித் தாள்கள் – சிறு குறிப்பு வரைக.)

வங்கியியல் முறையாவணங்கள்:

பல்வேறு வகையான வங்கியியல் முறையாவணங்கள் இன்று வங்கியியல் நடைமுறையில் உள்ளன. அவை வருமாறு.

(1) வங்கித் தாள்கள் (Bank Notes):

'வங்கித் தாள்' குறித்து நாம் இந்நூலின் ஆரம்ப அத்தியாயங்களில் விரிவாகக் கண்டுள்ளோம். ரூ.2/–ம் அதற்கு மேலும் மதிப்புடைய தாள்களே வங்கித் தாள்கள் எனப்படுகின்றன. வங்கித் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் மதிப்பை, அதனைக் கொணர்பவருக்கு அளிப்பதாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் அதில் உறுதியுரை அளித்து, கையொப்பமிட்டிருப்பார். எடுத்துக்காட்டாக ஒரு அய்ம்பது ரூபாய் வங்கித் தாளில், பின்வரும் வாசகம் காணப்படும். "I promise to pay the bearer the sum of fifty rupees - Governor". இவ்வங்கித் தாளை அச்சிட்டு, மக்களின் புழக்கத்திற்கு வெளியிடும் அதிகாரம், நாட்டின் மைய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கிக்கு மட்டுமே உண்டு. ஆனால் அதே சமயத்தில் பணத்தாளை (currency note) வெளியிடும் அதிகாரம், நமது இந்திய அரசிடம் உள்ளது. பணத்தாள் என்பதில் ஒரு ரூபாய் தாளும், பல்வேறு மதிப்புடைய நாணயங்களும் அடங்கும். எனினும் அவற்றை இந்திய அரசு, இந்திய ரிசர்வ் வங்கியின் மூலமாகத்தான் மக்களின் புழக்கத்திற்கு விட வேண்டும்.

வங்கித் தாள்களை வெளியிடுவதற்காக **"குறைந்தபட்ச இருப்பு முறை" (Minimum Reserve System)** எனும் ஒரு முறையை இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகிறது. இதன்படி இந்திய ரிசர்வ் வங்கி குறைந்தபட்சம் 200 கோடி ரூபாய்களுக்கு தன்னிடம் இருப்பு வைத்திருக்க வேண்டும். அதுவும் தங்கம் மற்றும் வெள்ளியின் வடிவிலும், அந்நிய செலாவணி இருப்பாகவும் இருக்க வேண்டும். இதிலும் 115 கோடி ரூபாய்க்கான இருப்பு, தங்கம் மற்றும் வெள்ளியின் வடிவில் இருக்க வேண்டும்.

(2) வங்கியரின் வரைவோலைகள் (Banker's Drafts):

'வங்கியரின் வரைவோலை' அல்லது 'வங்கி வரைவோலை' என்பது, அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பெறுநருக்கு (Payee) அல்லது அவரது ஆணையின்படி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகையைச் செலுத்துவதற்கான ஆணையாகும். இந்த ஆணை, ஒரு வங்கியின் ஓர் அலுவலகத்திலிருந்து, அதே வங்கியின் மற்றொரு அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. இது ஒரு காசோலையை பெரிதும் ஒத்தது. வெளியூரில் இருந்து பணம் அனுப்புபவர்கள், அதை வங்கி வரைவோலையாக மாற்றி அனுப்புவது வழக்கமாக உள்ளது.

(3) வைப்பீட்டு இரசீதுகள் (Deposit Receipts):

வங்கியரிடம், வாடிக்கையாளர் செய்யும் நிலை வைப்பீடுகளைப் (Fixed Deposits) பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வங்கியர் அளிக்கும் ஆவணமே, வைப்பீட்டு இரசீகள் எனப்படும். இது குறித்தும் நாம் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம். எனவே இங்கு மீண்டும் விவாதிப்பது தேவையற்றது.

(4) நம்பிக்கைக் கடிதங்கள் (Letters of Credit - L/Cs):

விளக்கம்: ஒரு மூன்றாம் நபருக்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குமாறு, ஒரு வங்கியரையோ அல்லது ஒரு வணிகரையோ கேட்டு மற்றொரு வங்கியர் வரைந்து வழங்கும் கடிதமே, நம்பிக்கைக் கடிதமாகும். வேண்டுகோளுக் கிணங்கி தொகை அளிக்கும் வங்கியர் அல்லது வணிகருக்கு, அவர் கொடுத்த தொகைக்கு, கடிதம் வரைந்து கொடுக்கும் வங்கியரே பொறுப்புடையவர் ஆவர். இந்நம்பிக்கைக் கடிதங்கள் பன்னாட்டுத் தொடர்பிற்கும், வணிகத்திற்கும் பெரிதும் பயனுடையதாக உள்ளன.

இரு வகையான கடிதங்கள்: இக்கடிதங்கள் (1) பயணம் செய்வோரின் நம்பிக்கைக் கடிதம் (Traveller's Letter of Credit) என்றும், (2) வணிக நம்பிக்கைக் கடிதம் (Letter of Commercial Credit) என்று இரு வகைப்படும்.

முதல் வகையைப் பொறுத்த வரை, ஒரு நபர் உள்நாட்டிற்குள்ளோ அல்லது வெளிநாட்டிற்கோ பிரயாணம் செய்யும் பொழுது அல்லது வெளிநாட்டில் சில காலம் தங்க நேரிடும் பொழுது, தன்னுடன் மிகுந்த பணத்தை எடுத்துச் செல்வது என்பது, இன்றைய காலகட்டத்தில் இடர் மிகுந்தது. பணம் தொலைந்து போகலாம் அல்லது களவு போகலாம். இந்த இடரைக் களையும் வண்ணம், வங்கியர் மேற்படி பயணம் செய்வோர் நம்பிக்கைக் கடிதத்தை வழங்குகின்றனர். இதனை ஒரு வங்கி உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உள்ள தனது வங்கியின் பிற கிளையின் மீதோ அல்லது தனக்குத் தொடர்புடைய பிற வங்கியின் மீதோ வரைந்து கொடுக்கும். அதை பிரயாணம் செய்பவர் பெற்றுக் கொண்டு, அந்தந்த இடங்களில் உள்ள சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் அல்லது தொடர்புடைய வங்கியில் முன்னிலைப்படுத்தி, பணம் பெற்றுக் கொள்ளலாம். இத்துடன் மேற்படி கடிதத்தை பெறுபவரின் கையொப்பத்தை சான்றொப்பம் செய்து வங்கியர் அளிக்கும் மற்றொரு கடிதத்தையும் கடிதம் வழங்கும் வங்கியர் கொடுப்பர். இது 'ஆளறிக் கடிதம்' (Identification letter) எனப்படுகிறது. மேற்கண்ட இரண்டு கடிதங்களையும் சேர்ந்தே முன்னிலைப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் பணம் கிடைக்கும்.

இரண்டாவது வகையிலான நம்பிக்கைக் கடிதம், பன்னாட்டு

வணிகத்திற்கு மிகுந்த பயன் நல்குகிறது. பல சமயங்களில் பொருளை ஏற்றுமதி செய்யும் வணிகர் அல்லது நிறுவனம், வெளிநாட்டில் அப்பொருளை இறக்குமதி செய்து கொள்ளும் வணிகர் அல்லது நிறுவனத்தை, தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பற்றவர்களாக இருப்பார்கள். அதாவது ஒருவருக் கொருவர் பரஸ்பரம் முன்பின் அறிமுகம் இல்லாதவர்களாக விளங்குவார்கள். இம்மாதிரியான சூழ்நிலையில், ஒரு ஏற்றுமதியாளர் வெளிநாட்டில் உள்ள இறக்குமதியாளருக்கு அவரது வேண்டுகோளின்படி சரக்குகளை அனுப்பிய பிறகு, அச்சரக்குகளை அந்த இறக்குமதியாளர் பெற்றுக் கொள்ளத் தவறும் பொழுதோ அல்லது அச்சரக்கினைப் பெற்றுக் கொண்டு அதற்குரிய தொகையை செலுத்தத் தவறும் பொழுதோ, சரக்கை அனுப்பிய மேற்படி ஏற்றுமதியாளருக்கு பெருத்த கட்டமும் நட்டமும் ஏற்படுகிறது. இவற்றைத் தவிர்ப்பதற்காக சரக்கை ஏற்றுமதி செய்பவர், அச்சரக்கை இறக்குமதி செய்து கொள்பவரை, அவரது வங்கியிலிருந்து தனது பெயருக்கு (ஏற்றுமதியாளரின் பெயருக்கு) ஒரு நம்பிக்கைக் கடிதத்தை வரைந்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறார். இதன் அடிப்படையில் சரக்குகள், வெளிநாட்டு இறக்குமதியாளருக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்குண்டான தொகையை நம்பிக்கைக் கடிதம் வழங்கிய வங்கி செலுத்துகிறது. இதனால் இருவரின் வணிகமும் நல்ல முறையில் நம்பிக்கையுடன் நடந்து முடிகிறது[1].

(5) *பயணம் செய்வோர் காசோலைகள்* (Traveller's Cheques):

இது 'பயணம் செய்வோரின் நம்பிக்கைக் கடிதத்தின்' (Traveller's Letter of Credit) ஒரு வகையாகும். இக்காசோலைகள் பயணம் செய்யும் பொது மக்களின் வசதிக்காக வங்கியர் வழங்கும் மற்றொரு சேவையாகும். இவை பொதுவாக ஒரு குறிப்பிட்ட மொத்த தொகைக்கும் வரையப்படுகின்றன. இவற்றை நடப்பு பணமாற்று வீதப்படி பணமாக்கிக் கொள்ளலாம். இக்காசோலையை வங்கியரிடமிருந்து பெறுபவர், அது வழங்கப்படும் சமயத்தில் அதில் கையொப்பமிட வேண்டும். அவரது அக்கையொப்பத்திற்கு அக்காசோலையை வழங்கும் வங்கியர் சான்றுறுதி அளித்து கையொப்பமிடுவார். அக்காசோலையின் பேரில் தொகை பெறும்போது, தொகை வழங்கும் வங்கியின் அலுவலர் ஒருவர் முன்னிலையில் தொகை பெற்றுக் கொள்பவர், இதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மீண்டும் கையொப்பமிட வேண்டும். இந்த இரண்டு கையொப்பங்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்திருக்க வேண்டும். இந்தக் கையொப்பம்தான் அந்தக் காசோலையை வைத்திருப்பவரை அடையாளம் காண உதவுகிறது. எனவே நம்பிக்கைக் கடிதத்தில் கண்டது போல், தனியாக 'ஆளறி கடிதம்' தேவையில்லை. கையொப்பம் ஒத்திருக்கும் பொழுதுதான், காசோலைக்குரிய தொகையும் வழங்கப்படும்.

1. நம்பிக்கைக் கடிதம் குறித்து மேலும் விரிவாக அறிந்து கொள்ள, இந்நூலாசிரியரின் 'வங்கிச் சட்டங்களில் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், 1881' எனும் நூலைக் காண்க.

(6) ஈட்டுறுதிகள் (Indemnities):

'ஈட்டுறுதி' (Indemnity) என்பது, ஒருவர் தமது அல்லது மற்றொருரின் நடத்தையால் பிறிதொருவருக்கு ஏற்படும் இழப்பிற்கு ஈடு செய்தல் என்று பொருள் படும். இவ்வாறு ஈடு செய்வதற்கு ஒருவர் அளிக்கும் உறுதியுரை, 'ஈட்டுறுதி ஒப்பந்தம்' (Contract of Indemnity) எனப்படுகிறது. இதிலிருந்து ஈட்டுறுதி என்பது, ஒப்பந்தத்தின் ஒரு வகை என்பதையும், இதற்கு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்தும் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

வங்கியில் நிலை வைப்பீடு செய்ததன் பேரில், வங்கியர் நிலை வைப்பீட்டு இரசீது வழங்குகின்றனர். வைப்பீட்டாளர், தனது வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெறும் வரை, இந்த இரசீதை தம்வசம் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். ஒருவேளை அவர் அதை தொலைத்துவிட்டால், தனது வைப்பீட்டையே திரும்பப் பெற முடியாது என்று கவலை கொள்ள வேண்டியதில்லை. அவர் வங்கியரின் சார்பாக ஒரு ஈட்டுறுதிப் பத்திரத்தை (Indemnity Bond) எழுதிக் கொடுக்க வேண்டும். அதில் தொலைந்து போன வைப்பீட்டு இரசீது பின்னர் கிடைத்து, அதன் மூலம் எவரேனும் உரிமை கோரி, அதனால் வங்கிக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதைத் தானே ஈடு செய்வதாக, வைப்பீட்டாளர் ஈட்டுறுதி அளித்து எழுதிக் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில், வங்கியர் வைப்பீட்டிற்குரிய தொகையை அதன் காலக் கெடு முடிந்து, அது முதிர்வடைந்த பிறகு, வைப்பீட்டாளருக்குக் கொடுப்பார் அல்லது மாற்று இரசீது (Duplicate Receipt) ஒன்றை வழங்குவார். இம்மாதிரியான பல நிகழ்வுகளிலும் வங்கியரைப் பாதுகாக்க, மேற்படி ஈட்டுறுதி ஒப்பந்தப் பத்திரம் பயனாகிறது எனில் அது மிகையன்று.

ஒரு வங்கியர், தான் வாடிக்கையாளருடன் கொண்டுள்ள செயல் தொடர்பின் விளைவாக பின்னிட்டு தனக்கு இழப்பு ஏதும் ஏற்படும் என்று கருதினால் அல்லது அய்யம் கொண்டால், அவர் அவ்வாடிக்கையாளரை மேற்படி ஈட்டுறுதிப் பத்திரத்தை எழுதிக் கொடுக்கும்படி கோரலாம்.

(7) அஞ்சல் ஆணைகள் (Postal Orders):

'அஞ்சல் ஆணை' என்பது, ஒரு நாட்டின் அஞ்சல் துறை வெளியிடும் ஒரு பணமாற்று ஆணையாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, நாட்டிலுள்ள எந்த அஞ்சலகத்திலும் அல்லது அதைப் பணமாக்கிக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ள நாட்டின் அஞ்சலகம் எதிலும் பணமாகப் பெற்றுக் கொள்வதற்கு மேற்படி அஞ்சல் ஆணை அதிகாரமளிக்கிறது.

சிறு தொகைகளை ஒரு தரப்பினரிடமிருந்து மற்றொரு தரப்பினருக்குச் செலுத்துவதற்கு வசதி செய்வதற்காக இந்த அஞ்சல் ஆணைகள் வெளியிடப்

படுகின்றன. சில சமயங்களில் சிறு தொகைகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு குறைந்த செலவில் அனுப்புவதற்கும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

அஞ்சல் ஆணையை விலைக்கு வாங்குபவர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை யாருக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அவரது பெயரையும், அந்தத் தொகை எந்த அஞ்சலகத்தின் வாயிலாகக் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அஞ்சலகத்தின் பெயரையும் எழுத வேண்டும். ஆனால் இது கட்டாயமில்லை. மேலும் அவர், அஞ்சல் ஆணையில் குறுக்குக் கோடு (cross) செய்தும் கொடுக்கலாம். இவ்வாறு குறுக்குக் கோடிடும் நேர்வில், வரையப் பெறுநர் (Drawee) அந்த அஞ்சல் ஆணையின் பின்புறம் தன்கையொப்பமிட்டு ஒரு வங்கியில் அளிப்பதன் வாயிலாகவே, இதற்கு பணம் பெற்றுக் கொள்ள முடியும். பொதுவாக அஞ்சல் ஆணையை, வங்கி வரைந்து கொடுக்கும் வரைவோலைக்கு (Bank Draft) ஒப்பாகக் கூறலாம்.

(8) பங்காதாயப் பற்றாணைகள் (Divident Warrants):

ஒரு கூட்டுப் பங்கு நிறுவனம் வெளியிட்ட ஒன்று அல்லது அதற்கு மேலான கடனீட்டுப் பத்திரங்களை வைத்திருக்கும் நபர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட பணத் தொகையைச் செலுத்துவதற்காக, வங்கியர்கள் மேல் வரையப்பட்டு அந்நிறுவனத்தால் வழங்கப்படும் ஆணையே, பங்காதாயப் பற்றாணை எனப் படுகிறது.

வங்கியர்கள் மேல் வரையப்படும் பங்காதாயப் பற்றாணைகள், ஒரு காசோலையாகவே பாவிக்கப்படுகின்றன. வங்கியர் அல்லாத வேறு நபர்கள் மேல் வரையப்பட்டிருக்குமானால், இவை ஒரு இரசீதாக (Receipt) பாவிக்கப் படுகின்றன. அச்சமயத்தில் இவை ரூ.20/–க்கு மேற்பட்டு இருப்பின், முத்திரைக் கட்டணத்திற்கு உட்பட்டதாகும். குறுக்குக் கோடிட்ட பங்காதாயப் பற்றாணைகளை, வங்கியர் வசூலுக்காக ஏற்றுக் கொள்கின்றன.

(9) பிணையாவணங்கள் (Bonds):

வங்கிகள் கடன் பெற பல வழிகளுண்டு. அவைகளில் ஒரு வழி, பொது மக்களுக்கு பிணையாவணங்களை வெளியிடுதல் ஆகும். எனினும் இந்தியாவில் கொணர்பவருக்கு பணம் செலுத்தத்தக்க காலவரைப் பிணையாவணங்களை வெளியிட சட்டப்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. சில வங்கிகள் இவற்றைப் பணச் சான்றிதழ் தன்மை (in the nature of cash certificartes) கொண்டதாக வெளியிடுகின்றன. இத்தகு சான்றிதழ்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகளில் பணம் திரும்பக் கொடுக்கப்படும்.

-o0o-

12

செலுத்தும் வங்கியர் (அல்லது) பணம் வழங்கும் வங்கியர் [Paying Banker]

ஒரு சிறு அறிமுகம்:

ஒரு காசோலைக்கு பணம் செலுத்தும் வங்கியர், **'செலுத்தும் வங்கியர்'** (Paying Banker) எனப்படுகிறார். அவர் அவ்வாறு பணம் செலுத்தும் பொழுது என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும், எப்பொழுது காசோலைக்குரிய மதிப்பை மறுக்க வேண்டும், அவருக்கு சட்டம் அளிக்கும் பாதுகாப்புகள் யாவை என்பனவற்றைக் குறித்து நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம்.

1. Paying Banker- Write short notes. (பணம் கொடுக்கும் வங்கியர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Who is a 'Paying Banker'? What are the duties and responsibilities of a Paying Banker? ('செலுத்தும் வங்கியர்' என்பவர் யார்? அவரது கடமைகளும் பொறுப்புகளும் யாவை?)

(அல்லது)

Who is a 'Paying Banker'? What are the precautions to be taken

by a Banker before honouring a cheque? ('செலுத்தும் வங்கியர்' என்பவர் யார்? ஒரு காசோலைக்கு பணம் வழங்கும் முன் அவர் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை?)

செலுத்தும் வங்கியர் (அல்லது) பணம் கொடுக்கும் வங்கியர் [Paying Banker] – விளக்கம்:

ஒரு காசோலை எவ்வங்கியர் மீது வரையப்பட்டுள்ளதோ, அவர் **'வரையப் பெறுநர்' (Drawee)** ஆவார். இவ்வங்கியர் அக்காசோலைக்கு மதிப்பளிக்க அதாவது பணம் வழங்கக் கடமைப்பட்டவர் ஆவார். இவரைத்தாம் நாம் 'செலுத்தும் வங்கியர்' அல்லது 'பணம் வழங்கும் வங்கியர்' அல்லது 'பணம் கொடுக்கும் வங்கியர்' எனப் பலவாறாக அழைக்கிறோம்.

செலுத்தும் வங்கியரின் பொறுப்புகளும் கடமைகளும்:

செலுத்தும் வங்கியரின் முக்கியக் கடமைப் பொறுப்புகளில் ஒன்று, காசோலைக்கு பணம் வழங்குதல் ஆகும். ஆனால் இது முழுமையானதல்ல; சில வரம்பிற்களுக்குட்பட்டதாகும். அதாவது ஒரு காசோலைக்கு வங்கியர் பணம் வழங்க வேண்டும் எனில், (1) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் போதுமான இருப்பு இருக்க வேண்டும். அல்லது அக்கணக்கிலிருந்து மிகைப்பற்று (over draft facility) பெறும் வசதியை வங்கியர் அளித்திருக்க வேண்டும். (2) காசோலை முறையாக வரையப்பட்டிருக்க வேண்டும். அதாவது பூர்த்தி செய்ய வேண்டிய விபரங்கள் தெளிவாக இருக்க வேண்டும். விடுபாடுகள் ஏதும் இருக்கக் கூடாது. (3) வங்கியின் வேலை நாளிலும், வேலை நேரத்திலும் முன்னிடப்பட வேண்டும். இவ்வாறு இல்லாவிட்டால், வங்கியர் பணம் கொடுக்க மறுத்துவிடலாம்.

மேற்படி பொறுப்பின் காரணமாக வங்கியர் இரண்டு விதமான இடர்களை சந்திக்க வேண்டிய அபாயம் உள்ளது. ஒன்று, வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லாத நேரத்தில், வங்கியர் தவறுதலாக பணம் அளித்து விட்டால், அவர் தனது பணத்தை இழந்துவிடும் அபாயம் உள்ளது. மற்றொன்று, வங்கிக் கணக்கில் போதிய பணமிருந்தும், அக்காசோலையும் முறையாக முன்னிடப்பட்டிருந்தும், வங்கியர் அதற்கு பணமளிக்க தவறாக மறுத்துவிட்டால் (wrongful dishonour), அங்கும் வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டிய அபாயம் உள்ளது. இதில் வணிகர்கள் (Trader) வழங்கிய காசோலை எனில், பெருமளவு இழப்பீட்டையும் (Substantial Damages), வணிகரல்லாதவர் (Non-trader) வழங்கிய காசோலை எனில், பெயரளவு அல்லது உள்ளபடியான இழப்பீட்டையும் (Nominal or Actual Damages) வங்கியர் வழங்க வேண்டும்.

எனவே ஒரு காசோலைக்கு மதிப்பளிக்கும் முன், வங்கியர் பின்வரும் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. அவை

செலுத்தும் வங்கியர் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் [Precautions to be taken by a Paying Banker]:

(1) காசோலையின் படிவத்தில் கவனம் (Care in the form of cheque): ஒரு காசோலை எப்படிவத்தில் இருக்க வேண்டும் என்று 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது. இச் சட்டத்தின்படி, வங்கிகள் தம்மால் அச்சடிக்கப்பட்ட காசோலைகளையே, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு தருகின்றன. இதனால் பல அபாயங்கள் தவிர்க்கப் பட்டாலும், அதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விபரங்கள் அனைத்தும் வாடிக்கையாளரால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை வங்கியர் கவனித்தல் வேண்டும்.

(2) காசோலையின் நிலைமை (Condition of cheque): செலுத்தலுக் காக முன்னிடப்படும் ஒரு காசோலை நல்ல நிலையில் இருக்க வேண்டும். அதாவது கிழிந்து போனதாக, அதில் பூர்த்தி செய்யப்பட்ட விபரங்கள் அழிந்து போனதாக இருத்தல் கூடாது. மேலும் காசோலை இரத்து செய்யப்பட்டதாகவும் இருத்தல் கூடாது.

(3) காசோலையின் தேதி (Date of cheque): காசோலை ஒவ்வொன்றிலும், தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை வங்கியர் கவனித்தல் வேண்டும். ஏனெனில், ஒரு காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலிருந்து, அக்காசோலை ஆறு மாதங்கள் வரையே செல்லத்தக்கதாகும். தேதி என்பது ஆண்டு, மாதம், நாள் ஆகிய மூன்றையும் சேர்த்துக் குறிப்பிடுவதாகும்.

(4) காசோலையின் தொகை (Amount of cheque): காசோலையில் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை வங்கியர் கவனிக்க வேண்டும். மேலும், அத்தொகை எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருப்பதை வங்கியர் கவனித்தல் வேண்டும். இரண்டுக்கும் வேறுபாடு இருந்தால், வங்கியர் அக்காசோலையைத் வாடிக்கையாளரிடம் திருப்பிக் கொடுத்துவிடலாம். இது போல் தொகை எழுத்தால் எழுதப்படாமல், எண்ணால் மட்டுமே எழுதப்பட்டிருந்தாலும் வங்கியர் அக் காசோலைக்குப் பணம் வழங்க மறுத்து விடலாம். எனினும், தொகை எழுத்தால் மட்டுமே குறிப்பிடப்பட்டு இருந்தால், அக்காசோலைக்கு வங்கியர் பணம் வழங்க வேண்டும். வழங்க மறுத்தால், அக்காசோலைக்கு தவறாக மதிப்பு மறுத்தற்காக

வங்கியர் இழப்பீடு தரும் பொறுப்புக்குள்ளாகிவிடுவார். காசோலையின் தொகையில் அடித்தல் திருத்தல் இருக்க வாய்ப்பு உண்டு. அவ்வாறு திருத்தப்பட்ட தாயின், வாடிக்கையாளர் அத்திருத்தத்தின் அருகில் தமது முழுக் கையெழுத்தையும் இட்டு, அத்திருத்தத்தை உறுதி செய்ய வேண்டும்.

(5) கோடிட்ட காசோலைகள் (Crossed Cheques) (அல்லது) கீறிவிட்ட காசோலைகள்: பொதுவாக, செலுத்தலுக்காக ஒரு காசோலை முன்னிடப்படும் பொழுது, அது கோடிடாக் காசோலையா (Open Cheque), கோடிட்ட காசோலையா (Crossed Cheque) என்பதை வங்கியர் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். கோடிடாக் காசோலையாக இருந்தால் மட்டுமே, வங்கியர் தனது ரொக்க மேடையில் உடனடியாகப் பணம் தர வேண்டும். கோடிட்ட காசோலையாக இருப்பின், அதற்கு வங்கியர் தனது ரொக்க மேடையில் பணம் அளிக்கக் கூடாது. அதனை ஒரு வங்கிக் கணக்கின் மூலமாக வசூலுக்கு போடும் படி அறிவுறுத்த வேண்டும். சிறப்பாகக் கோடிடப்பட்டிருந்தால் (specially crossed), அவற்றிற்கு ஒப்ப முன்னிடும்படி வாடிக்கையாளரை அறிவுறுத்த வேண்டும்.

(6) புறக்குறிப்புகள் (அல்லது) மேலெழுத்துகள் (Endorsement): காசோலையின் பின்புறம் வரையப்படும் புறக்குறிப்பு (அல்லது) மேலெழுத்து பற்றியும் வங்கியர் கவனம் செலுத்த வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் புறக்குறிப்பு வரையப்பட்டுக் காசோலை மாற்றிக் கொடுக்கப்பட்டதாக இருந்தால், அனைத்துப் புறக் குறிப்புகளும் முறையாக உள்ளதா என்று வங்கியர் கவனிக்க வேண்டும். கவனிக்கத் தவறினால் வங்கியருக்குச் சட்டப்படி கிடைக்கும் பாதுகாப்பு கிடைக்காது. காசோலையில் வரையப்பட்ட புறக்குறிப்பு, இந்தியாவில் பேசப்படாத ஏதாவது ஒரு மொழியில் இருந்தால் வங்கியர் பணம் வழங்க மறுத்து விடலாம்.

(7) வாடிக்கையாளரின் கையொப்பம் (Signature of the Drawer): ஒவ்வொரு காசோலையிலும் வாடிக்கையாளரின் கையொப்பம் இருத்தல் வேண்டும். கையொப்பமிடப்படாத காசோலை, சட்டப்படி ஒரு காசோலை அல்ல. எனவே, அக்காசோலைகளுக்கு வங்கியர் பணம் தர இயலாது. மேலும், கையொப்பம் உண்மையானதுதானா என்பதையும் வங்கியர் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு வாடிக்கையாளர் கணக்குத் துவங்கும் பொழுது, தனது விண்ணப்பப் படிவத்துடன் செய்து கொடுத்த மாதிரிக் கையொப்பங்களை, அக்காசோலையில் உள்ள கையொப்பத்துடன் வங்கியர் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கையொப்பங்கள் ஒன்றையொன்று ஒத்திருந்தால், அக்காசோலைக்கு வங்கியர் பணம் அளிக்கலாம். ஒத்திராவிட்டால், அதற்குப் பணமளிக்க வங்கியர் மறுக்கலாம். மேலும் இது குறித்து தனது வாடிக்கையாளருக்கு வங்கியர் உடனடியாக தகவல் தெரிவித்துவிட வேண்டும்.

(8) போதிய அளவு இருப்பு (Sufficient Balance) : வாடிக்கையாளரின் கணக்கில் அக்காசோலைக்கு பணம் வழங்கப் போதுமான தொகை (Sufficient Funds) வரவு இருப்பில் இருக்க வேண்டும். அதிகப்பற்று வசதி தரப்பட்டு இருந்தாலும்; அதிப்பற்று அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதிகமாக காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அமைந்திருந்தால், அதற்கு பணம் வழங்க வங்கியர் மறுக்கலாம்.

மேலே குறிப்பிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் வங்கியர் தமக்கு நேரக்கூடிய இழப்புகளில் இருந்து விடுபடலாம்.

2. "A banker is bound to honour his customer's cheques". Discuss. ("ஒரு வங்கியர் தனது வாடிக்கையாளரின் காசோலைகளுக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டவர்". விவாதி.)

(அல்லது)

Explain under what circumstances a banker can be justified in refusing to make a payment to his customer's cheque? (எந்த சூழ்நிலைகளில் ஒரு வங்கியாளர் தனது வாடிக்கையாளரின் காசோலைக்கு பணம் கொடுக்க மறுப்பது சரியே என்று தீர்மானிக்கப்படும் என்பதை விளக்குக.)

(அல்லது)

Under what circumstances can a bank dishonour the cheque of a customer? (எந்த சூழ்நிலைகளில் ஒரு வங்கியர் ஒரு வாடிக்கையாளரின் காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கலாம் என்பதை எடுத்துரைக்க)

(அல்லது)

State the circumstances under which a banker must refuse payment of his customer's cheque. (எந்தச் சூழ்நிலைகளில் ஓர் வங்கியாளர் தன்னுடைய வாடிக்கையாளரின் காசோலைகளை கட்டாயமாக ஏற்க மறுக்கலாம் என்பதனைக் கூறுக.)

வாடிக்கையாளரின் காசோலைக்கு மதிப்பளிக்க வங்கியர் கடமைப்பட்டவர் - விளக்கம்:

வங்கியர் சேமிப்பு மற்றும் நடப்பு கணக்குகளில் ஏற்றுக் கொள்ளும் தொகைகள், கேட்பு வைப்பீடுகள் (Demand Deposits) ஆகும். வாடிக்கையாளர்கள் காசோலை வழங்கி கேட்கும் போது அவர்கள் கணக்கிலிருந்து பணம் வழங்க வேண்டியது, வங்கியரின் கடமையாகும். இக்கடமையிலிருந்து தவறினால்,

அதனால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு வங்கியரே பொறுப்பு, என்று **1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 31** குறிப்பிடுகிறது. எனவே வங்கியர், வாடிக்கையாளர்களின் காசோலைகளுக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டவர் **(A banker is bound to honour his customer's cheques)** எனப்படுகிறது.

எனினும் சில சூழ்நிலைகளில் வங்கியர், தனது வாடிக்கையாளர் அளிக்கும் காசோலைக்கு மதிப்பளிக்க மறுக்கலாம். அதாவது பணம் கொடுக்க மறுக்கலாம். இந்நிலைப்பாடு பின்வரும் இரு பெரும் தலைப்புகளில் கீழ் அமைகிறது.

I. ஒரு வங்கியர் காசோலைகளுக்கு மதிப்பு மறுப்பது நியாயமெனக் கூடிய சூழ்நிலைகள் (The circumstances in which the banker is justifed in dishonouring the cheques) (அல்லது) வங்கியர் காசோலைகளுக்கு மதிப்பு மறுப்புச் செய்யலாமெனக் கூடிய சூழ்நிலைகள் (The circumstances in which the banker MAY dishonour the cheques):

1. வாடிக்கையாளரின் கணக்கில் காசோலைக்குச் செலுத்த போதுமான பணம் இல்லையென்றால்;

2. வாடிக்கையாளரின் கணக்கில் இருப்பு இருக்கும் பணம், காசோலைக்கு செலுத்தப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தால். எடுத்துக் காட்டாக, கணக்கு ஒரு பொறுப்பாண்மையின் (Trust Account) பெயரில் இருந்து, அதன் பொறுப்பாண்மையர் (Trustee) தனது சொந்த தகுதியில் கையொப்பமிட்டு காசோலை வழங்கியிருப்பின், அதற்கு பணம் செலுத்த வங்கியர் மறுக்கலாம். அவர் ஒரு பொறுப்பாண்மையர் எனும் தகுதியில், பொறுப்பாண்மையின் முத்திரையிட்டு காசோலை வழங்கியிருந்தால் மட்டுமே, அதற்கு வங்கியர் பணம் வழங்க வேண்டும்.

3. காசோலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விபர்ங்கள் தெளிவாக இல்லையென்றால் அல்லது அதன் சட்டமுறைத் தன்மையில் அய்யம் எழுந்தால்;

4. காசோலை கிழிக்கப்பட்டிருந்தால்;

5. காசோலையில் திருத்தம் செய்யப்பட்டு, அதனருகில் அதை வரைந்தவர் தனது கையொப்பத்தை இட்டிருக்கவில்லையென்றால்;

6. காசோலை முறையாக முன்னிடப்படவில்லையென்றால்;

7. வாடிக்கையாளரின் கையொப்பம், வங்கியிலுள்ள அவரது மாதிரிக் கையொப்பத்துடன் ஒத்திருக்கவில்லையென்றால்;

8. காசோலை பின் தேதியிடப்பட்டிருந்தால் (post-dated);

9. காசோலை அழுக்கடைந்ததாக (stale) இருந்தால்;

10. காசோலை அதன் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழித்து முன்னிடப்பட்டுள்ளதென்றால்;

11. வாடிக்கையாளர் கணக்கு வைத்திருக்கும் கிளையில் அல்லாமல், பிறிதொரு கிளையில் முன்னிடப்பட்டால்;

12. ஒரு கணக்கு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் பெயரிலான கூட்டுக் கணக்காக இருந்து, அவர்கள் அனைவரும் காசோலையில் கையொப்பமிடாமல் இருந்தால்; எனினும் காசோலையில் கையொப்பமிடும் அதிகாரம் அவர்களில் எவரேனும் ஒருவருக்கு மற்றவர்கள் கொடுத்திருந்தால், அந்த ஒருவர் மட்டுமே காசோலையில் கையொப்பம் செய்தால் போதுமானது.

13. குறுக்குக் கோடிடப்பட்ட (அல்லது கீறலிடப்பட்ட) ஒரு காசோலை வங்கியின் ரொக்க மேடையில் (cash counter) செலுத்தலுக்காக முன்னிடப்பட்டால்;

14. காசோலையில் தேதி எழுதப்படாமலிருந்தால்;

15. காசோலையில் எண்ணால் எழுதப்பட்டுள்ள தொகைக்கும், எழுத்தால் எழுதப்பட்டுள்ள தொகைக்கும் வேறுபாடு இருந்தால்; எண்ணால் எழுதப்பட்டு, எழுத்தால் எழுதப்படவில்லையானால்;

16. காசோலையில் வாடிக்கையாளரின் கையொப்பம் இல்லையென்றால்;

17. வங்கியர் தான் கொடுத்த கடனுக்காக, கணக்கில் உள்ள தொகையை சரிக்கட்டிக் கொள்ளும் உரிமையிருந்து, அவ்வாறு சரிக் கட்டிக் கொள்ளப்பட்ட தொகை போக, மீதமுள்ள பணத்தை அக்காசோலைக்கு அளிக்கப் போதுமானதாக இல்லையென்றால்;

18. வாடிக்கையாளர் கல்வியறிவில்லாதவராக இருந்தால், அவர் முன்னிடும் காசோலையின் பின்புறம் அவரை மற்றொருவர் அடையாளம் காட்டி, கையொப்பம் செய்ய வேண்டும். இக்கையொப்பம் இல்லாமலிருந்தால்;

II. ஒரு வங்கியர் காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கக் கடமைப்பட்டுள்ள சூழ்நிலைகள் (The circumstances in which the banker is bound to dishonour the cheques) (அல்லது) வங்கியர் காசோலைகளுக்கு கட்டாயமாக மதிப்பு மறுக்க வேண்டிய சூழ்நிலைகள் (The circumstances in which the banker SHALL dishonour the cheque):

1. வாடிக்கையாளர், தான் கொடுத்த காசோலைக்கு பணம் செலுத்த

வேண்டாம் என்று வங்கியருக்கு மறுப்பாணை (Countermand) அனுப்பினால்; ஆனால் இந்த மறுப்பாணை எழுத்து மூலமாக இருக்க வேண்டும். மேலும் அவரது கணக்கில் அக்காசோலைக்கு பணம் வழங்க போதுமான இருப்பு இருக்க வேண்டும். (இவ்வாறு போதுமான இருப்பு இல்லாத பொழுது, மறுப்பாணை அனுப்பினால், அதற்கு வாடிக்கையாளரே, அக்காசோலையின் செலுத்தப் பெறுநருக்குப் (Payee) பொறுப்பு; வங்கியர் பொறுப்பல்ல. எனவே வாடிக்கையாளர் நலன் கருதும் வங்கியர், அவருக்கு உரிய முறையில் அறிவுறுத்தலாம்.)

2. வாடிக்கையாளரின் மரணம் குறித்த அறிவிப்பை வங்கியர் பெற்றிருந்தால்; ஆனால் இவ்வறிவிப்பைப் பெறுமுன் காசோலைக்கு வங்கியர் பணம் அளித்திருந்தால், அது செல்லத்தக்கதே.

3. வாடிக்கையாளர் நொடிந்தவரானால் (insolvent) அல்லது நொடிப்பு நிலையரென நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை நீதிமன்றத்தலிருந்து கிடைக்கப் பெற்றால்;

4. வாடிக்கையாளருக்குப் பித்து பிடித்துவிட்டது எனும் அறிவிப்பை வங்கியர் பெற்றால்;

5. நீதிமன்றம் வாடிக்கையாளரின் கணக்கிலுள்ள பற்றுகை செய்து அனுப்ப பற்றுகைப் பொருள் ஆணை (Garnishee Order) அனுப்பினால்;

6. வாடிக்கையாளர் வங்கியருக்கோ அல்லது வங்கியர் வாடிக்கையாளருக்கோ, அவரது கணக்கை முடித்துவிடக் கூடிய அறிவிப்பை அனுப்பியிருந்தால்;

7. வாடிக்கையாளர் தன் கணக்கின் இருப்பில் உள்ள தொகையை மற்றொருவருக்கு உரிமைமாற்றம் (Assignment) செய்து அளித்திருந்தால்;

8. காசோலையை செலுத்தலுக்காக முன்னிடுபவருக்கு, அக்காசோலையின் மீது உள்ள உரிமை மூலம் குறித்து வங்கியர் அய்யுறவு கொண்டால்;

9. காசோலை தொலைந்துவிட்டது என்று, அதை மதிப்பிற்காக வைத்திருப்பவர் அல்லது செலுத்தப் பெறுநர் வங்கியருக்கு அறிவிப்பு அனுப்பினால்; எனினும் இது குறித்து வாடிக்கையாளருக்கு வங்கியர் அறிவித்தல் வேண்டும்.

10. காசோலையில் வெளிப்படையான கருநிலைத் திருத்தம் (patent material alteration) செய்யப்பட்டிருந்தால்.

மேற்கண்ட சூழ்நிலைகளில் ஒரு வங்கியர் காசோலைக்கு மதிப்பு மறுப்பது நியாயமானதே. இதனால் எந்த பாதிப்பும் வங்கியருக்கு விளையாது. சொல்லப் போனால், பொறுப்பிலிருந்து வங்கியர் தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார்.

3. Discuss the statutory protection given to the Paying Banker. (பணம் கொடுக்கும் வங்கியருக்குண்டான சட்டப்பூர்வமான பாதுகாப்பு பற்றி விவாதி.)

முன்னுரை:

நாம் சென்ற வினாவின் விடையிலிருந்து, ஒரு வங்கியர் பல்வேறு நியாயமான சூழ்நிலைகளில் தனது வாடிக்கையாளர் அளித்த காசோலைக்கு பணம் செலுத்த மறுத்து, பொறுப்புகளிலிருந்து தம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்கிறார் என்பதை அறிந்தோம். இப்பாதுகாப்புகள் மட்டுமல்லாமல், செலுத்தும் வங்கியர் ஒருவருக்கு சட்டமும் ஒரு சில பாதுகாப்புரிமைகளை அளித்துள்ளது. இவை 'செலுத்தும் வங்கியரின் சட்டப்படியான பாதுகாப்பு' எனப்படுகிறது.

வங்கியருக்கு ஏன் சட்டப்படியான பாதுகாப்பு தேவை?:

(1) வங்கியர் அனுதினமும் மிகக் குறைந்த நேரத்தில், பல காசோலை களுக்குப் பணம் தர வேண்டியுள்ளது. அதுவும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள வங்கிகளில், வேலைப்பளு மிகவும் அதிகம். எனவே, ஒவ்வொரு காசோலைக்கும் பணம் வழங்கும் முன்பு அக்காசோலையை முன்னிலைப்படுத்தி பணம் கேட்பவர் சரியான நபர்தானா, அக்காசோலை அவருக்கு உரியதா என்பனவற்றையெல்லாம் விரிவாகப் பரிசீலனை செய்வது வங்கியருக்கு நடைமுறைச் சாத்தியம் அல்ல.

(2) காசோலை ஒரு மாற்றுமுறை ஆவணம் (Negotiable Instrument) ஆகும். ஒரு காசோலையிலேயே பலர் புறக்குறிப்பு வரைந்து (அல்லது மேலெழுதி) (Endorsement) பலரிடம் மாற்றிக் கொடுக்கவும் முடியும். எனவே, ஒவ்வொரு புறக் குறிப்பும் முறையாக உள்ளதா என்பதையும் பரிசீலனை செய்ய இயலாது. புறக் குறிப்பு வரைந்தவர்கள் அத்தனை பேரையும் வங்கியர் அறிந்து கொள்ள முடியாது. எனவே, அவர்களது கையெழுத்தும் உண்மையா, போலியா என்பதையும் கவனித்து உறுதி செய்து கொள்ள முடியாது.

இக்காரணங்களால் வங்கியரின் நிலை இடர் மிக்கதாக உள்ளது. எனவே, 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பல வழிகளிலும் வங்கியருக்குப் பாதுகாப்பு அளித்து அவரை இடர்களிலிருந்தும், பின்விளைவு களிலிருந்தும் பாதுகாக்கிறது. இவ்வாறு சட்டம் அளிக்கும் பாதுகாப்புகளை, வங்கியரின் சிறப்புரிமைகள் (privileges of banker) என்றும் கூறலாம். எனினும் இப்பாதுகாப்பு, உரிய முறையில் பணம் செலுத்திய (payment in due course) வங்கியருக்கே கிடைக்கும். 'உரிய முறையில் பணம் செலுத்தல்' என்பதன் சட்ட விளக்கம் வருமாறு.

உரிய முறையில் பணம் செலுத்தல் (Payment in due course): மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 10–வது பிரிவின்படி, தன் மீது எழுதப்பட்ட காசோலைகளுக்கு உரிய முறைப்படி பணம் வழங்கினால் மட்டுமே பணம் வழங்கிய வங்கியர் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற்று, தனக்கு ஏற்படவுள்ள இழப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம். இப்பிரிவின்படி உரிய முறையில் பணம் செலுத்தல் என்பது பின்வரும் மூன்று நிபந்தனைகளை (Conditions) உள்ளடக்கியுள்ளது.

1. முறையாவணத்தின் வெளிப்படையான நோக்கத்திற்கு ஏற்றபடி (in accordance with the apparent tenor) பணம் செலுத்தப்பட்டு இருக்க வேண்டும்;

2. நன்னம்பிக்கையுடனும், எவ்வித கவனக்குறைவுமின்றி வங்கியர் பணம் செலுத்தியிருக்க வேண்டும் (payment must be made in good faith and without negligence);

3. பணம் யாரிடம் செலுத்தப்படுகிறதோ அவர் பணம் பெற உரிமை உடையவர் அல்ல நம்புவதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும் (the circumstances do not afford a reasonable ground for believing that the payee is not entitled to receive payment of the amount of cheque).

வங்கியருக்கு கிடைக்கும் சட்டப்படியான பாதுகாப்புகள் [Statutory Protection to a Paying Banker]:

மேற்கண்டவாறு உரிய முறையில் பணம் செலுத்தும் வங்கியருக்கு, 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் சில பிரிவுகள் பின்வரும் சில பாதுகாப்புகளை அளித்துள்ளன. இதனால் வங்கியர் தமது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர் ஆகிறார். அவை,–

(1) கொணர்பவர் காசோலை (Bearer Cheque): கொணர்பவர் அல்லது கோடிடப்படாத திறந்த காசோலை, வங்கியரின் ரொக்க மேடையில் முன்னிடப்பட்டால், வங்கியர் அதற்கு உடனே பணம் செலுத்துவதன் மூலம் அவரது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார். இதற்கு பணம் செலுத்தாவிட்டால்தான், வங்கியருக்கு பாதுகாப்பு கிடைக்காது என்று கூறலாம். **[பிரிவு 85(2)].**

(2) ஆணைக் காசோலை (Order Cheque): ஒரு காசோலை அதை வரைந்தவரின் ஆணைப்படி செலுத்தப்பட வேண்டியதாயின், வங்கியர் அதனை உரிய முறையில் செலுத்திவிட்டால், தன் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார். இங்கு அக்காசோலையின் பின்புறம் உள்ள புறக்குறிப்புகள் தொடர்ச்சியானதாக உள்ளதா என்பதை வங்கியர் பரிசீலிக்க வேண்டும். அதில் உள்ள கையொப்பம் உண்மையா, போலியா என்று வங்கியர் ஆராயத் தேவையில்லை. **[பிரிவு 85(1)].**

(3) பொதுக் கோடிடப்பட்ட (கீறலிடப்பட்ட) காசோலை (Cheque crossed generally): ஒரு காசோலை பொதுவாகக் கோடிடப்பட்டிருந்தால் (கீறலிடப்பட்டிருந்தால்), அதற்குண்டான மதிப்பை (பணத்தை) வங்கியர், அது வரையப் பெற்றுள்ள மற்றொரு வங்கியருக்கன்றி வேறு எவரிடமும் செலுத்தக் கூடாது. இங்கு உண்மையான உரிமையாளருக்கு பணம் போய்ச் சேருகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது வங்கியரின் கடமையல்ல. வங்கியர் உரிய முறையில் செலுத்தலை செய்திருந்தால் போதும். **[பிரிவு 126 பத்தி 1].**

(4) சிறப்புக் கோடிடப்பட்ட (கீறலிடப்பட்ட) காசோலை (Cheque crossed specially): இவ்விதக் காசோலைக்கான செலுத்தலை, அக்கோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியருக்கு அல்லது அவரது முகவருக்கு மட்டும் செலுத்தும் வங்கியர் செய்ய வேண்டும். இவ்வாறு செலுத்துவதும், உரிய முறைப்படி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வங்கியர் பொறுப்பிலிருந்து விடுபட முடியும். **[பிரிவு 126 பத்தி 2].**

(5) போலிக் கையொப்பமிடப்பட்ட காசோலை (Cheque containing forged signature): ஒரு காசோலையில் அதனை வரைபவரின் கையொப்பம் போலியாக இடப்பட்டிருப்பின், அக்காசோலை சட்டப்படி செல்லாது. இக்காசோலைக்கு செலுத்தும் வங்கியர் பணம் செலுத்தினால், வாடிக்கையாளருக்கு பொறுப்பாகிவிடுவார். எனவே காசோலையில் உள்ள கையொப்பம் உண்மையானதா என்பதை வங்கியர் அறிந்த பிறகுதான் பணம் செலுத்த வேண்டும். இதற்காக அவ்வாடிக்கையாளர் வங்கியரிடம் ஏற்கனவே கொடுத்துள்ள மாதிரிக் கையொப்பத்துடன், காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒத்திருந்தால், உரிய முறையில் பணம் வழங்க வேண்டும். ஒத்திராவிட்டால், அக்காசோலையை திருப்பிக் கொடுத்துவிட்டு, வாடிக்கையாளருக்கு அது குறித்து உடனடியாக தகவல் தெரிவித்துவிட வேண்டும்.

(6) திருத்தப்பட்ட காசோலை (Altered Cheque): காசோலையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால், அது அக்காசோலையை வரைந்தவரால் மேற் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு கையொப்பமிடப்பட்டிராவிட்டால், அதற்குரிய பணத்தை வழங்க செலுத்தும் வங்கியர் மறுக்க வேண்டும். எனினும் அத்திருத்தம் வங்கியருக்கு வெளிப்படையாகத் தெரியாமலிருந்து, அதற்கு பணம் செலுத்தியிருந்தால், அதற்காக வங்கியரைக் குறை கூற முடியாது. இங்கு வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு உள்ளது.

மேற்கண்டவற்றிலிருந்து சட்டம், வங்கியருக்கு நிபந்தனைகளற்ற பாதுகாப்பு எதையும் வழங்கிவிடவில்லை என்பது புலனாகிறது. உரிய முறைப்படியான செலுத்தலுக்கு மட்டுமே, வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு கிடைக்கிறது.

4. Banker as payer of Domiciled Bills - Writ short notes. (முன்னிடப்பட்ட மாற்றுச் சீட்டுகளுக்கு செலுத்துபவராக வங்கியர் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

'Domicile' என்றால், அதற்கு ஆங்கில அகராதியில் பல பொருள் உள்ளன. குறிப்பாக 'வாழ்விடம்', 'பிறந்த இடம்' ஆகிய பொருள்களைக் கூறலாம். எனினும் வங்கியியலில், மேற்கண்ட பதத்திற்கு 'மாற்றுமுறை ஆவணங்கள் செலுத்தலுக்காக முன்னிடப்பட்ட இடம்' என்ற பொருளே பொருத்தமானதாகும். எடுத்துக்காட்டாக 'Bills Domiciled in India' என்று கூறினால், 'இந்தியாவில் செலுத்தப்படத் தக்க மாற்றுச் சீட்டுகள்' (Bills of Exchange which have to be paid in India) என்று பொருளாகும். எனவே நாம் இங்கு 'Domicile' என்பதை 'முன்னிடப்படும் இடம்' என்று கொள்ளலாம். பொதுவாக ஒரு காசோலை, செலுத்தலுக்காக முன்னிடப்படும் இடம், வங்கியாகும். ஒரு மாற்றுச் சீட்டை செலுத்தலுக்காக வங்கியிடம் முன்னிடலாம் அல்லது அதனை வரைபவர், அச்சீட்டில் குறிப்பிடும் வேறு நபரிடமும் செலுத்தலுக்காக முன்னிடலாம். இந்த வகையில் வங்கியில் முன்னிடப்படும் மாற்றுச் சீட்டிற்கு வங்கியரின் பணம் செலுத்தும் பொறுப்பு எவ்வாறு எழுகிறது என்பது வருமாறு.

1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் **5–வது பிரிவின்படி,** "மாற்றுச் சீட்டு என்பது, ஒரு தீர்மானமான நபருக்கோ அல்லது அவரது ஆணைக்கோ அல்லது அதனைக் கொணர்பவருக்கோ ஒரு தீர்மானமான தொகையை செலுத்த தீர்மானமான ஒரு நபரை கட்டளையிடும் கட்டுவரம்பற்ற ஆணை ஒன்றைத் தாங்கிய, அதனை எழுதித் தருபவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணமாகும்".

மேற்படி சட்டத்தின் **பிரிவு 6–ன்படி,** "காசோலை என்பது உரிமையுடன் கேட்டாலன்றி அதில் எழுதப்பட்ட பணம் செலுத்தப்படாது என எழுதப்பட்டு, குறிப்பிட்ட ஒரு வங்கியின் மீது விடுக்கப்படும் மாற்றுச் சீட்டே (Bill of Exchange) ஆகும்."

இவ்வரையறைகளிலிருந்து காசோலையும், ஒரு வகை மாற்றுச் சீட்டே என்பதை நாம் அறிகிறோம்.

வங்கிக் கணக்கில் போதிய பணமிருக்கும் பட்சத்தில் வாடிக்கையாளர் கொடுக்கும் காசோலைக்கு, வங்கியர் மறுப்பேதும் செல்லாமல் பணம் வழங்க வேண்டும். ஆனால் வாடிக்கையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அவரது வங்கியரால் செலுத்தப்படத்தக்கதாக ஆக்கப்பட்ட ஒரு மாற்றுச் சீட்டில் (Bills accepted by the a customer and made payble by his banker)

வங்கியருக்கு இத்தகு பொறுப்பு எழுவதில்லை. அதாவது தன்னிடம் முன்னிடப்பட்ட உடனேயே வங்கியர் அதற்கு பணம் செலுத்த வேண்டிய கடப்பாடு வங்கியருக்கு இல்லை.

எனவே ஒரு வாடிக்கையாளர், அவர் ஏற்றுக் கொண்ட ஒரு மாற்றுச் சீட்டுக்கு அவரது வங்கியர் பணம் வழங்க, அது குறித்து ஒரு உடன்படிக்கையை அவ்வாடிக்கையாளர் அவரது வங்கியருடன் செய்து கொள்ள வேண்டும். அது வெளிப்படையானதாக அல்லது உட்கிடையானதாக இருக்கலாம். எனினும் ஒரு வங்கியர் இவ்வாறு உடன்படிக்கை ஏதும் செய்து கொள்ளாமல், தனது வாடிக்கையாளர் ஏற்றுக் கொண்ட மாற்றுச் சீட்டுகளுக்கு பணம் வழங்குவதை வழக்கமாகக் கொண்டு, தொடர்ந்து அவ்வாறே செய்து வந்து கொண்டிருந்தால், அதனை திடீரென வங்கியர் நிறுத்தி விடக் கூடாது. அச்சமயத்தில் வங்கியர் தனது வாடிக்கையாளருக்கு பொறுப்பாகிவிடுவார். எனவே மேற்கண்டவாறு பணம் வழங்குவதை வங்கியர் நிறுத்த வேண்டுமெனில், அவர் தனது வாடிக்கை யாளருக்கு அது குறித்து அறிவிப்பு ஒன்றை வழங்க வேண்டும்.

மற்றபடி ஒரு காசோலைக்கு பணம் செலுத்தும் முன்னர் வங்கியர் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவையனைத்தையும் ஒரு மாற்றுச் சீட்டிற்கு பணம் வழங்கும் போதும் வங்கியர் மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக அம்மாற்றுச் சீட்டு முறையான படிவத்தில் உள்ளதா, உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளதா, எந்த தேதியில் பணம் செலுத்தப்பட வேண்டும், அதில் திருத்தங்கள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ஆகியவற்றை வங்கியர் கவனிக்க வேண்டும்.

மேலும் வாடிக்கையாளரின் பணத்தை மாற்றுச் சீட்டின் பேரில் கொடுக்க வங்கியர் அவரிடமிருந்து உரிய முறையில் அதிகாரம் பெற வேண்டும். ஒரு காசோலையைப் பொறுத்த வரை அதனை வரைந்தவரின் (Drawer) கையொப்பம் உண்மையானதா என்பதை வங்கியர் கவனிக்க வேண்டும். ஆனால் ஒரு மாற்றுச் சீட்டிற்கு பணம் வழங்கும் போது, அதனை ஏற்றுக் கொண்டவரின் (அதாவது வாடிக்கையாளரின்) (Acceptor) கையொப்பம் உண்மையானதா என்பதை வங்கியர் கவனிக்க வேண்டும். அது பொய்யாகப் புனையப்பட்ட போலிக் கையொப்பமாக இருக்கும்பட்சத்தில், வங்கியர் அதற்கு பணம் செலுத்தக் கூடாது. மீறி செலுத்தினால், அது உரிய முறையில் செலுத்தப்பட்டதாகாது. எனவே வங்கியருக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 85–வது பிரிவில் கூறப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்பும் கிடைக்காது.

-o0o-

13

வசூலிக்கும் வங்கியர் [Collecting Banker]

ஒரு சிறு அறிமுகம்:

வாடிக்கையாளர்களின் காசோலை, வரைவோலை ஆகியவற்றின் தொகைகளை வசூலித்துக் கொடுக்கும் வங்கியர் 'வசூலிக்கும் வங்கியர்' (Collecting Banker) எனப்படுகிறார். அவரது இரண்டு விதமான செயற்பாடு யாது. அவருக்குள்ள கடமைகளும், பொறுப்புகளும் யாவை, அவருக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்புகள் யாவை என்பனவற்றைக் குறித்து நாம் இந்த அத்தியாயத்தில் காண உள்ளோம்.

1. Collecting Banker- Write short notes. (வசூலிக்கும் வங்கியர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Who is a 'Paying Banker'? Discuss his duties and liabilities to the customers. (வசூலிக்கும் வங்கி என்றால் என்ன? இந்த வங்கி வாடிக்கையாளருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அதன் கடப்பாடுகளை விவாதிக்க.)

(அல்லது)

Explain the duties and liabilities of a collecting banker. (வசூலிக்கும் வங்கியரின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை விளக்கவும்.)

வசூலிக்கும் வங்கியர் [Collecting Banker] - விளக்கம்:

வாடிக்கையாளர்களுக்காக, அவர்கள் முன்னிடும் காசோலை, கேட்பு வரைவோலை (Demand Drafts) ஆகியவற்றைப் பெற்று, அவற்றிற்குரிய தொகையை வசூலித்துக் கொடுப்பது, வங்கியர்களின் முக்கியப் பணிகளில் ஒன்றாக உள்ளது. இவ்வாறு வாடிக்கையாளர்களின் சார்பில் வசூலிப்பதால், அவ்வங்கியரை **'வசூலிக்கும் வங்கியர்' (Collecting Banker)** என்கிறோம்.

வசூலிக்கும் வங்கியரின் கடமைப் பொறுப்புகள் [Duties and Liabilities of a Collecting Banker]:

வாடிக்கையாளர்களுக்காக, அவர்களின் காசோலைகளை வசூல் செய்ய வேண்டுமெனும் சட்டப்படியான கடமைப் பொறுப்பு எதுவும் ஒரு வங்கியருக்கு இல்லை. எனினும் வங்கியர் இப்பணியை மிக முக்கியமானதாகக் கருதுகின்றன. ஏனெனில், கோடிடப்பட்ட (கீறலிடப்பட்ட) காசோலை, வரைவோலை ஆகியவற்றை ஒரு வங்கியர் வழியாகவே பணமாக மாற்ற வேண்டியுள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்கள் காசோலைகளை பணமாக வசூலித்துக் கொடுக்க, வங்கியரின் மேற்படி 'வசூலிக்கும்' சேவையையே பெரிதும் நம்பியுள்ளனர். இப்பணியை, வங்கியர்கள் **'தீர்வகங்கள்' (Clearing Houses)** மூலம் செய்கின்றன. இப்பணியை செய்யும் ஒரு வசூலிக்கும் வங்கியர் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இல்லாதுபோனால், பல பொறுப்புகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் ஆளாக நேரிடும்.

வசூலிக்கும் வங்கியர் வாடிக்கையாளர்களின் காசோலைகளை வசூலிப்பதில் இரு நிலைகளில் செயற்படுகின்றனர். அவை வருமாறு.

I. மதிப்புரிமை பெற்றவராக வசூலிக்கும் வங்கியர் (Collecting Banker as Holder for Value):

சாதாரணமாக ஒரு வாடிக்கையாளர் தமக்கு வரவேண்டிய தொகைகளுக்கு, மற்றவர்களிடம் இருந்து காசோலை பெற்றால் அதனைத் தம் வங்கியரிடம் கொடுத்து வசூல் செய்து தரும்படி கோரலாம். அதிலும் வெளியூரில் உள்ள வங்கியர் மீது எழுதப்பட்ட காசோலைகளாக இருந்தல் (Out station cheques), வாடிக்கையாளர், தானே நேரில் சென்று பணம் பெறுதல். நடைமுறைக்கு ஒத்து வராது; செலவும் அதிகம் ஆகும். எனவே, பல ஊர்களில் உள்ள நபர்களோடு

தொடர்பு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தம்வசம் வரும் காசோலைகளை வசூல் செய்து தரும்படி வங்கியரிடம் சமர்ப்பித்தலென்பது, அனுதினமும் நடைபெற்று வரும் ஒரு இயல்பான நிகழ்வே. இதனால் குறைந்த செலவில் பணத்தையும் வசூலித்து விட முடிகிறது. இவ்வாறு வசூலிக்க அனுப்பப்பட்ட காசோலைகள், வசூலான பின்னரே வாடிக்கையாளரின் கணக்கில் அதற்குரிய தொகை வரவு வைக்கப்படும்.

ஆனால், காசோலைகளை வெளியூர் அனுப்பி வசூலிக்கச் சில தினங்கள் ஆகும். அதற்குள் வாடிக்கையாளர்களுக்கு அவசர பணத் தேவை ஏற்பட்டால், தம்வசம் உள்ள காசோலைகளை வங்கியரிடம் சமர்ப்பித்து, அதற்குரிய தொகையை உடனடியாகப் பெறும் வழக்கம் பரவலாக உள்ளது. வங்கியரும் தமது வாடிக்கை யாளரின் நற்பெயர், அவரோடு உள்ள தொடர்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அக்காசோலைகளுக்குப் பணம் வழங்குவதும் உண்டு. இதனால் வாடிக்கை யாளரின் அவசரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உடனடியாகப் பணம் பெறும் முறைக்கு **"காசோலைக் கழிவு" (அல்லது) "காசோலையைத் தள்ளுபடி செய்து பணம் பெறுதல்" (Discounting of Cheque)** என்று கூறுவர். இங்கு 'கழிவு' அல்லது 'தள்ளுபடி' என்பது ஒரு காசோலையை வசூலிக்க எவ்வளவு நாட்கள் பிடிக்குமோ, அதற்குண்டான வட்டியை வங்கியர் கணக்கிட்டு, அக்கசோலையின் மதிப்பில் கழித்துக் கொண்டு, மீதமுள்ள பணத்தை வாடிக்கை யாளருக்கு அளித்தலே ஆகும். இவ்வாறு வங்கியர் கழித்துக் கொள்ளும் தொகையை வங்கியரின் 'தரகு' (Commission) என்றும் அழைப்பர்.

இவ்வாறு வாடிக்கையாளர் ஒருவர் தம்வசம் உள்ள, தமக்குச் சேர வேண்டிய தொகைக்கான காசோலையைத் தள்ளுபடி செய்து பணம் பெறும் பொழுது, அக்காசோலையின் மீது பணம் பெறும் உரிமை, அதனை வசூலிக்கும் வங்கியருக்குச் சென்றடைகிறது. இங்கு அக்காசோலைக்குப் பணம் தருவதன் மூலம், அதனை வங்கியர் விலைக்கு வாங்கியதாகவே கருதப்படும். எனவே, வங்கியர் அக்காசோலையின் மதிப்பைப் பெற உரிமையுடையவர் ஆகிறார். இவ்வாறு உரிமை பெற்ற வங்கியரைத்தாம், நாம் **'மதிப்புரிமை பெற்றவர்' (Holder for value)** என்கிறோம்.

இவ்வாறு காசோலையைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய வசூலிக்கும் வங்கியர், அதனை வழக்கம் போல் அது வரையப்பட்டுள்ள வங்கியரிடம் முன்னிலைப்படுத்தி, பணம் பெற்று தமக்கு சேரவேண்டிய பணத்தை எடுத்துக் கொள்கிறார். ஒருவேளை, துரதிர்ஷ்டவசமாக, அக்காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டால், அதனை விலைக்கு விற்ற, அதாவது தள்ளுபடி செய்த தொகை பெற்ற வாடிக்கையாளர், உடனடியாக அதற்குரிய பணத்தை வங்கியரிடம் செலுத்தி விட வேண்டும்.

இவ்வாறு காசோலையின் மதிப்பிற்கு உரியவராக அதாவது மதிப்புரிமை பெற்றவராக, வங்கியர் அக்காசோலையை வசூலிக்கும் போது அவருக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின்படி பாதுகாப்பு கிடையாது. எனினும், வங்கியர் 'முறைப்படி பெற்றவர்' (Holdor in duo course) ஆகிறார். எனவே, அக்காசோலை மீது சட்டப்பூர்வமான முழு உரிமைமூலமும் (Complete title) அவருக்கு உண்டு. தம்மிடம் அக்காசோலையைச் செலுத்தியவரது உரிமை மூலம் குறைபாடுடையதாக இருந்தாலும், வங்கியர் முழு உரிமை பெற்றுள்ளார். எனவே, அக்காசோலைக்குப் பணம் மறுக்கப்படுமானால், அக்காசோலையைத் தமக்கு கடைசியாகப் புறக்குறிப்பு செய்து கொடுத்தவராகிய (last endorsee) தமது வாடிக்கையாளரிடமிருந்து உடனடியாகப் பணத்தைத் திருப்பி பெற இயலும்.

II. முகவராக வசூலிக்கும் வங்கியர் (Collecting Banker as Agent):

வசூலிக்கும் வங்கியர், காசோலைக்கான பணத்தை வசூலித்து, அதற்குப் பிறகு வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கும் போது, வாடிக்கையாளரின் முகவர் எனும் நிலையில் செயலாற்றுகிறார். இவ்வாறு வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னரே, அப்பணத்தை எடுக்க வாடிக்கையாளர் உரிமை பெறுகிறார்.

வசூலிக்கும் வங்கியர் இவ்வாறு முகவராகச் செயற்படும் போது, (1) வங்கியருக்கு அக்காசோலையின் மீது எவ்வித உரிமையும் கிடையாது;

(2) காசோலையை வசூலித்து வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைத்தற்காக வங்கியர் 'வசூல் கட்டணம்' (collection charges) பெற மட்டுமே உரிமை உடையவர்;

(3) ஒருவேளை அக்காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்டால், அதனை மீண்டும் வாடிக்கையாளரிடமே கொடுத்துவிட வேண்டும். வேறு நடவடிக்கை ஏதும் எடுக்க வங்கியருக்கு உரிமை இல்லை.

வசூலுக்காக முன்னிட்ட ஒரு காசோலையின் மீது வாடிக்கையாளருக்கு எவ்வித உரிமை மூலம் உள்ளதோ, அதை விட சிறந்த உரிமை மூலம் வசூலிக்கும் வங்கியருக்கு இல்லை. வாடிக்கையாளருக்கு அக்காசோலையின் மீது எவ்வித உரிமை மூலமும் இல்லையென்றால், அதை வசூலிக்கும் வங்கியருக்கும் இல்லை.

எனவே பிறருக்குச் சொந்தமான கோடிட்ட (கீறலிட்ட) காசோலை ஒன்றை வாடிக்கையாளர் ஒருவர் தனது வங்கிக் கணக்கின் மூலம் வசூலுக்கு அனுப்பினால், அதை வசூலித்துக் கொடுக்கும் வங்கியர் 'கையாடல்' (conversion) எனும் தீங்கிற்கு ஆளாக நேரிடும் அபாயம் உண்டு. எனவே வங்கியர் கவனமுடன் செயற்பட வேண்டும்.

வசூலிக்கும் வங்கியரின் வேறு முக்கிய கடமைப் பொறுப்புகள்:

(1) தாமதமின்றி வசூலிக்க அனுப்புதல்: தம்மிடம் வாடிக்கையாளரால் வசூலிக்க ஒப்படைக்கப்பட்ட காசோலைகளை அதிக கால தாமதம் ஏதுமின்றி நியாயமான காலத்திற்குள் வசூலிக்க அனுப்பிவிட வேண்டும். பொதுவாக வசூலிக்கும் வங்கியர், தான் பெற்ற காசோலையை அதே நாளில் அல்லது அடுத்த நாளில் வசூலிக்க அனுப்பிவிட வேண்டும். வசூலிக்கும் வங்கியரும், செலுத்தும் வங்கியரும் ஒரே நகரத்தில் இருப்பின், அக்காசோலையை பெற்ற அதே நாளன்று அதை வசூலுக்கு அனுப்ப முடியாது போனால், வசூலிக்கும் வங்கியர் அதில், "இன்றையத் தீர்வுக்கு அதிகக் காலந் தாழ்வு" ("Too late for to-day's clearing) எனும் முத்திரையை இட வேண்டும். அதுபோல் வசூலிக்கும் வங்கியரும், செலுத்தும் வங்கியரும் வெவ்வேறு நகரங்களில் இருப்பின், அந்தக் காசோலையை அதே நாளில் அல்லது அதற்கு அடுத்த நாளில் வசூலுக்காக அஞ்சலில் அனுப்பி விடுதல் வேண்டும். பொதுவாக, வசூலிப்பதற்காக வாடிக்கையாளர் காசோலையை ஒப்படைத்த நாள் அல்லது அதிகபட்சம் அதற்கு அடுத்த நாள் ஆகிய இந்த இரண்டு நாட்களுக்குள் காசோலையை வசூலுக்கு அனுப்பிவிட வேண்டும். இதுவே வசூலுக்கு அனுப்புவதற்குண்டான நியாயமான காலம் எனப்படுகிறது.

பண வசூலுக்காக காசோலையைப் பெற்ற வங்கியர், அதனை நியாயமான காலத்திற்குள் வசூலுக்கு அனுப்பவில்லையென்றாலும், இதற்கிடையில் செலுத்தும் வங்கியர் நொடிப்பு நிலை எய்திவிட்டாலும், வாடிக்கையாளருக்கு ஏற்படும் இழப்பிற்கு வசூலிக்கும் வங்கியர் பொறுப்பாவார். இதனால் வாடிக்கையாளருக்கு அவ்வங்கியர் இழப்பீடு தர வேண்டி வரும்.

(2) காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பு: வசூலுக்கு அனுப்பப்பட்ட காசோலைக்கான மதிப்பு, செலுத்தும் வங்கியரால் மறுக்கப்பட்டு விட்டால், அத்தகவல் கிடைத்தவுடன் வசூலிக்கும் வங்கியர், தனது வாடிக்கையாளருக்கு மதிப்பு மறுப்பு அறிவிப்பு அனுப்புதல் (Notice of Dishonour) வேண்டும். இந்த அறிவிப்பு தாமதமில்லாமல் செய்யப்பட வேண்டும். இந்த அறிவிப்பை நேர்முகமாக அல்லது அஞ்சல் வாயிலாக தனது வாடிக்கையாளருக்கு வசூலிக்கும் வங்கியர் அனுப்பலாம்.

எனினும் நடைமுறையில் ஒரு வசூலிக்கும் வங்கியர் மேற்படி மதிப்பு மறுப்பு தகவலை அறிவிப்பின் வடிவத்தில் வாடிக்கை யாளருக்கு தருவதில்லை. இதற்குப் பதிலாக, திருப்பி அனுப்பப்பட்ட காசோலையையும், மதிப்பு மறுக்கப்பட்டதற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ள சீட்டையும் (Return Memo) வசூலிக்கும் வங்கியர் தனது வாடிக்கையாளரிடம் நேர்முகமாக கொடுக்கிறார்.

2. Conversion by Collecting Banker - Write short notes. (வசூலிக்கும் வங்கியரின் கையாடல் – சிறு குறிப்பு வரைக)

கையாடல் என்பது, "தனக்கு உரிமையில்லாத பொருட்களை அவற்றுக்கு உரியவரது உரிமைகளுக்கு முரணாகச் சட்டவிரோதமாக எடுத்துக் கொள்ளுதல், பயன்படுத்துதல், முடிவுறுத்தல் அல்லது அழித்தல்" என்று பொருளாகும்.

பிறருக்குச் சொந்தமான கோடிட்ட (கீறலிட்ட) காசோலை ஒன்றை வாடிக்கையாளர் ஒருவர் தனது வங்கிக் கணக்கின் மூலம் வசூலுக்கு அனுப்பினால், அதை வசூலித்துக் கொடுக்கும் வங்கியர் 'கையாடல்' (conversion) எனும் தீங்கிற்கு ஆளாக நேரிடலாம். அதாவது வாடிக்கையாளர் தனக்கு உரிமையில்லாத காசோலையை மோசடியாக புறக்குறிப்பு செய்தன் மூலம் (போலிக் கையொப்பமிட்டு), அதை தன் பெயருக்கு மாற்றிக் கொண்டு, தனது வங்கிக் கணக்கின் வாயிலாக வசூலித்துக் கொடுக்கும்படி தனது வங்கியரைக் கோரலாம். இதை வசூலித்துக் கொடுத்தால், வசூலிக்கும் வங்கியர் 'கையாடல்' அல்லது 'தவறான மாற்றம்' (wrongful conversion) செய்த தீங்கிற்கு ஆளாவார். இதனால் அக்காசோலையின் உண்மையான உரிமையாளருக்கு, அதாவது அதை வரைந்தவருக்கு பணம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

வசூலிக்கும் வங்கியரின் மேற்படி இடர்பாட்டை களைவதற்காக 1881–ஆம் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் அவருக்கு சில பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடுத்த வினாவின் விடையில் காண்போம்.

3. Explain the nature of statutory protection given to the collecting banker. (பணம் வசூலிக்கும் வங்கியருக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்படியான பாதுகாப்பின் தன்மையைப் பற்றி விளக்குக.)

வசூலிக்கும் வங்கியரின் சட்டப்படியான பாதுகாப்பு:

1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் **131–வது பிரிவு,** வசூலிக்கும் வங்கியருக்கான சட்டப்படியான பாதுகாப்பைப் பற்றிக் கூறுகிறது. எனினும் இப்பாதுகாப்பு முழுமையானதல்ல. அதில் கூறப்பட்டிருக்கும் நான்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். அந்நிபந்தனைகளை ஒரு வசூலிக்கும் வங்கியர் பின்பற்றி பணம் வசூலித்திருந்தால், அவருக்கு சட்டம் பாதுகாப்பளிக்கிறது.

(1) கோடிடப்பட்ட (கீறலிடப்பட்ட) காசோலைக்கு மட்டுமே பணம் வசூலித்தல் (Collection in respect of crossed cheque only): வசூலிக்கும் வங்கியர் கோடிடப்பட்ட காசோலைக்கு மட்டுமே பணம் வசூலித்திருக்க வேண்டும். கோடிடப்படாத காசோலைகளுக்குப் பணம் வசூலித்தால் அவருக்கு மேற்படி

பிரிவின் கீழ் பாதுகாப்பு கிடைக்காது. ஏனெனில், கோடிடப்படாத காசோலைகளை வங்கிபர் மூலம் வசூலிக்கத் தேவையில்லை. நேரடியாகவே செலுத்தும் வங்கியரிடம் சமர்ப்பித்து பணம் பெற இயலும். மேலும், அக்காசோலை வசூலிக்கும் வங்கியரின் கைகளில் கைகளில் கிடைக்கும் முன்பு அதன் மீது கோடிடப்பட்டிருக்க வேண்டும். வசூலிக்கும் வங்கியர், தானே அதன் மீது கோடிடக் கூடாது. அவ்வாறு கோடிட்டால், வசூலிக்கும் வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு கிடைக்காது. எனினும், வசூலிக்கும் வங்கியரே கோடிட்டார் என்று மெய்ப்பிப்பது சற்று கடினமே.

(2) வாடிக்கையாளருக்காக வசூலித்தல்: கோடிடப்பட்ட காசோலையை ஒரு வாடிக்கையாளருக்காக மட்டுமே வசூலிக்க பெற்றிருக்க வேண்டும். வாடிக்கையாளரல்லாதவருக்காக பெற்றிருந்தால், வசூலிக்கும் வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு இல்லை. இதனால்தான், கோடிடப்பட்ட காசோலையை ஒரு வங்கிக் கணக்கைத் துவக்கி அதன் மூலமே வசூலுக்கு போடும்படி, வாடிக்கையாளரை வங்கியர் வற்புறுத்துகின்றனர்.

(3) முகவராக வசூலித்தல் வேண்டும் : வாடிக்கையாளரின் முகவராக காசோலையை வசூலித்தால் மட்டுமே, வசூலிக்கும் வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு கிடைக்கும். அக்காசோலையின் மதிப்புரிமையைப் பெற்ற (Holder for value) ஒரு நபருக்காக அல்லது அவ்வங்கியரே மதிப்புரிமை பெற்றவராக அக்காசோலையை வசூலித்திருந்தால், அவ்வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு கிடைக்காது.

(4) நல்லெண்ணத்துடனும் கவனக்குறைவின்றியும் வசூலித்திருக்க வேண்டும்: வாடிக்கையாளருக்காக ஒரு காசோலையை வசூலித்துக் கொடுக்கும் பொழுது, வசூலிக்கும் வங்கியர் நல்லெண்ணத்துடனும் (அதாவது நேர்மையாக) (in good faith), கவனக்குறைவு ஏதுமின்றியும் (without negligence) அதனை வசூலித்திருக்க வேண்டும். இவ்வாறு இல்லாவிட்டால், வசூலிக்கும் வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு கிடைக்காது.

மேலும் ஒரு வசூலிக்கும் வங்கியர் மேற்படி பிரிவு 131–ன் கீழ் சட்டப் பாதுகாப்பைப் பெற, பின்வரும் மூன்று கூறுகளில் தனது பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறாரா என்பதையும் கவனித்தல் வேண்டும். அவை

(1) முறையான விசாரணை மற்றும் உரிய அறிமுகத்திற்குப் பின்னர், வாடிக்கையாளரை கணக்குத் துவங்க வசூலிக்கும் வங்கியர் அனுமதித்திருக்க வேண்டும்; (2) வாடிக்கையாளர் அய்யத்திற்கு இடமளிக்கும் வகையில் அல்லது வழக்கத்திற்கு மாறாக தனது கணக்கை இயக்கி வருகிறாரா என்பதை வசூலிக்கும் வங்கியர் கண்காணித்திருக்க வேண்டும்; (3) பணம் வசூலிப்பதற்கு வகை செய்யும் புறக்குறிப்புகளில் அய்யத்திற்கு இடமளிக்கும் கூறுகள் ஏதேனும்

உள்ளதா என்பதை வசூலிக்கும் வங்கியர் கவனித்திருக்க வேண்டும். மேற்கூறப்பட்டவை ஒரு காசோலைக்கு மட்டும் என்றல்லாது, ஒரு வரைவோலைக்கும் (Draft) பொருந்தும்.

வசூலிக்கும் வங்கியரின் கவனக்குறைவு [Negligence of a Collecting Banker]:

பொதுவாக கவனம் செலுத்தப்பட வேண்டிய கடமை உள்ள பொழுதே, கவனக்குறைவு எனும் நிலைப்பாடும் எழுகிறது. பிரிவு 131–ன் கீழ் சட்டப் பாதுகாப்பைப் பெற, ஒரு வசூலிக்கும் வங்கியர் கவனக்குறைவு ஏதுமின்றி வாடிக்கையாளரின் காசோலையை வசூலித்திருக்க வேண்டும் என்ற நாம் முன்னரே கண்டோம். எனவே ஒரு வசூலிக்கும் வங்கியர் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. எனவே அவர் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்காமல் காசோலைகளை வசூலித்துக் கொடுத்தால், கவனக்குறைவுடன் செயல்பட்டிருப்பதாகப் பொருளாகும். அது காசோலையைப் பெறும் போது மட்டுமன்றி, நாம் முன்கண்டவாறு வாடிக்கையாளரின் பெயரில் ஒரு கணக்கைத் துவக்கும் பொழுது கூட இருக்கலாம். பொதுவாக எந்தெந்த சூழ்நிலைகளில் ஒரு வசூலிக்கும் வங்கியர் கவனக்குறைவுடன் நடந்து கொள்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இதோ,–

(1) ஆணைக் காசோலை (Order cheque) ஒன்றை அதன் புறக் குறிப்புகளைச் (மேலெழுத்துக்களைச்) சரிபார்க்காமல் வசூலித்தல்;

(2) ஆணைக் காசோலை ஒன்றின் புறக்குறிப்பு வங்கியருக்கு சந்தேகத்தை எழுப்பியிருந்தும், அதனை விசாரணை செய்யாமல் வசூலித்தல்;

(3) செலுத்தப் பெறுபவர் கணக்குக்கு செலுத்த கோடிடப்பட்ட காசோலையை, செலுத்தப் பெறுபரல்லாத ஒரு நபருடைய கணக்கில் வசூலித்தல்;

(4) ஒரு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய காசோலையை, அந்நிறுவனத்தின் இயக்குநரின் சொந்தக் கணக்கிற்கு வசூலித்தல்;

(5) ஒரு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய காசோலையை, வேறு நிறுவனத்தின் பெயரில் உள்ள கணக்கில் வசூலித்தல்;

(6) ஒரு பொறுப்பாண்மைக்கு செலுத்தப்பட வேண்டிய காசோலையை, பொறுப்பாண்மையரின் சொந்தக் கணக்கில் வசூலித்தல்;

(7) ஒரு பொது அலுவலருக்குச் செலுத்தப்பட வேண்டிய காசோலையை, அவரது சொந்தக் கணக்கில் வசூலித்தல்;

(8) ஒரு நிறுமத்திற்கு செலுத்தப்பட வேண்டிய காசோலையை, அதன் கூட்டாளியின் சொந்தக் கணக்கில் வசூலித்தல்;

(9) ஒரு தொழிலதிபரின் கணக்கில் செலுத்தப்பட வேண்டிய காசோலையை, அவரது பணியாளரின் அல்லது அவரது மனைவியின் கணக்கில் வசூலித்தல்;

(10) போதுமான இருப்பு எப்போதும் வைக்கப்படாத கணக்கில் ஒரு மிகப் பெரிய தொகையை வசூலித்தல்;

பொதுவாக, வசூலிக்கும் வங்கியர், மூன்றாம் தரப்பினரின் காசோலையை தனது வாடிக்கையாளரின் கணக்கில் வசூலிக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இவ்வாறு இல்லாதபொழுது, அவர் தனது பணியை சட்டப்படி ஆற்றியுள்ளார் என்று கூற முடியாது. இதன் விளைவாக அவருக்கும் பிரிவு 131–ன் கீழான சட்டப் பாதுகாப்பும் கிடைக்காது.

-oOo-

14

வங்கியரால் வழங்கப்படும் கடன்கள், முன்பணங்கள் மற்றும் வங்கியர் செய்யும் முதலீடுகள் தொடர்பான சட்டங்கள் [Laws relating to Loans, Advances and Investments by Banks]

ஒரு சிறு அறிமுகம்:

வாடிக்கையாளர்களிடமிருந்து குறைந்த வட்டியில் வைப்பீடுகளைப் பெற்று, அதனை சற்று அதிக வட்டிக்கு மற்றவர்களுக்கு கடன் கொடுத்து இலாபமீட்டுதலே, வங்கியரின் அடிப்படைப் பணி என்று நாம் கண்டோம். இத்தோடு மட்டுமல்லாமல், வங்கியர் வேறு சில துணைப் பணிகளையும் மேற்கொள்கின்றன. கடன் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அதனை வசூலிக்கும் திறன்களும் வங்கியருக்கு இருத்தல் வேண்டும். மேலும் சில சமயங்களில் வங்கி ஊழியர்கள் செய்யும் மோசடிகளுக்கு யார் பொறுப்பு? இவற்றிற்கெல்லாம் உண்டான விளக்கத்தை நாம் தொடர்புடைய சட்டங்களுடன் இங்கு காண உள்ளோம்.

1. What are the precautions to be taken by banker while lending money? Explain. (கடன் கொடுக்கும் பொழுது வங்கியர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை? விளக்குக.)

(அல்லது)

What the general principles of lending by bank? (வங்கி கடன் கொடுத்தலுக்குண்டான பொதுக் கோட்பாடுகள் யாவை?)

முன்னுரை:

வாடிக்கையாளருக்கு கடன் வழங்குவதற்கு முன், வங்கியர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனை வங்கியர் வழங்கும் கடன்களுக்கான பொதுக் கோட்பாடுகள் என்றும் கூறலாம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (அல்லது) பொதுக் கோட்பாடுகள்:

(1) பாதுகாப்பு (Safety): வங்கியர் கடனாக வழங்கும் பணம், பொது மக்களுடையது. அவர்கள் செய்யும் வைப்பீட்டுத் தொகைகளிலிருந்தே, பணம் கடன் வழங்குகின்றனர். எனவே, கடனாக வழங்கப்பட்ட தொகையை நிச்சயமாகத் திரும்ப வசூலித்து விடலாம் என்ற நம்பிக்கை உள்ள நாணயமான நபர்களுக்கே வங்கியர் கடன் வழங்க வேண்டும். சுருங்கக் கூறின் கடனாகக் கொடுக்கப்படும் பணத்தின் பாதுகாப்பு, அதனைப் பெறும் வாடிக்கையாளரின் நாணயத்தைப் பொறுத்து அமைகிறது.

(2) நீர்மத்தன்மை (அல்லது) ரொக்கமாகும் தன்மை (Liquidity) : வங்கியரின் இருப்பில் உள்ள தொகையின் பெரும்பகுதி, வாடிக்கையாளர் செய்த வைப்பீட்டுத் தொகைகளே ஆகும். வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் நேரத்தில் எந்தவித முன்னறிவிப்புமின்றி வங்கியரிடம் தமது பணத்தைத் திரும்பக் கேட்க இயலும். எனவே, வங்கியர் தமக்குப் பணம் தேவைப்படும் பொழுது, எளிதில் திரும்பப் பெறக்கூடிய வகையிலேயே கடனையும் வழங்க வேண்டும். கொடுத்த கடன் எளிதில் மீண்டும் ரொக்கமாகக் திரும்பி வர வேண்டும். இதற்காகத்தான் வங்கியர், குறுகிய காலக் கடன்கள் அளிப்பதையே பெரிதும் விரும்புகின்றனர்.

(3) கடன் பெறுவதன் நோக்கம் (Purpose of the Loan): ஒருவருக்கு கடன் அல்லது முன்பணம் வழங்கும் முன்பு, அவர் எந்நோக்கத்திற்காக அவற்றை வாங்குகிறார் என்பதை வங்கியர் கண்டறிய வேண்டும். அதிர்ஷ்டத்தை நம்பிச் செய்யப்படும் வணிகம் (Speculative Business) அல்லது உற்பத்தி அல்லாத நோக்கங்களுக்குண்டான (Unproductive Purpose) கடன் விண்ணப்பங்களை நிராகரித்து விட வேண்டும். கொடுக்கப்பட்ட கடன் அல்லது முன்பணம், கடன் வாங்கும் பொழுது விளம்பப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் வங்கியர் அவ்வப்போது உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எந்நோக்கங்களுக்காக முன்பணம் தரலாம், எந்நோக்கங்களுக்காக முன்பணம் தரக் கூடாது என்று வங்கியர்களைக் கட்டுப்படுத்த 1949–ஆம் ஆண்டின் வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 21–வது பிரிவு, இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே இந்திய ரிசர்வ் வங்கி கூறும் நோக்கங்களுக்கு மட்டுமே முன்பணம் வழங்க வேண்டும்.

(4) இலாப நோக்கம் (Profitability) : வணிக வங்கிகளும் வியாபார நிறுவனங்களே. அவைகளும் இலாப நோக்கத்துடனேயே செயல்படுகின்றன. வங்கியர் தம்மிடம் கடன் பெற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறும் வட்டியிலிருந்துதான், தம்மிடம் பணம் வைப்பீடு செய்துள்ளவர்களுக்கும் வட்டி வழங்குகிறது. மேலும் அதிலிருந்துதான் தங்கள் அலுவலக மற்றும் நடைமுறைச் செலவுகளைச் சமாளிக்க வேண்டும். இதுபோக வங்கியின் பங்குதாரர்களுக்கு நியாயமான பங்காதாயம் வழங்கவும் வேண்டும். எனவே, நியாயமான மற்றும் நிலையான இலாபம் கிடைக்கக்கூடிய துறைகளுக்கே வங்கியர் கடன் வழங்க வேண்டும்.

(5) காப்புறுதி அல்லது பிணையம் (Security): வங்கியர் பொதுவாகத் தகுந்த பிணையம் அல்லது காப்புறுதி பெற்ற பிறகே வாடிக்கையாளருக்குக் கடன் வழங்க வேண்டும். இதனால் வாடிக்கையாளர் நாணயமானவராக இருப்பினும், தவிர்க்க இயலாத காரணங்களால் பணத்தைத் திருப்பிச் செலுத்த இயலாமற் போனால் பிணையப் பொருள்களை விற்றோ அல்லது அவற்றின் வருமானத் திலிருந்தோ தம்முடைய அசல், வட்டித் தொகைகளை திரும்பப் பெற வாய்ப்பு உண்டு. எனவே வங்கியர் பிணையமாகப் பெறுகின்ற பொருள்கள் எளிதாகவும், நட்டமில்லாமலும் விற்பனை செய்யக் கூடியதாக உள்ளனவா என்பதைக் கண்டறிதல் வேண்டும். மேலும், பிணையங்களை ஏற்றுக் கொள்ளும் பொழுது, அவை கடன் வட்டித் தொகைகளை ஈடுகட்டப் போதுமானவையா என்பதனையும் ஆராய வேண்டும். அவற்றின் மீது வில்லங்கங்கள் (Encumbrances) எதுவும் இருத்தல் கூடாது.

(6) திருப்பிச் செலுத்தும் வழிகள் (Sources of Repayment): கடன் பெறுபவர் எந்த வழியிலிருந்து வருமானம் அடைந்து, அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதாகக் கூறுகிறார் என்பதை வங்கியர் கவனிக்க வேண்டும். கடன் பெறுவரின் வருமானம் பெறும் வழிகள் நிலையானதாகவும், இலாபகரமான தாகவும், சிக்கல் இல்லாததாகவும் இருத்தல் வேண்டும்.

(7) பரவலாகக் கடன் வழங்குதல் (அல்லது) இடர்களைப் பரவலாக்கிக் கொள்ளல் (Diversification of Risks): வங்கியர் கடன் வழங்கும் பொழுது ஒரே வகையான தொழில்களுக்கு, கடன் வழங்காமல் பல்வேறு வகையான

தொழில்களுக்கும் கடன் வழங்க வேண்டும். இதுபோல் சில குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே கடன் வழங்குவதைத் தவிர்த்து, பரவலாகப் பலருக்கும் பணம் வழங்க வேண்டும். ஒரே வகையான பொருள்களை அல்லது சொத்துக்களைப் பிணையமாகப் பெறாமல் பலதரப்பட்ட சொத்துக்களையும் பிணையமாகப் பெறுதல் வேண்டும். இதனால் வங்கியர் எதிர்நோக்கும் அபாயங்கள் அல்லது இடர்கள் (Risks) பரவலாக்கப்படும்; பாதுகாப்பும் அதிகமாகும்.

(8) தேச நலனும், உற்பத்தித் திறனும் (National Interest and Productivity): வணிக வங்கிகள் கடன் வழங்கும்போது தேச நலனைக் கருத்திற்கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் கடன் வழங்க வேண்டும். நமது நாட்டில் வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டதன் நோக்கம், அவற்றை ஏழை மக்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் பயன்படும் வகையில் இயங்கச் செய்தலே ஆகும். மேலும், உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய இயலாத எந்தக் காரணத்துக்கும் கடன் வழங்கக் கூடாது என்பதும் இன்றைய வங்கிகளின் அடிப்படைக் கொள்கையாக மாறிவிட்டது.

2. Explain the various forms of loans and advances. (கடன் மற்றும் முன்பணங்களின் பல்வேறு வடிவங்கள் யாவை?)

முன்னுரை:

பொதுவாக மூன்று வடிவங்களில், வங்கியர் கடன்கள் மற்றும் முன் பணங்களை அளிக்கின்றனர். அவை வருமாறு.

கடன் மற்றும் முன்பணங்களின் மூன்று படிவங்கள்:

(1) அதிகப்பற்று (Overdraft): அதிகப்பற்று வசதி நடப்புக் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். இவ்வசதியைப் பெற்ற வாடிக்கையாளர் தமது நடப்புக் கணக்கிலுள்ள வரவு இருப்பைவிட, அதிகமான தொகையை அதிகப்பற்றாகப் பெறலாம். எனினும் இவ்வாறு அதிகப்பற்று பெறும் தொகை வங்கியருக்கும்–வாடிக்கையாளருக்கும் ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டது. இதனால் வாடிக்கை யாளருக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டால், தமது கணக்கில் வரவு இருப்பு இல்லாவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட தொகை வரையில் காசோலை விடுத்துப் பணம் பெறலாம். இது ஒரு தற்காலிகக் கடனே ஆகும். இக்கடனை வாடிக்கையாளர் ஒரு வாரம் அல்லது 15 நாட்களுக்குள் திருப்பிக் கட்டி தமது கணக்கை நேர் செய்து விட வேண்டும். வாடிக்கையாளர் எவ்வளவு தொகை அதிகப்பற்றாகக் கடன் பெற்று இருக்கின்றாரோ அத்தொகைக்கு மட்டுமே வட்டி செலுத்தினால் போதும்.

(2) ரொக்கக் கடன் (Cash Credit) : நடைமுறையில் ரொக்கக் கடனுக்கும் அதிகப்பற்றுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. எனினும், இவ்விரு வகைக் கடன்களும் சட்டரீதியாக மாறுபட்டவை ஆகும். அவை வருமாறு.

(i) ரொக்கக் கடன் என்பது ஒரு தனிவகைக் கடன் ஆகும். அதிப்பற்று போல நடப்புக் கணக்கில் வழங்கப்படுவது அல்ல.

(ii) ரொக்கக் கடன் தொடங்க, கடன் பெறும் வாடிக்கையாளர் நடப்புக் கணக்கைப் போன்று முன்தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், நடப்புக் கணக்கைப் போல ரொக்கக் கடன் கணக்கிலிருந்தும், வாடிக்கையாளர் மற்றவர்களுக்கு காசோலை வழங்கலாம்.

(iii) ரொக்கக் கடன், வாடிக்கையாளர் பெறும் ஒரு நிரந்தரக் கடன் வசதி (permanent facility) ஆகும். பெரும்பாலும் வருடத்துக்கு ஒருமுறை அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை, இக்கணக்கில் பற்று உள்ள தொகை முழுவதையும் வட்டியுடன் செலுத்திக் கணக்கை நேர் செய்ய வேண்டும். ஆனால் அதிகப்பற்று தற்காலிகக் கடன் ஆகும். 15 நாட்களுக்குள் பணம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் இது கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. சில வங்கிகள் வாடிக்கையாளருக்கு நிரந்தரமான அதிகப்பற்று வசதிகளை வழங்கி வருகின்றன.

(iv) ரொக்கக் கடன் பெரும்பாலும் வணிகர்களுக்கே வழங்கப்படுகிறது. அசையாச் சொத்துக்கள் அல்லது சரக்கு இருப்பு ஆகியவற்றைப் பிணையமாகப் பெற்று இக்கடன் வழங்கப்படுகின்றது. நடப்புக் கணக்கில் வழங்கப்படும் அதிகப் பற்று பெரும்பாலும் சொந்தப் பிணையத்தின் (Personal Security) பேரிலேயே வழங்கப்படுகிறது.

(3) கடன் கணக்குகள் (Loan Accounts): வங்கியர் ஒரு குறிப்பிட்ட தொகையை வாடிக்கையாளருக்கு மொத்தமாக ஒரே தடவையில் தருவது கடன் கணக்காகும். இக்கடன் தொகை முழுவதற்கும் வாடிக்கையாளர் வட்டி செலுத்த வேண்டும். இக்கடனை ஒரே தவணையிலோ அல்லது பல தவணைகளிலோ வாடிக்கையாளர் அடைத்து விடலாம். நடப்புக் கணக்கு அல்லது ரொக்கக் கடன் கணக்குகளைப் போல அன்றாடம் வாடிக்கையாளர் இக்கணக்கைக் கையாள இயலாது. எனவே, இக்கணக்கில் உள்ள தொகையை காசோலை விடுத்துப் பெற இயலாது. மற்ற இருவகைக் கடன்களைவிட, வங்கியருக்கு இவ்வகைக் கடன் இலாபகரமானது ஆகும். மற்ற கணக்குகளில் வாடிக்கையாளருக்கு எவ்வளவு தொகை கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளதோ அத்தொகையை வங்கியர் எப்பொழுதும் தம் வசம் வைத்திருக்க வேண்டும். வாடிக்கையாளர் அத்தொகையை முழுவதுமாகப் பயன்படுத்தாமல் இருந்தால் அதனால் ஏற்படும் வட்டி நட்டமும் வங்கியரையே சாரும். ஆனால் கடன் கணக்கில் முழுத் தொகையும் உடனடியாக

வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு விடுவதால் வங்கியருக்கு வட்டி நட்டம் ஏதும் ஏற்படுவதில்லை.

3. Types of Loan Accounts - Write short notes. (கடன் கணக்கின் வகைகள் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நாம் சென்ற வினாவின் விடையில், மூவகைக் கடன் வடிவங்களைக் கண்டோம். அதில் மூன்றாவது வடிவம், கடன் கணக்காகும். இது பின்வரும் மூன்று வகைகளாக மேலும் பிரிகிறது. அவை,–

மூவகை கடன் கணக்குகள்:

(1) குறிப்பிட்ட காலக்கடன்கள் (Term Loans): இக்கடன்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுபவை ஆகும். ஓராண்டுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் குறுகிய காலக்கடன் (Short-term Loan) எனப்படும். அய்ந்து முதல் ஏழாண்டு காலத்திற்குள் கட்டப்பட வேண்டியவை மத்திம காலக் கடன் (Medium-term Loan) எனப்படும். ஏழாண்டுக்கும் அதிகமானவை, நீண்டகாலக் கடனாகும் (Long-term Loan). இக்கடன் பெரும்பாலும் தொழில் நிறுவனங்களின் நிலையான மூலதனத் தேவைகளை (fixed capital requirements) ஈடுகட்ட அளிக்கப்படுகிறது.

(2) பங்குபெறும் கடன்கள் (Participation Loans): ஒன்றுக்கு மேற்பட்ட நிதி நிறுவனங்கள் சேர்ந்து வழங்கும் கடன், பங்கு பெறும் கடன் எனப் படும். இக்கடன் ஒரே கடன் ஆயினும், பல நிறுவனங்களும் இக்கடன் வழங்குவதில் பங்கு பெறுவதால் 'பங்கு பெறும் கடன்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வகைக் கடன்கள் அமெரிக்காவில் மிகவும் பிரசித்தி பெற்றவை ஆகும். நம்நாட்டில் இவ்வகைக் கடன்கள் முக்கியத்துவம் பெறவில்லை.

(3) தனிநபர் கடன்கள் (Personal Loans) : தற்கால வங்கியியலில், தனிநபர் கடன்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. தொழில் வணிகக் கடன்கள் போலல்லாது, நிரந்தர வருவாய் உள்ள அலுவலர்கள், வருமான வரி செலுத்தும் தனி நபர்கள் போன்ற வாடிக்கையாளர்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இக்கடன் வழங்கப்படுகிறது. இரு சக்கர வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற நவீனப் பொருள்களை வாங்குவதற்கு வங்கியர் கடன் வழங்குகின்றனர். இவைகள் பிணையமில்லாமல் சொந்தக் காப்புறுதியின் பேரில் வழங்கப்படுகின்றன. இக்கடனை குறிப்பிட்ட தவணைகளில் வாடிக்கையாளர் திருப்பிச் செலுத்த வேண்டும்.

4. Discuss the two kinds of loans and advances by Bank. (வங்கியர் வழங்கும் கடன் மற்றும் முன்பணங்களின் இரு வகைகளை விவாதி.)

முன்னுரை:

வங்கியர் வழங்கும் பல்வேறு கடன்களும் முன்பணங்களும் பின்வரும் இரு பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,–

கடன் மற்றும் முன்பணங்களின் இரு பெரும் வகைகள்:

1. காப்புறுதியில்லாக் கடன்கள் அல்லது பிணையம் பெறாக் கடன்கள் (Uusecured loan or advances): காப்புறுதி அல்லது பிணையம் ஏதும் பெறாமல், கடன் வாங்குபவரின் நாணயத்தின் மீது நம்பிக்கை (Credit) வைத்தே இக்கடன் வழங்கப்படுகிறது. 'Credit' எனும் சொல் 'Credere' எனும் இலத்தீன் சொல்லின் அடிப்படையில் பிறந்தது ஆகும். இதற்குப் பொருள் நம்புதல் அல்லது நம்பிக்கை வைத்தல் (to believe, to trust, to have confidence or faith in) என்பதாகும். இச்சொல்லுக்குப் அறிஞர்கள் பலரும் பலவிதமான வரையறைகளை கூறியுள்ளனர். அவற்றுள் கின்ஸ் (Kines), நாசே (Nasse) போன்ற அறிஞர்கள் கூறிய வரையறைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாசே என்பார் 'Credit' என்பது எதிர்காலத் தகுதி அல்லது நாணயத்தை நம்பி, தற்போது கடனாகப் பொருள்களையோ அல்லது ஒரு தொகையையோ தருவது, என்று கூறுகிறார். கடன் தருநர், கடன் பெறுநர் எதிர்காலத்தில் நிச்சயம் அக்கடனை அடைத்து விடுவார் என்ற நம்பிக்கையின் பேரில், அவரது தகுதி (Capacity), நன்னடத்தை (Character), மூலதனம் (Capital) ஆகியவற்றின் அடிப்படையில் கடன் வழங்குகின்றார். எனவே, இம்மூன்று சிறப்பியல்புகளும் காப்புறுதியில்லாக் கடன் அல்லது பிணையம் பெறாக் கடன் வாங்குபவருக்கு அமைந்திருக்க வேண்டும். இதனை ஆங்கிலத்தில் **"Three C's"** எனச் சுருக்கமாக அழைப்பர். இதைத்தான் ஒரு வங்கியரும் தனது வாடிக்கை யாளரிடத்தில் பிணையிலாக் கடன் வழங்கும் போது எடை போட வேண்டும்.

2. காப்புறுதிக் கடன்கள் (அல்லது) பிணையக் கடன்கள் (Secured Loans or Advances): பிணையம் பெற்ற கடன் என்பது வீடு, நிலம், எந்திரம் போன்ற அசையாச் சொத்துக்களையோ அல்லது நகைகள், பங்குச் சான்றிதழ்கள், நிலை வைப்பீட்டு இரசீகள் போன்ற அசையும் சொத்துக்களையோ காப்புறுதியாகப் பெற்றுக் கொண்டு அளிக்கப்படும் கடன் ஆகும். அசையாச் சொத்துக்களின் பேரில் அடைமானக் கடன்களும், அசையும் சொத்துக்களின் பேரில் அடகு, தவணை கொள்முதல் விற்பனைக் கடன்களும் வங்கியரால் அளிக்கப்படுகின்றன.

5. Discuss the subsidiary business operations of bankers with special reference to Safety Deposit Lockers. (பாதுகாப்பு வைப்பீட்டு பெட்டகத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வங்கியர்களின் துணைத் தொழில் செயற்பாடுகளை விவாதிக்க.)

(அல்லது)

Explain the subsidiary services of bankers. (வங்கியர்களின் துணைச் சேகைகளை விளக்குக.)

(அல்லது)

Safety Deposit Lockers - Write short notes. (பாதுகாப்பு வைப்பீட்டு பெட்டகம் – சிறு குறிப்பு வரைக.)

வங்கியர்களின் துணைச் சேவைகள் [Subsidiary Services (or) Subsidiary business operations of Bankers]:

வைப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதும், பணம் கடன் கொடுப்பதும்தான் வங்கியர்களின் முக்கியப் பணி என்றாலும், வேறு பல சேவைகளையும் (அதாவது தொழிற் செயற்பாடுகளையும்) அவர்கள் செய்து வருகின்றனர். இவை துணைச் சேவைகள் எனப்படும். இவற்றை (1) முகவாண்மைச் சேவைகள் (Agency Services) என்றும், (2) பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் [General Utility Services (or) Miscellaneous Services] என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

முகவாண்மைச் சேவைகள் (Agency Services) - பல வகை:

(1) காசோலைகள், வரைவோலைகள், பங்காதாயப் பத்திரங்கள் ஆகியவற்றின் மதிப்புகளை வாடிக்கையாளருக்காக வசூலித்துக் கொடுக்கின்றன.

(2) சந்தாப் பணம் (Subscription), காப்பீட்டு முனைமம் (Insurance Premium), வாடகைப் பணம் மற்றும் வேறு வகையான சேவைகளைப் பெற்றமைக்கான கட்டணங்கள் ஆகியவற்றை வாடிக்கையாளருக்காகச் செலுத்துகின்றன. இக்கட்டணங்களை வாடிக்கையாளர்களின் நிலையான அறிவுறுத்தல்களின் (Standing Instructions) பேரில், அவர்களது கணக்கில் பற்றெழுதுவதன் மூலம் செலுத்துகின்றன.

(3) பங்குகள், காப்புறுதிகள் ஆகியவற்றை வாடிக்கையாளருக்காக வாங்குதல், விற்றல்.

(4) வாடிக்கையாளரின் சார்பில் பொறுப்பாண்மையராகவும் (Trustee), உயில் நிறைவேற்றுநராகவும் (Executor) செயற்படுதல்.

(5) வாடிக்கையாளர்களுக்கும், பிற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கும் தொடர்பாளராகவும் (Correspondent), பிரதிநிதியாகவும் (Representative) நின்று, வங்கியர் சேவை புரிகின்றனர்.

(6) அரசு அலுவர்களுக்குண்டான சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றை அரசிடமிருந்து வசூலித்து அவர்கள் கணக்கில் வரவு வைக்கின்றன.

(7) வாடிக்கையாளர் சார்பாக வருமான வரி விபர அறிக்கைகளை (Income Tax Returns) தயாரித்தல்.

மேற்கண்ட சேவைகளைப் புரியும் பொழுது, வங்கியர் வாடிக்கையாளரின் முகவராகச் செயல்படுவதால், அவற்றை 'முகவாண்மைச் சேவைகள்' என்கிறோம்.

பொதுப் பயன்பாட்டு சேவைகள் (General Utility Services) - பல வகை:

(1) விலை உயர்ந்த நகை, ஆவணங்கள் போன்றவற்றை தங்கள் பாதுகாப்பில் (Safe custody) பெறுகின்றன. மேலும் பாதுகாப்பு பெட்டக அறை (Safe Deposit Vault) வசதியை அளிக்கின்றன.

(2) அந்நியச் செலாவணி மாற்ற நடவடிக்கைகளுக்கு துணை புரிதல்.

(3) நம்பிக்கைக் கடிதம் (Letter of Credit), பயணிகள் காசோலைகள் (Traveller's Cheques) முதலியன வழங்குதல்.

(4) வங்கிப் பொறுப்புறுதி (Bank Guarantee) அளித்தல்.

(5) பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், பிணையாவணங்கள் ஆகிய வற்றிற்கு விற்பனை உத்தரவாதம் (Underwriting) அளித்தல்.

(6) வாடிக்கையாளரின் கடன் அட்டைக்குரிய தொகையைச் (Payment for Credit Card) அவர்களது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்துகின்றன.

(7) வாகன உரிமையாளர்களிடமிருந்து வாகன வரி (Road Tax) வசூலித்து, அதனை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்துகின்றன.

மேற்கண்ட சேவைகளை வாடிக்கையாளர்களின் முகவராக நின்று வங்கியர் செய்வதில்லை. பொதுவான பயன்பாட்டிற்காக செய்கின்றன. எனவே அவற்றை 'பொதுப் பயன்பாட்டுச் சேவை' என்கிறோம்.

மேற்கண்டவற்றில் மிக முக்கியமான சேவை பாதுகாப்பு பெட்டக வசதி அளித்தல் ஆகும். அவற்றைப் பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போம்.

பாதுகாப்பு வைப்புச் சேவை (Safe Custody Service):

இச்சேவையின் தன்மை: வங்கியர்களின் பாதுகாப்பு பெட்டகச் சேவை, வங்கித் தொழிலின் ஆரம்ப காலகட்டத்திலிருந்தே இருந்து வந்துள்ளது என்று கூறலாம். இங்கிலாந்தில், பொற்கொல்லர்களிடம் மக்கள் தங்கள் விலை மதிப்புடைய பொருட்களையும், தங்கத்தையும் பத்திரமான பாதுகாப்பிற்காக கொடுத்தை நாம் இந்நூலின் ஆரம்ப அத்தியாயங்களில் கண்டோம். எனவே இச்சேவை வங்கியர்களுக்கு புதிதல்ல. உத்திகள்தாம் மாறியுள்ளன. அந்தவகையில், இக்கால வங்கிகள், பத்திரமான பாதுகாப்பிற்காகப் பாதுகாப்புப் பெட்டகங்களை (Safty Lockers), வலுவான அறைக்குள் வைத்துக் கட்டிக் கொண்டுள்ளன. பொது மக்கள் தங்கள் விலையுயர்ந்த பொருட்களைக் களவு, தீ விபத்து போன்றவற்றி லிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, வங்கியர் வழங்கும் பாதுகாப்பு பெட்டக வசதியே நம்பகமானதாக உள்ளது.

இந்தப் பாதுகாப்புப் பெட்டக வசதியைப் பெற்ற எவரும், தங்களின் நகைகள், விலையுயர்ந்த பொருட்கள், சொத்துக்களின் உரிமை மூலப் பத்திரங்கள் (Title Deeds of Properties) ஆகியவற்றை பாதுகாப்பாக வைப்பீடு செய்து, தேவையான பொழுது எடுத்துக் கொள்ளலாம்.

பாதுகாப்புச் சேவை – இரு வகை: ஒருவர், இருவகையான பாது காப்பிற்கு தமது பொருட்களை வங்கியரிடம் ஒப்படைக்கலாம். அவை வருமாறு.

(1) பாதுகாப்பு வைப்பீடு (Safe Custody Deposit): இதன்படி, வாடிக்கையாளர் தமது பொருட்களை ஒரு பெட்டியில் இட்டு மூடி முத்திரையிட்டு அப்பெட்டியை வங்கியரிடம் ஒப்படைக்கிறார். அந்தப் பெட்டியின் மேல் அவ் வாடிக்கையாளரின் பெயரும், முகவரியும் தெளிவாக எழுதப்படும். பின்னர், அப்பெட்டி வங்கியிலுள்ள வலுவான அறைக்குள் (strong room) பத்திரமாக வைக்கப்படும். அதைப் பெற்றுக் கொண்டதற்காக, வங்கியர் ஒரு வரவுச் சீட்டை (Receipt) வாடிக்கையாளருக்குக் கொடுப்பார். மேலும் அப்பெட்டி பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட விபரமானது வங்கியரால் பராமரிக்கப்படும் 'பாதுகாப்பிற்காக பெறப்பட்ட பெட்டிகளின் பதிவேட்டில்' (Register of Boxes in Safe Custody) பதிந்து கொள்ளப்படும். பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில், வாடிக்கையாளர் இந்த வரவுச் சீட்டை வங்கியரிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தப் பெட்டியில் என்ன பொருள் உள்ளது என்று கேட்க வங்கியருக்கு உரிமை இல்லை.

சில நேர்வுகளில் வாடிக்கையாளர் தமது கொணர்பவர் காப்புறுதிகளை (bearer securities) எடுத்துக்காட்டாக பிணையாவணங்களை (bonds) வங்கியரிடம் பத்திரமாக வைத்திருக்கும்படியும், அவற்றின் முதிர்வுத் தேதியில், அவற்றிற்குரிய தொகையை வசூலித்து தமது கணக்கில் வரவு வைக்கும்படியும் கூறலாம். இதற்கு மேற்கண்ட 'பெட்டி' நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய தில்லை. மாறாக 'காப்புறுதிகள் பாதுகாப்பு வசப் பதிவேடு' எனும் ஒரு பதிவேட்டில் (Register of Safe Custody Securities) வங்கியரால் பதிந்து கொள்ளப்படும்.

(2) பாதுகாப்பு வைப்பீட்டு பெட்டகம் (Safety Deposit Locker): இது வங்கியர் அளிக்கும் மற்றொரு பாதுகாப்பு வசதி ஆகும். வங்கியர்கள் தங்கள் கட்டிடத்தில் வலுவான அறைகளை கட்டி, அதில் பாதுகாப்பு பெட்டகங்களை பராமரித்து வருகின்றனர். இவை ஒவ்வொன்றும் தனித்தனியானதாக இருக்கும். வாடிக்கையாளர் செலுத்தும் வாடகைக் கட்டணத்திற்கேற்ப, இவற்றின் அளவும் மாறுபடும். வாடிக்கையாளர் வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் பெட்டகத்திற்கு இரண்டு சாவிகள் இருக்கும். அவற்றில் ஒரு சாவி வாடிக்கையாளர் வசம் கொடுக்கப்படும். மற்றொரு சாவியை வங்கியரே வைத்துக் கொள்வர். இப் பெட்டகத்தை வாடிக்கையாளர் திறந்து அதில் தமது பொருட்கள் எதையாவது வைக்க வேண்டுமெனில், வாடிக்கையாளர் முதலில் தமது வசம் கொடுக்கப்பட்ட சாவியை, அதற்குரிய சாவித்துவாரத்தில் நுழைக்க வேண்டும். அதே நேரத்தில் வங்கியர் தன்னிடம் உள்ள சாவியை அதற்குரிய சாவித்துவாரத்தில் நுழைக்க வேண்டும். இவ்வாறு நுழைத்து, இரண்டு சாவிகளையும் திருப்பினால்தான், பெட்டகத்தின் பூட்டு திறக்கும். வாடிக்கையாளரோ அல்லது வங்கியரோ முறையே தங்களிடம் உள்ள ஒரு சாவியைக் கொண்டு பூட்டைத் திறக்க முடியாது. மேலும் வங்கியர் தன்னிடம் உள்ள சாவியை நுழைத்து பெட்டகத்தைத் திறந்த பிறகு, வாடிக்கையாளர் அப்பெட்டகத்தில் என்ன வைக்கிறார் என்பதை பார்க்கக் கூடாது; அவருக்கு அத்தகு உரிமையுமில்லை. அந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேறிவிட வேண்டும். வாடிக்கையாளர் அப்பெட்டகத்தை தனது சாவியைக் கொண்டு பூட்டும் பொழுது, வங்கியர் தனது சாவியைக் கொண்டு திறந்த பூட்டும் தானாக பூட்டிக் கொள்ளும். எனவே இப்பெட்டக முறை பாதுகாப்பு மிக்கதாக உள்ளது.

பெட்டக வசதி பெற வாடிக்கையாளர், வங்கியில் தனது புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். வாடிக்கையாளரின் அறிமுகமும், அடையாளமும் திருப்திகரமானதாக இருப்பின், வங்கியர் அவருக்கு ஒரு பெட்டகத்தை ஒதுக்கலாம். பெட்டகத்திற்கென நிருணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வாடகையை வாடிக்கையாளர் தவறாமல் செலுத்த வேண்டும். பெட்டகத்தை வாடிக்கையாளர் திறந்த நேரத்தையும், மூடிய பிறகு வெளிவந்த நேரத்தையும் வங்கியர் தேதியுடன் தனது பதிவேட்டில் பதிந்து கொண்டு, அவரிடம் கையொப்பம் பெற வேண்டும்.

பெட்டகத்தினுள் வாடிக்கையாளர் வைக்கும் பொருட்களை எப்பொழுது வங்கியர் தெரிந்து கொள்ள இயலும்?: பொதுவாக பெட்டகத்தினுள் வாடிக்கையாளர் என்ன பொருட்களை வைக்கிறார் அல்லது எடுக்கிறார் என்பதை வங்கியர் தெரிந்து கொள்ளக் கூடாது. எனினும் பின்வரும் சூழ்நிலைகளில், அவர் தெரிந்து கொள்ளலாம். அவை,

(1) பெட்டகத்தை வாடகைக்கு எடுத்த வாடிக்கையாளர் இறந்துவிட்டால், அவரது வாரிசுதாரர்கள் அதிலுள்ள பொருட்களை அறிந்து பட்டியலிட்டு (as to take inventory) அவற்றிற்கு சட்டப்படி உரிமை பெற நீதிமன்றத்தை அணுக, அதனை திறந்து காட்டும்படி வங்கியரைக் கோரலாம். அப்பொழுது இறந்து போன அவ் வாடிக்கையாளரின் வசமிருந்த மற்றொரு சாவியையும், இறப்புச் சான்றிதழையும், வாரிசுச் சான்றிதழையும் அவர்கள் வங்கியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(2) வாடிக்கையாளர் தனது வாடகைப் பணத்தை கட்டத் தவறினால், வங்கியர் அப்பெட்டகத்தை உடைத்துத் திறக்கலாம்.

(3) நீதிமன்றத்திலிருந்து சட்டப்படியாக சோதனை மற்றும் பற்றுகைப் பிடியாணை பெற்றுள்ள காவல் துறையினர் அப்பெட்டகத்தை திறக்கும்படி அல்லது உடைத்து திறக்கும்படி வங்கியரைக் கோரலாம். அப்பொழுது அவ்வாறு திறந்து அதிலுள்ள பொருட்களை பட்டியலிட்டுக் கொடுக்க வங்கியர் கடமைப்பட்டவர்.

வங்கி கொள்ளையடிக்கப்படும் நேர்வில் வங்கியரின் பொறுப்பு (Liability of Banker in case of Bank Robberies):

வங்கியரின் பத்திரமான பாதுகாப்புக்கு ஒப்படைக்கப்பட்ட வாடிக்கையாளர் களின் விலையுயர்ந்த பொருட்கள் வங்கிக் கொள்ளையர்களால் கொள்ளையடிக் கப்பட்டால், அல்லது களவு போனால் அதற்கு வங்கியரே பொறுப்பு. அதுபோல் வங்கியரின் தவறினால் எடுத்துக்காட்டாக, பெட்டக அறையின் கதவை மூடாமல் விட்டுவிடுதல், உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்யாமல் இருத்தல், அனைவரையும் பெட்டக அறைக்குள் அனுமதித்தல் போன்ற செயல் பாடுகளால் பெட்டகத்தில் உள்ள பொருட்கள் களவு போனால், அதற்கும் வங்கியரே பொறுப்பு. மேலும் தீ விபத்து, மின் கசிவு போன்றவற்றினால் வாடிக்கையாளர்களின் பொருட்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கும், வங்கியரே பொறுப்பு. சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வங்கியர் எடுக்கத் தவறியதால், வாடிக்கையாளருக்கு வங்கியர் இழப்பீடு கொடுக்க நேரிடும்.

வங்கிப் பணியாளர்களின் மோசடிக்கு வங்கியரின் பகரப் பொறுப்பு (Vicarious Liability of Banker for the fraud committed by Bank Employees):

வங்கிப் பணியாளர்கள் ஏதேனும் மோசடி புரிந்து, அதனால் வாடிக்கை யாளர்களுக்கு இழப்பு ஏதும் ஏற்பட்டால், அதற்கு வங்கியரே பகரப் பொறுப்புடையவர் ஆவார். இங்கு சம்பந்தப்பட்ட வங்கி நிறுவனம் முதல்வராகவும், அதன் பணியாளர்கள் முகவர்களாகவும் உள்ளனர். எனவே தீங்கியியல் சட்டத்தின்படி, முகவர்களின் கவனக்குறைவு, மோசடிக்கு முதல்வரே பொறுப்பு. இதுவே வங்கியரின் பகரப் பொறுப்பாகும். எனவே வங்கியர், வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்.

6. Recovery of loans and advances by Bank - Write short notes. (கடன்களையும் முன்பணங்களையும் வங்கியர் வசூலித்தல் – சிறு குறிப்பு வரைக.)

பொதுவாக வங்கியருக்கு பணம் எங்கிருந்து கிடைக்கிறதென்றால், வங்கியரிடம் வாடிக்கையாளர்கள் செய்யும் பல்வேறு வைப்பீட்டுத் தொகை களிலிருந்துதான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இப்பணத்திலிருந்துதான், வங்கியரும் கடன் அளிக்கின்றனர். எனவே வங்கியர் தங்கள் சொந்தப் பணத்தை கடன் கொடுக்கவில்லை என்பது தெளிவு. வாடிக்கையாளர்கள் செய்த வைப்பீடுகள், ஒரு குறிப்பிட்ட காலக் கெடு முடிந்த பின்போ அல்லது கேட்ட மாத்திரத்திலோ வங்கியரால் கொடுக்கப்பட வேண்டியதாகும். எனவே வங்கியர் இங்கு கடன் கொடுப்பது பெரிதல்ல. அதை வசூலிக்கவும் வேண்டும். இவ்வாறு வசூலிக்கத் தவறினால் வங்கி நட்டமடைவதோடு மட்டுமில்லாமல், வாடிக்கையாளரும் தனது வைப்பீட்டுத் தொகையைப் பெறவியலாத இடர்பாடு உருவாகும்.

வங்கிகள் வழங்கும் கடன்கள் பொதுவாகக் கேட்கும் போது திருப்பிக் கொடுக்கத்தக்கவையாகும். எனவே காரணம் கூறாமலேயே கடனைத் திருப்பிச் செலுத்தும்படி, கடன் பெற்றவரை வங்கியர் கேட்கலாம்: இவ்வாறு கேட்டும், கடன் பெற்றவர் தனது கடனை செலுத்தத் தவறினால், அதனைச் செலுத்தக் கோரி அவருக்கு வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்புதல் வேண்டும். இதன் பின்னரும் அவர் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையானால், கொடுத்த கடனை வசூலிக்க நீதிமன்றத்தில் அவர் மீது வழக்கிடலாம். எனினும் இவ்வாறு வழக்குத் தொடர்வதற்கு முன்பு, வங்கியர், இயன்ற வரையில் கடன் பெற்றவரை நேர் முகமாகத் தொடர்பு கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்தும்படி கோருதல் நலம். அச்சமயத்தில், கடன் பெற்றவர் கடனைச் செலுத்த கால அவகாசம் கோரினால், அது நியாயமாக இருக்கும்பட்சத்தில், வங்கியர் கால அவகாசம் அளிக்கலாம். சில சமயம் கடன் பெற்றவரின் கடுமையான பணத் தட்டுப்பாடு காரணமாக, அவரிடமிருந்து கடன் முழு கடன் தொகையையும் வங்கியர் வசூலிக்க முடியாமற் போகலாம். எனவே அவர் கொடுக்கும் சிறு தொகையை வரவு வைத்துக் கொண்டு,

மீதித் தொகையை கருணை அடிப்படையில் தள்ளுபடி செய்யவும் வங்கியருக்கு அதிகாரம் உண்டு. எனினும் கடனை வசூலிப்பதில், வங்கியின் நலனையே வங்கியர் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்; கடன் பெற்றவரின் நலன் அல்ல.

7. Recovery of debts due to banks- Write short notes. (வங்கிக்கு கொடுபட வேண்டிய கடன் வசூல் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Financial Institutions Act, 1993 - Write short notes. (நிதி நிறுவனங்கள் சட்டம், 1993 – சிறு குறிப்பு வரைக.)

வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் கொடுபட வேண்டிய கடன்களை வசூலிப்பதற்காக , **நரசிம்மம் கமிட்டி (Narashimham Committee)** செய்த பரிந்துரைகளின் பேரில், 1993–ஆம் ஆண்டில் மத்திய அரசு **"வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு கொடுபட வேண்டிய கடன் வசூல் சட்டம்" (The Recovery of Debts Due to Banks and Financial Institutions Act, 1993)** எனுமொரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி, வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் வர வேண்டிய கடன்கள் பற்றிய வழக்குகளை துரிதப் படுத்தவும், கடன்களை விரைவாக வசூலிக்கவும் நாடெங்கிலும் 12 **'கடன் வசூல் தீர்ப்பாயங்கள்' (Debt Recovery Tribunals)** நிறுவப்பட்டன. இத்தீர்ப்பாயங் களிலிருந்து எழும் மேல்முறையீடுகளை தீர்மானிக்க ஒரு 'கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும்' **(Debt Recovery Appellate Tribunal)** நிறுவப்பட்டது. பின்னிட்டு மேலும் 3 கடன் வசூல் தீர்ப்பாயங்களும், 4 கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களும் நிறுப்பட்டு, அவற்றின் எண்ணிக்கை முறையே 15 என்றும், 5 என்றும் உயர்ந்தது. இத்தீர்ப்பாயங்கள், ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைக் கொண்டுள்ளன. 10 இலட்சமும், அதற்கு மேலும் உள்ள கடன்களை வசூலிக்க வங்கிகளும், நிதி நிறுவனங்களும் மேற்படி கடன் வசூல் தீர்ப்பாயத்தில் கடன் பெற்றவர் மீது வழக்கிடலாம். இதில், கடனை வசூலிக்கும் முகமாக, தீர்ப்பாயங்கள் பின்வருமாறு ஆணை பிறப்பிக்க லாம். அவை, (1) பிரதிவாதியின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பற்றுகை (ஜப்தி) செய்தல் மற்றும் ஏல விற்பனைக்கு ஆணையிடுவதன் மூலம்; (2) பிரதிவாதியை உரிமையியல் சிறையில் அடைத்தல் மூலம்; (3) பிரதிவாதியின் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களுக்கு சொத்துப் பேணுநர் (Receiver) ஒருவரை நியமிப்பதன் மூலம். இத்தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து, அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 45 தினங்களுக்குள் பாதிக்கப்பட்டவர், கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம். இதன் முடிவை எதிர்த்து உயர் அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

15

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

1. பிரச்சனை:

A has a current account with 'C' a Commercial Bank. A issues a cheque to B, drawn on Bank 'C'. Before the cheque is presented at the counter for encashment the bank receives reliable information that A has become mentally unsound and hospitalised. The bank refuses payment on the cheque. Is the bank justified in doing so?

C என்ற வர்த்தக வங்கியில் A என்பவர் ஒரு நடப்புக் கணக்கு வைத்திருக் கிறார். A என்பவர் B-க்காக C வங்கியின் பேரில் ஒரு காசோலையை வரைந்து Bயிடம் கொடுக்கிறார். பணம் பெறுவதற்காக வங்கியில் காசோலையை முன்னிலைப்படுத்து முன் Aக்கு மனக்கோளாறு ஏற்பட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக வங்கியர் நம்பத் தகுந்த தகவலைப் பெறுகிறார். வங்கி காசோலையின் மீது பணம் தர மறுக்கிறது. வங்கி அவ்வாறு செய்தது நியாயமாகுமா?

தீர்வு:

வங்கியர் அவ்வாறு செய்தது நியாயமே. வங்கியர்–வாடிக்கையாளரின் உறவிற்கு அடிப்படை, ஒப்பந்தமாகும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனக்கோளாறு ஏற்பட்ட பித்தரின் ஒப்பந்தம் இல்லாநிலையது. எனவே Aயின் மனக்கோளாறு பற்றி

முன்னதாகவே தகவல் தெரிந்த C எனும் வங்கியர், அவர் கொடுத்த காசோலைக்கு பணம் தரக் கூடாது. அவர் புத்தி சுவாதீனமடைந்துவிட்டார் என்பதற்குண்டான ஆதாரமோ அல்லது நீதிமன்றத்திலிருந்து ஒரு ஆணையோ கிடைக்கப் பெறும் வரை, அவரது கணக்கின் இயக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும். **[Drew v. Nunn (1879) 4 Q.B.D. 661]**

2. பிரச்சனை:

Out of three partners A, B and C of a firm A and B went to America. C is authorised to operate the Bank account. C approached the bank and advises that he would like to go on a pilgrimage for one month and would like to give Mohan a letter authorising him to operate the account. What the Bank will do?

A, B மற்றும் C கூட்டாளிகளை கொண்ட நிறுமத்தில், A மற்றும் B அமெரிக்காவிற்கு சென்றுவிட்டனர். கூட்டாண்மையின் வங்கி கணக்கை இயக்குவதற்கு Cக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு சென்றனர். C வங்கியாளரை அணுகி தான் தீர்த்த யாத்திரை செல்வதால், ஒரு மாதத்திற்கு மோகனை வங்கி கணக்கை இயக்குவதற்கு அதிகாரம் அளிப்பதாக கூறுகிறார். வங்கியின் நிலை என்ன?

தீர்வு:

ஒரு கூட்டாண்மை நிறுமத்தின் கணக்கை துவக்குவதில் வங்கியர் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதில் முக்கியமானது வங்கிக் கணக்கை இயக்கும் அதிகாரம், எந்தக் கூட்டாளிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனித்தல் ஆகும்.

பொதுவாக, ஒரு கூட்டாண்மை நிறுமத்தின் கணக்கை இயக்க அனைத்து கூட்டாளிகளுக்கு அதிகாரம் உண்டு. எனினும், அவர்களில் ஒருவர் அக்கணக்கை இயக்கவும், காசோலைகளில் கையொப்பமிடவும் மற்ற கூட்டாளிகள் அனைவரும் கையொப்பமிட்டு அவருக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

இவ்வாறு கொடுக்கப்பட்ட அதிகாரக் கடிதத்தை வங்கியரின் ஒப்படைக்க வேண்டும். பின், அக்குறிப்பிட்ட கூட்டாளியை அந்நிறுமத்தின் கணக்கை இயக்க வங்கியர் அனுமதிப்பார். மேலும், அவர் கையொப்பமிட்டு கொடுக்கும் காசோலைக்கு பணம் கொடுப்பார். இவ்வாறு அதிகாரம் பெற்றவர், தனது அதிகாரத்தை மற்ற கூட்டாளிகளின் ஒப்புதல் இல்லாமல் மற்றொருவரிடம் ஒப்படைக்க முடியாது.

மேற்படி பிரச்சனையில் C எனும் கூட்டாளி, வங்கிக் கணக்கை இயக்கும் தனது அதிகாரத்தை மோகன் என்பவருக்கு கொடுக்க விழைகிறார். ஆனால் அவர்

தனது மற்ற இரு கூட்டாளிகளான A மற்றும் Bயின் ஒப்புதலைப் பெறாமல் இவ்வாறு செய்ய முடியாது. இங்கு அப்படிப்பட்ட ஒப்புதல் எதையும் C வாங்கியிருக்கவில்லை. எனவே வங்கியர் மோகனை அக்கூட்டாண்மை நிறுமத்தின் கணக்கை இயக்குவதற்கு அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அனுமதித்தால், வங்கியர் மற்ற இரு கூட்டாளி களுக்கு பொறுப்பாவார்.

3. பிரச்சனை:

A signs instrument in the following terms: Is it a promissory note?

" I promise to pay B Rs. 500 seven days after my marriage with C".

'அ' என்பவர் ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு எழுதி கையொப்பம் செய்துள்ளார். இது கடனுறுதிச் சீட்டாகுமா?

'இ' என்பரை மணமுடித்து ஏழு நாட்கள் கழிந்த பிறகு நான் 'ஆ' என்பவருக்கு ரூ.500 தர உறுதி அளிக்கிறேன்.

தீர்வு:

மேற்படி பிரச்சனை 1881–ஆம் ஆண்டின் மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 4–வது பிரிவின் கீழான (d) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். மேற்படி 4–வது பிரிவு, கடனுறுதிச் சீட்டுக்கான வரையறையைக் கூறுகிறது. அதன்படி, "கடனுறுதிச் சீட்டு என்பது ஒரு தீர்மானமான நபருக்கோ அல்லது அவரது ஆணைக்கோ அல்லது அதனைக் கொணர்பருக்கோ ஒரு தீர்மானமான தொகையை மட்டுமே செலுத்த, கட்டுவரம்பற்ற பொறுப்பேற்பு ஒன்றைத் தாங்கிய அதனை எழுதித் தருபரால் கையொப்ப மிடப்பட்ட (ஒரு வங்கித்தாளோ அல்லது பணத்தாளோ அல்லாத) எழுத்து மூலமான ஆவணமாகும்".

மேற்கண்ட வரையறையில் உள்ள ஒரு முக்கியமான கூறு, கடனுறுதிச் சீட்டை எழுதித் தருபவர் பணத்தைச் செலுத்த **"கட்டுவரம்பற்ற பொறுப்பேற்பு" (un-conditional undertaking)** ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். கட்டுவரம்பற்ற பொறுப்பேற்பு என்பது, பணத்தை திரும்பச் செலுத்துவதில் எவ்வித நிபந்தனையையும் விதித்தல் கூடாது. கேட்ட மாத்திரத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளோ தொகை செலுத்தப்படுவதாக இருத்தல் வேண்டும். மாறாக ஒரு நிகழ்ச்சி நடந்த முடிந்த பின், பணம் செலுத்துவதாக கூறுவது, ஒரு கடனுறுதிச் சீட்டு ஆகாது. மேற்படி பிரச்சனையில் 'இ' என்பவரை மணமுடித்து ஏழு தினங்கள் கழித்து பணம் தருவதாக ஒருவர் கூறுகிறார். இங்கு அவரின் திருமணம் 'இ' யுடன் நடக்கலாம்

அல்லது நடக்காமலும் போகலாம். இது கட்டுவரம்புடன் கூடிய ஒரு உறுதியற்ற நிகழ்ச்சி. எனவே அது ஒரு கடனுறுதிச் சீட்டாகாது என்பதே தீர்வு.

4. பிரச்சனை:

"I promise to pay 'B' Rs. 500 on C's death, provided 'C' leaves me enough property to pay that sum'. Can it be treated as a Promissory Note?

'இ' என்பவர் இறக்கும் போது அவர் அத்தொகையை செலுத்தப் போதுமான சொத்தை விட்டுச் சென்றால், நான் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 500 தர உறுதியளிக்கிறேன். இதனை கடனுறுதிச் சீட்டு எனக் கொள்ளலாகுமா?

தீர்வு:

நாம் இதற்கு முன்சென்ற 3–வது பிரச்சனையில் 'கடனுறுதிச் சீட்டு' என்பதற்குண்டான சட்ட வரையறையைக் கண்டோம். அதன்படி ஒரு கடனுறுதிச் சீட்டில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உறுதியுரை மட்டும் இருந்தால் போதாது. அவ்வுறுதியுரை கட்டுவரம்பற்றதாகவும், அதாவது நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும் என்று கண்டோம்.

மேற்படி பிரச்சனையில் இரண்டாவது பகுதியான "நான் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 500 தர உறுதியளிக்கிறேன்' என்பது கடனுறுதிச் சீட்டிற்கான உறுதியுரை ஆகும். ஆனால் இவ்வுறுதியுரை நிபந்தனையுடன் கூடியதாக உள்ளது. அதாவது " 'இ' என்பவர் இறக்கும் போது அத்தொகையை செலுத்தப் போதுமான சொத்தை விட்டுச் சென்றால்" எனும் வாசகம் அவ்வுறுதியுரையை நிபந்தனையுடன் கூடியதாக ஆக்குகிறது. இது ஒரு கடனுறுதிச் சீட்டாகாது. ஏனெனில், 'இ' என்பவர் இறக்கும் போது, கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுப்பவருக்கு சொத்துக்களை விட்டுச் செல்லலாம்; அல்லது வேறு யாருக்காவது கொடுக்கவும் செய்யலாம். மேலும் அப்படியே அவர் விட்டுச் சென்றாலும், அது அத்தொகையை திருப்பிச் செலுத்த போதுமானதாக இருக்கலாம்; அல்லது இல்லாமலும் இருக்கலாம். இவற்றை எல்லாம் நிச்சயித்துக் கூற இயலாது. எனவே மேற்கண்ட வாசகங்களைத் தாங்கிய ஆவணம், ஒரு கடனுறுதிச் சீட்டு ஆகாது என்பதே தீர்வு.

5. பிரச்சனை:

A signs instruments in the following terms: Is it valid?

"I promise to pay B or order Rs.500"

'அ' என்பவர் ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு எழுதி கையொப்பம் செய்துள்ளார். அது செல்லத்தக்கதா?

"நான் 'ஆ' என்பவருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ ரூ.500 தர உறுதியளிக்கிறேன்".

தீர்வு:

மேற்கண்ட வாசகம் ஒரு கடனுறுதிச் சீட்டுக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 4–வது பிரிவு கூறும் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக உள்ளது. அதாவது இங்கு கடனுறுதிச் சீட்டிற்குரிய தொகையை திரும்பச் செலுத்துவதற்கான உறுதியுரை உள்ளது. அவ்வுறுதியுரை கட்டுவரம்பற்றதாக உள்ளது. ஒரு தீர்மான நபருக்கு (அதாவது 'ஆ' என்பருக்கு) அல்லது அவரது ஆணைக்கு தொகை செலுத்தப்படக் கூடியதாக உள்ளது. மேலும் ஒரு தீர்மான தொகை (அதாவது ரூ.500/–) திரும்பச் செலுத்தப்படத் தக்கதாக உள்ளது. எனவே இது ஒரு செல்லத்தக்க கடனுறுதிச் சீட்டாகும்.

6. பிரச்சனை:

Consider the validity of the following instruments:

(a) "Rs. 1000/- balance due to you. I am still indebted and do promise to pay"

(b) "I acknowledge that I am indebted to you in Rs.1000/- which will be paid by me on demand by you or your attaining the age of majorty"

பின்வரும் முறையாவணங்களின் செல்லுந்தன்மையை கூர்ந்தாராய்க.

(அ) "ரூ.1000 உனக்கு பாக்கி உள்ளது. நான் இன்னமும் உனக்கு கடன்பட்டுள்ளேன் மற்றும் அதைச் செலுத்த உறுதியுரை செய்கிறேன்"

(ஆ) "நான் உனக்கு ரூ.1000/–த்திற்கு கடன்பட்டுள்ளேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது உன்னால் கேட்கப்படும்போதோ அல்லது நீ உரிமை வயதை அடையும் போதோ செலுத்தப்படும்"

தீர்வு:

(அ) மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 4–ஆம் பிரிவின்படி கடனுறுதிச் சீட்டு ஒன்றில் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான உறுதியுரை (promise) இருக்க வேண்டும். இப்பிரச்சனையில் அப்படிப்பட்ட உறுதியுரை ஒன்று உள்ளது. எனவே அவ்வாசகங்கள் கொண்ட மாற்று முறையாவணம் (கடனுறுதிச் சீட்டு) செல்லத் தக்கதே.

(ஆ) இந்த இரண்டாம் பிரச்சனையில் முதற்கண் அப்படிப்பட்ட உறுதியுரை

இல்லை. மேலும் உரிமை வயதை அடையும் போது கடனை திருப்பிக் கொடுப்பதாக ஒரு நிபந்தனையும் உள்ளது. எனவே இது ஒரு கடனுறுதிச் சீட்டு அல்ல. செல்லாது.

7. பிரச்சனை:

A executes an instrument which reads 'received from B the sum of five thousand rupees which will be paid after six months with interest at 12 percent per annum, dated February 15, 2005'. Can it be treated as a promissory note?

அ என்பவர் பின்வருமாறு ஆவணம் ஒன்றை எழுதிக் கொடுக்கிறார். "ஆ என்பவரிடமிருந்து ஐந்தாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டேன். அது ஆண்டு ஒன்றுக்கு 12 சதவீதம் வட்டி சேர்த்து ஆறு மாதங்கள் கழித்து செலுத்தப்பட வேண்டியது. தேதி பிப்ரவரி 15, 2005". இதை ஒரு கடனுறுதிச் சீட்டாக பாவிக்க முடியுமா?

தீர்வு:

இதை ஒரு கடனுறுதிச் சீட்டாக பாவிக்க முடியாது. ஏனெனில், கடனுறுதிச் சீட்டை எழுதித் தருபவர் பணத்தைச் செலுத்த 'கட்டுவரம்பற்ற (நிபந்தனையற்ற) பொறுப்பேற்பு' (Unconditional undertaking) ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 4–ஆம் பிரிவு கூறுகிறது. ஆனால் மேற்படி பிரச்சனையில் அப்பணத்தை ஆறு மாதங்கள் கழித்து தருவதாக அ எழுதிக் கொடுத்துள்ளார். இது பணத்தைச் செலுத்துவதற்கான ஒரு நிபந்தனையாகும். எனவே இது கடனுறுதிச் சீட்டல்ல. வெறும் இரசீது மட்டுமே.

8. பிரச்சனை:

A promissory note assures payment of money after promissor gets the bonus. Is it valid? Discuss?

உறுதியளிப்பவர் போனஸ் பெற்ற பிறகு பணத்தைக் கொடுப்பதாக ஒரு கடனுறுதிச் சீட்டு உறுதியளிக்கிறது. இது செல்லுமா? விவாதிக்க.

தீர்வு:

இதற்கும் முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட அதே தீர்வைக் கொடுக்கலாம். இதிலும் போனஸ் பெற்ற பிறகு பணத்தைத் தருவதாக ஒரு நிபந்தனை உள்ளது. மாற்று முறையாவணங்கள் சட்டம் பிரிவு 4–இன்படி நிபந்தனை விதித்து எழுதிக் கொடுப்பது கடனுறுதிச் சீட்டாகாது. எனவே செல்லாது.

9. பிரச்சனை:

Discuss the validity of the following endorsements:

(a) Pay to Ramlal

(b) Pay to Rama on his marriage with Geetha.

கீழ்க்கண்ட மேற்குறிப்புகளின் செல்லுந் தன்மையை விவாதிக்க.

(a) இராம் லாலுக்கு பணம் கொடுக்கவும்.

(b) இராமன் என்பவருக்கு கீதாவுடன் திருமணம் நடந்தால் பணம் கொடுக்கவும்.

தீர்வு:

(a) 'இராம் லாலுக்கு பணம் கொடுக்கவும்' என்பது, 'சிறப்பு' (Special) அல்லது 'முழுமையான' (Full) மேலெழுத்து (மேற்குறிப்பு) ஆகும். 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 16(1)–ன்படி, மேலெழுத்து செய்பவர் கையொப்பமிட்டு,, ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவருடைய ஆணைக்கோ பணம் செலுத்தப்பட வேண்டும் எனும் ஏவலையும் இணைத்தால், அது சிறப்பான அல்லது முழுமையான மேலெழுத்தாகும். எடுத்துக்காட்டாக, 'ராஜனுக்கு அல்லது அவரது ஆணைக்குச் செலுத்தவும்' என்றோ, 'ராஜனுக்கு செலுத்தவும்' என்றோ எழுதி, மேலெழுத்து செய்பவர் கையொப்பமிட்டால், அது முழுமையான மேலெழுத்தாகும். அந்த வகையில் 'இராம் லாலுக்கு பணம் கொடுக்கவும்' எனும் மேலெழுத்து செல்லத்தக்கதே.

(b) 'இராமன் என்பவருக்கு கீதாவுடன் திருமணம் நடந்தால் பணம் கொடுக்கவும்' என்பது 'கட்டுவரம்புடன் கூடிய மேலெழுத்து' அல்லது 'நிபந்தனையுடன் கூடிய மேழெத்து' (Conditional endorsement) என்பர். 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 52–வது பிரிவின்படி, மேலெழுத்து செய்பவர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த பிறகு, ஒரு மாற்று முறையாவணத்திற்குரிய தொகையைச் செலுத்தவும் என்று நிபந்தனை மேலெழுத்து செய்வது மேற்படி வகையாகும். இதனால் அக்குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த பிறகே, பணம் செலுத்தும் பொறுப்பு உருவாகிறது. அந்நிகழ்ச்சி நடைபெறவிட்டால், அத்தொகையின் மீது மேலெழுத்து செய்யப் பெற்றவருக்கு எவ்வுரிமையும் எழுவதில்லை. அந்த வகையில் இராமன் என்பவர் கீதாவுடன் திருமணம் செய்து கொண்ட பிறகே, அம்மாற்றுமுறை ஆவணத்திற்குரிய தொகையை இராமன் பெற முடியும். இது செல்லத்தக்க மேலெழுத்தே.

10. பிரச்சனை:

A cheque is drawn payable to 'X' or order. It is stolen and X's endorsement is forged. The Banker pays the cheque in due course. Is the Banker liable?

"X" அல்லது ஆணைக்கு பணம் வழங்கும்படி ஒரு காசோலை வரையப்படுகிறது. பிறகு அது திருடப்பட்டு X–ன் மேற்குறிப்பு போன்ற கையெழுத்து இடப்படுகிறது. வங்கியர் காசோலைக்கு முறைப்படி பணம் செலுத்துகிறார். வங்கியர் பொறுப்பாவாரா?

தீர்வு:

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 10–வது பிரிவின்படி, பணம் செலுத்தும் வங்கியர் (Paying Banker) ஒருவர், தன் மீது எழுதப்பட்ட காசோலைகளுக்கு உரிய முறைப்படி பணம் வழங்கினால் மட்டுமே (Payment in due course), அவர் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற்று, தனக்கு ஏற்படவுள்ள இழப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம். இப்பிரிவின்படி உரிய முறையில் பணம் செலுத்தல் என்பது பின்வரும் மூன்று நிபந்தனைகளை (Conditions) உள்ளடக்கியுள்ளது.

1. முறையாவணத்தின் வெளிப்படையான நோக்கத்திற்கு ஏற்றபடி (in accordance with the apparent tenor) பணம் செலுத்தப்பட்டு இருக்க வேண்டும்; 2. நன்னம்பிக்கையுடனும், எவ்வித கவனக்குறைவுமின்றி வங்கியர் பணம் செலுத்தியிருக்க வேண்டும் (payment must be made in good faith and without negligence); 3. பணம் யாரிடம் செலுத்தப்படுகிறதோ அவர் பணம் பெற உரிமை உடையவர் அல்லது நம்புவதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும்.

போலிக் கையொப்பமிட்ட காசோலைக்கு வங்கியர் பணம் செலுத்துதல், மேற்படி பிரிவு 10–ன்படி உரிய முறைப்படி பணம் செலுத்தியதாகாது. காசோலையை வரைந்தவரின் (drawer) கையொப்பம் போலியாக உள்ளது என்று வங்கியர் நம்புவ தற்கு காரணங்கள் இருப்பின், அவர் தனது பதிவேட்டில் இருக்கும் அவரது (காசோலை வரைந்தவரின்) மாதிரிக் கையொப்பத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க இயலும். ஆனால் நமது மேற்படி பிரச்சனை சற்று வித்தியாசமான கோணத்தில் அமைந்தது. இங்கு தொகை செலுத்தப் பெறுபவரான (payee) X–யிடமிருந்து காசோலை திருடப்பட்டு, அவரது மேலெழுத்து போன்று எழுதப்பட்டு, அவரது கையொப்பம் போலியாக இடப்பட்டு, பணம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இங்கு X-ன் கையெழுத்து உண்மையானதா என்று சரிபார்க்க, அவரது கையொப்பம் எதுவும் வங்கியில் இருக்க வாய்ப்பில்லை. எனவே அக்காசோலைக்கு உரிய முறையில் பணம் செலுத்திய வங்கியர் பொறுப்பல்ல.

11. பிரச்சனை:

A banker pays a cheque crossed generally over the counter. Is he liable to the drawer or to the payee of the cheque?

ஒரு பொது குறுக்கு கோடிட்ட காசோலை ஒன்றை வங்கியர் கொடுக்கல் வாங்கல் மூலம் பணம் செலுத்திவிட்டார். அந்த வங்கியர் காசோலை வரைந்தவருக்கோ அல்லது பணம் பெறுபவருக்கோ பொறுப்பாவரா?

தீர்வு:

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 126–ன் கீழான 1–வது பத்தியின்படி, ஒரு காசோலை பொதுவாகக் கோடிடப்பட்டிருந்தால், அதற்குண்டான மதிப்பை (பணத்தை) வங்கியர், அது வரையப் பெற்றுள்ள மற்றொரு வங்கியருக்கன்றி வேறு எவரிடமும் செலுத்தக் கூடாது. மேற்படி பிரச்சனையில் பொதுவாகக் கோடிடப்பட்ட காசோலைக்குண்டான தொகையை, வங்கியர் தனது ரொக்க மேடையில் (cash counter) செலுத்திவிடுகிறார். இது மேற்படி சட்டத்தின் 10–வது பிரிவின்படி 'உரிய முறையில் செலுத்தியதாகாது'. எனவே வங்கியர் அச்செலுத்தலுக்கு பொறுப்பானவர். யாருக்குப் பொறுப்பானவரெனில், அக் காசோலையை வரைந்தவருக்குப் (drawer) பொறுப்பானவர்; செலுத்தப் பெறுநருக்கு (payee) அல்ல. ஏனெனில், பொதுவாகக் கோடிடப்பட்ட காசோலை ஒன்று, வங்கிக் கணக்கு ஒன்றின் மூலமாக வசூலுக்கு முன்னிடப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான், அக்காசோலையின் மதிப்பை வங்கியர் செலுத்த வேண்டும். இவ்வாறு வங்கிக் கணக்கின் மூலமாக அக்காசோலையின் மதிப்பு சென்றடைய வேண்டும் எனும் எண்ணத்தில், அதை வரைந்தவர் அக்காசோலையை பொதுக் கோடிட்டு கொடுத்துள்ளார். இதற்கு வங்கியர் ரொக்க மேடையில் பணம் செலுத்தி, அதனால், அக்காசோலையை வரைந்தவருக்கு (அல்லது அதன் உண்மையான உரிமை யாளருக்கு) ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதற்கு வங்கியரே பொறுப்பு என்று பிரிவு 129 கூறுகிறது.

12. பிரச்சனை:

A banker made payment on a post-dated cheque before the due date. The banker received official information that the customer had expired before the due date of the cheque. State whether the banker has the right to debit the account of the customer for the payment that he had already made.

பின் தேதியிட்ட காசோலைக்கு அதன் உரிய தேதிக்கு முன்னதாகவே வங்கியர் பணம் வழங்கினார். அந்த காசோலை முதிர்வடையும் முன் வாடிக்கையாளர் இறந்துவிட்ட செய்தி வங்கியருக்கு அதிகாரப்பூர்வமாகக் கிடைக்கிறது. வாடிக்கையாளரின் கணக்கில் காசோலையின் பேரில் ஏற்கனவே தந்துவிட்ட பணத்தை பற்று வைக்க வங்கியருக்கு உரிமை உண்டா என்பது குறித்துக் கூறுக.

தீர்வு:

பின்தேதியிட்ட காசோலை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின்படி ஒரு செல்லத் தக்க காசோலை அல்ல. உரிய தேதி வரும் முன்பாகவே அதற்கு வங்கியர் பணம் வழங்கக் கூடாது. அப்படி வழங்கினால் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 10–இன்படி, அது ஒரு உரிய முறையிலான செலுத்தல் (not a payment in due course) ஆகாது. எனவே செலுத்தும் வங்கியருக்கு சட்டப் பாதுகாப்பு ஏதும் இல்லை.

மேற்படி பிரச்சனையில் நாம் காணும் நிலை மிகவும் துர்பாக்கியமானது. இங்கு வங்கியர், பின்தேதியிட்ட காசோலை ஒன்றுக்கு, அதற்குரிய தேதி வரும் முன்பாகவே, பணம் செலுத்திவிடுகிறார். மேலும் அத்தேதி வரும் முன்பாக, அக்காசோலையை வரைந்த வாடிக்கையாளர் இறந்துவிடுகிறார். முதலில் பின் தேதியிட்ட காசோலைக்கு பணம் செலுத்தியதே, தவறு. அதிலும் அக்காசோலைக் குரிய தேதி வருவதற்குள், அதனை வரைந்தவரும் இறந்துவிடுகிறார். இந்நிலையில் அக்காசோலைக் குரிய தொகையை, வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்க வங்கியருக்கு எவ்வித உரிமையும் கடுகளவும் கிடையாது. இங்கு வாடிக்கையாளர் இறந்து போனதைப் போன்று, அவருக்கு பித்துபிடித்திருந்தால், அல்லது அவர் நொடிந்தவரானாலும், வங்கியருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

13. பிரச்சனை:

A bank permitted a customer to enjoy overdraft facility to the extent of Rs. 5,000 for a period of 4 years without requiring him to execute any document. Subsequently the bank dishonoured a cheque for Rs.3000 given by the customer. In a suit for damages filed by the customer, the bank contended that as there was no contract with the customer for overdraft facility, the bank had the right to refuse this facility without giving prior notice. Decide.

ஓர் வங்கி தனது வாடிக்கையாளருக்கு மேல் வரைப்பற்றுக் கடன் வசதியை (ஓவர் டிராப்ட்) ரூபாய் 5,000 வரை நான்கு வருடங்களுக்கு எவ்வித ஆவணமும் அவரிடத்திலிருந்து கொணராமலேயே, அளித்து வந்தது. பிறகு இவ்வாடிக்கையாளர் தந்திருந்த ரூபாய் 3,000 காசோலையை வங்கி அவமதித்தது. இது குறித்து வாடிக்கையாளர் தொடர்ந்த இழப்பீடு வழக்கில், வங்கியின் சார்பில், மேல்வரைப் பற்றுக் கடன் வசதிக்கான ஒப்பந்தம் வாடிக்கை யாளரிடம் போடப்படாததினால் முன்னறிவிப் பின்றி இவ்வசதியை மறுக்க வங்கிக்கு உரிமையுண்டென வாதாடப்பட்டது. தீர்வு காண்க.

தீர்வு:

ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கிலிருந்து அதிகப்பற்று பெற, அவரை ஆவணம் எதையும் எழுதிக் கொடுக்கக் கூறாமலேயே, வங்கியர் அனுமதிப்பதன் மூலம், அங்கு அவ்விருவிடையேயும் ஒரு உட்கிடை ஒப்பந்தம் (implied contract) உருவாகி விடுகிறது. எனவே ஒப்பந்தம் எதுவும் போடப்படவில்லை எனும் காரணத்தால், முன்னறிவிப்பின்றி இவ்வசதியை வங்கியர் மறுக்கவியலாது. அவரது காசோலைக்கு மதிப்பு மறுக்க (அவமதிக்க) முடியாது.

இதற்கு ஆதாரமாக நாம் **Indian Overseas Bank, Madras v. Naranprasad Govindlal Patel, Ahamedabad (A.I.R. 1980 Guj. 158)** எனும் வழக்கைச் சுட்டிக் காட்டலாம். இதில் அதிகப்பற்று வசதிக்காக வங்கியரும்–வாடிக்கையாளரும் செய்து கொள்ளும் ஒரு தற்காலிக ஏற்பாடு கூட, ஒரு ஒப்பந்தமே (Overdraft arrangement is a contract, even it is a temporary one) என்றும், அதற்கென தனியாக ஒரு ஒப்பந்தத்தை வாடிக்கையாளர் நிறைவேற்றித் தர வேண்டிய அவசியமேதுமில்லை என்றும், வங்கியர் அதிகப் பற்று வழங்கும் ஏற்பாட்டை ஒரு தலைப்பட்சமாக இரத்து செய்ய முடியாது என்றும், அவ்வாறு செய்ய வேண்டுமெனில் அது குறித்து வாடிக்கையாளருக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு அறிவிப்பு கொடுக்காமல் வாடிக்கையாளர் கொடுத்த காசோலைக்கு வங்கியர் மதிப்பு மறுப்பு செய்தால், அது தவறான மதிப்பு மறுப்பு ஆகும் என்றும், அதற்கு அவ்வங்கியரே வாடிக்கையாளருக்கு இழப்பீடு தரக் கடமைப்பட்டவர் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனவே மேற்படி பிரச்சனையில் முன்னறிவிப்பின்றி அதிகப்பற்று வசதியை மறுக்க வங்கியருக்கு உரிமையேதும் இல்லை.

14. பிரச்சனை:

A customer approaches his banker for a loan of Rs. 5 lakhs and is prepared to submit any one of the following as security.

(a) A place worth Rs. 7 lakhs.

(b) A Life Insurance Policy of Rs. 10 lakhs

(c) Wheat in a godown worth Rs. 8 lakhs.

Which security the banker accept and why?

ஒரு வாடிக்கையாளர் ரூ.5 லட்சம் கடன் வசதி பெற தன் வங்கியரை அணுகுகிறார். அவர் கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றை பிணையமாக வைக்க முன் வருகிறார்.

(அ) ஓர் அரண்மனை, விலை மதிப்பு ரூ. 7 லட்சம்.

(ஆ) ஓர் ஆயுள் காப்பீட்டு பத்திரம் ரூ.10 லட்சம்.

(இ) கிடங்கில் உள்ள கோதுமை ரூ. 8 லட்சம்.

வங்கியாளர் எந்தப் பிணையத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஏன்?

தீர்வு:

முதற்கண் ரூ. 7 லட்சம் மதிப்புடைய ஓர் அரண்மனையை பிணையமாக வங்கியர் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அரண்மனை போன்ற ஒரு பெரிய கட்டிடத்தை எளிதில் விற்க இயலாது. அதற்கு அதிக காலம் பிடிக்கும். மேலும் அதன் மதிப்பை நிருணயிப்பதும் ஒரு கடினமான பணியாகும்.

இரண்டாவதாக ரூ.10 லட்சத்திற்கான ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்தை வங்கியர் பிணையமாகப் பெற்றுக் கொள்வது பொதுவாக உகந்தது. ஏனெனில், இப்பத்திரத்தை எளிய முறையில் வங்கி உட்பட வேறு எவருக்கும் உரிமைமாற்றம் (assignment) செய்து கொடுக்க முடியும். மேலும் காப்பீடு செய்து கொண்டவர் இறந்து போனால் அல்லது அக்காப்பீட்டுப் பத்திரம் முதிர்வடைந் தால், காப்பீட்டுத் தொகையை வங்கியர் பெறுதலும் எளிது. ஒரு ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்திற்கு உறுதியான சரண் மதிப்பு (surrender value) உள்ளது. அதாவது ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்தை பிணையமாகக் கொடுத்து கடன் பெற்றவர், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கடனை திரும்பச் செலுத்தத் தவறிவிட்டால், வங்கியர் அப்பத்திரத்தை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் சரண் செய்து, சரண் மதிப்பை எளிதில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கடன் பெற்றவர் காப்பீட்டிற்குரிய முனைமத்தைக் கட்டக் கட்ட, சரண் மதிப்பும் கூடுதலாகிக் கொண்டே செல்லும். அதாவது இங்கு பிணையமாக அளிக்கப்பட்ட பொருளின் மதிப்பு கூடுகிறதே தவிர, குறைவதோ அழிவதோ இல்லை.

மேலும் பிணையப் பொருளான அக்காப்பீட்டுப் பத்திரம் வங்கியரிடம் ஒப்படைக்கப்பட்டு, அதன் மீது வங்கியருக்கு உள்ள உரிமை, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பதிவேடுகளில் பதியப்பட்ட பிறகு, அப்பிணையத்தின் பாதுகாப்பைப் பற்றி வங்கியர் கவலை ஏதும் கொள்ளத் தேவையில்லை. எனவே அனைத்து பொருட்பாடுகளிலும் சிறந்த பிணையம், ஆயுள் காப்பீட்டுப் பத்திரமே. அதுவும் ரூ.10 லட்சத்திற்கான காப்பீட்டுப் பத்திரத்தின் பேரில், 5 லட்சத்தை வங்கியர் தாராளமாகக் கடன் கொடுக்கலாம்.

ஆனால் மேற்படி பிரச்சனையில் அப்பத்திரத்தின் சரண் மதிப்பு கொடுக்கப்படவில்லை. கடன் பெற்றவர் ஒருவேளை தனது காப்பீட்டிற்குரிய முனைமத்தை கட்டவில்லையென்றால், அப்பத்திரம் மதிப்பிழந்துவிடும். அந்நிகழ்வில் வங்கியர் அப்பத்திரத்தை சரண் செய்துதான் தனது கடன் தொகையை வசூலிக்க முடியும். அப்படி சரண் செய்யும் பொழுது, அதன் மதிப்பு, கொடுக்கப்படும் கடன் தொகையை விட அதிகமாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அது ஒரு சிறந்த பிணையமாகும். எனவே அக்காப்பீட்டுப் பத்திரத்தின் சரண் மதிப்பு 10 லட்சமாக இருக்கும் பொழுது, அதன் பேரில் வங்கியர் ரூ. 5 லட்சம் கடன் கொடுக்கலாம்.

மூன்றாவதாக, கோதுமை, அரிசி போன்ற உணவு தானியங்களைப் பிணையமாகப் பெற்று, அதன் பேரில் வங்கியர் கடன் கொடுக்கலாம். கடன் பெற்றவர் தனது கடனைக் கட்ட வில்லையென்றால், பிணையமாக அளிக்கப்பட்ட உணவு தானியங்களை வங்கியர் விற்று, தனது கடனை வசூலித்துக் கொள்ளலாம். அதுபோல் உணவு தானியங்களை சந்தையில் விற்பது எளிது. ஏனெனில், அவை மக்களின் அத்தியாவசிய பண்டமாகும். குறுகிய காலக் கடன்களுக்கு, உணவுத் தானியங்களின் பேரில் கடன் வழங்குதல் வங்கியருக்கு நன்மை தரக்கூடியது.

ஆனால் உணவு தானியங்களைப் முறையாகப் பராமரிக்கவில்லையானால், அழிந்து போகும் தன்மை வாய்ந்தது என்பதையும், அதன் விலை அடிக்கடி மாறக் கூடியதென்பதையும், அவற்றை தீ, காற்று, நீர் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் அளவிற்கு கிடங்கு இருக்க வேண்டும் என்பதையும் வங்கியர் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே மேற்படி பிரச்சனையில் அளிக்கப்படும் கடன் தொகையான ரூ.5 லட்சமானது ஒரு குறுகிய காலத்தில் திரும்பச் செலுத்தத்தக்கதாக இருக்கும் பட்சத்தில், வங்கியர் 8 இலட்சம் மதிப்புள்ள கோதுமையை பிணையமாக ஏற்றுக் கொள்ளலாம். நீண்ட காலக் கடனாக இருப்பின், மேற்சொன்ன இடர்பாடுகளை வங்கியர் சந்திக்க வேண்டி வரும்.

15. பிரச்சனை:

A customer approaches his banker for a loan of Rs.9 lakhs and he is prepared to submit any one of the following as security.

(a) A house worth Rs. 6 lakhs.
(b) A life insurance policy of Rs.9lakhs.
(c) Wheat in godown worth Rs. 7 lakhs.

Which security the banker should accept and why?

ஒரு வாடிக்கையாளர் ரூ.10லட்சம் கடன் வசதி பெற தன் வங்கியாளரை அணுகுகிறார். அவர் கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றை பிணையமாக வைக்க முன் வருகிறார்.

(a) ஒரு வீடு விலை மதிப்பு ரூ.6 லட்சம்.
(b) ஒரு ஆயுள் காப்பீட்டு பத்திரம் ரூ.9 லட்சம்.
(c) கிடங்கில் உள்ள கோதுமை ரூ.7 லட்சம்.

வங்கியாளர் எந்தப் பிணையத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஏன்?

தீர்வு:

இதற்கான தீர்வை இதற்கு முந்தைய பிரச்சனைக்கான தீர்வில் காணவும்.

16. பிரச்சனை:

In the body of a cheque the words "Rupees Seventynine, Twenty-two paise" are written where as the figures read Rs.71.22 p. How should the paying banker deal with such a cheque on presentation?

ஒரு காசோலையின் மீது 'ரூபாய் எழுபத்து ஒன்பது இருபத்து இரண்டு பை' என்று எழுதப்பட்டிருக்கும், எண்ணால் ரூ.71.22 பை எனவும் இருந்தது. அந்தக் காசோலையை சமர்ப்பித்தால், பணம் கொடுக்கும் வங்கியர், எப்படி பணம் வழங்குவார்?

தீர்வு:

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 18–வது பிரிவின்படி, "செலுத்த பொறுப்பேற்றுக் கொண்ட அல்லது ஆணையின்படி செலுத்தப்படத்தக்க ஒரு தொகை, எண்ணாலும் எழுத்தாலும் வேறுபட்ட விதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், எழுத்தால் எழுதப்பட்ட தொகையே செலுத்தப் பொறுப்பேற்றுக் கொண்டதாகும் அல்லது ஆணையின்படி செலுத்தப்படத் தக்கதாகும்". எனவே எழுத்தால் எழுதப்பட்ட தொகையையே, சரியான தொகையாக வங்கியர் எடுத்துக் கொண்டு பணம் வழங்க வேண்டும்.

ஆனால் வங்கியர்கள் தங்கள் வழக்கத்தில் பின்பற்றும் நடைமுறை யாதெனில், அவர்கள் சம்பந்தப்பட்ட அக்காசோலையை, "எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பட்ட தொகை ஒன்றுக்கொன்று மாறுபடுகிறது" எனும் குறிப்புடன் திருப்பிக் கொடுத்துவிடுகின்றனர். மேலும், அக்காசோலையை வரைந்தவரை தொடர்பு கொள்ளும்படியும் அறிவுறுத்துகின்றனர். எனினும் இந்திய வங்கிச் சங்கமானது, மேற் கண்ட சூழலில் மேற்படி பிரிவு 18–ன்படி நடந்து கொள்ளுமாறு வங்கியரைக் கேட்டுக் கொண்டுள்ளனர். எனவே மேற்படி பிரச்சனையை நாம் சட்டப்படி அணுகினால், வங்கியர் மேற்படி பிரிவு 18–ன்படி அக்காசோலையில் எழுத்தால் எழுதப்பட்ட 'ரூபாய் எழுபத்து ஒன்பது இருபத்து இரண்டு பை' எனும் தொகையை, வழங்க வேண்டும்.

17. பிரச்சனை:

A bill is drawn "pay to X or order the sum of one thousand rupees" and in the margin the amount stated is Rs.100. Which will be preferable?

'அ' என்பவர் மாற்றுச் சீட்டு ஒன்று வரைந்தார். 'எக்ஸ்' என்பவருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ ஆயிரம் ரூபாய் கொடுக்கவும்". அந்த சீட்டின் ஓரத்தில் ரூபாயின் மதிப்பு ரூ.100 என்று குறிப்பிட்டு உள்ளது. இதில் எந்தத் தொகை எடுத்துக் கொள்ளப்படும்?

தீர்வு:

நாம் முன்கண்ட பிரச்சனையின் தீர்வின்படி, எழுத்தால் எழுதப்பட்டுள்ள தொகையான 'ஆயிரம் ரூபாய்' என்பதே எடுத்துக் கொள்ளப்படும். (தேர்வில் பிரிவு 18–அய் விவரிக்கவும்.)

18. பிரச்சனை:

A business man approached a bank for a loan. The banker knows his personal repaying capacity, promised to sanction the loan without surety. Is the transaction valid?

ஒரு வியாபாரி கடன் ஒன்றைப் பெறுவதற்காக ஓர் வங்கியை அணுகுகின்றார். கடனைத் திரும்பச் செலுத்தும் அவரது சொந்தத் தகுதியை அறியும் வங்கியாளர், பிணையம் இல்லாமல் கடன் அளிக்க உறுதியுரை அளிக்கிறார். அந்நடைமுறை செல்லுபடியாகுமா?

தீர்வு:

வங்கியர் இருவகைக் கடன்களை அளிக்க அதிகாரம் படைத்தவர். அவை (1) பிணையமில்லாக் கடன்கள்; (2) பிணையக் கடன்கள். இவற்றில் பிணையமில்லாக் கடன் வழங்க, ஒரு வங்கியர், கடன் பெறுபவரின் மூன்று தகுதிகளை எடை போடுதல் வேண்டும். அவை (1) கடனை திரும்பச் செலுத்தும் தகுதி; (2) நன்னடத்தை; (3) மூலதனம். இதில் ஏதேனும் ஒரு தகுதி குறைந்தாலும், வங்கயர் அவருக்கு பிணையில்லாக் கடன் வழங்கக் கூடாது.

மேற்படி பிரச்சனையில், கடன் கோரும் வியாபாரி பணத்தை திரும்பச் செலுத்தத் தகுதியுடையவர் என்று மட்டுமே வங்கியர் அறிந்துள்ளார். அவர் நன்னடத்தையுடையவரா அல்லது அவர் தனது தொழிலில் தனக்கென சொந்த மூலதனம் செய்துள்ளவரா என்பதை இங்கு வங்கியர் அறிந்து கொண்டிருக்கவில்லை. ஒருவர் பணத்தை திரும்பச் செலுத்தும் தகுதியுடையராக இருக்கலாம். ஆனால் அவர் நன்னடத்தை கொண்டவராக இருந்தால்தான், வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வேண்டும் எனும் நல்லெண்ணமும் அவருக்குத் தோன்றும். மேலும் மூலதனம் எதையும் செய்யாமல், வங்கி கொடுக்கவிருக்கும் கடனை மட்டுமே முழுக்க முழுக்க நம்பி, வியாபாரம் செய்ய உத்தேசித்திருப்பவர் ஆபத்தானவர். ஒருவேளை அவரது வியாபாரம் நட்டமடைந்து விட்டால், வங்கி கொடுத்த முழுக்கடனையும் இழக்க வேண்டிய அபாயம் தோன்றும். எனவே கடன் கேட்பவர் தனது வியாபாரம் அல்லது தொழிலில் செய்துள்ள மூலதனத்தை விட அதிகமாக வங்கியர் கொடுக்கக் கூடாது.

மேற்படி பிரச்சனையில் கடன் கோரும் வியாபாரிக்கு முதற் தகுதி மட்டுமே

உள்ளது. மற்ற இரண்டு தகுதிகளும் இல்லை என்று தெரிகிறது. எனவே அவருக்கு பிணையில்லாக் கடன் கொடுக்க வங்கியர் உறுதியுரை அளித்தல் கூடாது. அந்நடைமுறை செல்லாது என்பதே, சற்று கண்டிப்பான விதத்தில் அமைந்த தீர்வாகும்.

19. பிரச்சனை:

Can a banker refuse:

(a) to issue a fresh cheque book to and
(b) to honour cheques to

a customer whose current account is being unsatisfactorily conducted?

ஓர் வங்கியாளர் தன்னுடைய வாடிக்கையாளரின் நடவடிக்கை திருப்திகரமல்லாத போது

(அ) புது காசோலை செல்லேடு வழங்க மற்றும்
(ஆ) காசோலை மதிப்பு வழங்க மறுக்க முடியுமா?

தீர்வு:

ஒரு வங்கியர், தனது வாடிக்கையாளரின் நடவடிக்கை திருப்திகரமானதாக இல்லாத பொழுது, எடுத்துக்காட்டாக, அவ்வாடிக்கையாளர் காசோலைகளை அல்லது மாற்றுச் சீட்டுகளை பொய்யாகப் புனைந்த குற்றத்திற்காக அல்லது கணக்கில் போதிய பணமின்றி காசோலைகளைக் கொடுத்த குற்றத்திற்காக தண்டனை பெற்றிருந்தால் அல்லது கடன்கள் அல்லது அதிகப் பற்றுகளை குறித்த காலத்தில் செலுத்தத் தவறியிருந்தால், அவரது வங்கிக் கணக்கையை முடிக்கும் (closing the account) அதிகாரம் வங்கியருக்கு உள்ளது. எனினும் இவ்வாறு முடிக்கும் முன்பு, வங்கியர் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(a) வங்கியர் கணக்கை முடிக்க விழையும் தனது எண்ணத்தை அவ்வாடிக்கை யாளருக்கு அறிவிப்பு மூலம் தெரிவிக்க வேண்டும். (b) மேற்கண்ட அறிவிப்பைப் பெற்ற பிறகும், அவ்வாடிக்கையாளர் கணக்கை முடிக்கவில்லையானால், அவருக்கு மீண்டும் ஒரு அறிவிப்பை வங்கியர் கொடுக்க வேண்டும். அதில், கணக்கை முடிப்பதற்கு ஒரு இறுதி நாளை நிர்ணயம் செய்து, அந்த தேதியில் கணக்கு முடிக்கப்படவில்லையானால், அதனை தாமே முடித்துவிடுவதாக வங்கியர் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கு இடைப்பட்ட காலத்தில், அவ்வாடிக்கையாளர் அக்கணக்கில் பணம் ஏதும் செலுத்தினால், அதை ஏற்றுக் கொள்ள வங்கியர் மறுக்க வேண்டும். மேலும்

அவருக்கு புதிதாக காசோலைப் புத்தகத்தை வழங்குவதைத் தவிர்த்தல் வேண்டும். இந்நடவடிக்கைகள் வங்கியரை, அவ்வாடிக்கையாளருக்கு பொறுப்பாக்காது. எனினும், அவ்வாடிக்கையாளர் தனது கணக்கின் இருப்பில் உள்ள தொகையின் அளவிற்கு, யாருக்கேனும் காசோலை கொடுத்தால், அதற்குரிய தொகையை அளிக்க வங்கியர் மறுத்தல் கூடாது. போதுமான காரணமில்லாமல், வங்கியர் அவ்வாறு பணம் கொடுக்க மறுத்தால், அவர் 1881–ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 31–வது பிரிவின் கீழ் வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவராகி விடுவர்.

எனவே, மேற்கண்டவாறு ஒரு வாடிக்கையாளரின் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லையெனில், (a) அவர் புதிதாக காசோலைப் புத்தகத்தை வழங்க மறுக்கலாம்; ஆனால் அதே சமயத்தில், (b) அவரது கணக்கில் போதிய பணம் இருக்கும் பொழுது, அவர் வழங்கும் காசோலைகளுக்கு பணம் வழங்க வங்கியர் மறுத்தல் கூடாது என்பதே தீர்வு.

20. பிரச்சனை:

For returning the cheques, mention the reason:

(a) Cheque, dated February 1970 presented on 1st March, 1990

(b) Cheque, dated 3rd June 1979 presented on 4th December, 1979.

காசோலைகளை மறுப்பதன் காரணங்கள் என்ன?

(அ) காசோலை, நாள் பிப்ரவரி 1970 சமர்ப்பித்தது மார்ச் 1, 1990.

(ஆ) காசோலை, நாள் ஜூன் 3, 1979, சமர்ப்பித்தது டிசம்பர் 4, 1979

தீர்வு:

(அ) இதில் அக்காசோலையின் முழுமையான தேதி காணப்படவில்லை. எனவே 'தேதி முழுமையற்றது' (Date Incomplete) எனும் குறிப்புடன் வங்கியரால் மதிப்பு மறுக்கப்பட வேண்டும். இங்கு தேதி என்பதில் சம்பந்தப்பட்ட தினம், மாதம், ஆண்டு ஆகிய மூன்று கூறுகளும் அடங்கி இருக்க வேண்டும். இதில் ஒன்று தவறினாலும் காசோலையின் மதிப்பு, வங்கியரால் மறுக்கப்படும்.

(ஆ) இது ஒரு காலங்கடந்த செல்லாக் காசோலையாகும் (stale cheque). ஒரு காசோலை அதன் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் வரையே செல்லத்தக்கதாகும். இங்கு காசோலையின் தேதி 3–7–1979. இதனை ஆறு மாதங்களுக்குள் அதாவது

3–12–1979–க்குள் செலுத்தலுக்காக சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அக்காசோலை சமர்ப்பிக்கப்பட்ட தேதி 4–12–1979 ஆகும். எனவே செல்லாது.

21. பிரச்சனை:

'A' had a current account in the Indian Bank. He had taken an overdraft of Rs.10,000. In spite of repeated demands from the Bank, he did not pay the amount. But he had a joint saving account with 'B' in the same Bank which had a credit balance of Rs. 15,000. Can the Indian Bank have any right over the joint Savings Account?

'அ' என்பவர் இந்தியன் வங்கியில் ஒரு நடப்பு கணக்கை வைத்திருந்தார். அவர் இருப்புக்கு மேல் பற்றாக ரூ.10000 பெற்றிருந்தார். பலமுறை கோரியும் அவர் பணத்தை செலுத்த வில்லை. ஆனால் 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் அதே வங்கியில் வைத்திருந்த சேமிப்பு கூட்டுக் கணக்கில் கணக்கேட்டின் வரவினத்தில் ரூ.15,000 இருந்தது. இந்தியன் வங்கிக்கு அக்கூட்டுச் சேமிப்பு கணக்கின் மேல் ஏதேனும் உரிமை உள்ளதா?

தீர்வு:

ஒரு வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய கடனுக்காக, அதே வங்கியில் அவர் வைத்திருக்கும் மற்றொரு கணக்கின் இருப்பில் உள்ள தொகையை சரிக்கட்டிக் கொள்ள (right to set-off) சம்பந்தப்பட்ட அவ்வங்கியருக்கு உரிமை உண்டு. ஆனால் அம்மற்றொரு கணக்கு அவரது பெயரில் மட்டும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவ்வாடிக்கையாளரின் கடன் கணக்கையும், இருப்புப் பற்றுள்ள மற்றொரு கணக்கையும் வங்கியர் ஒருங்கிணைத்து (combining the accounts), தனது கடனுக்குரிய தொகையை சரிக்கட்டிக் கொள்ள முடியும். இதற்கு மாறாக அவ்வாடிக்கையாளர் மற்றொருவருடன் கூட்டாக வைத்துள்ள சேமிப்புக் கணக்கின் இருப்பிலிருந்து பணத்தை சரிக் கட்டிக் கொள்ள வங்கியருக்கு உரிமை இல்லை. (மேலும் விளக்கத்திற்கு, பக்கம் எண். 157–அய்க் காண்க.)

22. பிரச்சனை:

'A' was granted and overdraft on his current account. Inspite of repeated notices he did not repay it. Two years later at a different branch of the same bank 'A' opened a savings bank account and deposited money in it. 'A' then issued a cheque drawn on the savings bank account. The banker dishonoured the cheque because, the banker had used the balance in the savings account to wipe off the overdraft. The customer 'A' sued the banker for wrongful dishonour

of the cheque - Decide.

'அ' என்பவருக்கு அவரது நடப்புக் கணக்கின் மீது மேல்வரைப்பற்று தரப்பட்டது. பலமுறை அறிவிப்பிற்கு பிறகும் அவர் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதே வங்கியின் மற்றொரு கிளையில் 'அ' ஒரு சேமிப்புக் கணக்கைத் துவங்கி அதில் பணத்தை செலுத்தினார். பிறகு 'அ' அச்சேமிப்புக் கணக்கின் மீது ஓர் காசோலையை வரைந்து அதனை வெளியிட்டார். வங்கி அக்காசோலை மீது பணம் தர மறுத்தது. ஏனெனில் சேமிப்புக் கணக்கிலிருந்த பணத்தை எடுத்து வங்கி மேல்வரைப் பற்றை நீக்க பயன்படுத்தியது. வாடிக்கையாளரான 'அ' தவறான மதிப்பு மறுப்பிற்கான வழக்கை வங்கி மீது தொடர்ந்தார். தீர்வு செய்க.

தீர்வு:

'அ' என்பவருக்கு மேல்வரைப்பற்றாக வங்கி கொடுத்த தொகையை, அவர் அதே வங்கியின் மற்றொரு கிளையில் துவக்கியுள்ள சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையிலிருந்து வங்கி சரிக்கட்டிக் கொள்ள முடியும். அதாவது மேல்வரைப்பற்றை நீக்க சேமிப்புக் கணக்குத் தொகையை பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்நிலையில் அந்த சேமிப்புக் கணக்கின் மீது 'அ' என்பவர் வரைந்து கொடுக்கும் காசோலையின் மதிப்பை வங்கி மறுக்க உரிமை உள்ளது, இதற்காக அந்த வங்கியை பொறுப்பாக்க முடியாது. எனினும் இவ்வாறு சரிக்கட்டிக் கொள்ள வங்கிக்கு உள்ள உரிமையானது சில நிபந்தனைகளுக்குட்பட்டது. அவை (1) வங்கிக் கணக்குகள் ஒரே பெயரிலும், ஒத்த உரிமையிலும் இருத்தல் வேண்டும்; (2) அச்சமயத்தில் பாக்கி நிற்கும் கடனுக்கு மட்டுமே இவ்வுரிமையை வங்கியர் செயல்படுத்த முடியும். (3) கடனாக நிற்கும் தொகைகள் நிச்சயமானதாக இருக்க வேண்டும். (4) வங்கியரின் இவ்வுரிமைக்கு முரணாக எவ்வொப்பந்தமும் வங்கியருக்கும் வாடிக்கையாளருக்குமிடையே இருத்தல் கூடாது. (5) சரிக்கட்டிக் கொள்ளும் உரிமை, வங்கியரின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும். இந்த நிபந்தனைகள் அனைத்தும் மேற்படி பிரச்சனையில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

எனவே 'அ' என்பவர் தனது காசோலையை வங்கியானது தவறாக மதிப்பு மறுப்பு செய்ததற்காக தொடுக்கும் வழக்கு தோற்றுப்போகும் என்பதே தீர்வு. (மேலும் விரிவாக அறிந்து கொள்ள பக்கம் எண். 157, 158 ஆகியவற்றைக் காண்க.)

23. பிரச்சனை:

A is a customer of Bank B. A drawn a bearer cheque and kept inside a drawer. A came to know that it was missing and immediately, informed to the Banker by phone to 'stop payment' to the

particulat cheque. In the meantime C holder of the cheque received money from the bank at the counter. A filed a suit against the banker for the amount. Can he succeed?

'ஆ' வங்கியில் 'அ' என்பவர் வாடிக்கையாளர். 'அ' என்பவர் ஒரு காசோலை வரைந்து டிராயரில் வைத்திருந்தார். பிறகு 'அ' என்பவருக்கு அந்த காசோலை காணாமல் போனது தெரிய வந்தது. உடனே அவர் 'ஆ' வங்கியாளரிடம் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு, அந்த காசோலைக்கு பணம் கொடுக்கக் கூடாது என்று தெரிவித்தார். அந்த சமயத்தில் 'இ' என்ற காசோலையின் உரியவர் வங்கியரிடத்தில் பணம் கொடுக்கும் இடத்தில் பணம் பெற்றுச் சென்று விட்டார். 'அ' என்பவர் 'ஆ' வங்கியின் மீது அப்பணத்திற்காக வழக்கு தொடுக்கிறார். இவ்வழக்கில் 'அ' வெற்றி பெறுவாரா?

தீர்வு:

ஒரு காசோலைக்கு உண்டான மதிப்பைச் செலுத்த வேண்டாம் என்று அதனை வரைந்தவர், வங்கிக்கு தெரிவித்த பிறகு, அவ்வங்கியர் அதற்கு பணம் அளித்தால் அதற்கு பொறுப்புடையவர் ஆவார். ஆனால் இங்கு காசோலை தொலைந்து போனதற்கும், அதற்கு பணம் அளிக்க வேண்டாம் என்று 'அ' எனும் வாடிக்கையாளர் தொலைபேசி மூலம் அளித்த தகவலுக்கும் இடைப்பட்ட காலத்தில், 'இ' என்பவர் அக்காசோலைக்குண்டான பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார். இங்கு வங்கியரின் மீது ஒரு தவறும் இல்லை. அவர் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் 10–வது பிரிவின்படி அக்காசோலைக்கு உரிய முறையில் தொகை செலுத்தியவர் ஆகிறார். எனவே 'அ' என்பவர் 'ஆ' வங்கியர் மீது தொடுக்கும் வழக்கில் அவர் வெற்றி பெறமாட்டார்.

24. பிரச்சனை:

A executes a promissory note on attaining majority in cosidertion of the money advanced to him while he was a minor. Can A be successfully sued on the Promissory Note?

'அ' என்பவர் தான் இளவராக இருந்த போது பெற்றிருந்த கடனுக்கு அவர் வயது வந்தவுடன் ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்கிறார். கடனாளர் அவர் மீது வழக்கொன்று தொடர்ந்து வெற்றி பெற முடியுமா?

தீர்வு:

கடனாளர் 'அ' எனும் இளவர் மீது வழக்கு தொடர்ந்து வெற்றி பெற இயலாது. அதற்கான காரணங்களும் மேற்கோள் வழக்குகளும் வருமாறு:–

1. ஒரு இளவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் அடிமுதலே இல்லாநிலையது (Void ab initio) என்பது **Mohiri Bibi v. Dharmodas Ghose [(1903) 30 Cal. 539]** எனும் வழக்கில் நன்கு நிலைநிறுத்தப்பட்ட ஒன்று. எனவே 'அ' என்பவர் இளவராக இருக்கும் போது பெற்ற கடன்களுக்காக, அவர் வயது வந்தவுடன் ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்க முடியாது. இதன் அடிப்படையில் கடனாளர் தனது வழக்கில் வெற்றி பெற இயலாது.

2. அதுபோல் ஒருவர் இளவராக இருக்கையில் அவருக்குக் கொடுக்கப்பட்ட மறுபயன் (consideration) (கடன்), ஒரு மறுபயனேயாகாது. இளவரை பொறுப்பாக்க வேண்டுமெனில், அவர் வயது வந்த பிறகு புதிய மறுபயனுக்காக (புதிய கடனுக்காக) புதிய கடனுறுதிச் சீட்டு ஒன்றை அவர் எழுதிக் கொடுத்தல் வேண்டும். அதாவது அவர் வயது வந்த பிறகு கடன் பெற்றதாக அவர் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்க வேண்டும். நமது மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் இளராக இருக்கும் போது கடன் பெற்றுள்ளார். இளவர் நிலையில் பெற்ற கடனுக்காக, அந்த இளவர் வயது வந்த பிறகு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுப்பது செல்லாது. இதன்படியும் கடனாளர் வெற்றி பெற வழியில்லை.

3. ஒருவர் இளராக இருக்கும் போது அவர் செய்து கொண்ட ஒப்பந்தங்களை (இங்கு கடன் பெற்றது ஒரு ஒப்பந்தமே), அவர் வயது வந்த பிறகு ஏற்புறுதி (ratification) செய்ய முடியாது. இளவர் ஒப்பந்தங்களில் மாறிச் சென்ற மறுபயன், அவர் வயது வந்த பிறகு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மறுபயனாக எடுத்துக் கொள்ள முடியாது. **(Nazir Ahmed v. Jiwan Dass AIR 1938 Lah. 159).**

மேற்சென்றதன் அடிப்படைகளில் கடனாளரின் வழக்கு தோற்றுப் போகும்.

25. பிரச்சனை:

A firm having A, B and C as partners enjoys an overdraft limit of Rs. 1 lakh with the bank. A communication is received by the bank that A died on 20th April 1964. Two cheques signed by the deceased partner on 18th April 1964 are presented for payment. Bank dishonour the two cheques. Decide.

ஒரு கூட்டாண்மையில் அ, ஆ, இ என்பவர் கூட்டாளிகளாக ஒரு வங்கியில் ஒரு லட்ச ரூபாய்க்கு வங்கிக் கணக்கில் இருக்கும் பணத்திற்கு அதிகமாக காசோலை வரையும் உரிமையைப் பெற்றுள்ளனர். அ என்பவர் இறந்துவிட்டார் என்ற செய்தி 20–ஆம் தேதி ஏப்ரல் மாதம் 1964–ம் வருடம் வங்கிக்கு கிடைக்கிறது. இறந்த கூட்டாளி அ 18–4–1964 அன்று வரைந்த இரண்டு காசோலைகள் பணம் பெறுவதற்காக வங்கியில் செலுத்தப்படுகிறது. வங்கி அந்த காசோலைகளை நிராகரித்துவிட்டது.

தீர்மானிக்க.

தீர்வு:

வங்கி அந்த காசோலைகளை நிராகரித்தது நியாயமே. வங்கியின் செயல் செல்லத்தக்கதே. அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. பொதுவாக கூட்டாண்மையின் கூட்டாளி ஒருவரின் இறப்பினால் அக்கூட்டாண்மை கலைக்கப்பட்டதாகிறது. இது கூட்டாளியின் இறப்பால் ஏற்படும் சட்ட விளைவு. மேற்படி பிரச்சனையில் அ எனும் கூட்டாளி இறந்துவிட்டார்.

2. கூட்டாளியின் இறப்பின் போது, அவரது கூட்டாண்மைக்கு வங்கிக் கணக்கில் கடன் பாக்கி இருந்தால், அக்கணக்கு இயக்கப்படுவதை முதற்கண் வங்கியர் நிறுத்த வேண்டும். அப்போதுதான் இறந்துபோன கூட்டாளிக்கு உள்ள கடன் பொறுப்பை தீர்மானிக்க இயலும். அதற்கு அவரது சொத்துக்கள் எந்த அளவிற்கு பொறுப்பாகும் என்பதையும் கண்டறிய முடியும்.

3. வாடிக்கையாளரின் இறப்பு குறித்து அறிவிப்பு ஏதும் வங்கிக்கு கிடைக்கப் பெற்றால், அவர் வரைந்த காசோலைகளுக்கு பணம் செலுத்த வங்கியருக்கு உள்ள அதிகாரம் முடிவுக்கு வருகிறது. இங்கு கூட்டாண்மையின் கூட்டாளிகள் அனைவரையும் வங்கியரின் வாடிக்கையாளர்களாகவே சட்டம் அனுமானிக்கிறது. எனவே அ எனும் கூட்டாளி தனது இறப்பிற்கு முன் வரைந்த இரண்டு காசோலைகளுக்கு பணம் செலுத்த வங்கியர் மறுத்ததும், அவற்றை நிராகரித்ததும் சரியானதே. அதற்காக வங்கியரை பொறுப்புக்குள்ளாக்க முடியாது என்பதே இங்கு தீர்வு.

26. பிரச்சனை:

One clerk of a partnership firm, whose duty it was to prepare cheques, has drawn a cheque for £ 2 but space was left between £ and the figure "2". After getting the cheque signed by the partner the clerk raised the amount of the cheque and place the figure '1' and '0' on either side of teh figure "2" thus producing a figure of £ 120. He presented the cheque received the payment and absconded with the money. The firm pleaded that their account should not have been debited with £ 120. Decide.

ஒரு கூட்டாண்மையின் வங்கிக் கணக்கிற்கு கூட்டாளிகள் சார்பாக காசோலைகள் வரைந்து கூட்டாளியின் கையொப்பம் பெறுவது ஒரு எழுத்தரின் வேலையாக இருந்து வந்தது. அந்த எழுத்தர் ஒரு காசோலையை வரைந்தார். வரையும்

போது £ 2 என வரைந்து £ன் பக்கத்திலும் 2ன் பக்கத்திலும் இடைவெளி விட்டு வரைந்து கூட்டாளியின் கையொப்பத்தை பெற்ற பிறகு இடைவெளிக்கு மத்தியில் '1' மற்றும் '0' என்ற எண்ணை நிரப்பி காசோலையை £ 120க்கு மாற்றி வங்கியில் செலுத்தி காசோலைக்கு பணத்தை பெற்றுவிட்டு தலை மறைவாகிவிட்டார். கூட்டாளிகள் நிறுமத்தின் கணக்கில் £2 மட்டுமே கழிக்க வேண்டும் என வாதிடுகின்றனர். தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை **London Joint Stock Bank v. Macmillan [(1918) A.C. 777]** எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றி அமைந்துள்ளது. எனவே இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க மேற்படி வழக்கில் இங்கிலாந்தின் நீதிப்பெருமகனார்கள் அவை என்ன கூறியது என்பதை முதற்கண் கவனிக்க வேண்டும். அதன் கூற்றுப்படி,–

1. காசோலையை வரையும் போது வாடிக்கையாளர் கவனமாக இருக்க வேண்டும். நியாயமான வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும். இல்லாது போனால், அது மற்றவர் அக்காசோலையை பொய்யாகப் புனைய (forgery) வழிவகுத்து விடும். காசோலையில் குறிப்பிடப்பட்ட தொகையை பொய்யாக அதிகரிக்கச் செய்வதற்கு ஏதுவாக அல்லது அதற்கு அழைப்பு விடுக்கத்தக்க வகையில் ஒரு காசோலை வரையப்பட்டிருந்தால், அத்தகு பொய்யாவணம் புனைதலுக்கு காசோலை வரைந்தவரின் கவனக்குறைவே காரணமாகும்.

2. வாடிக்கையாளர் ஒருவர் தனது அலுவலக எழுத்தரின் மீது கொண்ட அதீத நம்பிக்கையின் காரணமாக, வழக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால், பின்னிட்டு ஏற்படும் இழப்புகளுக்காக வங்கியரைக் பொறுப்பாக்க முடியாது. அதற்காக கோரிக்கை எதையும் அவர் வங்கியரிடம் செய்யவும் முடியாது.

இந்த தீர்ப்பு நெறியின் அடிப்படையில் மேற்கண்ட பிரச்சனையை அணுகினால், நமக்கு தீர்வு கிடைத்துவிடும்.

1. அதாவது மேற்படி பிரச்சனையில், வாடிக்கையாளரானவர் (கூட்டாளிகள்) ' 2' எனும் எண்ணுக்கு இருபுறமும் ' = ' எனும் குறி இடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு எழுதியிருந்தால், அத்தொகை '£ = 2 = ' என்று அமைந்திருக்க வேண்டும். ஆனால் கூட்டாளிகள்

யாரும் இதைக் கவனிக்கவில்லை; கவனக்குறைவாக இருந்துவிட்டனர். அவர்களது எழுத்தர் மேற்படி எண்ணுக்கு இருபுறமும் இடைவெளியிட்டு எழுதியுள்ளார். இது அத்தொகையை பொய்யாகத் திருத்த வழி வகுத்துவிட்டது.

2. கூட்டாளிகளின் மேற்படி கவனக்குறைவின் காரணமாக, அவர்களது எழுத்தர் '2' எனும் எண்ணுக்கு இருபுறத்தில் உள்ள இடைவெளியைப் பயன்படுத்தி அந்த எண்ணுக்கு வலது புறம் '1' என்ற எண்ணையும், இடது புறத்தில் '0' என்ற எண்ணையும் எழுத வசதியாகிவிட்டது. இதனால் அத்தொகை '£120' என்று தோன்றத் தக்க வகையில் ஆகிவிட்டது.

3. கூட்டாளிகளின் இந்த கவனக்குறைவே அவர்களது எழுத்தர் காசோலையை பொய்யாகப் புனைய அழைப்பு விடுக்கும் வண்ணம் அமைந்துவிட்டது. எனவே இதற்கு வங்கியைப் பொறுப்பாக்க முடியாது.

4. வேண்டுமானால், அக்கூட்டாளிகள் தலைமறைவாகிப் போன தங்கள் எழுத்தரின் மீது புகார் கொடுத்து அவரிடமிருந்து உபரித் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

27. பிரச்சனை:

Two cheques were drawn by a customer for Rs.1,000 and for Rs.500 are presented at the same time and the customers balance is sufficient to honour the cheque for Rs.500 only. Bank dishonours both the cheque. Decide.

இரண்டு காசோலையில் ஒரு வாடிக்கையாளரால் ரூபாய் 1,000, ரூபாய் 500 என வரையப்பட்டு இரண்டும் ஒரே சமயத்தில் பணம் பெறுவதற்காக வங்கியில் செலுத்தப்படுகிறது. வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள பணம் ரூபாய் 500 காசோலைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது. வங்கி இரண்டு காசோலைகளையும் நிராகரித்துவிடுகிறது. தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் வங்கி இரண்டு காசோலைகளையும் நிராகரித்தது சரியே. அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. இப்பிரச்சனையில் வாடிக்கையாளரின் கணக்கில் ரூ.500 இருப்பு உள்ளது. இந்நிலையில் ரூ.1000, ரூ.500 என இரண்டு காசோலைகள் அவரால் வரையப்பட்டு செலுத்துகைக்காக முன்னிடப்படுகிறது. இங்கு முக்கியமாக அக்காசோலைகள் வங்கியில் முன்னிடப்பட்ட நேரத்தை நாம் கவனிக்க வேண்டும். அதாவது மேற்கண்ட சூழலில் வங்கியியல் நடைமுறையின்படி இரண்டு காசோலைகள்

ஒரே நேரத்தில் வங்கியில் முன்னிடப்பட்டால், அவ்விரண்டையும் நிராகரிக்க வங்கி உரிமை படைத்தது.

2. இங்கு அவ்விரண்டு காசோலைகளின் மதிப்பையும் வங்கியானது ஒன்றாகக் கூட்டிக் கொள்கிறது. அப்போது அதன் மதிப்பு ரூ.1500 வருகிறது. ஆனால் இதற்கு செலுத்துகை செய்ய வாடிக்கையாளரின் கணக்கில் இருப்பதோ, ரூ.500 மட்டுமே. எனவே அவ்விரண்டு காசோலைகளையும் வங்கி நிராகரித்தது நியாயமே.

3. ஒருவேளை ரூ.500க்கான காசோலை மட்டும் வங்கியில் முன்னிடப்பட்டிருந் தால், அதற்கு செலுத்துகை செய்ய வங்கி மறுக்க முடியாது. அதற்கான இருப்பு வாடிக்கையாளரின் கணக்கில் உள்ளது.

28. பிரச்சனை:

A draws a cheque in favour of B, a minor. B endorses it in favour of C. The cheque is dishonoured by the bank. Discuss the rights of C.

B என்கிற ஓர் இளவரின் பேரில் A, ஒரு காசோலையை எழுதுகிறார். அதை Cயின் பேரில் மேற்குறிப்பு செய்து B கொடுக்கிறார். வங்கியினால் காசோலை ஏற்க மறுக்கப்படுகிறது. Cயின் உரிமைகளை விவாதிக்க.

தீர்வு:

காசோலையை தவறாக ஏற்க மறுத்ததற்காக வங்கிக்கு எதிராக C வழக்கிட முடியும். அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 26–இன்படி, "இளவர் ஒருவர் மாற்று முறையாவணம் ஒன்றை வரையலாம், மேற்குறிப்பிடலாம், வழங்கலாம் மற்றும் மாற்றலாம்". எனவே காசோலை ஒன்றை இளவர் செல்லத்தக்க வகையில் வரையலாம். அதுபோல் மேற்குறிப்பு செய்யலாம்.

2. மேற்படி பிரச்சனையில் A என்பவர் B என்ற இளவருக்கு காசோலை ஒன்றை வரைந்து கொடுக்கிறார். அதை அந்த இளவர் C என்பவருக்கு மேற்குறிப்பு செய்து கொடுக்கிறார். மேற்படி பிரிவின்படி இவ்வாறு செய்து கொடுக்க B எனும் இளவருக்கு அதிகாரம் உள்ளது. எனவே மேற்குறிப்பு செய்யப் பெற்ற C என்பவர் (அ) காசோலையை மறுத்ததற்காக வங்கியின் மீது இழப்பீடு கோரி வழக்கிடலாம்; அல்லது (ஆ) காசோலை வரைந்து கொடுத்த B எனும் இளவரிடமும் காசோலைத் தொகைக்கான கோரிக்கையை வலியுறுத்தலாம். இதுவே C-யின் உரிமைகள்.

இன்று எத்தனையோ வணிக வங்கிகள் இளவரின் பெயரில் வங்கிக்

கணக்குகள் தொடங்க அனுமதிக்கின்றன. அக்கணக்கை அவர்களே இயக்கவும் முடியும். வயது வரம்பைப் பொறுத்த வரை, இளவருக்கு 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதிற்குரியராக இருக்க வேண்டும்.

29. பிரச்சனை:

X draws a bill on Y and negotiates it to Z. Y is fictious person. Can Z treat it as a promissory note made by X?

X என்பவர் Yயின் மீது மாற்றுச் சீட்டு ஒன்று வரைந்து அதனை Z என்பவருக்கு அளிக்கின்றார். ஆனால் Y என்பவர் உண்மையான நபர் அல்ல. எனவே Z என்பவர் அச்சீட்டினை ஒரு கடனுறுதிச் சீட்டாகக் கருதலாமா?

தீர்வு:

X என்பவர் Y–யின் மீது வரைந்தும் Z என்பவருக்கு அளித்ததுமான மாற்றுச் சீட்டை Y உண்மையான நபர் அல்ல என்பதால் அதனைப் பெற்ற Z என்பவர் அதை ஒரு கடனுறுதிச் சீட்டாக கருத முடியும். அதற்கு சட்டத்தில் இடமுண்டு. அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. மாற்றுச் சீட்டை வரைந்த X –ன் பொறுப்பானது, அதை ஏற்கக் கூடிய Y என்பவர் ஒரு உண்மையான நபர் (கற்பனை நபர்) அல்ல என்று மாறும்போது எழுகிறது. இந்நிகழ்வில், மாற்றுச் சீட்டை வரைந்த X ஆனவர் கடனாளியாகிறார். அதாவது மாற்றுச் சீட்டின் பேரில் தொகை செலுத்த வேண்டியவராகிறார். அதே போல் Z என்பவர் கடனீந்தவராகிறார். அதாவது தொகை செலுத்தப்பட வேண்டியவராகிறார். இங்கு தொகை செலுத்தப்படுவதில் நிபந்தனை ஏதுமில்லை. அதாவது கோரப்படுவதன் பேரில் தொகை செலுத்தப்பட வேண்டும் (payment on demand). எனவே இங்கு மேற்படி மாற்றுச் சீட்டானது ஒரு கடனுறுதிச் சீட்டிற்கான அம்சங்கள் பெற்றதாக ஆகிறது. இதனை மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 17–இன்படி வைத்திருப்பவர் அல்லது செலுத்தப் பெறுநர் (Z), ஒரு கடனுறுதிச் சீட்டாக கருதலாம் (பாவிக்கலாம்).

2. மேற்படி பிரிவு 17–ஆனது, "முறையாவணம் ஒன்று கடனுறுதிச் சீட்டா அல்லது மாற்றுச் சீட்டா என்று பொருள் கொள்ளப்பட வேண்டியவிடத்து, அதை வைத்திருப்பவர் தனது தேர்வுரிமையின் (holder may at his election) அடிப்படையில் அம்முறையாவணத்தை அவ்விரண்டில் ஒன்றாக பாவிக்கலாம். அதன் பிறகு அம்முறையாவணம் அவ்வாறே கருதப்படுதல் வேண்டும்."

3. மாற்று முறையாவணங்கள் சட்டம் பிரிவு 91–இன்படி, "வரையப் பெற்றவர் ஒரு கற்பனையான நபராக இருக்குமிடத்து, அந்த மாற்றுச் சீட்டை

ஏற்புக்காக முன்னிடாமலேயே மதிப்பு மறுக்கப்பட்டதாக கருத முடியும் (can be treated as dishonoured even without presentment for acceptence)"

எனவே முறையாவணம் வரையப் பெற்றவர் அது வரைந்தவரிடமிருந்து நேரடியாக தொகை கோரலாம்.

30. பிரச்சனை:

In the body of a cheque the words Rupees Sixty five forty four paise are written where as the figures read as Rs.61.44. Paise. How should the paying banker deal with such a cheque on presentation?

ஒரு காசோலையின் மீது ரூபாய் அறுபத்து ஐந்து நாற்பத்து நான்கு காசு என்று எழுதப்பட்டிருந்தும், அதே சமயம் எண்ணால் ரூ. 61.44 காசு எனவும் இருந்தது. அந்த காசோலையை சமர்ப்பித்தால் பணம் கொடுக்கும் வங்கியர் எப்படி பணம் வழங்குவார்?

தீர்வு:

இதற்கான தீர்வை பிரச்சனை எண். 16–இல் காண்க.

31. பிரச்சனை:

A firm having A, B and C as partners enjoys an overdraft limit of Rs. 5 lakhs with the bank. A communication is received by the bank that A died on 25th May 1980. Two cheques signed by the deceased partner on 20th May 1980 are presented for payment. Bank dishonours the two cheques. Decide.

ஒரு கூட்டாண்மையில் அ, ஆ, இ என்பவர் கூட்டாளிகளாக ஒரு வங்கியில் ஐந்து லட்ச ரூபாய்க்கு வங்கி கணக்கில் இருக்கும் பணத்திற்கு அதிகமாக காசோலை வரையும் உரிமையை பெற்றுள்ளானர். அ என்பவர் இறந்து விட்டார் என்ற செய்தி 25 ஆம் தேதி மே மாதம் 1980 ஆம் வருடம் வங்கிக்கு கிடைக்கிறது. இறந்த கூட்டாளி 'அ' 20.05.1980 அன்று வரைந்த இரண்டு காசோலைகள் பணம் பெறுவதற்காக வங்கியில் செலுத்தப்படுகிறது. வங்கி அந்த காசோலைகளை நிராகரித்து விட்டது தீர்மானிக்க.

தீர்வு:

இதற்கான தீர்வை பிரச்சனை எண். 25–இல் காண்க.

32. பிரச்சனை:

A draw a cheque for Rs. 500 in favour of B on 1.1.1969 and gave it to him on the same day. The cheque was presented for payment on 15.06.1969. In the mean time the bank had failed in May 1969. Discuss the legal position of 'B's recourse against A and the bank for recovering the amount.

'அ', 'ஆ' விற்காக ரூபாய் 500க்கு காசோலை ஒன்றை 01.01.1969 ஆம் தேதி வரைகிறார். அந்த காசோலையை 'ஆ' 15.06.1969 பணம் பெறுவதற்காக வங்கியில் முன்னிலைப் படுத்துகிறார். இதற்குள்ளாக மே மாதம் 1969ல் வங்கி செயலிழந்து விடுகிறது. 'ஆ' விற்கு காசோலை வரைந்த 'அ' விடமிருந்தும் வங்கியிடமிருந்தும் பணம் பெறுவதற்கான சட்டநிலையினை ஆராய்க.

தீர்வு:

'அ' –விடமிருந்தும், வங்கியிடமிருந்து பணம் பெறுவதற்கான 'ஆ' –வின் சட்ட நிலை வருமாறு:–

1. மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவுகள் 64, 72 மற்றும் 73–இன்படி காசோலை ஒன்றை வைத்திருப்பவர் அது கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு நியாயமான காலத்திற்குள் வங்கியில் முன்னிலைப்படுத்த வேண்டிய கடமை கொண்டவர். நமது மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் பெயரில் 01.01.1969–ஆம் தேதியில் காசோலை ஒன்றை வரைகிறார். ஆனால் அவர் அதனை சுமார் அய்ந்து மாதங்கள் கழித்து அதாவது 15.06.1969–ஆம் தேதியில் தொகை பெறுவதற்காக வங்கியில் முன்னிடுகிறார். காசோலை ஒன்றை அது வரையப்பட்ட தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் பணம் பெறுவதற்காக வங்கியில் முன்னிடப்பட வேண்டும். இங்கு அந்த 6 மாத காலம் 01.07.1969–ஆம் தேதியுடன் முடிகிறது. நமது மேற்படி பிரச்சனையில் இந்த காலத்திற்குள்ளாகவே 'ஆ' என்பவர் காசோலையை முன்னிலைப் படுத்தி விடுகிறார். இதற்கு பணம் பெறுவதற்கான உரிமை 'ஆ'–க்கு சட்டப்படி உள்ளது. ஆனால் பிரச்சனையில் கூறப்பட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட வங்கியானது 1969, மே மாதமே செயலிழந்து விடுகிறது. அதாவது 'திவாலாகிவிட்டது' என்று கொள்வோம். இந்தச் சூழலில் 'ஆ'–வின் மேற்படி உரிமையில் ஒரு சிறு மாற்றம் ஏற்படுகிறது.

2. பிரிவு 84–இன்படி, காசோலை வைத்திருப்பவர் அதனை வங்கியில் முன்னிலைப் படுத்துவதில் கால தாமதம் செய்திருந்து, அதற்குள் வங்கி செயலிழந்துவிட்டால், அதற்கு வங்கி தான் பொறுப்பே தவிர, காசோலை வரைந்தவர் பொறுப்பல்ல. நமது பிரச்சனையின்படி, காசோலைக்கு பணம் கிடைக்காத

காரணத்தால் 'ஆ' என்பவர் அடைந்த உள்ளபடியான இழப்பிற்கு (actual loss) அவருக்கு காசோலை வரைந்து கொடுத்த 'அ' என்பவர் பொறுப்பாக மாட்டார். மாறாக வங்கியே பொறுப்பு.

3. ஒரு காசோலையானது அதனை வரைந்தவருக்கும் அவரது வங்கிக்கும் இடையில் உள்ள உறவு நிலையில் மாற்றம் ஏற்படுவதற்கு முன் முன்னிடப்பட வேண்டும். நமது மேற்படி பிரச்சனையில் வங்கி செயலிழந்து போனதால் காசோலை வரைந்தவருக்கும் அந்த வங்கிக்கு இடையிலான உறவு நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. அதற்குப் பின்னிட்டே கால தாமதமாக 'ஆ' என்பவரால் காசோலை முன்னிடப்படுகிறது. எனவே இதற்கு வங்கியர்தான் பொறுப்புடையவர்.

4. காலதாமதம் ஏதுமின்றி காசோலையில் கண்ட தேதியில் அல்லது வழக்கமான நடைமுறையில் (in its ordinary course) அது முன்னிடப்பட்டிருந்து அதற்கு பணம் செலுத்த வங்கியர் மறுத்திருந்தால் அல்லது செயலிழந்து போயிருந்தால், அங்கு காசோலை வரைந்து கொடுத்தவரே பொறுப்பு.

5. மேற்படி பிரச்சனை மாற்று முறையாவணங்கள் சட்டம் பிரிவு 84–இன் கீழான (அ) எனும் எடுத்துக்காட்டை அடியொற்றி அமைந்த ஒன்றாகும்.

33. பிரச்சனை:

State whether a banker should honour or dishonour a cheque under the undermentioned circumstances.

பின்வரும் சூழல்களில் வங்கியர் காசோலை மீது பணம் தர வேண்டுமா அல்லது மதிப்பு மறுப்பு செய்ய வேண்டுமா என்பதை குறிப்பிடுக.

(a) **an undated cheque is presented for payment.**

தேதியிடப்படாத காசோலை பணம் பெறப்படுவதற்காக வங்கியரிடம் வழங்கப்படுகிறது.

(b) **a cheque is presented for payment after business hours.**

வணிக நேரத்திற்குப் பிறகு காசோலை வங்கியரிடம் பணம் பெறுவதற்காக வழங்கப்படுகிறது.

(c) **a post dated cheque is presented for payment.**

பின் தேதியிட்ட காசோலை அத்தேதிக்கு முன்னால் வங்கியிடம் பணம் பெற வழங்கப்படுகிறது.

(d) a cheque presented for payment after the drawer had countermanded payment

காசோலை வரைந்தவர் அதன் மீது பணம் தர வேண்டாம் என வங்கியருக்கு தெரிவித்த பிறகு காசோலை பணம் பெறப்படுவதற்காக வங்கியரிடம் வழங்கப்படுகிறது.

தீர்வு:

(அ) தேதியிடப்படாத காசோலை பணம் பெறப்படுவதற்காக வங்கியரிடம் வழங்கப்படுகிறது:

இப்படிப்பட்ட காசோலைக்கு வங்கி பணம் வழங்கக்கூடாது. ஏனெனில், வங்கியில் முன்னிடப்படும் காசோலையில் தேதி இடப்பட்டிருக்க வேண்டும் என்பது வங்கியியல் நடைமுறைப்படி கட்டாயமானதாகும். அப்போதுதான் அந்தக் காசோலை அந்த தேதியிலிருந்து செல்லத்தக்கதாக சட்டப்படியாக மாறுகிறது. காசோலை வரைபவர் தேதி எதையும் இடாமல் ஒரு காசோலையை மற்றொருவருக்குக் கொடுக்கலாம். இது அக்காசோலையை செல்லாத ஒன்றாக ஆக்கிவிடாது. அக்காசோலையில் குறிப்பிடப்பட்ட செலுத்தப் பெறுநரோ (payee) அல்லது அக்காசோலையை பின்னிட்டு வைத்திருப்பவரோ (subsequent holder) அதில் தேதியை இட்டு வங்கியில் முன்னிடலாம். கணக்கில் போதிய பணம் இருந்தால், இக்காசோலைக்கு வங்கி பணம் வழங்கப் பொறுப்புடையது. ஆனால் தேதியே இடப்படாமல் ஒரு காசோலை வங்கியரிடம் வழங்கப்பட்டால், அதற்கு வங்கி பணம் வழங்கக் கூடாது. அதற்கு பணம் செலுத்த மறுக்க வேண்டும்.

(ஆ) வணிக நேரத்திற்குப் பிறகு காசோலை வங்கியரிடம் பணம் பெறுவதற்காக வழங்கப்படுகிறது:

வங்கியின் அலுவல் (வணிக) நேரத்திற்குள் ஒரு காசோலையானது பணம் பெறுவதற்காக முன்னிடப்பட வேண்டும். அதாவது ஒரு காசோலை வங்கியின் வேலை நாளிலும், அதன் அலுவல் நேரத்திற்குள் முன்னிடப்படும் போதுதான் (Cheque must be presented on a working day and during banking hours) அதற்கு வங்கியர் பணம் வழங்க வேண்டும்.

இது குறித்து மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 65–ஆம் பிரிவு கூறுகையில், "செலுத்துகைக்கான முன்னிடலானது அலுவலின் வழக்கமான நேரத்தின் போது செய்யப்பட வேண்டும், மேலும் அது ஒரு வங்கியில் என்றால், வங்கியின் நேரத்திற்குள் முன்னிடப்பட வேண்டும்", (Presentment for payment must be made during the usual hours of business, and, if at a banker's, within banking hours - **Section 65 of Negotiable Instruments**

Act) என்று கூறுகிறது.

Baines v. National Provincial Bank, (1927) 32 Comp. Cas. 216 எனும் வழக்கில் நிலைநிறுத்தப்பட்ட விதியின்படி, வங்கி மூடப்படும் நேரத்தை கடிகார முள் தொட்டவுடன் அது தனது அலுவல் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. எனினும் அலுவல் (வணிக) நேரத்திற்குப் பிறகு காசோலை ஒன்று வங்கியரிடம் பணம் பெறுவதற்காக முன்னிடப்பட்டால் (வழங்கப்பட்டால்), அதற்கு பணம் செலுத்த வங்கியர் மறுத்தல் வேண்டும். இதற்குக் காரணம், வங்கியின் அலுவல் நேரத்திற்குப் பிறகு பணம் வழங்கப்பட்ட காசோலையின் மீது பணம் வழங்க வேண்டாம் என்று அதனை வரைந்தவர் அதற்கு அடுத்த நாள் காலை வங்கிக்கு அறிவுறுத்தக் கூடும். அப்போது வங்கி பொறுப்பாகக் கூடிய அபாயம் உள்ளது.

எனவே முடிவாக அலுவல் நேரத்திற்குப் பிறகு முன்னிடப்படும் காசோலைக்கு வங்கியானது பணம் செலுத்த மறுக்க வேண்டும்.

(இ) பின் தேதியிட்ட காசோலை அத்தேதிக்கு முன்னால் வங்கியிடம் பணம் பெற வழங்கப்படுகிறது:

பின் தேதியிட்ட காசோலைக்கு அத்தேதிக்கு முன்னால் வங்கி பணம் செலுத்தக் கூடாது. அப்படி செலுத்தினால் வங்கியானது காசோலை வரைந்து கொடுத்தவருக்கு பொறுப்பாக நேரிடும். அதற்கான காரணங்கள் வருமாறு:–

(1) எந்த தேதியில் அக்காசோலைக்கு பணம் செலுத்தப்பட வேண்டுமோ அதற்கு முன்னதாக அக்காசோலைக்கு வங்கி பணம் செலுத்தியிருந்து, காசோலைத் தேதியில் அதனை வரைந்து கொடுத்த வாடிக்கையாளர் அதற்கு பணம் செலுத்த வேண்டாம் என்று வங்கிக்கு அறிவுறுத்தினால், வங்கி தனது பணத்தை இழக்கும்.

(2) காசோலைத் தேதிக்கு முன்னதாக வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து அக்காசோலைத் தொகையை செலுத்த வங்கிக்கு உரிமையில்லை. இப்படி செய்தால் வங்கியானது பின் விளைவுகளுக்குப் பொறுப்பாக நேரிடும். எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளர் ஒருவர் ரூ.500/–க்கு வரையும் காசோலையில் 12–3–1989 என்ற தேதியை இடுகிறார். அவரது கணக்கில் ரூ.600/– இருப்பு உள்ளது. இந்நிலையில் அக்காசோலையானது முன்னதாகவோ அதாவது 2–3–1989–ஆம் தேதியிலேயே செலுத்துகைக்காக முன்னிடப் படுகிறது. அதற்கு வங்கியும் பணம் வழங்கிவிடுகிறது. இதனால் வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள இருப்பு ரூ.600/–லிருந்து ரூ.100/–ஆகக் குறைகிறது. பின்னிட்டு அதே வாடிக்கையாளர் 2–3–1989–ஆம் தேதியிட்ட ரூ.300/–க்கு இரண்டாவதாக காசோலை ஒன்றை வரைகிறார். அதனை 3–3–1989–ஆம் தேதியில் செலுத்துகைக்காக வங்கியில் முன்னிடுகிறார். இதற்கு பணம் செலுத்த

வாடிக்கையாளரின் கணக்கில் இருப்பு இருக்குமா? இருக்காது. அதில் தற்போது இருப்பது ரூ.100/– மட்டுமே. எனவே இரண்டாவதாக வரையப்பட்ட ரூ.300/–க்கான காசோலைக்கு "போதிய பணமில்லை" என்ற காரணத்தின் அடிப்படையில் அதன் மதிப்பை வங்கி மறுக்க வேண்டும். இங்கு இரண்டாவதாக வழங்கப்பட்ட காசோலைக்கு தவறாக மதிப்பு மறுப்பு செய்ததற்காக வங்கியானது வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டி வரும்.

(3) பின் தேதியிட்ட காசோலை ஒன்றிற்கு முன் தேதியில் வங்கியானது பணம் வழங்கிவிட்டிருந்து, அக்காசோலை முதிர்வடையும் தேதி வரை (அதாவது அந்தப் பின் தேதி வரை) அதனை வங்கி வைத்திருந்து, வதற்கு முன்னதாக அக்காசோலையை வரைந்த வாடிக்கையாளர் நொடிப்பு நிலை எய்தினால், புத்தி சுவாதீனமற்றவரானால் அல்லது இறந்து விட்டால், வங்கிக்கு சிக்கல்தான். காசோலைக்குரிய தொகையை அந்த வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து குறைக்க முடியாது.

(4) பின் தேதியிட்ட காசோலைக்கு அதற்கு முந்தைய தேதியில் பணம் செலுத்தும் வங்கிக்கு சட்டப்படியான பாதுகாப்பு ஏதும் இல்லை. அவ்வங்கி, அக்காசோலைக்கு முறைப்படி பணம் செலுத்தியதாக (Payment in due course) கூற முடியாது. (எனினும் ஒரு காசோலை உள்ளபடியே பின் தேதியிட்டு வழங்கப்பட்டிருந்து, அது அத்தேதியிலோ, அத்தேதிக்குப் பின்னரோ முன்னிடப் பட்டால், அது ஒரு பின் தேதியிடப்பட்ட காசோலை என்பதன் அடிப்படையில், அதற்கு பணம் செலுத்த வங்கி மறுக்க முடியாது.).

எனவே பின் தேதியிடப்பட்ட காசோலைக்கு அத்தேதிக்கு முன்னரே வங்கி பணம் செலுத்தக் கூடாது என்பது திட்டவட்டமான தீர்வாகும்.

(ஈ) காசோலை வரைந்தவர் அதன் மீது பணம் தர வேண்டாம் என வங்கியருக்கு தெரிவித்த பிறகு காசோலை பணம் பெறப்படுவதற்காக வங்கியரிடம் வழங்கப்படுகிறது:

தான் வழங்கிய காசோலைக்கு பணம் செலுத்த வேண்டாம் என்று வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக்கு தெரிவித்தால், அதற்கு வங்கி பணம் செலுத்தக் கூடாது. இதற்காக அந்த வாடிக்கையாளர் தனது வங்கிக்கு தெளிவான வாசகங்கள் கொண்ட கடிதம் ஒன்றைக் கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டும். மேலும் எந்தக் காசோலைக்கு பணம் செலுத்த வேண்டாம் என்பதை குறிப்பிடுவதற்கு அந்தக் காசோலையின் தேதி, எண் மற்றும் தொகை யாருக்கு செலுத்தப் பெற வேண்டுமோ அவரது பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். வங்கியில் 'போதிய பணமில்லை' (Funds insufficient) என்பதால் காசோலையின் மதிப்பு மறுக்கப்படுவதைத்

நைச்சியமாக தவிர்க்க வாடிக்கையாளர் அக்காசோலைக்கு பணம் செலுத்த வேண்டாம் என்று வங்கிக்கு அறிவுறுத்தினால், செலுத்தப் பெறுநருக்கு (அதாவது காசோலை வரையப் பெற்றவருக்கு) அந்த வாடிக்கையாளர் மாற்று முறையாவணங்கள் சட்டம் பிரிவு 138–இன்படி குற்றப் பொறுப்பிற்கு ஆளாக நேரிடும். ஏனெனில் போதிய பணமில்லை என்பதால் பணம் செலுத்த வேண்டாம் என்று வாடிக்கையாளர் வங்கியருக்கு அறிவுறுத்துவதும் பிரிவு 138–இன் கீழ் குற்ற வழக்கிடுவதற்குரிய முகாந்திரமே என்று தற்போது பல்வேறு உயர் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியுள்ளன. எது எப்படியிருப்பினும் காசோலை மீது பணம் தர வேண்டாம் என்று வங்கிக்கு வாடிக்கையாளர் அறிவுறுத்திய பிறகும், வங்கி பணம் செலுத்துவது வங்கியின் கவனக்குறைவையே காட்டும். இதற்கு வங்கி பொறுப்பாக நேரிடும்.

மேற்கண்டவை யாவும், ஒரு காசோலைக்கு வங்கியர் பணம் தர மறுப்பதற்கான சூழல்களைச் சுட்டிக்காட்டுகின்றன. அதுபோல் **செல்லாக் காசோலைக்கும் (Stale cheque)** வங்கி பணம் தரக் கூடாது. ஒரு காசோலை காரணம் ஏதுமில்லாமல் நீண்ட காலமாக புழக்கத்தில் இருந்து வந்தால், அது செல்லாக் காசோலை எனப்படுகிறது. எது நீண்ட காலம் என்பது அக்காசோலையின் தன்மை, வணிக வழக்கம், வங்கி நடைமுறை, சூழல் ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு காசோலை அதில் இடப்பட்டிருக்கும் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் வரை மாற்றப்படலாம். இதற்கு மேல் சென்றால் அது செல்லாக் காசோலை. இதற்கு வங்கி பணம் தர மறுத்தல் வேண்டும். எனினும் காசோலை வரைந்த வாடிக்கையாளரின் ஒப்புதலின் பேரில், ஆறு மாதங்களுக்கு மேல் சென்ற காசோலைக்கும் கூட வங்கி பணம் வழங்கலாம்.

34. பிரச்சனை:

A obtains a cheque and puts it in his coat pocket. The coat is sent for dry wash. Consequently the cheque becomes faded. Can the bank refuse to pay it?

'அ' என்பவர் காசோலை ஒன்றினைப் பெற்று அதனை அவர் மேலங்கியில் உள்ள பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார். அந்த மேலங்கியை உலர் சலவைக்காக கொடுத்தனுப்பு கிறார். அதன் விளைவாக அந்தக் காசோலை மங்கி விடுகிறது. வங்கியர் அக்காசோலையினை ஏற்க மறுக்கலாமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் கண்ட மங்கிய காசோலையானது **'உருக்குலைந்த காசோலை' (Mutilated cheque)** எனப்படுகிறது. இதற்குப் பொதுவாக வங்கியர் பணம் செலுத்த மறுக்க வேண்டும். அதாவது ஒரு காசோலை உருக்குலைந்து, கிழிந்து

காணப்பட்டால் அதற்கு வங்கியர் பணம் செலுத்த மறுக்கலாம். ஒருவேளை காசோலை வரைந்தவரே அதனை தற்செயலாக அல்லது தவறுதலாக கிழித்துவிட்டிருந்தால், 'அது தன்னால் தற்செயலாக கிழிக்கப்பட்டுவிட்டது' என்று அவரது மேலொப்பம் பெற்ற பிறகு அதற்கு வங்கியர் பணம் வழங்கலாம். நமது மேற்படி பிரச்சனையின்படி மற்றொருவரிடமிருந்து காசோலையைப் பெற்ற ஒருவர் அது உருக்குலைந்து போகும்படி (மங்கிப் போகும்படி) செய்திருந்தால், அதற்கு முதற்கண் பணம் செலுத்த வங்கியர் மறுத்தல் வேண்டும். அல்லது காசோலை வரைந்தவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அல்லது செலுத்தப் பெறுநரின் வங்கியரிடமிருந்து பொறுப்புறுதி எதையும் பெற்ற பிறகு (the banker must either get confirmation from the drawer or ask the payee's banker to guarantee payment) அதற்குப் பணம் வழங்கலாம்.

ஒரு காசோலை இரண்டு அல்லது மூன்று துண்டுகளாகக் கிழிக்கப்பட்டிருப்பின், அதனை 'உருக்குலைந்த காசோலை' என்று குறிப்புடன் வங்கியர் திருப்பிக் கொடுத்துவிடுதல் பாதுகாப்பானாது. எனினும் ஓரங்களில் கிழிக்கப்பட்டிருக்கும் காசோலைக்கு வங்கியர் பணம் செலுத்தலாம். ஆனால் அக்காசோலையில் குறுக்குக் கோடு இடப்பட்டிருக்கும் பகுதி கிழிக்கப் பட்டுள்ளதா என்பதை வங்கியர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தற்போது **MICR** எனப்படும் காசோலை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட காசோலைகளுக்குத்தாம் வங்கி பணம் செலுத்துகின்றது. MICR என்பதை Magnetic Ink Character Recognition என்று குறிப்பிடலாம். இதில் உள்ள மை காந்தத் தன்மை கொண்டது. இதனால் வசூலுக்காக முன்னிடப்படும் காசோலைகளை மின்னணு வழியில் விரைவில் தீர்வாக்க (clearance) முடிகிறது. இதன் அடிப்பகுதியில் எம்.ஐ.சி.ஆர். குறியீட்டு வரி அல்லது பட்டை (MICR Code Line or MICR Band) உள்ளது. இது காசோலையின் தீர்வாக்கத்திற்குரிய விவரங்களை கணினிக்குத் தருகிறது. இப்படிப்பட்ட காசோலைகள் முதலில் மடிக்கப்படக் கூடாது. மேலும் எம்.ஐ.சி.ஆர். குறியீட்டுப் பட்டையின் மீது முத்திரை அல்லது கையொப்பம் இடக் கூடாது. அதுபோல் 'பின்' அடிக்கக் கூடாது. இது அப்பட்டையை சேதமாக்குகிறது. இன்று நாடு முழுவதும் இப்படிப்பட்ட எம்.ஐ.சி.ஆர். காசோலைகளை புழங்க ஆரம்பித்துவிட்டதால், உருக் குலைவான அல்லது மங்கிப் போன காசோலைகளை வங்கியின் கணினியே ஏற்க மறுக்கும்.

35. பிரச்சனை:

'A' obtains a loan from India Bank for which 'B' stands as surety. 'A' refuses to repay inspite of having sufficient funds. The bank sues 'B'. 'B' contends that the bank should first sue 'A' as he

has enough funds to repay the debt. Decide.

'அ' என்பவர், இந்தியன் வங்கியில் பெற்ற கடனுக்கு 'ஆ' என்பவர் பொறுப்புறுதியளித்தார். 'அ'–விடம் போதுமான பணம் இருந்தும் அவர் கடனைச் செலுத்த மறுக்கிறார். வங்கி 'ஆ' மீது வழக்கிட்டது. 'அ'–விடம் போதுமான பண வசதியிருப்பதால் வங்கி 'அ' மீதுதான் முதலில் வழக்கிட வேண்டுமென 'ஆ' வாதிட்டார். தீர்வு காண்க.

தீர்வு:

'ஆ'–வின் வாதம் ஓரளவில் ஏற்புடையது. அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. பொறுப்புறுதி அளிப்பவரின் பொறுப்பு கடன் வாங்கியவரின் பொறுப்புடன் இணைந்து பரவும் தன்மையுடையது. அதாவது கடன் வாங்கியவர் எந்த அளவிற்கு பொறுப்புடையவரோ, அந்த அளவிற்கு அவருக்கு பொறுப்புறுதியளித்த வரும் பொறுப்பு என்பது இந்திய ஒப்பந்தச் சட்டம் கூறும் கோட்பாடாகும்.

2. கடன் பெற்றவர் கடனை திரும்பச் செலுத்தவில்லை என்றால், அவர் மீதும், அவருக்கு பொறுப்புறுதி அளித்தவர் மீதும் வங்கி வழக்கிட வேண்டும். இப்பிரச்சனையில் 'ஆ' மீது மட்டும் வங்கி வழக்கிடுவது சட்டப்படி ஏற்புடையதல்ல. அவ்வாறு வழக்கிட்டால் கடன் பெற்றவரை கடன் பொறுப்பிலிருந்தே விடுவித்துவிட்டதாகப் பொருளாகிவிடும். ஆனால் அதே சமயத்தில் 'அ' மீது மட்டுமே வழக்கிடும்படி 'ஆ' என்பவர் வங்கியைக் கோர முடியாது.

3. இங்கு மற்றொரு அம்சத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது கடன் பெற்றவர் மற்றும் அவருக்கு பொறுப்புறுதி அளித்தவர் ஆகிய இருவர் மீதும் வழக்கிட்டு வங்கி பெறும் தீர்ப்பாணையை அது முதலில் பொறுப்புறுதி அளித்தவருக்கு எதிராக நிறைவேற்றுத் (Execution of decree) தலைப்பட்டால், கடன் பெற்றவரிடம் போதுமான பணம் உள்ளது என்றும், எனவே அவர் மீது முதலில் தீர்ப்பாணையை நிறைவேற்றும்படியும் பொறுப்புறுதி அளித்தவர் வாதிடலாம். ஆனால் கடன் பெற்றவருக்கு உள்ள பண வசதி குறித்த விவரங்களை பொறுப்புறுதி அளித்தவர் வங்கிக்குக் தர வேண்டும்.

4. தீர்ப்பாணையை முதலில் கடன் பெற்றவருக்கு எதிராக நிறைவேற்ற வங்கி நடவடிக்கை எடுத்து, அவரிடமிருந்து கடனை வசூலித்துவிட்டால், அவருக்கு பொறுப்புறுதி அளித்தவரின் பொறுப்பும் தானாக மறைந்துவிடும் அல்லவா? எனவே தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையில் கடன் பெற்றவருக்குள்ள சொத்து, பணம் போன்ற விவரங்களை பொறுப்புறுதி அளித்தவர் வங்கிக்கு தரும்

நேர்வில் கடன் பெற்றவருக்கு எதிராக முதலில் அத்தீர்ப்பாணையை நிறைவேற்ற நீதிமன்றம் ஆணையிடலாம்.

5. எனவே கடன் பெற்றவருக்கு வசதி உள்ளது, எனவே தன் மீது வழக்கே தாக்கல் செய்யக் கூடாது என்று பொறுப்புறுதி அளித்தவர் கூற முடியாது. அவரது இவ்வாதம் அவ்வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பாணையை நிறைவேற்றும் நடவடிக்கைகளில் வேண்டு மானால் எடுபடலாம்.

6. எனவே கடனை வசூலிக்க பொறுப்புறுதி அளித்த 'ஆ' மீது மட்டும் வங்கி நேரடியாக வழக்கிட முடியாது. அதுபோல் கடன் பெற்ற 'அ'–க்கு வசதி உள்ளது என்றும், எனவே அவர் மீது மட்டும் வழக்கிட வேண்டும் என்றும் பொறுப்புறுதி அளித்த 'ஆ' என்பவர் வங்கியைக் கோர முடியாது. கடன் பெற்றவர், பொறுப்புறுதி அளித்தவர் ஆகிய இருவர் மீதும் வங்கி வழக்கிடுதே நிலைக்கத்தக்கதாகும்.

36. பிரச்சனை:

'A' executes a promissory note in favour of 'B' for Rs.2500. 'B' receives the said amount from 'C' and makes an endorsement thus received the amount due under the promissory note from 'C' and hands over the promissory note to 'C'. Can 'C' institute a suit on the promissory note?

'அ' ரூபாய் 2,500க்கு "ஆ" வின் பேருக்கு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார். "ஆ" மேற்படி தொகையை "இ"யிடமிருந்து பெற்றுக் கொண்டு "இ"யிடமிருந்து கடனுறுதிச் சீட்டு தொகையை பெற்றுக் கொண்டதாக மேலெழுத்து செய்து கடனுறுதிச் சீட்டை "இ"யிடம் ஒப்படைத்தார். "இ" கடனுறுதிச் சீட்டு தொகையை வசூல் செய்ய வழக்கு தொடர முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் மேலெழுத்து செய்யப் பெற்ற "இ" கடனுறுதிச் சீட்டு தொகையை வசூல் செய்ய வழக்குத் தொடர முடியும். அதற்கான காரணங்கள் வருமாறு:–

1. மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 35–ஆனது மேலெழுத்து செய்தவரின் பொறுப்பு (Liability of indorser) பற்றி குறிப்பிடுகிறது. அதன்படி யார் மாற்று முறையாணவம் ஒன்றை மேலெழுதி வழங்குகிறாரோ, அவர் அந்த ஆவணத்தை பின்னிட்டு தனது உடைமையில் கொண்ட அனைவருக்கும் (every subsequent holder) பொறுப்புடையவர் ஆவார். இதனால் அவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு மேலெழுதி கொடுத்தவர் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர்.

இதற்கிருக்கும் மூன்று முக்கிய நிபந்தனைகள் யாதெனில், (1) இவ்வாறு பொறுப்பேற்கும் கடமைக்கு முரணான ஒப்பந்தம் ஏதும் மேலெழுதித் தந்தவருக்கும், மேலெழுதிப் பெற்றவருக்குமிடையே இருக்கக் கூடாது; (2) தனக்கு பொறுப்பு ஏதுமில்லை என்றோ அல்லது தான் பகுதியளவில்தான் பொறுப்பு என்றோ தனது பொறுப்பை மேலெழுதிக் கொடுத்தவர் அந்த மேலெழுத்தில் குறிப்பிட்டிருக்கக் கூடாது. (3) அந்த ஆவணத்தின் மதிப்பு மறுக்கப்பட்டவுடன், அது குறித்த அறிவிப்பை மேலெழுதிக் கொடுத்தவருக்கு அனுப்பி, அவர் அதனைப் பெற்றிருக்க வேண்டும்.

இங்கு நமது பிரச்சனையில் 'அ' என்பவர் ரூபாய் 2,500க்கு "ஆ" வின் பேருக்கு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார். "ஆ" மேற்படி தொகையை "இ"யிடமிருந்து பெற்றுக் கொண்டு "இ"யிடமிருந்து கடனுறுதிச் சீட்டு தொகையை பெற்றுக் கொண்டதாக மேலெழுத்து செய்து கடனுறுதிச் சீட்டை "இ"யிடம் ஒப்படைத்தார். எனவே இங்கு 'ஆ' என்பவர் மேலெழுதிக் கொடுத்தவர். "இ" என்பவர் மேலெழுதிப் பெற்றவர். (மேற்கண்ட மூன்று நிபந்தனைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.). எனவே மேற்படி பிரிவின்படி 'இ' என்பவர் தான் பெற்ற கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் தான் 'ஆ' என்பவருக்கு கொடுத்த ரூ.2500/–அய் வசூலிக்க முதற்கண் வழக்கிட முடியும். அடுத்து யார் மீது வழக்கிட முடியும் என்பதைக் காண வேண்டும்.

2. பிரிவு 36–இன்படி, மாற்று முறையாவணம் ஒன்றின் முந்தைய தரப்பினர் ஒவ்வொருவரும், அதை முறைப்படி வைத்திருப்பவருக்குப் பொறுப்புடையவர் (Every prior party to a negotiable instrument is liable thereon to a holder in due course until the instrument is duly satisfied). இங்கு பிரச்சனையில் சம்மந்தப்பட்ட கடனுறுதிச் சீட்டை (மேலெழுதப் பெற்றதன் மூலம்) முறைப்படி வைத்துள்ளவர், 'இ' என்பவர். இவருக்கு முந்தைய தரப்பினர்கள் 'ஆ' ('இ'–யிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு மேலெழுதிக் கொடுத்தவர்) மற்றும் 'அ' ('ஆ'–விடமிருந்து கடன் பெற்றுக் கொண்டு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தவர்). எனவே 'இ' என்பவர் தனக்கு முந்தைய தரப்பினரான 'ஆ' என்பவர் மீது மட்டும் வழக்கிடலாம். அல்லது 'ஆ' மற்றும் 'அ' ஆகிய இருவர் மீதும் வழக்கிடலாம். 'ஆ' மீது மட்டும் வழக்கிட்டால், அதைச் செல்லாது என்று கூற முடியாது என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஓர் முக்கியக் கூறு.

3. இங்கு கடனுறுதிச் சீட்டை வரைந்து கொடுத்த 'அ' என்பவரை தலைநிலைக் கடனாளியாகவும் (Principal Debtor), மேலெழுதிக் கொடுத்த 'ஆ' என்பவரை பிணையாளாகவும் (Surety) பிரிவு 37 பாவிக்கிறது. எனவே இருவரும் 'இ'–க்கு பொறுப்பு.

எனவே 'இ' என்பவர் மேற்கண்டவாறு வழக்கிட முடியும். வெற்றி நிச்சயம்.

37. பிரச்சனை:

A registered company borrowed money from two banks by creating a charge over the same property in favour of Bank 'A' on the 1st April in favour of Bank 'B' on the 15th April. It registered Bank 'B's charge on the 16th April and Bank 'A's charge on the 20th April. State as to which have priority relating to the charge.

ஒரு பதிவு பெற்ற நிறுவனம் தனது ஒரே சொத்தை 'அ' எனும் வங்கியில் ஏப்ரல் 1ம் தேதியிலும், 'ஆ' எனும் வங்கியில் ஏப்ரல் 15ம் தேதியிலும் பொறுப்பு ஏற்படுத்தி இரண்டு வங்கிகளிடமிருந்து கடன் வாங்கியது. 'ஆ' வங்கியின் பொறுப்பை ஏப்ரல் 16ம் தேதியிலும், 'அ' வங்கியின் பொறுப்பை ஏப்ரல் 20ம் தேதியிலும் அந்நிறுவனம் பதிவு செய்தது. இவற்றில் எந்தப் பொறுப்பு முதன்மையானது என்பதைக் கூறுக.

தீர்வு:

நிறுவனச் சட்டத்தின் பிரிவு 125–இன்படி மேற்கண்ட பிரச்சனையில் வரும் பொறுப்புகள் (charges) பதிவு செய்யத்தக்கன. இப்பொறுப்புகள் உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு பதிவு செய்யப்படாது போனால், அது அப்பொறுப்புகளை இல்லாநிலையதாக்கிவிடும். இதனால் அந்நிறுவனத்திற்கு கடன் கொடுத்தவருக்கு எப்பலனும் கிடைக்காது. அதுபோல் முதலில் பதிவு செய்யப்படும் பொறுப்பு மட்டுமே முதன்மை பெறும்.

மேற்படி பிரச்சனையில் 'ஆ' எனும் வங்கிக்கு ஆதரவாக அந்நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்த பொறுப்பானது ஏப்ரல் 16–ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இது ஏப்ரல் 20–ஆம் தேதியில் 'அ' எனும் வங்கிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட பொறுப்பை விட முதன்மை பெறும். அதாவது 'ஆ' எனும் வங்கியே தனது கடனுக்காக அந்நிறுவனத்தின் சொத்துக்களை முதலில் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை பெற்றதாகும்.

38. பிரச்சனை:

A the holder of a bill, transfers it to B, without consideration. B also transfers it to C without consideration. C transfers it to D for value. D transfers it to E without consideration. Discuss the rights of E against A, B, C, and D.

மாற்றுச் சீட்டு ஒன்றை வைத்துள்ள 'அ' என்பவர் அதனை மறுபயன் ஏதுமின்றி 'ஆ' என்பவருக்கு மாற்றியளிக்கிறார். 'ஆ'வும் அதனை மறுபயனின்றி 'இ' என்பவருக்கு மாற்றுகிறார். 'இ' என்பவர் அதனை 'ஈ' என்பவருக்கு அதன் மதிப்பைப்

பெற்றுக் கொண்டு மாற்றியளிக்கிறார். 'ஈ:' என்பவர் அதனை மறுபயனின்றி 'உ' என்பவருக்கு மாற்றுகிறார். அ, ஆ, இ மற்றும் ஈ க்கு எதிராக உ என்பவருக்கு உள்ள உரிமைகளை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் வரும் உ என்பவரின் உரிமைகளை விவாதிக்க நாம் மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 43–ஆவது பிரிவைக் கவனிக்க வேண்டும். அதன்படி, "மறுபயனின்றி செய்யப்படும், வரையப்படும், ஏற்கப்படும், மேலெழுதப்படும் அல்லது மாற்றியளிக்கப்படும் மாற்று முறையாவணம் ஒன்று அந்த நடவடிக்கையின் தரப்பினர்களுக்கு இடையே செலுத்துகைக்கான கடப்பாடு எதையும் உருவாக்காது (A negotiable instrument made, drawn, accepted, indorsed or transferred without consideration creates no obligation of payment between the parties to the transaction)."

எனவே மேற்படி பிரச்சனையில் கொடுக்கப்பட்ட நடவடிக்கையின் உடனடித் தரப்பினர்கள் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் அ மற்றும் ஆ, ஆ மற்றும் இ, இ மற்றும் ஈ, ஈ மற்றும் உ ஆவர். இங்கு மாற்றுச் சீட்டிற்கான தொகையை ஆ என்பவர் அ–விடமிருந்தோ, இ என்பவர் ஆ–விடமிருந்தோ, உ என்பவர் ஈ–யிடமிருந்தோ திரும்பப் பெற முடியாது. ஏனெனில் அங்கு மாற்றுச் சீட்டானது மறுபயனின்றி மாற்றியளிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி பிரிவு 43–இன் இரண்டாம் பகுதியின்படி, "அத்தகு தரப்பினர் ஒருவர் அந்த முறையாவணத்தை மேலெழுத்துடனோ, மேலெழுத்தின்றியோ மறுபயனுக்காக வைத்திருப்பவர் (holder for consideration) ஒருவருக்கு மாற்றியளித்தால், அத்தரப்பினரிமிருந்து உரிமை மூலத்தைப் பெறும் அத்தகு வைத்திருப்பவரும், அவருக்கு பிந்தைய வைத்திருப்பவரும், அந்த முறையாவணத்தின் பேரில் பாக்கி நிற்கும் தொகையை மறுபயனுக்காக மாற்றியளித்தவரிடமிருந்து அல்லது அவருக்கு முந்தைய தரப்பினர் எவரிடமிருந்தும் வசூலித்துக் கொள்ளலாம்."

இதனை இப்பிரச்சனைக்குப் பொருத்திப் பார்த்தால் நமக்கு விடயம் எளிதாக விளங்கும். அதாவது மேற்படி பிரச்சனையில் வரும் ஈ என்பவர் மாற்றுச் சீட்டிற்கான தொகை எவ்வாறு அ, ஆ மற்றும் ஈ–யிடமிருந்து வசூலித்துக் கொள்ள முடியுமோ அதே போன்று உ என்பவர் அச்சீட்டிற்கான தொகை அ, ஆ மற்றும் இ–யிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம். ஏனெனில் மறுபயனுக்காக மாற்றுச் சீட்டை வைத்திருக்கும் (holder for value) ஈ என்பவரிடமிருந்து அதனை உ என்பவர் மாற்றிப் பெற்றுள்ளார். (அதாவது இங்கு ஈ என்பவர் மாற்றுச் சீட்டின் மதிப்பை இ என்பவருக்கு கொடுத்ததால் அச்சீட்டை ஈ–க்கு இ மாற்றியளித்துள்ளார். முந்தைய தரப்பினர்கள் யாரும் அச்சீட்டை மறுபயனுக்காக மாற்றியளிக்கவில்லை).

ஆனால் அதே சமயத்தில் உ என்பவர் மறுபயன் எதையும் கொடுக்காமல் அச்சீட்டை ஈ –யிடமிருந்து மாற்றியளிக்கப் பெற்றுள்ளார். எனவே பிரிவு 43–இன் முதற்பகுதியின்படி ஈ–க்கு எதிராக உ–க்கு எந்த உரிமையும் இல்லை; மாறாக மேற்சொன்னவாறு அ, ஆ மற்றும் இ–க்கு எதிராக மட்டுமே உ–க்கு உரிமை உள்ளது.

39. பிரச்சனை:

A drawn a bearer cheque in favour of B. B transfers it to D. D given the instrument to E for collection. E who is a customer of bank K entrusted the cheque to K for collection. Bank K collected amount for the cheque. However it was found that it was a wrong payment. Is K protected under Negotiable Instruments Act?

A என்பவர் B என்பவர் பெயரில் ஒரு கொணர்பவர் காசோலை வரைகிறார். B அதனை Dக்கு மாற்றியளிக்கிறார். D அதனை வசூலுக்காக E என்பவரிடம் கொடுக்கிறார். E என்பவர் K எனும் வங்கியின் வாடிக்கையாளர். அவர் அக்காசோலையை K வங்கியில் வசூலுக்காக ஒப்படைக்கிறார். காசோலைத் தொகையை K வங்கி வசூலித்துவிடுகிறார். எனினும் அது தவறான செலுத்துகை என்பது கண்டுபிடிக்கப்படுகிறது. மாற்று முறையாவணங்கள் சட்டப்படி K வங்கி பாதுகாக்கப்பட்டுள்ளதா?

தீர்வு:

மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 131–ஆனது வசூலிக்கும் வங்கியருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு பற்றி குறிப்பிடுகிறது. இதன்படி K வங்கி பாதுகாக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவு 131–இன்படி, வாடிக்கையாளர் தனக்காக பொதுவாக அல்லது சிறப்பாக குறுக்குக் கோடிட்டு கொடுத்த காசோலை ஒன்றின் மீது அவருக்காக நன்னம்பிக்கையிலும் கவனக்குறைவு ஏதுமின்றியும் தொகை பெறும் வங்கியானது, அக்காசோலையின் உரிமை மூலம் குறைபாடுடையதாக இருக்கும் நேர்வில், அத்தொகையை பெற்றுவிட்டது என்ற ஒரே காரணத்திற்காக அதன் உண்மையான உரிமையாளருக்குப் பொறுப்பாகாது.

மேற்படி பிரச்சனையில் K வங்கியானது தனது வாடிக்கையாளரின் முகவராக நின்று காசோலைக்குரிய தொகையை நன்னம்பிக்கையிலும், கவனக்குறைவு ஏதுமின்றியும் வசூல் செய்துள்ளது. எனவே பிரிவு 131–இன்படி K வங்கி பாதுகாக்கப்பட்டுள்ளது. அது அக்காசோலையின் உண்மையான உரிமையாளரான A என்பவருக்குப் பொறுப்பாகாது.

40. பிரச்சனை:

A bill payable with interest at 12% per annum is altered into one payable with interest at 16% per annum. What is the effect of above alteration on the validity of the bill?

ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டியுடன் செலுத்தத்தக்க மாற்றுச் சீட்டு ஒன்று ஆண்டொன்றுக்கு 16 சதவீத வட்டியுடன் செலுத்தத்தக்கது என்று திருத்தப்படுகிறது. மாற்றுச் சீட்டின் செல்லத்தக்க தன்மையின் மீது மேற்கண்ட திருத்தத்தின் விளைவு யாது?

தீர்வு:

இப்பிரச்சனையில் வரும் மாற்றுச் சீட்டு இல்லாநிலையதாகும் (void). ஏனெனில் அதில் செய்யப்பட்டுள்ள திருத்தம் கருநிலையானதாகும் (material alteration). மாற்று முறையாணத் தரப்பினர்களின் நலனை மிகவும் பாதிக்கும் திருத்தம் எதுவும், கருநிலைத் திருத்தமாகும்.

மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் 87–ஆவது பிரிவின்படி, மாற்று முறையாவணம் ஒன்றில் செய்யப்படும் கருநிலைத் திருத்தம் எதுவும், அத்தகு திருத்தம் செய்யப்படும் நேரத்தில் அதற்கு தரப்பினராக உள்ள எவர் ஒருவருக்கும் எதிராக அதனை இல்லாநிலையதாக்கும்.

41. பிரச்சனை:

A Banker sent a cheque of the customer for collection. The cheque was returned stating that it was dishonoured due to insufficiency of funds. The banker failed to return the cheque to the customer and intimate him regarding dishonour. State whether the customer has got remedy against collecting bank for not intimating the dishonour of cheque nor returning the cheque to him?

ஒரு வங்கி தனது வாடிக்கையாளரின் காசோலை ஒன்றை வசூலுக்கு அனுப்புகிறது. அது போதிய பணமில்லை என்பதால் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது. இவ்வாறு காசோலை திருப்பப்பட்ட விவரத்தை வங்கி தனது வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கத் தவறியது. மேலும் அக்காசோலையை அவரிடம் திருப்பிக் கொடுக்கவும் இல்லை. காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டதை தெரிவிக்காமல் இருந்ததற்காகவும், காசோலையை திருப்பிக் கொடுக்காத தற்காகவும் வசூலிக்கும் வங்கிக்கு எதிராக வாடிக்கையாளருக்கு தீர்வழி ஏதும் உண்டா என்பதைக் குறிப்பிடவும்.

தீர்வு:

வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கிற்கு தொடர்பான தகவல்கள் அனைத்தையும் அவருக்குத் தெரிவித்து வர வேண்டியது அவரது வங்கிக்குள்ள கடமைகளுள் ஒன்றாகும். எனவே காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்ட விவரத்தை எழுத்துப்பூர்வமாக சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டியது வங்கியின் கடமையாகும். அதுபோல் மதிப்பு மறுக்கப்பட்டு திரும்பி வந்த காசோலையை வாடிக்கையாளரிடம் உடனே திரும்ப ஒப்படைக்க வேண்டியதும் வங்கியின் கடமையாகும். அப்போதுதான் வாடிக்கையாளர் தனக்கு காசோலை கொடுத்தவர் மீது மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 138–இன்படி குற்றவியல் நடவடிக்கைகளை உடனடியாகத் தொடங்க முடியும்.

Syndicate Bank v. Swaika Chemical Works and another (1987) 61 Comp. Cas. 752 – எனும் வழக்கில் வாடிக்கையாளர் வசூலுக்காக வங்கியில் முன்னிடுகை செய்த காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டு திரும்பி வந்தால், அது குறித்து வாடிக்கையாளருக்குத் தெரிவித்து, அவரிடம் அக்காசோலையையும் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று தில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது.

எனவே அப்படித் திருப்பிக் கொடுக்காத வங்கிக்கு எதிராக வாடிக்கையாளர் இழப்பீட்டிற்காக நடவடிக்கை எடுக்க முடியும்.

42. பிரச்சனை:

A customer had sufficient funds in his bank account. He issued cheques to different payees. When the cheques came for collection, the banker by mistake failed to honour the cheques. The customer sued the bank for damages. The bank contended that the dishonour of the cheques was purely by mistake without any intention and that the bank had written to the payees about the wrongful dishonour of cheques. Decide.

ஒரு வாடிக்கையாளருக்கு அவரது வங்கிக் கணக்கில் போதிய பணமிருந்தது. அவர் பல்வேறு செலுத்தப் பெறுநர்களுக்கு காசோலைகள் கொடுத்தார். அவை வசூலுக்காக அனுப்பப்பட்ட போது, வங்கியானது தவறுதலாக அவற்றிற்கு பணம் செலுத்தத் தவறிவிட்டது. எனவே இழப்பீடு கோரி வாடிக்கையாளர் வங்கி மீது வழக்கு தொடர்ந்தார். காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டது தவறுதலாக நடந்த ஒன்று என்றும், அவ்வாறு செய்ய வேண்டும் என்று வங்கிக்கு எந்த எண்ணமும் இல்லை என்றும் வங்கி வாதிட்டது. மேலும் தவறுதலாக மதிப்பு மறுக்கப்பட்ட விவரத்தை காசோலைத் தொகை செலுத்தப் பெறுநர்களுக்கு தான் கடிதம்

வாயிலாகத் தெரிவித்துள்ளதாகவும் வங்கி கூறியது. தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் வங்கியானது வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும். காசோலைகளுக்கு தவறுதலாக மதிப்பு மறுக்கப்பட்டுவிட்டது, அதில் எவ்வித உள்ளெண்ணமும் இல்லை என்று வங்கி வாதிடுவது எடுபடாது. மேலும் இது குறித்து தொகை செலுத்தப் பெறுநர்களுக்கு கடிதம் எழுதியதாக வங்கி குறிப்பிடுவதும் வங்கியை பொறுப்பிலிருந்து விடுவிக்காது. அறியாமல் தவறுதலாக காசோலைகளுக்கு மதிப்பு மறுப்பது என்பது அறிந்தே அவ்வாறு செய்வதற்கு ஒப்பாகும். இரண்டின் விளைவுகளும் ஒன்றே. அதாவது வங்கி வாடிக்கையாளருக்குப் பொறுப்பாகுதல்.

New Central Hall v. United Commercial Bank Ltd (29 Comp. Cas. 78, AIR (1959) Mad. 153) எனும் வழக்கில் மேற்கண்டவாறான காசோலை மதிப்பு மறுப்பிற்கு வங்கியானது வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையது என்றும், யாருக்கு தொகை செலுத்தப்பட வேண்டுமோ அவருக்கு, காசோலையின் மதிப்பு தவறுதலாக மறுக்கப்பட்டுவிட்டது என்று வங்கி கடிதம் எழுதினாலும், அது வங்கியை பொறுப்பிலிருந்து விடுவிக்காது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது.

43. பிரச்சனை:

The customer hired a bank locker and kept his jewellery in it. It was stolen by break opening the locker room by a thief. There is no proof that the bank was negligent. Is there any remedy available to the customer against the bank?

ஒரு வாடிக்கையாளர் வங்கி பெட்டகத்தை வாடகைக்குப் பெற்று, அதில் தனது நகையை வைத்தார். பெட்டக அறையின் பூட்டை ஒரு திருடன் உடைத்து அதை திருடிச் சென்று விட்டான். வங்கி கவனக்குறைவாக இருந்தது என்பதற்கு சான்று இல்லை. வங்கிக்கு எதிராக வாடிக்கையாளருக்கு தீர்வழி ஏதேனும் உள்ளதா?

வாடிக்கையாளர் வங்கியின் பெட்டகத்திற்குள் வைக்கும் பொருட்களுக்குப் வங்கி பொறுப்பாகாது. ஏனெனில் இங்கு அவற்றை அவர் வங்கியிடம் ஒப்படைப்பது இல்லை. அவர் தனிமையில் பெட்டகத்தைத் திறந்து தனது நகை உள்ளிட்ட பிற பொருட்களை அதில் வைக்கிறார். அவர் அதில் என்ன வைக்கிறார் என்பதை வங்கியிடம் தெரிவிப்பதில்லை. எனவே பெட்டகத்தை உடைத்து திருடப்பட்ட பொருட்களுக்கு வங்கி பொறுப்பாகாது. ஒருவேளை அத்திருட்டிற்கு வங்கி அல்லது

அதன் அலுவலர்கள் உடந்தையாக இருந்திருப்பது தெரிய வந்தால், அதற்கு வங்கி பொறுப்பாகும். இப்பிரச்சனையில் வங்கி கவனக்குறைவாக இருந்துள்ளது என்பதற்கு சான்று இல்லை. எனவே வங்கிக்கு எதிராக வாடிக்கையாளருக்கு தீர்வழி ஏதும் இல்லை.

44. பிரச்சனை:

A customer deposits his valuables - securities, documents and ornaments, with the banker for safe custody and safety from theft. Is the banker has any lien over such valuables?

ஒரு வாடிக்கையாளர் தன்னுடைய விலை மதிப்பற்ற பிணையங்கள், ஆவணங்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றை வங்கியாளரிடம் பாதுகாப்பிற்காகவும் மற்றும் திருட்டுக்கு எதிராகவும் ஒப்படைக்கின்றார். அவ்விலை மதிப்பற்ற பொருட்களின் மீது வங்கியாளருக்கு ஏதேனும் பற்றுரிமை உண்டா?

தீர்வு:

ஒரு வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே பல விதமான உறவு நிலைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது 'பொறுப்பாண்மையர்–பயனுரிமையர்' **(Trustee-Beneficiary)** எனும் உறவு நிலையாகும்.

நமது மேற்கண்ட பிரச்சனையில் ஒரு வாடிக்கையாளர் தனது விலை மதிப்பற்ற பொருட்களை தனது வங்கியரிடம் பாதுகாப்பிற்காகவும், திருட்டுக்கு எதிராகவும் ஒப்படைக்கும் பொழுது, அங்கு அவற்றைப் பெறும் வங்கியர் ஒரு பொறுப்பாண்மையராகவும், வாடிக்கையாளர் ஒரு பயனுரிமையராகவும் உள்ளனர். இவ்வாறு வங்கியரிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை, அவர் பத்திரமாக பாதுகாத்து வர வேண்டுமேயொழிய, வேறு எந்நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தல் கூடாது. அப்படிப் பயன்படுத்தினால், வங்கியர் 'பொறுப்பாண்மை மீறல்' (breach of trust) எனும் குற்றத்திற்கு ஆளாக நேரிடும்; வாடிக்கையாளருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டி வரும். இதன்படி வங்கியருக்கு அப்பொருட்களின் மீது எவ்வித பற்றுரிமையும் இல்லை.

45. பிரச்சனை:

A customer negligently left a cheque book in his drawer. A cheque leaf was stolen and was forged. For the payment effected by the bank, the contended that it was not liable, because of the negligence of the customer. Decide.

ஒரு வாடிக்கையாளர் தனது காசோலை புத்தகத்தை தனது டிராயரில்

கவனக்குறைவாக வைத்திருந்தார். அதிலிருந்து ஒரு காசோலை திருடப்பட்டு, போலியாக வரையப்பட்டது. அதற்கு வங்கி பணம் செலுத்திவிட்டது. வாடிக்கையாளரின் கவனக்குறைவிற்கு தான் பொறுப்பல்ல என்று வங்கி வாதிட்டது. தீர்க்க.

தீர்வு:

போலியாக வரையப்பட்ட காசோலைக்கு பணம் செலுத்தியதற்கு, வாடிக்கையாளரின் கவனக்குறைவே காரணம் என்று வங்கி வாதிட முடியாது.

Ahmed Moolla Dawood v. Pereinan Chetty (1946) 16 Comp. Cas. 133 எனும் வழக்கிலும் **Babulal Premchand v. Nath Bank Ltd.,** AIR 1946 Bom 483 எனும் வழக்கிலும் காசோலைப் புத்தகத்தை பத்திரமாக வாடிக்கையாளர் வைத்திருக்கவில்லை என்பதை அதன் போலியான காசோலைக்கு பணம் செலுத்திய வங்கியர் ஒரு சமாதானமாகக் கூற முடியாது என்று கூறப்பட்டது. மேலும் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட இழப்பிற்கு வங்கி இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் இவ்வழக்குகளில் தீர்ப்புரைக்கப்பட்டது.

-o0o-

வாழ்க தமிழ்!

வளர்க சட்டத் தமிழ்!!

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் — முந்தைய ஆண்டு வினாத்தாள்கள்

[Tamil Nadu Dr. Ambedkar Law University - Previous Year Question Papers]

மூன்றாண்டு சட்டக் கல்வி

(For the candidates admitted from 2009-10 onwards)

B.L., DEGREE EXAMINATION, MAY 2013

(Three year Regular Course)
Second Year /Third Year Semester

BANKING LAW INCLUDING NEGOTIABLE INSTRUMENTS ACT

PART A - (3 x 12 = 36 marks)

Time : Three hours Maximum : 100 marks

Answer THREE of the following not exceeding 6 pages each
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்

1. Write about the special types of customers of Bankers.
வங்கியின் சிறப்பு வாடிக்கையாளர்கள் குறித்து எழுதுக.

2. Explain the rights and duties of the Reserve Bank of India?
இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவாதிக்க.

3. Under what circumstances can a bank dishonour the cheques of a customer?
எந்த சூழ்நிலைகளில் ஒரு வங்கியர் ஒரு வாடிக்கையாளரின் காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கலாம் என்பதை எடுத்துரைக்க.

4. Explain the nature of protection given to the collecting banker under the Negotiable Instruments Act.
மாற்று முறையாவணங்கள் சட்டத்தின் கீழ் பணம் வசூலிக்கும் வங்கியருக்கு வழங்கப் பட்டுள்ள பாதுகாப்பின் தன்மையைப் பற்றி விளக்குக.

5. "The absence of consideration for a negotiable instrument is material only between immediate parties to the Instrument" - Comment.
ஒரு மாற்று முறையாவணத்தில் மறுபயன் இல்லாதது, அவ்வாவணத்தின் உடனடி தரப்பினர்கள் மட்டுமே சம்பந்தப்பட்டது – விளக்கமளி.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Material alteration.
கருநிலை திருத்தம்

(b) Rules relating to lost instruments.
காணாமல் போன ஆவணங்கள் குறித்த விதிகள்

(c) Presentment for acceptance.
ஏற்புக்கான முன்னிடல்

(d) Promissory Note.
கடனுறுதிச் சீட்டு

(e) Payment is due course.
முறைப்படி பணம் செலுத்துதல்

(f) Noting and protest.
மறுப்புக் குறிப்பும் மறுத்துரையும்

(g) Crossing of cheques.
காசோலை கீறிலிடல்

(h) Garnishee order.
பொருள் பற்றுகை ஆணை

(i) Rights of a banker.
வங்கியரின் உரிமைகள்

(j) Kinds of endorsement.
மேல் குறிப்பின் வகைகள்

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி, தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A bill is drawn by 'A' stating "Pay to X or order the sum of one thousand rupees". In the margin the amount stated is Rs.100. Which will be preferable?

'அ' என்பவர் மாற்றுச்சீட்டு ஒன்று வரைந்தார். " 'X' என்பவருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ ஆயிரம் ரூபாய் கொடுக்கவும்", அந்த சீட்டின் ஓரத்தில் மதிப்பு ரூ. 100 என்று குறிப்பிட்டு உள்ளது. இதில் எந்த தொகை எடுத்துக் கொள்ளப்படும்.

8. 'A' obtains a loan from Indian Bank for which 'B' stands surety. 'A' refuses to repay inspite of having sufficient funds. The Bank sues 'B'. 'B' contends that the Bank should first sue 'A' as he had enough funds to repay the debt - Decide.

'அ' என்பவர் இந்தியன் வங்கியில் பெற்ற கடனுக்கு 'ஆ' என்பவர் பொறுப்புறுதியளித்தார். 'அ' விடம் போதுமான பணம் இருந்தும் அவர் கடனை செலுத்த மறுக்கிறார். வங்கி 'ஆ' மீது வழக்கிட்டது. 'அ' விடம் போதுமான பண வசதியிருப்பதால் வங்கி 'அ' மீதுதான் முதலில்

வழக்கிட வேண்டுமென 'ஆ' வாதிட்டார் – தீர்வு காண்க.

9. 'X' on attaining majority, makes a fresh promissory note in consideration of a promissory note made by him during his minority. Decide the, validity of the promissory note.

'X' என்பவர் இளவராக இருக்கும்போது எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டுக்குப் பதிலாக, ஒரு புது கடனுறுதிச் சீட்டினை வயது வந்த பின்னர் எழுதிக் கொடுக்கிறார். அச்சீட்டின் செல்தகு தன்மையினை தீர்மானி.

10. "I promise to pay "Ram" Rs. 10,000 on Raghus' death, provided Raghu leaves me enough property to pay that sum. Can it be treated as a promissory note.

"ரகு இறக்கும் போது அவர் அத்தொகையை செலுத்தப் போதுமான சொத்தை விட்டு சென்றால், நான் ராம் என்பவருக்கு ரூபாய் 10,000 தர உறுதியளிக்கிறேன்." இதனை கடனுறுதிச் சீட்டு எனக் கொள்ளலாகுமா?

11. A bill payable with interest at 12% per annum is altered into one payable with interest at 16% per annum. What is the effect of such alteration on the validity of the bill?

வருடத்திற்கு 12 சதவீத வட்டியுடன் செலுத்தத்தக்க மாற்றுச்சீட்டு ஒன்று வருடத்திற்கு 16 சதவிகித வட்டியுடன் செலுத்தத்தக்கது என்று திருத்தப்படுகிறது. மாற்றுச்சீட்டின் செல்லத்தக்க தன்மையின் மீது மேற்கண்ட திருத்தத்தின் விளைவு யாது?

12. A customer deposits his valuables - securities, documents and ornaments with the bank for safe custody and safety from theft. Does the banker have any lien over such valuables?

ஒரு வாடிக்கையாளர் தன்னுடைய விலை மதிப்புள்ள பிணையங்கள், ஆவணங்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றை வங்கியாளரிடம் பாதுகாப்பிற்காகவும் மற்றும் திருட்டுக்கு எதிராகவும் ஒப்படைக்கின்றார். அவ்விலை மதிப்புள்ள பொருட்களின் மீது வங்கியாளருக்கு ஏதேனும் பற்றுரிமை உண்டா?

B.L., DEGREE EXAMINATION, NOVEMBER 2013

(Three year Regular Course)

Second Year /Third Semester

BANKING LAW INCLUDING NEGOTIABLE INSTRUMENTS ACT

PART A - (3 x 12 = 36 marks)

Time : Three hours Maximum : 100 marks

Answer THREE of the following not exceeding 6 pages each

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்

1. Discuss the business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949–ன்படி வங்கிகள் மேற்கொள்ளக்கூடிய மற்றும் மேற்கொள்ளக்கூடாத வர்த்தகங்கள் பற்றி விவாதிக்க.

2. State the circumstances in which a banker is justified or bound to dishonour cheques.

ஒரு வங்கியர் காசோலையை மறுப்பதை நியாயமென கூறக்கூடிய அல்லது கடமைப் பட்டிருக்கக் கூடிய சூழ்நிலைகளை எடுத்துரைக்க.

3. Examine the statutory protection given to the paying banker.

பணம் கொடுக்கும் வங்கியருக்கான சட்டபூர்வமான பாதுகாப்பு பற்றி ஆராய்க.

4. Define "Holder" and "Holder in due course". Discuss the rights of a "Holder in due course".

உடமையுரியவர் மற்றும் உரியமுறை உடமையுரியவர் வரையறை செய்க. உரிய முறை உடமையுரியவரின் உரிமைகளை விவாதிக்கவும்.

5. What is a Negotiable Instrument? State the characteristics of Negotiable Instrument.

மாற்று முறையாவணம் என்றால் என்ன? அதன் குணாதிசயங்களைக் கூறுக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Endorsement
மேற்குறிப்பு

(b) Letter of Credit
நம்பிக்கைக் கடிதம்

(c) Drawee in case of need
தேவைப்படும் பொழுது பொறுப்பு ஏற்பவர்

(d) Bill of Exchange
மாற்றுச் சீட்டு

(e) Functions of RBI
இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்

(f) Noting and protest
மறுகுறிப்பும், மறுத்துரையும்

(g) Devaynes - vs - Noble Clayton
தேவயன்ஸ் – எதிர் – நோபில் கிளேய்ட்டன்

(h) Material alteration
கருநிலைத் திருத்தம்

(i) Rights of Banker
வங்கியரின் உரிமைகள்

(j) Crossing of cheques
காசோலையில் குறுக்கு கோடிடல்

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி கோர்வையான காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. "I promise to pay 'B'Rs. 1000 on 'D's death provided 'D' leaves me enough property to pay that sum". Can it be treated as a Promissory Note?

" 'ஈ' என்பவர் இறக்கும் போது போதுமான சொத்தை விட்டு சென்றால் நான் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 1000 தர உறுதியளிக்கிறேன்". இதனை கடனுறுதிச் சீட்டு என்று கொள்ளலாகுமா?

8. 'X' draws a bill of 'Y' and negotiates it to 'Z'. 'Y' is a fictitious person. Can Z treat it as a promissory note made by 'X'?

'X' என்பவர் 'Y' மீது மாற்றுச்சீட்டு ஒன்று வரைந்து அதனை 'Z' என்பவருக்கு அளிக்கிறார். ஆனால் 'Y' என்பவர் உண்மையான நபர் அல்ல. எனவே 'Z' என்பவர் அச்சீட்டினை ஒரு கடனுறுதிச் சீட்டாகக் கருதலாமா?

9. In the body of a cheque the words "Rupees Seven Hundred and nine-twenty five paise" are written, where as the figures read 790.25 p. How should the paying banker deal with such a cheque presentation?

"ஒரு காசோலையின் மீது ரூபாய் எழுநூற்று ஒன்பது – இருபத்தி ஐந்து பைசா" என்று எழுத்திலும், எண்ணால் ரூ. 790.25 பைசா எனவும் இருந்தது. அந்தக் காசோலையை சமர்ப்பித்தால், பணம் கொடுக்கும் வங்கியர், எப்படி பணம் வழங்குவார்?

10. Mention the reasons for returning the cheque's:

(a) Cheque, dated February 2011 presented on 1st March 2011.

(b) Cheque, dated 3rd June 2010 presented on 4th December 2010.

காசோலை மறுப்பதற்கான காரணங்கள் என்ன?

(அ) காசோலை, நாள் பிப்ரவரி 2011 சமர்பித்தது மார்ச் 1, 2011.

(ஆ) காசோலை, நாள் ஜூன் 3, 2010 சமர்பித்தது டிசம்பர் 4, 2010.

11. A draws a cheque in favour of B, a minor. B endorses it in favour of C. The cheque is dishonoured by the Bank. Discuss the rights of C.

'B' என்கிற ஓர் இளவரின் பெயரில் 'A' ஒரு காசோலை எழுதுகிறார். அதை 'C' யின் பெயரில் மேற்குறிப்பு செய்து 'B' கொடுக்கிறார். வங்கியினால் காசோலை ஏற்க மறுக்கப் படுகிறது. 'C' யின் உரிமைகளை விவாதிக்க.

12. A obtain a cheque and puts it his coat pocket. The coat is sent for dry wash. Consequently the cheque becomes faded. Can the bank refuse to pay it?

'அ' என்பவர் காசோலை ஒன்றினைப் பெற்று அதனை அவர் மேலங்கியில் உள்ள பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார். அந்த மேலங்கியை உலர் சலவைக்காக கொடுத்து அனுப்புகிறார். அதன் விளைவாக அந்த காசோலை மங்கி விடுகிறது. வங்கியர் அக்காசோலையினை ஏற்க மறுக்கலாமா?